PRAY PREPARE PREACH

மாற்கு நற்செய்தியை

பிரசங்கித்தல்

மாற்கு நற்செய்தி நூலுக்கான பேசும் வரைகோடுகள்



...உலகமெங்குமுள்ள
வேதாகம ஆசிரியர்களுக்காக
எழுதப்பட்டுள்ளது

மாற்கு நற்செய்தியை பிரசங்கித்தல்

மாற்கு நற்செய்தி நூலுக்கான பேசும் வரைகோடுகள்

Preaching Mark

This book combines volumes 1 and 2, previously published in 2006 and 2007

© Phil Crowter/The Good Book Company 2009

© 2017 தமிழ் மொழிபெயர்ப்பு, கொழும்பு இறையியல் கல்லூரி
Tamil Translation © 2017 by Colombo Theological Seminary

சகல பதிப்புரிமையும் ஆக்கியோனுக்கே உரியது. ஆக்கியோனின் எழுத்து மூல அனுமதியின்றி இந்நூலின் எப்பாகமும் எவ்விதத்திலும் பிரித்தெடுக்கப்படவோ, இலத்திரனியல் மூலங்களுக்கூடாகவோ பிரதி பண்ணப்படவோ கூடாது.

ISBN 978-955-3640-01-7

Colombo Theological Seminary, 189,Dutugemunu Street, Kohuwela
Sri Lanka
http://www.cts.lk

தயவு செய்து இதை முதலில் வாசிக்கவும்!

போதகர்களாகிய நமக்கு உலகிலேயே மிகச்சிறந்த வேலையிருக்கிறது!

தேவனுடைய வார்த்தை மரித்த மக்களுக்கு உயிர் கொடுக்கிறது. தேவனுடைய வார்த்தை பசியாயிருக்கும் மக்களை போஷிக்கிறது. தேவனுடைய வார்த்தை இயேசுவை நம்மிடம் கொண்டு வருகின்றது.

நாம் இந்த தேவனுடைய வார்த்தைகளைப் போதிக்கின்றோம்!

2 தீமோத்தேயு 2:15 இப்படிச் சொல்கிறது: '*நீ வெட்கப்படாத ஊழியக்காரனாயும், சத்திய வசனத்தை நிதானமாய் வகுத்து போதிக்கிறவனாயும், உன்னை தேவனுக்கு முன்பாக நிறுத்தும்படி ஜாக்கிரதையாயிரு*'.

மாற்கு நற்செய்தியைப் பிரசங்கித்தல் என்னும் இந்தப் புத்தகம் நீங்கள் அப்படியானதொரு ஊழியக்காரனாய் இருப்பதற்கு உங்களுக்கு உதவியாயிருக்கும். அது உங்களுக்கு:

- மாற்கு, இயேசு கிறிஸ்துவைப் பற்றி என்ன சொல்கிறாரென்பதை **புரிந்து** கொள்ள உதவும்.
- அதன் ஒவ்வொரு பகுதியும் உங்கள் மக்களுக்கு எவ்வளவு முக்கியம் என்பதைக் குறித்து **சிந்திக்க** உதவும்.
- முக்கிய விடயத்தை தெளிவாகப் **போதிக்க** உதவும்.

"*மாற்கு நற்செய்தியைப் பிரசங்கித்தல்*' என்னும் இந்தப் புத்தகத்தின் ஒவ்வொரு பகுதியும், மாற்கு சுவிசேஷத்தை **கற்றுக்கொள்ளவும், பிரசங்கிக்கவும்** உங்களுக்கு உதவி செய்யும். அதற்காக நீங்கள் இன்னும் கடினப்பட்டு கற்க வேண்டும். நாங்கள் உங்களுக்கு சில உதவிகளை செய்திருப்பதுடன், சில யோசனைகளையும் கொடுத்திருக்கிறோம். உங்கள் மக்களுக்கு அந்த உண்மைகளை விளக்க தேவன் உங்களுக்கு உதவி செய்யும்படி நீங்கள் ஜெபிக்க வேண்டும்.

இந்தப் புத்தகத்தை நீங்கள் சிறந்த முறையில் உபயோகிக்கக் கூடிய வழி இதுதான். **மாற்கு நற்செய்தியின் ஆரம்பத்தில் தொடங்கி முறைப்படி ஒவ்வொரு பகுதியையும் கற்பிக்கவும்.** அப்போது மாற்கு எப்படி இயேசுவின் கதையை கூறுகிறார் என்பதை உங்கள் மக்கள் புரிந்து கொள்வார்கள்.

நமக்கு உலகத்திலேயே மிகச் சிறந்த வேலையிருக்கிறது. அதை திறமையாக செய்யுங்கள் - தேவனின் உதவியுடன்!

நீங்கள் இதைத் தொடங்கும் முன், இவைகளை வாசிக்க நேரம் எடுத்துக் கொள்ளுங்கள்:

அ. விரைவு உதவி: மாற்கு நற்செய்தியிலிருந்து ஒரு பேச்சை தயார் செய்வது எப்படி?

ஆ. *மாற்கு நற்செய்தியைப் பிரசங்கித்தல்* புத்தகத்தை உபயோகிப்பது எப்படி?

இ. மாற்கு சுவிசேஷத்தைப் பற்றி.

'*மாற்கு நற்செய்தியைப் பிரசங்கித்தல்*' புத்தகத்தை எப்படி உபயோகிப்பதென்பதைக் குறித்ததொரு உதாரணத்தை இப்புத்தகத்தின் இறுதியில் இணைக்கப்பட்டிருக்கும் "உ" பகுதியில் காணலாம்.

பில் கிரவ்டர்

பொருளடக்கம்

அ. விரைவு உதவி: மாற்கு நற்செய்தியிலிருந்து ஒரு பிரசங்கத்தைத் தயார் செய்வது எப்படி? 7

ஆ. மாற்கு நற்செய்தியைப் பிரசங்கித்தல் புத்தகத்தை உபயோகிப்பது எப்படி? 9

இ. மாற்கு நற்செய்தியைப் பற்றி 13

ஈ. மாற்கு நற்செய்தியைக் கற்றலும் பிரசங்கித்தலும் 15

உ. செய்து காட்டப்பட்ட உதாரணங்கள் 223

அ. விரைவு உதவி:

மாற்கு நற்செய்திலிருந்து ஒரு பிரசங்கத்தை தயார் செய்வது எப்படி?

1. தேவனிடம் உதவிக்காக ஜெபிக்கவும்

2. வேதாகமப் பகுதியை பலமுறை வாசிக்கவும்.
இந்தப் பகுதியைப் புரிந்து கொள்ள ▪ **பின்னணியை** உபயோகிக்கவும்.
கடினமான வேதவசனங்களைப் புரிந்து கொள்ள ✹ **குறிப்புகளை** உபயோகிக்கவும்.

3. வேதாகமப் பகுதியில் தேவன் நமக்குப் போதிக்கும் முக்கிய விடயத்தைக் கண்டுபிடிக்க முயற்சி செய்யவும்.
உதவிக்கு ⊙ **முக்கிய விடயம்** எனும் பகுதியை உபயோகிக்கவும்.

4. உங்கள் மக்களுக்காக ஜெபிக்கவும். இந்த வேதாகமப் பகுதி அவர்களுக்கு எப்படி உதவியாயிருக்குமென்பதைக் குறித்து சிந்திக்கவும்.
உதவிக்கு ★ **நீங்கள் செய்ய வேண்டியது** என்ற பகுதியை உபயோகிக்கவும்.

5. உங்கள் பேச்சை உங்கள் சொந்த மொழியில் எழுதவும். வேதாகமம் கற்பிக்கும் முக்கிய விடயங்களிலிருந்து அதை ஆரம்பிக்கவும்.
உதவிக்கு **பிரசங்கியுங்கள்** பகுதியில் உள்ள நமது குறிப்புகளை உபயோகிக்கவும்.

6. இப்போது உங்கள் பேச்சுக்கு ஒரு தொடக்கத்தையும், ஒரு முடிவையும் எழுதவும்.

7. நீங்கள் தயார் செய்ததை சரி பார்க்கவும்

- **முக்கிய விடயம்** தெளிவாக இருக்கின்றதா?
- **வேதாகமம்** போதிப்பதை நீங்கள் அவர்களுக்குக் காட்டுகின்றீர்களா?
- உங்கள் மக்கள் புரிந்து கொள்ளவும், மனதில் வைத்துக் கொள்ளவும் தக்கதாக **வார்த்தை உதாரணங்களை** உபயோகித்திருக்கின்றீர்களா?
- நீங்கள் மக்களுடன் **தொடர்பு உள்ளவர்களாக** இருக்கின்றீர்களா?
- என்ன **மாற்றம்** ஏற்படுமென்று எதிர்பார்க்கின்றீர்கள்?

8. உங்கள் வார்த்தைகள் மூலம் தேவன் பேசவேண்டுமென்று ஜெபிக்கவும். அவருடைய சத்தியம் மக்களை மாற்ற வேண்டுமென்று ஜெபிக்கவும்.

மேலதிக உதவிக்கு அடுத்த பகுதியை வாசிக்கவும்.

ஆ. ‘மாற்கு நற்செய்தியைப் பிரசங்கித்தல்’ புத்தகத்தை உபயோகிப்பது எப்படி?

நீங்கள் ஒரு பேச்சை தயார் செய்யும் ஒவ்வொரு முறையும், இவற்றுடன் ஆரம்பிக்கவும்.

- தேவனுடைய உதவிக்காக ஜெபிக்கவும்
- வேதாகம பகுதியை வாசிக்கவும்.
- வேதாகமப் பகுதியில் தேவன் நமக்குக் கற்பிக்கும் முக்கிய விடயத்தைக் கண்டு பிடிக்க முயற்சி செய்யவும்.

அதன்பின் இந்தக் குறிப்புகளை உங்கள் உதவிக்கு நீங்கள் பாவிக்கவும். ஒவ்வொரு பேச்சுக்கும் அங்கே இரண்டு பக்கங்கள் இருக்கின்றன. முதல் பக்கம் வேதாகமப் பகுதியைக் குறித்துச் சிந்திக்க உங்களுக்கு உதவி செய்கிறது. இரண்டாவது பக்கம் உங்கள் பேச்சுக்கான தலைப்புகளையும், யோசனைகளையும் கொடுக்கின்றது.

📖 இக் குறியீட்டினை காணுமிடத்து நீங்கள், வேதாகமத்தில் என்ன கூறப்பட்டுள்ளதென்பதை வாசித்தல் வேண்டும்.

கற்றுக்கொள்ளுதல் பக்கம்:

வேதாகமத்தைப் புரிந்து கொள்ளுதல்

முதல் பக்கம் உங்களுக்கு வேதப்பகுதியைப் புரிந்து கொள்ள உதவுகிறது.

▣ **பின்னணி:** வேதப்பகுதிக்கு முன்னும்,பின்னும் என்ன வருகின்றது என்பதைக் குறித்து



? கற்றுக்கொள்ளுங்கள்: மாற்கு 1:1-8

1 இயேசுகிறிஸ்துவைப் பற்றிய நற்செய்தி

▣ பின்னணி

📖 மாற்கு 1:1~15 இப்பகுதி மாற்கு நூலிற்கான ஆரம்பம், அல்லது அவருடைய புத்தகத்தின் அறிமுகமாகும். அது அவருடைய நூலின் பிரதான விஷயத்தை கூறுகிறது. யோவானும், இயேசுவும் ஒரே செய்தியைப் பிரசங்கிப்பதைக் கவனிக்கவும். நாம் இயேசு கிறிஸ்துவைப் பற்றி வாசித்தவுடன், நாமும் மனந்திரும்பி நற்செய்தியை விசுவாசிக்க வேண்டும்.

▣ முக்கிய விடயம்

தேவனின் வாக்குறுதியின்படி இயேசு கிறிஸ்து வந்துள்ளார். இதுவே நற்செய்தியாகும். நாம் இயேசுவிடம் வந்து மனந்திரும்ப வேண்டும்.

★ நாம் செய்யவேண்டியது

1. இயேசு எவ்வளவு முக்கியமானவரும், அற்புதமானவருமாயிருக்கிறார் என்பதை மக்களுக்கு காண்பிக்க தேவன் நமக்கு உதவி செய்ய ஜெபிப்பது. மாற்குவின் நற்செய்தி இயேசுவாகும். எனவே நாம் கட்டாயமாக இயேசுவைப் பிரசங்கிக்க வேண்டும்
2. “மனந்திரும்புங்கள்” என்பதின் அர்த்தத்தை அவர்கள் சரியாகப் புரிந்து கொள்வதை உறுதி செய்து கொள்வது (உங்கள் பாவங்களிலிருந்து மனந்திரும்புங்கள்). மாற்கு 1:4,15 “மனந்திரும்புவது” என்றால் வெறுமனே “மன்னியுங்கள்” என்று சொல்வதை விட அதிகமானது.

மனந்திரும்பும்போது நாம் போகும் பாதையிலிருந்து திரும்புகிறோம். நாம் நமது மனதை மாற்றிக் கொள்கிறோம். இனி நாம் பாவத்தின் வழியில் செல்வதில்லை. நாம் தேவனின் வழியில் போகிறோம். இதனை விளக்குவதற்கு ஓர் வார்த்தைப் படத்தை உபயோகிக்கவும்.

▣ குறிப்புகள்

- மாற்கு 1:2,3. மாற்கு ஏசாயா 40:5ன் வார்த்தைகளை உபயோகிப்பதன் மூலம் ஏசாயா மக்களுக்கு கூறிய “தூதுவர்” (தீர்க்கதரிசி) யோவானே என்று அவர் காண்பிக்கின்றார். ஏசாயா ஓர் காட்சியின் மூலம் அதை விளக்குகிறார். ராஜா பயணிப்பதற்கான ஒரு நற்பாதையை ஒரு மனிதன் அமைக்கின்றான். யோவானே அந்த மனிதனாகும்.
- மாற்கு 1:6. யோவான் எலியா தீர்க்கதரிசியைப்போல உடை உடுத்தியிருக்கிறான் (2 இராஜாக்கள் 1:8).
- மாற்கு 1:7. யோவான் இயேசுவைக் குறித்துப் பேசுகின்றான். திரளான ஜனக்கூட்டங்கள் அவனுக்கு செவி கொடுக்கின்றன. ஆனால் அவன் தன்னை முக்கியமாகக் கருதவில்லை. அவனைவிட இயேசுவே அதிக முக்கியமானவர்.
- மாற்கு 1:8. யோவானால் மக்களை தண்ணீரினால் நனையப் பண்ண மாத்திரமே முடியும். இயேசுவோ மக்களை அவர்கள் பாவத்திலிருந்து கழுவுவார். இயேசு அவருடைய பரிசுத்த ஆவியின் மூலம் மக்களை மாற்றுவார். இயேசு நம்மை கிறிஸ்தவனாக மாற்றும்போது என்ன நடக்கிறது என்பதைக் குறித்து இந்த வசனம் கூறுகிறது.

📖 வாசிக்கவும் 1 கொரிந்தியர் 12:13

22

சிந்திப்பது மிகவும் முக்கியம். ஒவ்வொரு முறையும் நாம் அப்படியான சில வசனங்களைப் பார்ப்போம். ஆயினும் இந்த வசனங்கள் மாற்குவின் இயேசுவைப் பற்றிய பெரும் கதையுடன் ஒத்துப் போகின்றன. எப்படி ஒரு பகுதி மாற்குவின் மற்றவைகளைப் போலிருக்கிறது என்பதை எப்போதும் கேளுங்கள். இயேசு யாரென்றும், அவர் ஏன் வந்தாரென்றும் புரிந்து கொள்வதற்கு அது எப்படி நமக்கு உதவி செய்கிறது என்று கேளுங்கள்.

பின்னணி பகுதி இதைச் செய்ய

உங்களுக்கு உதவியாயிருக்கும்.

⊡ **முக்கிய விடயம்:** நாம் மிக முக்கியமான விடயத்தைச் சுருக்கமாக எழுதியிருக்கிறோம். அதைக் குறித்து சிந்திக்கவும். இதைத்தான் இந்த வேதப்பகுதி கற்பிக்கிறது என்பதை உங்களால் காண முடிகின்றதா? உங்களுடைய பேச்சில் இந்த விடயம் தெளிவாகத் தெரிவதை உறுதி செய்து கொள்ளுங்கள்.

⊛ **நீங்கள் செய்ய வேண்டியது:** இந்தப் பகுதி வேதாகமத்திலிருந்து நீங்கள் சிந்திக்க வேண்டிய ஒன்றைத் தெரிவு செய்கிறது. வேதாமத்தைப் புரிந்து கொள்ள நாம் கடினமாக முயற்சி செய்ய வேண்டியது மிக முக்கியம் இந்தப் பகுதியில் வரும் விடயத்தை எப்படி போதிப்பது என்பதைக் குறித்து கவனமாக சிந்திக்க வேண்டும். உங்களுக்கு விளங்கப்படுத்த நாம் சில வேளைகளில் ஒரு வார்த்தை உதாரணத்தை உபயோகித்திருக்கிறோம்.

⊛ **குறிப்புகள்:** இந்தப் பகுதி கடினமான வேத வசனங்களை உங்களுக்கு விளக்குகிறது. நீங்கள் போதிக்கும் போது பிழை விடாமலிருக்க அது உங்களுக்கு உதவியாயிருக்கும்.

பிரசங்கித்தல் பக்கம்:

வேதாகமத்தைப் போதித்தல்

இரண்டாவது பகுதி வேதாகமத்தைக் கற்பிக்க உங்களுக்கு உதவுகின்றது. உங்கள் சுய முயற்சியும் இதற்குத் தேவைப்படும். இந்தப் பகுதி உங்களுக்கு யோசனைகளைக் கொடுக்கும். நீங்கள் அந்த யோசனைகளை எடுத்து சிறந்த முறையில் உபயோகிக்க வேண்டும். நாம் எலும்புகளை உங்களுக்குக் கொடுக்கிறோம். ஆனால் நீங்கள்தான் அதில் தசையை வைக்க வேண்டும்!

பிரசங்கியுங்கள்: மாற்கு 1:1-8

நற்செய்தி

மாற்கு 1:1~3

1. இயேசுகிறிஸ்துவே நற்செய்தி

மாற்கு 1:1ல் “சுவிசேஷம்” என்பதற்கு “நற்செய்தி” என்று அர்த்தமாகும். நற்செய்தியானது ஒரு நபராகும்! பொதுவாக ஏதாவது ஒன்று நிகழும் போது அது நற்செய்தியாகும். ஆனால் இங்கு இந்நபரின் வருகையானது மிக நல்ல செய்தியாகும். தேவன் பல நூற்றாண்டுகளாக இந்த நபரைக் குறித்து வாக்களித்திருக்கிறார். தீர்க்கதரிசியாகிய ஏசாயா அவரைக் குறித்து பேசினார். (மாற்கு 2:2,3)

- இயேசுவே கிறிஸ்துவாகும் (மாற்கு 1:1). கிறிஸ்து என்பது இயேசுவின் இன்னொரு பெயரல்ல. அது அவருடைய வேலையாகும். இயேசுவின் வேலை தேவனால் அனுப்பப்பட்ட “கிறிஸ்துவாக” அல்லது ராஜாவாக இருப்பதே. இந்த உலகத்திலேயே மிக சக்தி வாய்ந்த ஆட்சியாளர் உங்களை சந்திக்க வந்தால் உங்களுக்கு எப்படியிருக்கும் என்று சற்று கற்பனை செய்து பாருங்கள்! இயேசு எல்லோரையும்விட முக்கியமானவர். ஏனென்றால் அவர் பரலோகத்தின் ராஜா.
- இயேசு தேவனின் குமாரன் (மாற்கு 1:1). நாம் உண்மையாக இயேசு தேவகுமாரன் என்பதை விசுவாசித்தால், நாம் அவருக்கு முன்பாகப் பணிந்து அவரை ஆராதிப்போம். நாம் அவர் சொல்வதையெல்லாம் நம்புவோம். அவருக்கு நாங்கள் எங்கள் வாழ்க்கையைக் கொடுப்போம்.
- இயேசு நமது உட்புறத்தை கழுவி சுத்திகரிக்க வந்தார். (மாற்கு 1:8). இயேசு நமது பாவத்திற்காக நம்மை தண்டிக்க வரவில்லை! மாறாக நம்மை மன்னிக்க வந்தார்! அதனால்தான் யோவான் மக்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்தான் (மக்களை தண்ணீருக்குள் அமிழ்த்து). இயேசு மக்களை அவர்கள் பாவத்திலிருந்து கழுவ வருகிறார் என்பதை அவர்களுக்குக் காண்பிக்க அவன் ஞானஸ்நானம் கொடுத்தான்.

2. நற்செய்தியைக் கூறவும்

உங்களுக்கு ஓர் நல்ல செய்தி கிடைக்கும்போது நீங்கள் மௌனமாய் இருப்பதில்லை. நீங்கள் அதைக் குறித்து மற்றவர்களுக்கும் கூறுவீர்கள் (ஓர் உதாரணத்தை நினைக்கவும்). தேவன் யோவானுக்கு ஓர் வேலையைக் கொடுத்தார். அது அவன் மக்களுக்கு இயேசுவைப்பற்றிய நற்செய்தியை அறிவிக்கவேண்டும்.

மாற்கு 1:2~4, 7,8

⊡ கூறுவதற்கு நம்மிடம் மிகச் சிறந்த செய்தி உள்ளது. இயேசுவைப் பற்றிய செய்தியை அறியாத மக்களை நினைத்துப்பாருங்கள். அதை எப்படி அவர்களுக்குக் கூறுவீர்கள்?

நாம் என்ன செய்ய வேண்டும்!

மாற்கு 1:4

அநேக மக்கள் இயேசுவைக் குறித்து முக்கியத்துவம் கொள்ளத் தேவையில்லை என எண்ணுகிறார்கள். அவர்கள் இயேசு வந்தார் என்பதை விசுவாசிக்கக் கூடும். ஆனால் அது அவர்களை மாற்றாது.

- அப்படி நினைப்பது ஏன் பிழையாகும்

யோவான் மக்களிடம் “மனந் திரும்புங்கள்” என்று கூறினான் (வழிமாற்றத்தை அவர்கள் நினைக்க வேண்டும்). ஏனென்றால் இயேசு ராஜா வருகிறார் அவர்கள் கட்டாயமாக தங்கள் பாவங்களை வெறுத்து, அவைகளை மன்னிக்கும் படி இயேசுவிடம் கேட்க வேண்டும்.

⊡ பரலோகத்தின் ராஜா வந்திருக்கிறார்!

- அதைக்குறித்து நீங்கள் ஒன்றும் செய்யமாட்டீர்களா?
- நீங்கள் இயேசுவை உங்கள் வாழ்க்கைக்கு வெளியே விட்டு விடுவீர்களா?
- இல்லாவிடில் மனந்திரும்பி இயேசுவை விசுவாசிப்பீர்களா?

23

1. **உங்கள் உதவிக்காக நாங்கள் எழுதியிருப்பவை**

- **இரண்டு அல்லது மூன்று தலைப்புகள். இவை இப்படி எழுதப்பட்டிருக்கின்றன.** இந்தத் தலைப்புகள் வேதாகமத்தைத் தெளிவாகப் போதிக்க உங்களுக்கு உதவியாய் இருக்கும். உங்கள் மக்கள் விளங்கிக் கொள்ளும் விதத்தில் தலைப்புகளை நீங்கள் மாற்றிக் கொள்ளலாம்.

- **வேதாகமம் சொல்லுவதை நாம் உங்களுக்குக் காட்டுகிறோம்.** மக்கள் வேதாகமத்தைக் கேட்க வேண்டுமென்று நாம் விரும்புகிறோம். வேதாகமம் என்ன சொல்லுகிறது என்பதை அவர்களுக்கு நினைவுபடுத்திக் கொண்டேயிருங்கள்.அவர்களிடம் ஒரு வேதாகமம் இருந்தால், நீங்கள் போதிக்கும் வசனத்தை அதில் தேடி வாசிக்கும்படி கூறுங்கள். 📖இக்குறியீட்டிலுள்ள விடயமானது எவ்வாறு அதை மேற்கொள்ள வேண்டும் என்பதைக் குறித்து அறிய உதவும்.

- **வேதாகமம் என்ன கற்பிக்கிறது என்பதை நாம் உங்களுக்கு விளக்குகின்றோம்.** உங்கள் மக்கள் புரிந்து கொள்ளும் விதத்தில் அதை அவர்களுக்கு எப்படி விளக்குவது என்பதைக் குறித்து நீங்கள் சிந்திக்க வேண்டும். உங்களுக்கு உங்கள் மக்களைப் பற்றித் தெரியும். ஆனால் எங்களுக்கு அவர்களைத் தெரியாது. எனவே உங்கள் வார்த்தைகள் எங்கள் வார்த்தைகளை விடச் சிறந்தது.

- **நாம் சில வேளைகளில் உதாரணங்களை உபயோகிக்கிறோம்.** மாற்கு 1:16-20 குறிப்புகளிலிருந்து ஒரு உதாரணம் இதோ:

⊞ **இதைக் கற்பனை செய்யவும்.** நீங்கள் தன் வேலையில் மும்முரமாயிருக்கும் ஒருவரைக் காண்கிறீர்கள். அவருக்கு ஒரு நல்ல வேலையிருக்கிறது. அவருக்கு ஒரு குடும்பமும், வீடும் இருக்கின்றன. நீங்கள் அவருடைய வேலையை விட்டுவிட்டு உங்கள் பின்னே வரும்படி அவரை அழைக்கிறீர்கள். அப்போது அவர் என்ன சொல்லுவார்? அவர் உங்களை அந்த இடத்தை விட்டுப் போகும்படி கூறுவாரல்லவா? ஆனால், இயேசு 'என் பின்னே வா' என்று சொல்லும் போது என்ன நடக்கிறது?

இந்த உதாரணம் உங்கள் மக்களுக்கு பொருந்தாமல் இருக்கலாம். உங்கள் ஊரில் பணம் சம்பாதிக்க வேலை செய்யாமலிருக்கலாம். ஒரு போதகர் எப்போதும் மக்கள் புரிந்து கொள்ளும் விதத்தில் நல்ல உதாரணங்களைக் கூற வேண்டும். நீங்கள் வேதாகம உண்மைகளைப் போதிப்பதற்கு அதிகமான உதாரணங்களை உபயோகிக்க வேண்டும். அந்த உதாரணம் வேதப்புத்தகம் சொல்வதை சரியாக எடுத்துக் காட்டுகிறது என்பதை உறுதி செய்வதில் நீங்கள் மிகவும் கவனமாய் இருக்க வேண்டும்.

- **வேத பாடத்தை எப்படி மக்களுடன் இணைப்பது என்பதை நாம் உங்களுக்குக் காட்டுகிறோம்.** தேவனுடைய வார்த்தை நம்முடன் பேசுவதைக் கேட்பது மிகவும் முக்கியம். வேத பாடம் எப்படி நம்மை மாற்றுகின்றது என்பதை நாம் அறிந்து கொள்ள வேண்டும். ஒரு **உதாரணம்** இதோ:

> ⊠மற்றவர்களுக்குச் கூறுவதற்கு நம்மிடம் சிறந்த செய்தி இருக்கின்றது. இயேசுவைப் பற்றி நற்செய்தியை இன்னும் கேட்காமலிருக்கும் மக்களைக் குறித்து சிந்தியுங்கள். எப்படி அவர்களுக்கு அதைச் சொல்லுவீர்கள்?

- **நாம் ஒன்று அல்லது இரண்டு யோசனைகளைக் கொடுக்கிறோம்.** நீங்கள் உங்கள் மக்களை வேதாகமத்துடன் இணைப்பதற்கு

இன்னும் அதிகமான வழிகளைக் குறித்து சிந்திக்க வேண்டும். உங்களுக்கு மக்களைத் தெரியும். வேதாகமம் எப்படி அவர்கள் வாழ்க்கையை மாற்ற வேண்டுமென்றும் உங்களுக்குத் தெரியும்.

2. நீங்கள் செய்ய வேண்டிய மற்ற காரியங்கள்

- **உங்கள் பேச்சை எப்படித் தொடக்குவதென்று சிந்தியுங்கள்.** இன்று அதைக் கேட்பது ஏன் முக்கியம் என்பதை உங்கள் மக்கள் காண வேண்டும். வேதாகமத்திலிருந்து இன்று என்ன போதிக்க போகின்றீர்களென்பதை அவர்களிடம் கூறுங்கள். அது ஏன் அவர்களுக்கு முக்கியம் என்பதையும் கூறுங்கள்.
- **எப்படி உங்கள் பேச்சை முடிப்பது என்பதை சிந்தியுங்கள்.** அவர்கள் சிந்திப்பதற்கு எதையாவது கூறுங்கள், அல்லது செய்வதற்கு எதையாவது கொடுங்கள்.
- **ஜெபியுங்கள்!** நீங்கள் மக்களுக்கு தேவனுடைய வார்த்தையில் இருந்து தேவனுடைய சத்தியத்தைக் கூறுகின்றீர்கள். தேவன் உங்கள் வார்த்தைகள் மூலம் மக்களுடன் பேச வேண்டுமென்று ஜெபியுங்கள். தேவனுடைய சத்தியம் மக்களை மாற்ற வேண்டுமென்று ஜெபியுங்கள்.
- **எப்போதும் உங்கள் சொந்த மொழியையே உபயோகியுங்கள்.** மக்களுக்கு ஆங்கிலம் சரியாகத் தெரியாவிட்டால், ஒன்றையும் ஒரு போதும் ஆங்கிலத்தில் கூற வேண்டாம்.

உங்களுக்கு மேலும் உதவி தேவையாயின், இந்தப் புத்தகத்திலிருந்து எப்படியொரு பேச்சை தயார்படுத்தலாமென்பதை நாம் உங்களுக்குக் காட்டியிருக்கின்றோம். நீங்கள் இந்தப் புத்தகத்தின் இறுதிப் பகுதிக்குத் திருப்பினால்,அங்கே இந்தப் புத்தகத்தை உபயோகித்து மாற்கு சுவிசேஷத்தை எப்படி பிரசிங்கிப்பது என்பதைக் குறித்ததொரு உதாரணத்தைக் காண்பீர்கள்.

இ. 'மாற்கு நற்செய்தியைப் பற்றி'

1. அதை யார் எழுதினார்?

மாற்கு அதை எழுதினார். மாற்கு 12 சீஷர்களில் ஒருவர் அல்ல. அநேகமாக அவர் "யோவான் மாற்கு" என்பவராக இருக்க வேண்டும். நாம் அவரைக் குறித்து **அப்போஸ்தலர் 12:12,25** வசனங்களிலும், இன்னும் சில இடங்களிலும் வாசிக்கிறோம். நடந்த எல்லா சம்பவங்களையும் அநேகமாக **பேதுரு** மாற்குவிடம் கூறியிருக்க வேண்டும். அதை மாற்கு தன் சுவிசேஷத்தில் எழுதியிருக்கிறார்.

2. எப்போது மாற்கு அதை எழுதினார்?

அநேகமாக கி.பி.40க்கும் கி.பி.65க்கும் இடையில் அதை எழுதியிருக்க வேண்டும். எனவே, மாற்குவே **முதல்** சுவிசேஷமாகும். மத்தேயுவும், லூக்காவும் மாற்கு சுவிசேஷத்தின் சில பகுதிகளை உபயோகிக்கிறார்கள். அதனால்தான் மத்தேயு மற்றும் லூக்கா சுவிசேஷங்களின் சில பகுதிகள் மாற்கு சுவிசேஷத்தைப் போலிருக்கின்றன.

3. மாற்கு ஏன் அதை எழுதினார்?

மாற்கு 1:1ல் அதை ஏன் எழுதினாரென்று மாற்கு கூறுகின்றார். **'**தேவனுடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவினுடைய சுவிசேஷத்தின் ஆரம்பம்**'.**

அவர் இயேசு கிறிஸ்துவின் **நற்செய்தியை** (சுவிசேஷம்) நமக்குக் கூறுகின்றார். மாற்கு சுவிசேஷம் இயேசுவின் வாழ்க்கைக் கதை மட்டுமல்ல. அது:

- இயேசு யார்?
- இயேசு ஏன் வந்தார்?
- இயேசு ஏன் மரித்தார்?

என்பவைகளைக் கூறும் நற்செய்தியாகும். மாற்குவின் பெரிய செய்தி இதுவே. இவைகளை நாம் மனதில் வைத்திருப்பது இயேசுவின் கதைகளை புரிந்து கொள்ள நமக்கு உதவியாயிருக்கும். மாற்கு நாம் என்ன நடந்தது என்பதை அறிந்து கொள்ளுவதற்காக அதை எழுதவில்லை. அவர் அதை சொல்வதற்கு அதைவிட நல்ல காரணமிருந்தது. அவர், நாம் இயேசு யார் என்றும், அவர் ஏன் வந்தாரென்றும் **புரிந்து கொள்வதற்காக** நமக்கு இயேசுவின் கதைகளை கூறுகிறார். நாம் மனந்திரும்பி விசுவாசிக்க வேண்டுமென்று அவர் விரும்புகிறார் (மாற்கு 1:15).

நீங்கள் மாற்கு சுவிசேஷத்தை பிரசங்கிக்கும் போது, இந்த பெரிய செய்தியை மனதில் வைத்துக் கொள்ளுங்கள். எல்லா கதைகளும் ஒன்றுக்கொன்று ஒத்துப் போகின்றன. அவைகளில் ஒரு செய்தி இருக்கின்றது. மாற்கு சுவிசேஷம் இயேசுவைப் பற்றிய பெரிய செய்தியாகும். அது பல வித்தியாசமான கதைகளல்ல.

எனவே, நாம் ஒரு கதையைப் பற்றிப் போதிக்கும் போது இப்படியான கேள்விகளை நம்மிடம் கேட்கிறோம்:

- மாற்கு ஏன் இந்தக் கதையைக் கூறுகிறார்? அது எப்படி ஒத்துப் போகிறது?
- அது இயேசு யார், அல்லது இயேசு ஏன் வந்தார் என்பதைக் குறித்து என்ன கூறுகின்றது?
- இயேசுவை விசுவாசிப்பதற்கு அது எப்படி நமக்கு உதவுகின்றது?

4. மாற்குவின் திட்டம் என்ன?

மாற்கு அவருடைய சுவிசேஷத்தை இரண்டாகப் பிரிக்கிறார்.

இயேசு யார்: மாற்கு 1-8

இயேசு ஏன் வந்தார்: மாற்கு 9-16

இயேசு யார் ?	இயேசு ஏன் வந்தார்?
மாற்கு 1-8 அதிகாரங்கள்	மாற்கு 9-16 அதிகாரங்கள்

மாற்கு 1-8 இயேசு யார் என்பதைப் பற்றியதாகும். இயேசு தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து. மாற்கு 1:1; 2:7; 4:41; 8:29.

மாற்கு 9-16 இயேசு ஏன் வந்தார் என்பதைப் பற்றியதாகும். இயேசு பாவங்களுக்காகப் பாடுபடவும், மரிக்கவும் வந்தார். மாற்கு 10:45

இதை மனதில் வைத்துக் கொள்ள முயற்சி செய்யுங்கள். அது மாற்கு சுவிசேஷத்தை நீங்கள் புரிந்து கொள்ள உதவும்.

இந்த இரண்டு பகுதிகளையும் நீங்கள்

மாற்கு 8:29,31ல் வாசிக்கலாம்.

மாற்கு 1-8ல் இயேசு தன் சீஷர்களிடம் தான் யாரென்பதைக் காட்டுகிறார். ஆனால் அவர்கள் அதைப் புரிந்து கொள்ளவில்லை. கடைசியில், மாற்கு 8:29ல் பேதுரு இயேசு யாரென்பதைக் கண்டு கொள்கிறான்! உடனே இயேசு அவர் ஏன் வந்தாரென்பதை சீஷர்களுக்குப் போதிக்கத் தொடங்குகிறார் (மாற்கு 8:31). ஆனால், இயேசு மரிக்க வேண்டுமென்பதை சீஷர்கள் புரிந்து கொள்ளவில்லை. எனவே இயேசு எருசலேமையும், சிலுவையையும் நோக்கி போகும் போது, அவர் மரிப்பதற்காக வந்ததை அவர்களுக்குப் போதிக்கிறார். (மாற்கு 9-16)

மாற்கு நற்செய்தியை பிரசங்கித்தல்

ஈ. மாற்கு சுவிசேஷத்தை கற்றலும் பிரசங்கித்தலும்

1 இயேசுகிறிஸ்துவைப் பற்றிய நற்செய்தி

பின்னணி

மாற்கு 1:1-15 இப்பகுதி மாற்கு நூலிற்கான **ஆரம்பம்**, அல்லது அவருடைய புத்தகத்தின் **அறிமுகமாகும்**. அது அவருடைய நூலின் பிரதான விஷயத்தை கூறுகிறது. யோவானும், இயேசுவும் ஒரே செய்தியைப் பிரசங்கிப்பதைக் கவனிக்கவும். நாம் இயேசு கிறிஸ்துவைப் பற்றி வாசித்தவுடன், நாமும் மனந்திரும்பி நற்செய்தியை விசுவாசிக்க வேண்டும்.

முக்கிய விடயம்

தேவனின் வாக்குறுதியின்படி இயேசு கிறிஸ்து வந்துள்ளார். இதுவே நற்செய்தியாகும். நாம் இயேசுவிடம் வந்து மனந்திரும்ப வேண்டும்.

நாம் செய்யவேண்டியது

1. **இயேசு எவ்வளவு முக்கியமானவரும், அற்புதமானவருமாயிருக்கிறார் என்பதை மக்களுக்கு காண்பிக்க தேவன் நமக்கு உதவி செய்ய ஜெபிப்பது.** மாற்குவின் நற்செய்தி இயேசுவாகும். எனவே நாம் கட்டாயமாக இயேசுவைப் பிரசங்கிக்க வேண்டும்
2. **"மனந்திரும்புங்கள்" என்பதின் அர்த்தத்தை அவர்கள் சரியாகப் புரிந்து கொள்வதை உறுதி செய்து கொள்வது (உங்கள் பாவங்களிலிருந்து மனந்திரும்புங்கள்).** மாற்கு 1:4,15 "மனந்திரும்புவது" என்றால் வெறுமனே "மன்னியுங்கள்" என்று சொல்வதை விட அதிகமானது.

மனந்திரும்பும்போது நாம் போகும் பாதையிலிருந்து திரும்புகிறோம். நாம் நமது மனதை மாற்றிக் கொள்கிறோம். இனி நாம் பாவத்தின் வழியில் செல்வதில்லை. நாம் தேவனின் வழியில் போகிறோம். இதனை விளக்குவதற்கு ஓர் வார்த்தைப் படத்தை உபயோகிக்கவும்.

குறிப்புகள்

- **மாற்கு 1:2,3.** மாற்கு ஏசாயா 40:5ன் வார்த்தைகளை உபயோகிப்பதன் மூலம் ஏசாயா மக்களுக்கு கூறிய "தூதுவர்" (தீர்க்கதரிசி) யோவானே என்று அவர் காண்பிக்கின்றார். ஏசாயா ஓர் காட்சியின் மூலம் அதை விளக்குகிறார். ராஜா பயணிப்பதற்கான ஒரு நற்பாதையை ஒரு மனிதன் அமைக்கின்றான். யோவானே அந்த மனிதனாகும்.
- **மாற்கு 1:6.** யோவான் எலியா தீர்க்கதரிசியைப்போல உடை உடுத்தியிருக்கிறான் (2 இராஜாக்கள் 1:8).
- **மாற்கு 1:7.** யோவான் இயேசுவைக் குறித்துப் பேசுகின்றான். திரளான ஜனக்கூட்டங்கள் அவனுக்கு செவி கொடுக்கின்றன. ஆனால் அவன் தன்னை

கற்றுக்கொள்ளுங்கள்: மாற்கு 1:1-8

முக்கியமாகக் கருதவில்லை. அவனைவிட இயேசுவே அதிக முக்கியமானவர்.

- **மாற்கு 1:8.** யோவானால் மக்களை தண்ணீரினால் நனையப் பண்ண மாத்திரமே முடியும். இயேசுவோ மக்களை அவர்கள் பாவத்திலிருந்து கழுவுவார். இயேசு அவருடைய பரிசுத்த ஆவியின் மூலம் மக்களை மாற்றுவார். இயேசு நம்மை கிறிஸ்தவனாக மாற்றும்போது என்ன நடக்கிறது என்பதைக் குறித்து இந்த வசனம் கூறுகிறது.

வாசிக்கவும் 1 கொரிந்தியர் 12:13

பிரசங்கியுங்கள்: மாற்கு 1:1-8

நற்செய்தி

மாற்கு 1:1~3

1. இயேசுகிறிஸ்துவே நற்செய்தி

மாற்கு 1:1ல் "சுவிசேஷம்" என்பதற்கு "நற்செய்தி" என்று அர்த்தமாகும். நற்செய்தியானது ஒரு **நபராகும்!** பொதுவாக ஏதாவது **ஒன்று நிகழும்** போது அது நற்செய்தியாகும். ஆனால் இங்கு இந்**நபரின்** வருகையானது மிக நல்ல செய்தியாகும். தேவன் பல நூற்றாண்டுகளாக இந்த நபரைக் குறித்து வாக்களித்திருக்கிறார். தீர்க்கதரிசியாகிய ஏசாயா அவரைக் குறித்து பேசினார். (மாற்கு 2:2,3)

- **இயேசுவே கிறிஸ்துவாகும் (மாற்கு 1:1).** கிறிஸ்து என்பது இயேசுவின் இன்னொரு பெயரல்ல. அது அவருடைய **வேலை**யாகும். இயேசுவின் வேலை தேவனால் அனுப்பப்பட்ட "கிறிஸ்துவாக" அல்லது **ராஜாவாக** இருப்பதே. இந்த உலகத்திலேயே மிக சக்தி வாய்ந்த ஆட்சியாளர் உங்களை சந்திக்க வந்தால் உங்களுக்கு எப்படியிருக்கும் என்று சற்று கற்பனை செய்து பாருங்கள்! இயேசு எல்லோரையும்விட முக்கியமானவர். ஏனென்றால் அவர் **பரலோகத்தின்** ராஜா.

➡ பிரசங்கியுங்கள்: மாற்கு 1:1 -8

- **இயேசு தேவனின் குமாரன் (மாற்கு 1:1).** நாம் உண்மையாக இயேசு தேவகுமாரன் என்பதை விசுவாசித்தால், நாம் அவருக்கு முன்பாகப் பணிந்து அவரை ஆராதிப்போம். நாம் அவர் சொல்வதையெல்லாம் நம்புவோம். அவருக்கு நாங்கள் எங்கள் வாழ்க்கையைக் கொடுப்போம்.
- **இயேசு நமது உட்புறத்தை கழுவி சுத்திகரிக்க வந்தார். (மாற்கு 1:8).** இயேசு நமது பாவத்திற்காக நம்மை தண்டிக்க வரவில்லை! மாறாக நம்மை மன்னிக்க வந்தார்! அதனால்தான் யோவான் மக்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்தான் (மக்களை தண்ணீருக்குள் அமிழ்த்து). இயேசு மக்களை அவர்கள் பாவத்திலிருந்து கழுவ வருகிறார் என்பதை அவர்களுக்குக் காண்பிக்க அவன் ஞானஸ்நானம் கொடுத்தான்.

2. நற்செய்தியைக் கூறவும்

உங்களுக்கு ஓர் நல்ல செய்தி கிடைக்கும்போது நீங்கள் மௌனமாய் இருப்பதில்லை. நீங்கள் அதைக் குறித்து மற்றவர்களுக்கும் கூறுவீர்கள் (ஓர் உதாரணத்தை நினைக்கவும்). தேவன் யோவானுக்கு ஓர் வேலையைக் கொடுத்தார். அது அவன் மக்களுக்கு இயேசுவைப்பற்றிய நற்செய்தியை அறிவிக்கவேண்டும்.

மாற்கு 1:2–4, 7,8

» கூறுவதற்கு நம்மிடம் மிகச் சிறந்த செய்தி உள்ளது. இயேசுவைப் பற்றிய செய்தியை அறியாத மக்களை நினைத்துப்பாருங்கள். அதை எப்படி அவர்களுக்குக் கூறுவீர்கள்?

நாம் என்ன செய்ய வேண்டும்!

மாற்கு 1:4

அநேக மக்கள் இயேசுவைக் குறித்து முக்கியத்துவம் கொள்ளத் தேவையில்லை என எண்ணுகிறார்கள். அவர்கள் இயேசு வந்தார் என்பதை விசுவாசிக்கக் கூடும். ஆனால் அது அவர்களை மாற்றாது.

- அப்படி நினைப்பது ஏன் பிழையாகும்

யோவான் மக்களிடம் “மனந் திரும்புங்கள்” என்று கூறினான் (வழிமாற்றத்தை அவர்கள் நினைக்க வேண்டும்). ஏனென்றால் இயேசு ராஜா வருகிறார் அவர்கள் கட்டாயமாக தங்கள் பாவங்களை வெறுத்து, அவைகளை மன்னிக்கும் படி இயேசுவிடம் கேட்க வேண்டும்.

» பரலோகத்தின் ராஜா வந்திருக்கிறார்!

- அதைக்குறித்து நீங்கள் ஒன்றும் செய்யமாட்டீர்களா?
- நீங்கள் இயேசுவை உங்கள் வாழ்க்கைக்கு வெளியே விட்டு விடுவீர்களா?
- இல்லாவிடில் மனந்திரும்பி இயேசுவை விசுவாசிப்பீர்களா?

கற்றுக்கொள்ளுங்கள்: மாற்கு 1:9-15

2 இயேசு நற்செய்தியைச் சொல்லத் தொடங்குகிறார்

பின்னணி

மாற்கு **1:1-15.** இந்தப் பகுதி மாற்குவின் புத்தகத்தின் தொடக்கம் ஆகும். இயேசு யார் என்பதை நாம் கண்டுகொள்ள வேண்டும் என்று மாற்கு விரும்புகிறார் (மாற்கு 1:1,11). நாம் நமது பாவங்கள் இலிருந்து விட்டு விலகி நற்செய்தியை விசுவாசிக்க வேண்டும் என்பது அவர் விருப்பம் ஆகும். (மாற்கு 1:15)

பிரதான விடயம்

இயேசு தேவனுடைய குமாரனாகும். தேவன் அப்படி கூறுகிறார். இயேசு நற்செய்தியை அறிவிப்பதற்காக வந்திருக்கிறார். எனவே நாம் அதை விசுவாசித்து, நமது பாங்களிலிருந்து விலக வேண்டும் ("மனந்திரும்பு").

நீங்கள் செய்ய வேண்டியது

நீங்கள் இயேசுவைக் குறித்த நற்செய்தியை பலமுறை கூறியிருக்கின்றீர்களா? ஒருவேளை அது உங்கள் மக்களுக்கு புதியதாய் இல்லாதிருக்கலாம். அவர்களுக்கு வயது செல்லும் வரை அது தேவையில்லை என்று அவர்கள் ஒருவேளை நினைக்கலாம். இயேசுவின் செய்தி அவர்களுக்கு மிக முக்கியம் என்பதை எப்படி அவர்களுக்குக் காண்பிப்பது என்று யோசிக்கவும். அவர்களுக்குப் புரிய வைப்பதற்கு நீங்கள் உபயோகிக்கக் கூடியதொரு வார்த்தைப் படத்தைக் குறித்து சிந்திக்கவும். ஏன் அவர்கள் தங்கள் பாவங்களில் இருந்து விலகி **இன்றே** இயேசுவை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பதை அவர்களுக்குக் காண்பிக்கவும்.

வார்த்தைப் படஉதாரணம்: நீங்கள் மிகவும் சுகவீனமாய் இருப்பதாக கற்பனை செய்யவும். மருத்துவமனையில் அதைக் குணப்படுத்த முடியுமென்பதை நீங்கள் கேள்விப்படுகின்றீர்கள். இது மிகவும் நல்ல செய்தியாகும். அப்போது நீங்கள் வீட்டில் இருந்து மரித்துப் போவீர்களா? இல்லை, உடனே நீங்கள் மருத்துவமனைக்குச் செல்வீர்கள். இயேசுவைக் குறித்த நற்செய்தி **இன்றைக்கு** உரியதாகும்.

குறிப்புகள்

- **மாற்கு 1:9.** யோவான் மக்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்த நதியின் பெயர் "யோர்தான்" என்பதாகும்.
- **மாற்கு 1:10.** புறா என்றால் என்ன? புறா ஓர் வெள்ளை நிறப்பறவையாகும். இயேசுவைக் குறித்து தேவன் எவ்வளவு மகிழ்ச்சியாயிருந்தார் என்பதை அவர் தெரிவிக்கிறார். அவருடைய ஆவியானவர் இயேசுவின் மேல் வருவதைக் குறித்ததோர் காட்சியை தேவன் மக்களுக்குக் காண்பித்தார். அவருடைய ஆவியானவர் ஓர் புறாவைப் போல் காட்சி அளித்தார்.

? கற்றுக்கொள்ளுங்கள்: மாற்கு 1:9-15

- **மாற்கு 1:13.** இயேசுவை சாத்தான் சோதித்தபின்,தேவன் அவருக்குப் பணிவிடை செய்யத் தேவதூதர்களை அனுப்பினார் (மத்தேயு 4:11).
- **மாற்கு 1:15.** "காலம் நிறைவேறிற்று". பழைய ஏற்பாட்டில் தேவன் இஸ்ரவேலருக்கு ஓர் மேசியாவை (இரட்சகர்) அனுப்புவதாக வாக்குப் பண்ணி இருந்தார். அவர்கள் அநேக ஆண்டுகளாக அவருக்காகக் காத்திருந்தார்கள். ஆனால் இப்போது அந்தவேளை வந்திருக்கிறது. இயேசு தேவனுடைய ராஜ்யத்தின் ராஜாவாயிருப்பார். அவர் தேவனுடைய மக்களின் மேல் ஆளுகை செய்வார்.

→ பிரசங்கியுங்கள்: மாற்கு 1:9-15

தேவன் பேசுகிறார்!

மாற்கு 1:9~11

இயேசு அவருடைய வேலையை செய்யத் தொடங்குவதற்கான நேரம் வந்துவிட்டது. அவருடைய வேலை நற்செய்தியைக் கொண்டு வருவதாகும்.

- **இயேசு முதலாவது செய்த காரியம் என்ன? (மாற்கு 1:9)** நமக்கு ஒரு உதாரணமாய் இருப்பதற்காக இயேசு ஞானஸ்நானம் (தண்ணீருக்குள் அமிழ்த்தப்பட்டு) பெற்றார். இயேசுவைப் பின்பற்றும் ஒவ்வொருவரும் ஞானஸ்நானம் பெற வேண்டும்.
- **இயேசு தன் வேலையைச் செய்யத் தொடங்கினபோது தேவன் அவரைக் குறித்து என்ன நினைத்தார்? (மாற்கு 1:10,11)** இயேசு எவ்வளவு முக்கியமானவர் என்பதைக் குறித்து யோவான் கூறினது உங்களுக்கு நினைவு இருக்கின்றதா? (மாற்கு 1:4-8). இப்போது தேவன் பரலோகத்தில் இருந்து பேசுகிறார்! யோவான் இயேசுவைக் குறித்து கூறியது சரியே. இப்போது இயேசுவை தேவன் தன்னுடைய குமாரன் என்று கூறுகிறார். நாம் அவரை நம்ப வேண்டும்.

➡ பிரசங்கியுங்கள்: மாற்கு 1:9-15

சாத்தான் சோதிக்கிறான்

மாற்கு 1:12,13

தேவன் மகிழ்கின்றார், ஆனால் சாத்தான்(பிசாசு) கோபமடைகிறான். இயேசு நற்செய்தியைக் கொண்டு வரவேண்டுமென்பது தேவனுடைய தேவை. இயேசுவைத் தடை செய்வது சாத்தானுடைய தேவை. ஓர் இலகுவான வழியைப் பின் பற்றும்படி சாத்தான் இயேசுவுக்கு ஆசை காட்டி சோதிக்கிறான் (பிழையான காரியத்தை செய்ய ஆசை காட்டுவது என்பதே சோதனை என்பதன் கருத்தாகும்). ஆனால் இயேசு அவனுக்கு செவி கொடுக்கவில்லை.

இது தேவனுடைய மக்களாகிய இஸ்ரவேலர் வனாந்திரத்தில் இருந்ததைப் போன்றதாகும். (யாத்திராகமம் மற்றும் எண்ணாகமம்) இஸ்ரவேலர் சோதனையில் தோற்றுப் போனார்கள்.

இஸ்ரவேலர் தேவனை விசுவாசிக்காமலிருப்பதைத் தெரிந்து கொண்டார்கள். ஆனால் இயேசு சோதனையில் தோல்வியடைய இல்லை.

» சாத்தான் நம்மை இலகுவான வழியைத் தெரிந்தெடுக்கும்படி ஆசை காட்டுவான். இயேசுவை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். அவர் சாத்தானுக்கு இணங்கவில்லை. அவர் தேவனை விசுவாசித்தார். நாமும் சாத்தானுக்கு இணங்காமலிருக்க நமக்கு உதவும்படி இயேசுவிடம் கேட்க முடியும்.

இயேசு போதிக்கிறார்!

மாற்கு 1:14,15

இயேசு சோதனையில் வெற்றியடைந்தார். இயேசு நற்செய்தியை அறிவிக்க வனாந்திரத்திலிருந்து வெளியே வருகிறார். இனி யோவானால் நற்செய்தியைப் பிரசங்கிக்க முடியாது. (ஏன் முடியாது? மாற்கு 1:14). இப்போது யோவான் கூறிய அதே செய்தியை இயேசு மக்களுக்கு கூறுகிறார்.

- **அது என்ன செய்தி?**

மாற்கு 1:15

நல்ல செய்தி என்னவென்றால் இனிமேலும் மக்கள் எதிர் பார்த்துக் கொண்டிருக்கத் தேவையில்லை என்பதேயாகும். ராஜா வந்துவிட்டார். அவர்களுடைய பாவங்களை மன்னிக்கக்கூடியவர் வந்திருக்கிறார். இப்போது ஏதாவது செய்ய வேண்டிய நேரமாகும்.

» நாம் நமது பாவங்கள் மன்னிக்கப் படுவதற்குக் காத்துக் கொண்டிருக்கத் தேவையில்லை! இயேசு வந்திருக்கிறார். இயேசுவுக்காகக் கர்த்தருக்கு ஸ்தோத்திரம். இப்போதே உங்கள் பாவங்களிலிருந்து விலகி (மனந்திரும்புதல்) அவரைப் பின்பற்றுங்கள். (மனந்திரும்புவது என்றால் என்ன என்பதை விளக்கவும் ~ மாற்கு 1:1~8ஐக் குறித்த குறிப்புகளைப் பார்க்கவும்).

3 என்னைப் பின்பற்றுங்கள்!

பின்னணி

மாற்கு 1:1-15. இயேசுவே தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று **மாற்கு** நமக்கு கூறியிருக்கிறார். இயேசு சீக்கிரம் வருவார் என்று **யோவான்** மக்களுக்குக் கூறியிருக்கிறார். இயேசு அவருடைய குமாரனென்று **தேவன்** நமக்குக் கூறியிருக்கிறார்.

மாற்கு 1:16-20

இப்போது இயேசுவே தான் யார் என்பதை **வெளிப்படுத்த** ஆரம்பிக்கிறார். மாற்கு 1-5 அதிகாரங்களில் அவர் யார் என்பதை மக்களுக்கு கற்பிப்பதற்காக இயேசு பல காரியங்களைச் செய்கிறார். **அவர்கள் செய்ய வேண்டியதென்ன என்பதை அவர்களுக்குக் கூறுவதற்கான அதிகாரம் அவருக்கிருப்பதை** அவர் காண்பிக்கிறார். இரண்டு உதாரணங்களுக்கு, மாற்கு 1:22,27 ஆகிய வசனங்களை வாசிக்கவும்.

மாற்கு 1:16-20 வசனங்கள் அடங்கியுள்ள பகுதியில், சில மீன் பிடிப்பவர்களின் மேல் இயேசுவுக்கிருக்கும் அதிகாரத்தை நாம் காண்கிறோம். இந்த மனிதர்கள் இயேசுவைப் பின்பற்றுபவர்களில் விசேஷமான வர்களானார்கள். அவர்களை நாம் இயேசுவின் **சீஷர்கள்** என்று அழைக்கிறோம்.

முக்கிய விடயம்

தேவகுமாரனாகிய இயேசுவுக்கு நாம் என்ன செய்ய வேண்டுமென்று சொல்வதற்கான அதிகாரம் இருக்கிறது.

நீங்கள் செய்ய வேண்டியது

கட்டளையிடுவதற்கான அதிகாரம் இயேசுவுக்கு இருப்பதை கண்டுக்கொள்ள உங்கள் மக்களுக்கு உதவி செய்யுங்கள்.

நாம் என்ன செய்யவேண்டுமென்று மற்றவர்கள் நமக்குச் சொல்வதை நாம் விரும்புவதில்லை. நாம் எப்படி வாழ்வது என்பதை நாமே தெரிவு செய்வதையே நாம் விரும்புகிறோம். ஓர் உண்மையான கிறிஸ்தவன் இந்த மீன் பிடிப்பவர்களைப்போல இயேசு சொல்வதையே செய்வான். உங்கள் மக்களுக்கு இதை எப்படி கற்றுக்கொடுப்பது என்பதை யோசியுங்கள். அவர்கள் எளிதாக அதை விளங்கிக் கொள்ள அவர்களுக்கு உதவ ஓர் வார்த்தைப் படத்தை உபயோகியுங்கள்.

குறிப்புகள்

- **மாற்கு 1:16.** "கலிலேயாக்கடல்". இது கலிலேயாப் பகுதியிலுள்ள தொரு சிறு ஏரியாகும். வேதாகம வரைபடத்தில் அதனைக் கண்டு பிடிக்க முயற்சி செய்யுங்கள். இயேசு அதிகமான காலத்தை இப்பகுதியிலேயே செலவிட்டார்.

? கற்றுக்கொள்ளுங்கள்: மாற்கு 1:16-20

- **மாற்கு 1:16.** “சீமோன்”. பிறகு இயேசு அவனுக்கு “பேதுரு” என்று பெயரிட்டார். சீமோன் (பேதுரு), அந்திரேயா, யாக்கோபு, யோவான் முதலியவர்கள் இயேசுவின் 12 சீஷர்களில் நால்வராகும்.

➡ பிரசங்கியுங்கள்: மாற்கு 1:16-20

என்னைப் பின்பற்றுங்கள்

மாற்கு 1:16~20

கட்டளையிடுவதற்குத் தனக்கு அதிகாரம் இருப்பதை இயேசு காண்பிக்கிறார்.

⊞ **இப்படி கற்பனை செய்யுங்கள்.** தன் வேலையில் மும்முரமாக ஈடுபட்டிருக்கும் ஒருவரை நீங்கள் காண்கிறீர்கள். அவருக்கு நல்ல தொழில் ஒன்றிருக்கிறது. அவருக்கு நல்ல வீடும், பராமரிப்பதற்கு ஓர் குடும்பமும் உள்ளது. நீங்கள் அவரிடம் அவர் வேலையை விட்டு உங்கள் பின்னே வரும்படி கூறுகிறீர்கள். அவருக்கு பணமும் நீங்கள் கொடுக்கப் போவது இல்லை. அப்போது அவர் உங்களிடம் என்ன கூறுவார்? அவ்விடத்தை விட்டு உங்களை போகும்படி அவர் சொல்வார் அல்லவா? ஆனால் இயேசு “என் பின்னே வா” என்று சொன்ன போது என்ன நடக்கிறது?

- **இயேசுவின் பின்னே வரும்படி அவர் சீமோனிடமும், அந்திரேயாவிடமும் கூறினபோது அவர்கள் என்ன செய்தார்கள்? (மாற்கு 1:18)**

அவர்கள் விவாதிக்கவில்லை. தங்கள் குடும்பங்களுடன்

➡ பிரசங்கியுங்கள்: மாற்கு 1:16-20

ஆலோசிப்பதற்கு வீட்டிற்கும் போகவில்லை. அவர்கள் **உடனே** இயேசுவின் பின்னே சென்றார்கள். அவர்கள் தங்கள் வேலையை விட்டு விட்டார்கள். இனி அவர்கள் மீன் பிடிப்பவர்களல்ல. அவர்கள் இயேசுவைப் பின்பற்றுபவர்கள்.

- **இயேசுவின் பின்னே வரும்படி யாக்கோபிடமும், யோவானிடமும் இயேசு சொன்னபோது அவர்கள் என்ன செய்தார்கள்? (மாற்கு 1:20)**

» கட்டளையிடுவதற்கு இயேசுவுக்கு அதிகாரம் உண்டு. நாம் வேதாகமத்தை வாசிக்கும்போது, இயேசுவுக்கு நாம் என்ன செய்ய வேண்டுமென்று சொல்ல அதிகாரம் உண்டு என்பது தெரிகிறது. நமது எல்லாப் பாவங்களையும் விட்டு விடும்படி இயேசு நம்மிடம் கூறுகிறார். அவருக்குக் கீழ்ப்படிந்து நடக்கும்போது ஒரு புது வாழ்க்கையை தொடங்கும்படி நம்மிடம் அவர் கூறுகிறார். அவர் 'என் பின்னே வாருங்கள் என்கிறார்.

மனுஷரைப் பிடிக்கிறவர்கள் ஆகுங்கள்!

மாற்கு 1:17

இந்த மனிதர்களுக்கு ஓர் விசேஷ வேலையை இயேசு வைத்திருந்தார். எல்லோரும் அவர்களின் வழக்கமான வேலையை விட்டுவிட வேண்டுமென்பது இயேசுவின் விருப்பமல்ல. அவர் எல்லோரையும் போதகர்களாய் இருக்க அழைப்பதில்லை.

- **இந்த மீனவர்கள் எந்த விசேட வேலையைச் செய்யும்படி அவர்களை இயேசு அழைத்தார்? (மாற்கு 1:17)**

அவர்கள் முன்பு மீன்களைப் பிடித்தார்கள். இப்போது அவர்கள் மனுஷரைப் பிடிக்க வேண்டும். அவரைக் குறித்த நற்செய்தியை மக்களுக்கு சொல்வதற்கு இயேசு அவர்களுக்குக் கற்றுக் கொடுப்பார். அப்போது சிலர் அவருடைய ராஜ்ஜியமாகிய அவருடைய வலைக்குள் வருவார்கள். இயேசு அவர்களை அவரைப் போல **போதகர்களாய்** இருக்க அழைக்கிறார்.

» நற்செய்தியை மக்களுக்கு அறிவிப்பது மிக முக்கியமான வேலையாகும். நீங்கள் உங்கள் வேலையை விட வேண்டும் என்று இயேசு விரும்பாமலிருக்கலாம். அவர் உங்களை ஓர் போதகராய் இருப்பதற்கு அழைக்காமலிருக்கலாம். ஆயினும், எல்லா கிறிஸ்தவர்களும் 'மனுஷரைப் பிடிக்க' வேண்டுமென்று அவர் விரும்புகிறார். மக்கள் இயேசுவின் ஆளுகைக்குள் வர அவர்களுக்கு உதவ வேண்டுமென்பது அவர் விருப்பமாகும்.

» இயேசுவைக் குறித்து புரிந்து கொள்ளாத மக்களைப் பற்றி நினைத்துப் பாருங்கள். அவர்களுக்கு இயேசுவைக் குறித்த நற்செய்தியை அறிவிக்க உங்களுக்கு உதவி செய்யும்படி தேவனிடம் கேளுங்கள்.

4 இயேசு அதிகாரத்துடன் போதிக்கிறார்

பின்னணி

மாற்கு 1:16–20. **நாம் என்ன செய்ய வேண்டுமென்று சொல்வதற்கு** இயேசுவுக்கு அதிகாரமுண்டு. “என் பின்னே வாருங்கள்” என்று இயேசு சொன்னார். மீன் பிடிப்பவர்கள் தங்கள் வலைகளை விட்டு விட்டு அவருக்குப் பின் சென்றார்கள்.

மாற்கு 1:29–45. இயேசுவுக்கு **சுகமாக்க** அதிகாரமுண்டு.

மாற்கு 1:29–45. இயேசுவுக்கு **பாவங்களை மன்னிக்க** அதிகாரமுண்டு.

இயேசுவே தேவனுடைய குமாரன் என்று மாற்கு நமக்குக் கூறியிருக்கிறார். இப்போது மாற்கு தேவனுடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் அதிகாரத்தை நமக்குக் காட்டுகிறார்.

முக்கிய விடயம்

சத்தியத்தை நமக்குக் கற்றுக் கொடுக்க தேவனுடைய குமாரனாகிய இயேசுவுக்கு அதிகாரமுண்டு.

நீங்கள் செய்ய வேண்டியது

இயேசுவுக்கிருக்கும் விசேட அதிகாரங்களை நாமும் பெற்றுக்கொள்ள முடியும் என்று மாற்கு **கூறவில்லை.** இயேசு எவ்வளவு விசேடமானவர் என்பதையும் இயேசு தேவனுடைய குமாரன் என்பதையும் நாம் காண வேண்டுமென்று அவர் விரும்புகிறார். உங்கள் பேச்சு இயேசுவைப் பற்றியதாயிருக்க வேண்டும். இயேசு எவ்வளவு அதிகாரமுள்ளவர் என்பதை மக்கள் அறிந்து கொள்ள வேண்டுமென்று ஜெபியுங்கள். அப்போது அவர்கள் இயேசுவையும் அவர் சொல்வதையும் விசுவாசிப்பார்கள்.

குறிப்புகள்

- **மாற்கு 1:21.** “ஓய்வு நாள்”. ஓய்வு நாளில் யூதர்கள் தேவனை ஆராதிக்க ஒன்று கூடுவார்கள். அவர்கள் “ஜெப ஆலயம்” என அழைக்கப்படும் ஓர் கட்டிடத்தில் கூடுவார்கள். ஒரு போதகர் பழைய ஏற்பாட்டிலிருந்து ஒரு பகுதியை வாசித்து தேவனைக் குறித்து மக்களுக்குப் போதிப்பார்.
- **மாற்கு 1:22.** “வேதபாரகர்கள்” அடிக்கடி ஜெபாலயங்களில் போதிப்பார்கள். அவர்கள் அநேக வருடங்கள் பழைய ஏற்பாட்டை (நியாயப்பிரமாணம்) கற்றவர்களாய் இருந்தார்கள்.
- **மாற்கு 1:24.** இயேசுவின் மேல் அதிகாரம் செலுத்துவதற்காக அசுத்த ஆவி இயேசுவின் பெயரை கூறியது. இயேசுவுக்கு அசுத்த ஆவியைவிட அதிக வல்லமையிருந்தது. இயேசு அசுத்த ஆவியை மௌனமாய் இருக்கப் பண்ணினார்.

➡ பிரசங்கியுங்கள்: மாற்கு 1:21 – 28

போதிக்க அதிகாரம்

📖 மாற்கு 1:21,22

இயேசுவை வல்லமையான போதகராக்கியது எது?

- உரத்த சத்தம்?
- பல நல்ல கதைகள்?

இல்லை. மாற்கு அதைக் குறித்து கூறவில்லை. மக்கள் ஆச்சரியப் பட்டது, அதைக் குறித்தல்ல. இயேசு **தேவனைக் குறித்த உண்மைகளைக் கூறுகிறார்** என்று மக்கள் அறிந்ததாலேயே அவர்கள் அதிக வியப்படைந்தார்கள். அவர் வேதப்பாரகர்களைப் போல போதிக்கவில்லை. இயேசு பழைய ஏற்பாட்டைக் குறித்து மட்டும் அவர்களுக்குப் போதிக்கவில்லை. அவர் அவர்களுக்குப் புதிய காரியங்களையும் போதித்தார். (மாற்கு 1:27). அந்தப் புதிய காரியங்கள் அவர்கள் அறிந்திருந்த பழைய காரியங்களுடன் பொருந்துவதாய் இருந்தன.

> ⊳ அநேகர் பிழையானவைகளை போதிப்பார்கள். அவர்கள் நல்ல பேச்சாளர்களாய் இருக்கலாம். அவர்கள் நமக்கு இயேசுவைக் குறித்த சத்தியத்தைக் கூறினால் மாத்திரமே அவர்கள் சொல்வதை விசுவாசிக்க வேண்டும். அவர்கள் சொல்வது வேத புத்தகத்தில் இருந்து வருவதாய் இருந்தால் மட்டுமே ஏற்றுக்கொள்ள வேண்டும்.
>
> ⊳ இயேசுவுக்கு போதிப்பதற்கு அதிகாரம் இருக்கிறது. அவர் சொல்வது சத்தியமாகும் (யோவான் 14:6)

அசுத்த ஆவிகளின் மேல் அதிகாரம்

📖 மாற்கு 1:23–26

இயேசு யார் என்று அறிந்திருந்ததினால் அசுத்த ஆவி அவருக்கு பயந்தது. இயேசு தேவனுடைய குமாரன் என்பது உண்மை என்பதை அது அறிந்திருந்தது.

இயேசு தேவனுடைய குமாரன். அவருக்கு அசுத்த ஆவிகளின் மேல் அதிகாரம் இருக்கிறது. ஏனென்றால் நாம் இயேசுவை நம்பினால் நாம் அசுத்த ஆவிகளுக்கு பயப்படத் தேவையில்லை. எல்லா அசுத்த ஆவிகளையும் விட இயேசு வல்லமையுள்ளவர். இயேசு சிலுவையில் சாத்தானை ஜெயித்திருக்கிறார்.

> ⊳ அசுத்த ஆவிகளின் மேலுள்ள உங்கள் பயத்திலிருந்து உங்களை விடுவிக்கும்படி இயேசுவிடம் கேளுங்கள். உங்கள் முழு வாழ்க்கைக்காகவும் இயேசுவின் வல்லமையின் மேல் நம்பிக்கை வையுங்கள்.

மக்கள் அதிக ஆச்சரியப்பட்டார்கள்

📖 மாற்கு 1:27,28

- **அவர்கள் எதைக்குறித்து அதிக ஆச்சரியமடைந்தார்கள்? (மாற்கு 1:27)**
- **அவர்கள் கேட்ட கேள்வி என்ன?**

➡ பிரசங்கியுங்கள்: மாற்கு 1:21 – 28

இயேசுவுக்கு விசேஷ வல்லமை இருந்ததினால் மாத்திரம் மக்கள் வியப்படையவில்லை. இயேசு **விசேஷமான ஒருவர்** என்பதை அவர்கள் அறிந்திருந்தார்கள். அவருடைய **போதனையில்** அதிகாரம் இருந்தது என்பதை அவர்கள் அறிந்திருந்தார்கள். (இதை உங்களுடைய மக்களுடன் பொருத்தவும்).

5 இயேசு போதிப்பதற்கே வந்தார்

பின்னணி

மாற்கு 1:21~28. **சத்தியத்தை நமக்குப் போதிப்பதற்கு** இயேசுவுக்கு அதிகாரமுண்டு.

மாற்கு1:1~12. **பாவங்களை மன்னிப்பதற்கு** இயேசுவுக்கு அதிகாரமுண்டு.

மாற்கு தேவகுமாரனாகிய இயேசுவின் அதிகாரத்தை நமக்குக் காண்பிக்கிறார். மாற்கு 1:29:45 வசனங்களில் அவர் இயேசுவின் அதிகாரத்தைக் குறித்து மேலும் பல உதாரணங்களைத் தருகிறார். இயேசு வெறும் அற்புதங்கள் செய்வதற்காக மாத்திரம் வரவில்லை என்றும் மாற்கு நமக்குக் காண்பிக்கிறார்.

இயேசு **ஏன்** வந்தார் என்பதை மாற்கு மூன்று முறை நமக்குக் கூறுகிறார். (மாற்கு 1:38, 2:17,10:45)

மாற்கு 1:29~45

முக்கிய விடயம்

தேவனுடைய குமாரனாகிய இயேசு **போதிக்க** வந்தார். சுகப்படுத்துவதை விட இயேசுவைக் குறித்த சத்தியத்தை மக்களுக்கு அறிவிப்பது அதிக முக்கியமாகும்.

நீங்கள் செய்ய வேண்டியது

நாங்கள் பார்க்கும் மற்ற பகுதிகளை விட இந்தப் பகுதி அதிக நீண்டதாயிருக்கிறது. நீங்கள் இந்தப் பகுதியிலுள்ள எல்லாவற்றையும் குறித்துப் பேசத் தேவையில்லை. அவருடைய அதிகாரத்தைக் காண்பிப்பதற்கு இயேசு செய்த ஒரு அற்புதத்தை உதாரணமாக காண்பிக்கவும். இயேசுவிற்கு கடினமானது ஒன்றுமில்லை! அவருக்கு எல்லா அதிகாரமும் இருந்தது. ஆயினும் அவர் மக்களை சுகப்படுத்த மாத்திரம் வரவில்லை. மக்களுக்கு நற்செய்தியை சொல்வது அதைவிட முக்கியமாகும்.

குறிப்புகள்

- **மாற்கு 1:40.** "குஷ்டரோகம்" இது இப்போதிருக்கும் குஷ்டரோகத்தைப் போல் ஒருவேளை இல்லாமல் இருந்திருக்கக் கூடும். இந்த வார்த்தை சில வகையான தோல் வியாதிகளுக்கு உபயோகிக்கப்படுகின்றது. பழைய ஏற்பாடு இப்படியான சரும வியாதியிருந்த மக்களைக் குறித்து நமக்குக் கூறுகிறது. அவர்கள் மக்களிலிருந்து விலக்கப்பட்டிருந்ததுடன் ஒன்று கூடி தேவனை ஆராதிப்பதற்கும் தடை செய்யப்பட்டிருந்தனர் (லேவியராகமம் 13:45,46). மாற்கு 1:44ல் இயேசு அந்த மனிதனிடம், தேவனை மீண்டும் ஆராதிப்பதற்கு ஏதுவாக, போய் ஆசாரியனிடம் காண்பிக்கும் படி கூறுகிறார். அந்த மனிதன் இயேசுவுக்குக் கீழ்ப்படியவில்லை என்பது துக்ககரமான விஷயமாகும்.

இயேசுவுக்குக் கடினமானது ஒன்றுமில்லை

எல்லாவித நோய்களின் மீதும் அவருக்கு அதிகாரம் இருப்பதை இயேசு காண்பிக்கிறார்.

📖 மாற்கு **1:29~31.** சீமோனின் மாமி

📖 மாற்கு **1:32~34.** எல்லா விதமான வியாதிகளும், அசுத்த ஆவிகளும்

📖 மாற்கு **1:40~42.** குஷ்டரோகம்

கவனத்தில் கொள்ள வேண்டிய சில குறிப்புகள் -

- இயேசு மக்களை **உடனே** குணமாக்கினார் (மாற்கு 1:31,42). வார்த்தையின் மூலமாக மாத்திரம், அல்லது தொடுவதால் அவர்களை இயேசுவால் குணமாக்க முடிந்தது. ஏனென்றால் இயேசு தேவ வல்லமையுள்ளவராய் இருக்கிறார்.
- இயேசு மக்களை **அன்பினிமித்தம்** குணமாக்கினார். மாற்கு 1:31ல் இயேசு எவ்வளவு மென்மையானவர் என்பதைக் கவனிக்கவும். மாற்கு 1:41ல் இயேசு எவ்வளவு மனதுருக்கத்துடன் அந்த மனிதனுக்கு உதவினார் என்பதை பாருங்கள்.
- மாற்கு1:41ல் இயேசு குஷ்டரோகியைத் **தொட்டார்.** மக்கள் குஷ்டரோகத்திற்கு அஞ்சினார்கள். குஷ்டரோகம் உள்ளவர்கள் மற்றவர்களை விட்டு தூர விலகி ஜீவிக்க வேண்டியிருந்தது. ஆனால் இயேசு அதற்கு அஞ்சவில்லை. அவருடைய வல்லமை குஷ்டரோகத்தை விட வலுவானது.
- இயேசு **பிரபலமாக** வேண்டும் என்று விரும்பவில்லை. (மாற்கு 1:43-45). அற்புதங்களுக்காக மாத்திரம் மக்கள் அவரிடம் வருவதை அவர் விரும்பவில்லை. அவர் யார் என்பதை அவர்கள் புரிந்து கொள்ள வேண்டுமென்று அவர் விரும்பினார்.

இயேசு போதிக்க வந்தார்

📖 மாற்கு **1:35~39**

(என்ன நடக்கிறது என்பதை மக்கள் கற்பனைச் செய்ய உதவி செய்யவும்).

அது அதிகாலை வேளை. இயேசு தனிமையில் அமைதியாக இருக்க விரும்புகிறார். எல்லோரும் எழுந்து விட்டார்கள். அவர்கள் இயேசுவைத் தேடுகிறார்கள். அநேகர் இயேசு தங்களை குணப்படுத்த வேண்டுமென்று விரும்பினார்கள். இயேசு என்ன கூறினார்? (மாற்கு 1:38)

இயேசு இரக்கமற்றவராய் இருக்கவில்லை. அவர் வந்த காரணத்தைக் குறித்து அவர் மிகத் தெளிவுள்ளவராயிருந்தார். அவர் மக்களை வெறுமனே குணப்படுத்த வரவில்லை. அவரைப் பற்றிய நற்செய்தியை அவர் மக்களுக்கு அறிவிக்க வந்தார். இயேசு "குணமாக்குபவர்" அல்ல. அவர் "இரட்சிப்பவர்". அவர் அநேக

➡ கற்பியுங்கள்: மாற்கு 1:29–45

இடங்களுக்குச் செல்லவேண்டும். எல்லோரும் நற்செய்தியை கேட்க வேண்டும்.

இன்று அநேக மக்கள் இயேசு தங்களை குணமாக்க வேண்டுமென்று விரும்புகிறார்கள். ஆனால் இயேசு மக்களை குணப்படுத்துவதற்காக முக்கியமாக வரவில்லை. மக்களை பாவங்களிலிருந்து இரட்சிப்பது இயேசுவுக்கு அதை விட அதிக முக்கியமாகும். இயேசு நம்மை நமது நோயிலிருந்து குணமாக்கியும், நாம் நரகத்திற்குப் போவோமானால் அதனால் பிரயோஜனம் என்ன?

6 இயேசுவுக்கு பாவங்களை மன்னிக்க அதிகாரமுண்டு

பின்னணி

மாற்கு தேவகுமாரனாகிய இயேசுவின் அதிகாரத்தை நமக்குக் காண்பிக்கிறார். மாற்கு 1:29-45ல் அவர் இயேசுவின் அதிகாரத்தைக் குறித்து மேலும் சில உதாரணங்களை நமக்குக் கொடுக்கிறார்.

மாற்கு 2:1-12ல் இயேசு ஓர் வித்தியாசமான அதிகாரத்தை வெளிப்படுத்துகிறார். அவர் உண்மையில் தேவன் என்பதை இயேசு வெளிப்படுத்துகிறார்.

முக்கிய விடயம்

இயேசுவுக்கு பாவங்களை மன்னிக்க அதிகாரமுண்டு. தேவனால் மாத்திரமே பாவங்களை மன்னிக்க முடியும். எனவே இயேசு தேவனாவார்.

நீங்கள் செய்ய வேண்டியது

உங்கள் மக்களில் சிலர் அவர்கள் பாவங்களை ஒரு பெரிய பிரச்சினையாக ஒருவேளை நினைக்காமலிருக்கக் கூடும். அவர்கள் தேவனுடைய உதவியை பல காரியங்களில் எதிர் பார்க்கலாம். ஆயினும்,அவர்கள் பாவங்களை அவர் மன்னிக்க வேண்டிய அவசியமில்லை என நினைக்கலாம். இந்த சம்பவத்தை உபயோகித்து நீங்கள் எப்படி அவர்களுக்கு உதவி செய்யலாம் என யோசியுங்கள். இயேசு இந்த மனிதனுடன் மிகத் தனிப்பட்ட விதத்தில் கதைக்கிறார்! இயேசு அவர்கள் பாவங்களைப் பற்றி கதைத்ததைக் குறித்து அவர் கடுமையாக நடந்து கொண்டதாக சிலர் நினைக்கலாம். ஆனால் நமது முக்கிய தேவை என்ன என்பது இயேசுவுக்குத் தெரியும்.

குறிப்புகள்

- **மாற்கு 2:3.** “ஓர் திமிர்வாதக்காரன்”. இந்த மனிதன் முடக்கு வாதத்தினால் பாதிக்கப்பட்டவன். அவனுக்கு நடக்க முடியாது. ஏனென்றால் அவன் கால்கள் செயலற்றுப் போயிருந்தன.
- **மாற்கு 2:4.** வீடுகள் தட்டையான கூரைகளை உடையவையாயிருந்தன. வெளியே படிக்கட்டுக்கள் இருந்தன. எனவே அதன் மூலம் கூரையின் மேல் ஏறலாம். கூரையைப் பிரிப்பதும், பின் பழையபடி மூடிவிடுவதும் கஷ்டமல்ல.
- **மாற்கு 2:7.** “தேவதூஷணம்“ என்பது “தேவனுக்கு விரோதமாகக் கதைப்பதாகும்.“ தேவனால் மட்டுமே செய்யக் கூடியவற்றை நம்மாலும் செய்யமுடியும் என்று கூறினால் நாம் “தேவதூஷணம்“ சொல்கிறவர்களாயிருப்போம்.

அதிர்ச்சியூட்டும் ஒன்றைச் சொல்வது

மாற்கு 2:1~7

(என்ன நடக்கிறது என்பதைக் கற்பனை செய்வதற்கு மக்களுக்கு உதவி செய்யுங்கள். மாற்கு 2:5ல் இயேசு கூறிய வார்த்தைகளின் மூலம் மக்கள் அதிர்ச்சி அடையத்தக்கதாக அவர்களுக்கு அந்த சம்பவத்தைக் கூறுங்கள். இயேசு என்ன சொல்லுவார் என்று அந்தக் கூட்டம் நினைத்திருக்கும், இயேசு என்ன சொல்லுவார் என்று அந்த மனிதன் எதிர்பார்த்திருப்பான்? ஏன் இயேசுவின் வார்த்தைகள் அதிர்ச்சியூட்டுபவையாய் இருந்தன?)

⊞ (உங்கள் மக்களுக்கு உதவி செய்ய ஒரு கதையைக் கூறவும்). வியாதிப்பட்ட ஒரு சிறுவனை கற்பனை செய்யுங்கள். எந்த மருந்தினாலும் அவனுக்கு சுகம் கிடைக்கவில்லை. அப்போது அவன் குடும்பம் அவர்கள் கிராமத்துக்கு வருகை தரும் ஒரு விசேஷ மருத்துவரைக் குறித்து கேள்விப்படுகிறது. அவரால் அப்பையனை குணமாக்க முடியும். அவர்கள் அவரிடம் செல்கிறார்கள். "ஆம் என்னால் இவனை குணமாக்க முடியும்" என்று அவர் சொல்வார் என ஆவலுடன் எதிர்பார்க்கிறார்கள். ஆனால் அதற்கு மாறாக அவர் "உன் பாவங்கள் மன்னிக்கப் படவேண்டும்" என்று கூறுகிறார். அப்போது அவர்களுக்கு என்ன தோன்றும்? அவர்கள் என்ன சொல்வார்கள்?

> இயேசு உங்களிடம் கூறும் மிக நல்ல வார்த்தைகள் இவைகளாயிருக்குமா? உங்கள் பாவங்கள் மன்னிக்கப்படுவது உங்கள் வாழ்க்கையில் மிக முக்கியமானதொரு காரியமா?

சிலர் மிக அதிர்ச்சியடைந்தனர் (மாற்கு 2:7). ஒரு விதத்தில் அவர்கள் சரியே. தேவனால் மாத்திரமே பாவங்களை மன்னிக்க முடியும். "மகனே உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டன" என்று நீங்களோ அல்லது நானோ கூறுவது பிழையாகும். இயேசு தான் தேவன் என்பதை உரிமை கோருகிறார்!

அற்புதமான ஒன்றைச் சொல்வது

மாற்கு 2:8~12

"உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டன" என்று எவராலும் **கூற** முடியும். அது உண்மை என்று எப்படி எங்களுக்குத் தெரியும்? இயேசுவுக்குப் பாவங்களை மன்னிக்க **முடியும்** என்பது மக்களுக்கு எப்படி தெரியும்?

இயேசு அவருடைய வார்த்தைகள் உண்மை என்பதை அவர்களுக்குக் **காட்டுகிறார்** (மாற்கு 2:8-12). (உங்கள் மக்கள் அது எப்படியிருக்கும் என்பதைக் கற்பனை செய்வதற்காக, கதையை அவர்களுக்குக் கூறுங்கள். அந்தக் கூட்டத்தில் மக்கள் அடைந்த அதிர்ச்சியை உங்கள் மக்கள் உணர உதவி செய்யுங்கள்).

இயேசுவுக்கு பாவங்களை மன்னிக்க அதிகாரம் இருக்கிறது. ஏனென்றால் அவருக்கு அந்த

➞ பிரசங்கியுங்கள்: மாற்கு 2:1 – 12

மனிதனை நடக்கச் செய்யும் அதிகாரம் இருந்தது. தேவனுக்கு மாத்திரமே அந்த அதிகாரம் உண்டு. **எனவே இயேசு தேவனாகும்.**

» 'உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டன'. இவை அற்புதமான வார்த்தைகளாகும். ஏனென்றால் அவைகளைக் கூற இயேசுவுக்கு அதிகாரம் இருக்கிறது! இயேசு பூமிக்கு பாவங்களை மன்னிப்பதற்காகவே பூமிக்கு வந்தார். இயேசு பாவங்களை மன்னிப்பதற்காக சிலுவையில் மரித்தார். நாம் அவரை விசுவாசிக்கும் போது நமது பாவங்களை மன்னிப்பதாக அவர் வாக்குப்பண்ணி இருக்கிறார். உங்கள் வாழ்க்கையில் இதுவே மிக முக்கிய காரியமாக இருக்குமானால், இன்றே உங்கள் பாவங்கள் மன்னிக்கப்பட இயேசுவை விசுவாசியுங்கள்.

7 இயேசு அழைக்கும் மக்களின் வகை

பின்னணி

மாற்கு 2:1-12ல் அவருக்கு பாவங்களை மன்னிக்கும் அதிகாரம் உண்டென்பதை இயேசு காண்பிக்கிறார். எனவே இப்போது இயேசு, அவர் நல்ல மனிதர்களுக்காக வரவில்லை என்பதை காண்பிக்கிறார். அவர் பாவிகளுக்காக வந்தார். தங்கள் பாவங்கள் மன்னிக்கப்பட வேண்டும் என்று விரும்புபவர்களுக்காக இயேசு வந்தார்.

மாற்கு 2:17ல் இரண்டாவது முறையாக இயேசு **அவர் எதற்காக வந்தார்** என்பதை நமக்குக் கூறுகிறார் (மாற்கு 1:38ஐ பார்க்கவும்).

முக்கிய விடயம்

இயேசு நல்ல மனிதர்களுக்காக வரவில்லை. அவர் பாவிகளுக்காக வந்தார்.

நீங்கள் செய்ய வேண்டியது

இயேசு நல்ல மனிதர்களைத் தெரிந்தெடுப்பதாக மக்கள் இன்னும் நினைக்கிறார்கள்! அநேக மக்கள் அவர்கள் நல்லவர்களானதால் இயேசு அவர்களைக் குறித்து மகிழ்ச்சியடைகிறார் என்று நினைக்கிறார்கள். இப்பகுதி அவர்கள் நினைப்பது **பிழை** என்று நமக்குப் படிப்பிக்கிறது. இதை எப்படி அவர்களுக்குக் கூறுவது என்பதைக் குறித்து சிந்தித்து அதற்காக ஜெபிக்கவும்.

இயேசு அவர்களுக்காக வந்தார் என்பதை கெட்ட மனிதர்கள் அறிந்து கொள்ள வேண்டுமென்று நீங்கள் விரும்ப வேண்டும். தங்களுடைய பாவங்களிலிருந்து தங்களை மீட்கும்படி அவர்கள் இயேசுவிடம் கேட்க வேண்டும் என்று நீங்கள் விரும்ப வேண்டும்.

சில மக்கள் தாங்கள் ஏற்கனவே நல்லவர்களாக இருப்பதாக நினைக்கிறார்கள். அவர்கள் நல்லவர்களல்ல என்பதை அவர்களை நீங்கள் அறிய வைக்க வேண்டும். அவர்கள் இயேசுவிடம் தங்களை நல்லவர்களாக மாற்றும்படி கேட்கப் பண்ண வேண்டும்.

குறிப்புகள்

- **மாற்கு 2:14.** "லேவி" என்பது **மத்தேயுவின்** இன்னொரு பெயராகும்.
- **மாற்கு 2:14.** "ஆயக்காரர்கள்". இவர்கள் ரோமர்களுக்காக யூதர்களிடம் வரி சேகரிப்பவர்களாகும். அநேகர் ஆயக்காரர்களை வெறுத்தார்கள். ஏனென்றால் அவர்கள் ரோமர்களுக்கு வேலை செய்தார்கள். ஒரு உண்மையான யூதன் ஒரு போதும் ரோமருக்கு உதவி செய்யமாட்டானென்று அவர்கள் நினைத்தார்கள். பெரும்பாலான ஆயக்காரர்கள் ஏமாற்றுகிறவர்களாயிருந்தார்கள். அவர்கள் தங்களுக்கென்று அதிக பணத்தை வசூலித்ததால் பணக்காரர்களாய் மாறினார்கள்.

கற்றுக்கொள்ளுங்கள்: மாற்கு 2:13-17

- **மாற்கு 2:15.** "பாவிகள்". எல்லா மனிதர்களும் பாவிகள் என்பதை நாமறிவோம். ஆனால் யூதர்கள் சிலரை மாத்திரம் "பாவிகள்" என்று அழைத்தார்கள். இவர்கள் பிழையான காரியங்களை செய்பவர்களாகும். உதாரணமாக யூதர்கள் விபச்சாரிகளை "பாவிகள்" என்று அழைத்தார்கள். ஆயக்காரரும், "பாவிகளும்" எப்போதும் கூட்டாளிகள். எனவே யூதர்கள் அவர்கள் யாவரையும் வெறுத்தார்கள்.
- **மாற்கு 2:16.** "பரிசேயர்". இவர்கள் தேவனுடைய கட்டளைகளைப் பின்பற்ற அதிக முயற்சி செய்யும் மக்களாய் இருந்தார்கள். அவர்கள் மிக கண்டிப்பானவர்கள். அவர்கள் தங்களை நல்லவர்களாக நினைத்துக் கொண்டார்கள்.

பிரசங்கியுங்கள்: மாற்கு 2:13-17

இயேசு பாவிகளை அழைக்கிறார்

மாற்கு 2:17

நீங்கள் இயேசு அழைக்கும் வகையானதொரு மனிதரா? நீங்கள் ஒரு பாவியா? (இயேசு சொன்ன ஆச்சரியமான காரியத்தைக் குறித்துப் பேசவும். இயேசு பாவிகளுக்காக வந்தார்!!)

- **இது கெட்ட மனிதர்களுக்கு நல்ல செய்தியாகும்!** இந்த "பாவிகளையும்"ஆயக்காரரையும் எல்லோரும் வெறுத்தார்கள்.ஆனால் இயேசு அவர்களுக்காக வந்தார். அவர் அவர்கள் மேல் அன்பு செலுத்தினார்!
- **இது நல்ல மனிதர்களுக்கு கெட்ட செய்தியாகும்!** யாரை இயேசு அழைக்க **வரவில்லை** என்பதை கவனிக்கவும் (மாற்கு 2:17). "நீதிமான்கள்" நல்ல மனிதர்கள் ஆகும். தாங்கள் ஏற்கனவே நல்லவர்களாயிருப்பதாக பரிசேயர் நினைக்கிறார்கள். இயேசு கெட்ட மனிதர்களுடன் சாப்பிடுவதைக் குறித்து அவர்கள் விருப்பமற்றிருந்தார்கள். (மாற்கு 2:16).
- **இரட்சிக்கப்பட்ட மக்களுக்கு இது முக்கியம்!** இயேசு நமது பாவங்களை மன்னித்து இருப்பாரானால், நாம் இயேசுவைக் குறித்து

மற்றவர்களுக்குக் கூற விரும்புவோம். அப்படியானால், நாம் எப்படிப்பட்ட மனிதர்களுக்கு அதைக் கூறுவோம்? நல்லவர்களுக்கு மட்டுமா, அல்லது ஆலயத்திற்குப் போகின்றவர்களுக்கா? அல்லது கெட்டவர்களுக்கு அதைக் கூறுவோமா?

இயேசு ஏன் பாவிகளை அழைக்கிறார்

மாற்கு 2:17

அவர் ஏன் பாவிகளுக்காக வந்தார் என்பதை இயேசு விளக்குகிறார். ஏனென்றால் அவர்களுக்குத்தான் அவர் தேவைப்பட்டார். (இயேசு சொன்ன வைத்தியரின் உதாரணத்தை மக்களுக்கு விளக்கவும்) நோயுற்றிருப்பவர்கள்தான் வைத்தியரிடம் போவார்கள். இயேசுவால் நமது எல்லாப் பாவங்களையும் அகற்ற முடியும். அவர் அதைச் செய்வதற்காகவே சிலுவையில் மரித்தார். உங்கள் எல்லாப் பாவங்களையும் மன்னித்து உங்களை குணப்படுத்தும்படி இயேசுவிடம் கேளுங்கள்.

(ஏன் நல்லவர்கள் தங்களுக்கு இயேசு என்னும் வைத்தியர் தேவையில்லை என்று நினைக்கிறார்கள்? என்பதைக் காண்பிக்கவும். அவர்கள் ஏற்கனவே நல்லவர்களாய் இருப்பதாக நினைப்பதால், அவர்களுக்கு அவருடைய மன்னிப்பு தேவையற்றதாய் தோன்றுகிறது)

+ வைத்தியரிடம் போகும் ஒரு ஆரோக்கியமான பெண்ணின் கதையைக் கூறி விளக்கவும். அவள் வைத்தியரிடம் தான் நல்ல சுகமாக இருப்பதாகக் கூறுகிறாள். அவள் தன்னைப் பரிசோதிக்க வைத்தியருக்கு இடமளிக்காமல், அவளுடைய ஆரோக்கியத்தைக் குறித்து வைத்தியர் மெச்ச வேண்டுமென்று மாத்திரம் விரும்புகிறாள். நிச்சயமாக அந்த வைத்தியர் ஆரோக்கியமான வர்களுடன் தன் நேரத்தை வீணாக்க விரும்ப மாட்டார். இயேசு நல்ல மனிதர்களுக்காக வரவில்லை. ஏனென்றால் அவர்களுக்கு ஒரு வைத்தியர் தேவையில்லை.

இயேசு பாவிகளிடம் என்ன செய்யச் சொல்லுகிறார்

மாற்கு 2:14

லேவி பண ஆசையுள்ளவனாய் இருக்கிறான். இயேசு அவனை அவனுடைய பணத்தை விட்டு வர அழைக்கிறார். அவன் இயேசுவின் பின்னே செல்கிறான். (லேவிக்கு எப்படி இது ஒரு முழு மாறுதலான வாழ்க்கையாய் இருந்தது என்பதை மக்களுக்கு காண்பிக்கவும்)

நமது பிழையான வாழ்க்கை முறையை விட்டு விடுமாறு இயேசு நம்மை அழைக்கிறார். அவர் நமது பாவங்களை விட்டு விடுமாறு நம்மை அழைக்கிறார். நாம் திரும்பி அவர் பின்னே வரும்படி இயேசு அழைக்கிறார்.

» வைத்தியரினால் கொடுக்கப்பட்ட மருந்தை குடிக்காமலிருக்கும் ஒருவரின் கதையைக் கூறவும். அவர் சுகமடைவாரா?

» இயேசு கொடுக்கும் மருந்தை நீங்கள் குடிப்பீர்களா? நீங்கள் அவரிடம் உங்களை மன்னிக்கும்படி கேட்டு, உங்கள் பிழையான வழிகளை விட்டு விடுவீர்களா?

8 இயேசு நல்லவரா அல்லது கெட்டவரா?

பின்னணி

மாற்குவின் சுவிசேஷம் இயேசுவைப் பற்றிய வெறும் கதைகளின் ஒரு தொகுப்பல்ல. இதை நாம் கவனிக்க வேண்டியது முக்கியம். மாற்குவின் சுவிசேஷம் ஒரு கதையாகும். அது இயேசுவின் மரணத்திலும், உயிர்தெழுதலிலும் முடியும் ஒரு கதையாகும்.

அந்தக் கதை எப்படி சிலுவைக்கு நேராகப் போய்க் கொண்டிருக்கிறது என்பதை கவனித்தீர்களா? முதலில் எல்லோரும் இயேசுவைக் குறித்து மிக ஆச்சரியமும், மகிழ்ச்சியும் அடைகிறார்கள். அவருடைய போதனைகளையும், அற்புத சுகமாக்குதலையும் அவர்கள் விரும்புகிறார்கள். இயேசு ஒரு நல்ல மனிதர் என்று அவர்கள் நினைக்கிறார்கள். அதன்பின் இயேசு செய்யும் சில காரியங்கள் சிலருக்குப் பிடிக்கவில்லை. **மாற்கு 2:7–16.** இப்போது சிலர் இயேசு கெட்டவர் என்று நினைக்கிறார்கள்! அவர்கள் அவரை வெறுக்கத் தொடங்குகிறார்கள். **மாற்கு 2:18–3:6** வேதாகமத்தின் இந்தப் பகுதி **மாற்கு 3-ல்** எப்படி முடிகிறது என்பதை கவனிக்கவும்.

முக்கிய விடயம்

இயேசு நமது மதத்தின் வழிகளுடன் ஒத்துப் போவதற்கு வரவில்லை. அவர் நமக்கு புது வாழ்வு தர வந்தார். இந்த புது வாழ்வு நமது உட்புறத்தை மாற்றுகிறது.

குறிப்புகள்

- **மாற்கு 2:18.** "உபவாசித்தல்". நீங்கள் "உபவாசித்தால்" அதிக நேரம் உணவு சாப்பிடாமல் இருக்க வேண்டும் - அநேகமாக ஒரு நாள் முழுதும். பழைய ஏற்பாட்டில் தங்கள் பாவங்களுக்கு மன்னிப்பு கோருவதற்காக தேவனுடைய மக்கள் உபவாசித்தார்கள் (லேவியராகமம் 16, யாத்ராகமம் 34:28, நெகேமியா 1:4). தேவன் தங்களைக் குறித்து மகிழ்ச்சியடைய வேண்டும் என்பதற்காக பரிசேயர் அடிக்கடி உபவாசித்தார்கள். தங்கள் பாவங்களைக் குறித்து மனஸ்தாபப்பட்டதாலும், மேசியாவின் வருகைக்குக் காத்திருந்ததாலும், அநேகமாக யோவான் ஸ்நானகனின் சீஷர்கள் உபவாசித்திருக்க வேண்டும்.
- **மாற்கு 2:19,20.** "மணவாளன்" இயேசு ஓர் பழைய ஏற்பாட்டு காட்சியை உபயோகிக்கிறார். (ஓசியா 2:16-20, ஏசாயா 54:5). தேவனே மணவாளனாகும். அவர் தன் மக்களை திருமணம் செய்வார். திருமணம் ஓர் சந்தோஷமான நிகழ்வாகும், அது உபவாசிப்பதற்கான நேரமல்ல! இயேசு உண்மையில் தானே மணவாளன் எனக்

? கற்றுக்கொள்ளுங்கள்: மாற்கு 2:18 – 22

கூறுகிறார். அவரைப் பின்பற்றுகிறவர்கள் சந்தோஷமாயிருப்பார்கள். துக்கமாய் அல்ல. அது ஒரு திருமணத்தைப் போன்றதாகும்.

- **மாற்கு 2:22.** "துருத்தி" திராட்ச ரசம் ஆட்டுத் தோல் துருத்திகளில் வைத்துப் பாதுகாக்கப்படும். திராட்ச ரசம் புளித்தவுடன் தோல் இழுபடும். தோல்கள் இரண்டாவது முறையாக இழுப்படாது. எனவே புது திராட்சரசம் பழைய துருத்திகளைக் கிழித்துப்போடும்.

→ பிரசங்கியுங்கள்: மாற்கு 2:18 – 22

இயேசு கற்பனையை மீறினாரா?

📖 **மாற்கு 2:18~20 வாசிக்கவும்**

⊕ (இதை போன்றதோர் உதாரணத்தை உபயோகிக்கவும். நீங்கள் இதைவிட நல்லதோர் உதாரணத்தை உபயோகிக்கலாம்) சில சபைகளில் எல்லா நல்ல கிறிஸ்தவர்களும் ஒரு கழுத்துப் பட்டையை (Tie) அணிவார்கள் என மக்கள் நினைக்கிறார்கள். வேதாகமத்தில் நாம் அதை அணிந்து கொண்டு தான் ஆலயம் செல்ல வேண்டும் என்று சொல்லப்படவில்லை. ஆனால் அது சபையின் ஓர் சட்டமாகும். ஆனால், கழுத்துப் பட்டை அணியாதவர்கள் நல்ல கிறிஸ்தவர்களல்ல என்று மக்கள் நினைக்கிறார்கள்.

எல்லா நல்ல யூதர்களும் உபவாசிக்க வேண்டுமென்று யூதர்கள் நினைத்தார்கள். பழைய ஏற்பாடு அடிக்கடி அவர்கள் உபவாசிக்க வேண்டுமென்று அவர்களுக்கு கட்டளையிடவில்லை. ஆனால் அது அவர்கள் ஏற்படுத்திய சட்டமாகும். இயேசு உபவாசத்திற்கு விரோதமானவர் அல்ல. ஆனால் அவர் தன் சீஷர்களுக்கு உபவாசிக்கும்படி

கூறவில்லை. எனவே அவர்கள் இயேசு ஓர் நல்ல யூதரல்ல என நினைத்தார்கள்.

- இயேசுவின் சீஷர்கள் உபவாசிக்க அந்த நேரம் ஏன் உகந்ததாயிருக்கவில்லை? இதை உங்கள் மக்களுக்கு விளக்கவும். இயேசு தேவனின் மேசியாவாகும். எனவே அது மகிழ்ச்சியான நேரம், துக்ககரமானதொன்றல்ல.

இந்த யூதர்களைப் போல நாமும் இலகுவாக அதே பிழையை செய்து விடலாம். வேதாகமத்தில் இல்லாத சட்டங்கள் உங்களுக்கிருக்கின்றதா? நீங்கள் மற்ற கிறிஸ்தவர்களை உங்கள் சட்டங்களாலே மதிப்பிடுகிறீர்களா? கிறிஸ்தவ வாழ்க்கை சட்டங்களைப் பற்றியதல்ல. அது இயேசுவைப் போல வாழ்வதாகும்.

இயேசுவே புதிய திராட்சரசம்

மாற்கு 2:21–22 வாசிக்கவும்

இயேசு மிக முக்கியமான ஒன்றை விளக்க இரு உதாரணங்களை பயன்படுத்துகிறார். **இயேசு நமது மதத்தின் வழிகளுடன் ஒத்துப் போவதற்கு வரவில்லை. அவர் நமக்கு புது வாழ்வு தர வந்தார்.**

- வஸ்திரத்தையும், திராட்ச ரசத்தையும் குறித்த இரண்டு காட்சிகளையும் மக்களுக்கு விளக்கவும். என்ன நடக்கும் என்பதை மக்கள் கற்பனை செய்யத்தக்கதாக அவைகளை கதைகளாகக் கூறவும்.

யூதர்களுக்கு மதப்பற்றிருந்தது, ஆனால் அது துருத்தியைப் போல கடினமும் விறைப்புமானதாய் இருந்தது. நமது சட்டங்கள் பழைய துருத்திகளைப் போலிருக்கலாம். இயேசு சுவிசேஷமாகிய புது திராட்ச ரசத்தை நமக்குக் கொடுக்க வந்தார்! அவருடைய சத்தியம் ஜீவனும், அன்பும் நிறைந்ததாயிருந்தது. அவர் நமது உட்புறத்தை மாற்ற விரும்புகிறார். வெறும் வெளிப்புற சட்டங்களை பின்பற்றுபவர்களாக ஆக்க அல்ல.

எனவே, இயேசு அவருடைய புது திராட்சரசத்தை நமது பழைய துருத்திகளாகிய சட்டங்களுக்குள் ஊற்றும்போது என்ன நடக்கிறது? அந்த துருத்திகள் கிழிந்து போகும்! பழந்துருத்திகளாகிய மதச்சட்டங்களை வைத்திருப்பதற்கு இயேசு நமக்கு இடமளிக்க மாட்டார்.

புது திராட்சரசமாகிய இயேசு உங்களுக்கு வேண்டுமா? அவர் உங்களை மன்னித்து, மாற்ற விரும்புகிறீர்களா? நீங்கள் அவருடைய எல்லா வழிகளையும் பின்பற்றத்தக்கதாக அவருடைய அன்பு உங்களை நிரப்ப விரும்புகிறீர்களா? அல்லது பழைய துருத்தியைப் போன்ற ஒரு மதத்தை விரும்புகிறீர்களா? உங்களால் இரண்டையும் வைத்துக் கொள்ள முடியாது.

9 இயேசுவே ஓய்வு நாளுக்கு ஆண்டவர்

பின்னணி

யூதர்கள் இயேசுவை கவனித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர் உண்மையிலே ஒரு கெட்ட மனிதர் என்று அவர்கள் இயேசுவை காண்பிக்க விரும்புகிறார்கள். அவர்களுடைய கற்பனைகளை எல்லாம் இயேசு கைக்கொள்வாரா?

மாற்கு 2:18,24, மாற்கு 3:2

யூதர்கள் **ஓய்வு நாளைக்** குறித்து மிகவும் கண்டிப்பாக இருந்தார்கள். பழைய ஏற்பாட்டில் ஓய்வு நாள் மிக பரிசுத்தமான நாளாகும்.

யாத்திராகமம் 20:8~11

மாற்கு 2:23-28 வசனங்களும் அதன் அடுத்த பகுதியும் ஓய்வு நாளைக் குறித்தவைகளாய் இருக்கின்றன. இயேசு ஓய்வு நாள் கற்பனையை மீறுவதாக யூதர்கள் நினைக்கிறார்கள்.

முக்கிய விடயம்

இயேசு ஓய்வு நாளுக்கும் ஆண்டவராயிருக்கிறார். அவர் தேவனுடைய கற்பனைகளை சரியான விதத்தில் கடைப் பிடிக்கிறார் - ஆனால் நாம் அப்படிச் செய்கிறோமா?

நீங்கள் செய்ய வேண்டியது

பரிசேயர் இயேசுவிடம் **ஓய்வு நாளைக்** குறித்து கேட்கிறார்கள். ஆனால் இயேசுவின் பதில் **பரிசுத்த அப்பத்தைக்** குறித்ததாயிருக்கிறது. இதைப்பற்றி சிந்திக்கவும். அவர்கள் **நினைப்பது** பிழை என்று இயேசு அவர்களுக்குக் காட்டுகிறார். தேவனுடைய கற்பனைகளைக் குறித்து அவர்கள் நினைக்கும் விதத்தில் என்ன பிழையிருக்கக் கூடும்?

குறிப்புகள்

- **மாற்கு 2:24.** "பரிசேயர்" கற்பனைகளைக் கைக்கொள்வதில் மிகக் கண்டிப்பாக இருக்கும் யூதர்கள். அவர்கள் பழைய ஏற்பாட்டு கற்பனைகளைக் கைக் கொள்வது மட்டுமல்லாமல் தங்கள் சொந்த கற்பனை களையும் உண்டாக்கி இருந்தார்கள். **அவர்களுடைய** சட்டங்களில் ஒன்று ஓய்வு நாளில் கதிர்களைக் கொய்யக் கூடாது என்பதாகும். அதற்குக் காரணம் தேவன் ஓய்வு நாளில் வேலை செய்யக் கூடாது என்று கூறியிருந்ததேயாகும். நீங்கள் கதிர்களை கொய்யும்போது, அதை அறுவடை செய்கிறீர்கள். எனவே நீங்கள் வேலை செய்கிறீர்கள் அவர்களுடைய கற்பனைகள் மிக முட்டாள்தனமானதாக இருந்தன.
- **மாற்கு 2:25,26.** இயேசு பழைய ஏற்பாட்டை உபயோகித்து மக்களுக்குப் போதிக்கிறார். லேவியராகமம் 24:5-9ல் **ஆசாரியர்கள்** மாத்திரமே கூடாரத்து (தேவனின் பரிசுத்த ஸ்தலம்) பரிசுத்த அப்பத்தை உண்ண

? கற்றுக்கொள்ளுங்கள்: மாற்கு 2:23-28

அனுமதிக்கப்பட்டிருந்தார்கள். ஆயினும் 1 சாமுவேல் 21:1-6ல் தாவீதும் அவனுடைய மனிதர்களும் பசி மிகுதியினால் இந்த பரிசுத்த அப்பத்தை சாப்பிட்டார்கள். அவர்கள் ஆசாரியர்களல்ல. ஆனால் அவர்களுக்கு பாரியதோர் தேவையிருந்தது. எனவே அவர்கள் உண்டதையிட்டு தேவன் மகிழ்ச்சியடைந்தார்.

- **மாற்கு 2:28.** "மனுஷகுமாரன்". இயேசு அடிக்கடி தன்னை "மனுஷகுமாரன்" என்று அழைத்தார். அது பழைய ஏற்பாடு உபயோகிக்கும் ஒரு பெயராகும். அது அவர் வல்லமையுள்ளவரும் அதேவேளை ஒரு மனிதராயும் இருப்பதைக் காட்டுகிறது.

➡ பிரசங்கியுங்கள்: மாற்கு 2:23-28

ஓய்வு நாள் மனுஷனுக்காக உண்டாக்கப்பட்டது

📖 மாற்கு 2:27

சில வேளைகளில் கற்பனையை மீறுவது நல்லது! இதைக்குறித்து ஒரு கதையைக் கூறுங்கள்.

⊞ ஒரு சிறுவன் மரித்துப் போகும் அளவு பசியாயிருக்கிறான். நீங்கள் அவனை காண்கிறீர்கள். ஆனால் உங்களிடம் உணவு இல்லை. ஆனால் உங்கள் பக்கத்து வீட்டுக்காரரின் வீட்டில் உணவு இருக்கிறது. ஆனால் பக்கத்து வீட்டுக்காரர் வீட்டிலில்லை. நீங்கள் களவு எடுக்கக் கூடாது. எனவே அந்த சிறுவன் மரித்துப் போகிறான்.

நீங்கள் திருடாமலிருப்பதின் மூலம் தேவனை சந்தோஷத்தில் ஆழ்த்தினீர்களா? இல்லை நீங்கள் அந்த சிறுவனை மரிக்க விட்டு விட்டீர்கள். அந்தவேளையில் உணவை எடுப்பதே **சரியான** செயலாகும். பின்பு அதை திரும்பக் கொடுக்கலாம். சில வேளைகளில் சட்டத்தை மீற வேண்டி வரலாம். இயேசு இதை தாவீதின் கதையைக் கூறி விளக்குகிறார். (இந்தக் கதையைக் கூறவும்).

பிரசங்கியுங்கள்: மாற்கு 2:23-28

தேவன் எமக்குக் கற்பனைகளை கொடுத்தார், ஏனென்றால் அவைகளே வாழ்க்கைக்கான மிகச் சரியான வழியாகும். ஓய்வு நாள் கற்பனை (மற்றும் தேவனுடைய எல்லா கற்பனைகளும்) மனிதனுக்காகவே உண்டாக்கப் பட்டுள்ளது. தேவனுடைய கற்பனைகள் நமக்கு உதவவே இருக்கின்றன. அவை நம்மை துன்புறுத்துவதற்காக உண்டாக்கப்படவில்லை. நாம் அவருடைய கற்பனைகளுக்குக் கீழ்ப்படிய வேண்டுமென்று தேவன் விரும்புகிறார். அது முக்கியமானது. ஆனால் தேவன் அவருடைய **கற்பனைகளை** மட்டும் நேசிப்பவரல்ல, அவர் **நம்மையும்** நேசிக்கிறார்.

ஓய்வுநாள் கற்பனையை நமக்கு உதவியாகவே தேவன் கொடுத்திருக்கிறார். (மக்களுக்கு நான்காவது கற்பனையை கற்றுக் கொடுக்கவும்). ஒரு நாள் ஓய்வெடுத்து தேவனைக் குறித்து சிந்திப்பது மிக முக்கியமாகும். நாம் நம்முடைய வழக்கமான வேலையிலிருந்து ஓய்வெடுக்க வேண்டுமென தேவன் விரும்புகிறார், ஏனென்றால் அது நமக்கு நல்லது. ஓய்வு நாள் மனுஷனுக்காக உண்டாக்கப்பட்டது.

ஆயினும், யூதர்கள் தன் முதுகில் பெரும் பளுவானதொரு பையை சுமப்பவனைப் போலிருந்தார்கள். அந்தப் பையில் ஆயிரக்கணக்கான சிறு கற்பனைகள் இருந்தன. அப்படி ஜீவிப்பது மிகக் கடினம். தேவன் நாம் அப்படி வாழ்வதை விரும்புவதில்லை. ஓய்வு நாளில் கதிர்களைக் கொய்யக் கூடாது என்று இயேசு ஒருபோதும் கூறமாட்டார். (மத்தேயு 11:28-30)

இயேசுவே ஓய்வு நாளுக்கு ஆண்டவர்

மாற்கு 2:28

அவர்கள் ஓய்வுநாளுக்கு ஆண்டவர்களென்று யூதர்கள் நினைத்தார்கள். ஓய்வு நாளில் என்ன செய்யவேண்டு மென்று மக்களுக்கு அவர்கள் மாத்திரமே கூறுவார்கள்.

இயேசு சொல்கிறார்: "இல்லை நீங்கள் நினைப்பது பிழை. நீங்கள் தேவனுடைய சட்டத்தை பிழையாக புரிந்து கொண்டிருக்கிறீர்கள். நானே ஓய்வு நாளுக்கு ஆண்டவர் நான் தேவனின் சட்டங்களை சரியாக புரிந்து கொண்டிருக்கிறேன். எப்படி அவைகளைக் கைக் கொள்வது என்பதை மக்களுக்குச் சொல்வதற்கு எனக்கு உரிமை இருக்கின்றது."

» நீங்கள் யூதர்களைப் போல நியாயப்பிரமாணங்களைப் பின்பற்ற முயற்சி செய்கின்றீர்களா? உங்கள் முதுகில் இருக்கும் பாரமான பையைப்போல, நீங்கள் பல சட்டங்களை பின்பற்ற வேண்டியிருக்கும்.

» மாறாக இயேசுவைப் போல தேவனின் கட்டளைகளை பின்பற்றுகிறீர்களா? தேவனுக்கு கீழ்ப்படிவது சந்தோஷமான காரியமாகும். ஏனென்றால் நீங்கள் அவர் வழிகளில் பிரியமாயிருக்கிறீர்கள்.

10 இயேசுவைக் கொலை செய்ய நினைக்கும் மக்கள்

பின்னணி

அநேக யூதர்கள் இயேசுவை வெறுக்கத் தொடங்கினார்கள். இயேசு தான் கெட்டவர்களுக்காக வந்ததாகக் கூறினார். மாற்கு 2:17

இயேசு அவர்களுடைய கட்டளைகளைப் பின்பற்றவில்லை.

மாற்கு 2:18,23

அவர்களுடைய சொந்த நம்பிக்கையிலிருந்தே, அவர்களுடைய மதத்தைக் குறித்து அவர்கள் தவறாகப் புரிந்து கொண்டிருப்பதை அவர்களுக்கு இயேசு காண்பித்தார்.

மாற்கு 2:19~22,25,26

இயேசு அவர்களிடம் அவரே ஓய்வு நாளுக்கு ஆண்டவர் என்றும் கூறினார்.

மாற்கு 2:28

எனவே, இப்போது யூதத் தலைவர்கள் இயேசுவை சிக்க வைப்பதற்கு வழிதேடுகிறார்கள். அவரை பிரச்சினைக்குள் போட அவர்கள் விரும்புகிறார்கள்.

மாற்கு 3:1~6

முக்கிய விடயம்

நாம் அதிக மதப்பற்று உடையவர்களாயிருக்கக்கூடும். ஆனால் இயேசுவை வெறுக்கக் கூடும்.

நீங்கள் செய்ய வேண்டியது

இன்று அநேகர் இயேசு ஒரு நல்ல மனிதர் என்று நினைக்கிறார்கள். இந்த யூதர்களைப்போல அவர்கள் அவரை வெறுக்க மாட்டார்கள். அவர்கள் அவரைக் கண்டு கொள்ளாமல், தங்கள் சொந்த வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இயேசுவுக்கு அப்படிச் செய்யக் கூடாது என்று நமது மக்களுக்கு நாம் காண்பிக்க வேண்டும். நாம் உண்மையாக இயேசுவை புரிந்து கொண்டால், ஒன்று நாம் அவர் மேல் அன்பு செலுத்துவோம், இல்லாவிட்டால் வெறுப்போம். அவர் நமது இரட்சகராக வந்ததற்காக அவர் மேல் அன்பு செலுத்துவோம். அல்லது, நாம் கெட்டவர்கள் என்பதை நமக்கு காண்பிப்பதற்காக அவரை வெறுப்போம்.

குறிப்புகள்

- மாற்கு 3:1. "சூம்பின கை" அந்த மனிதனின் கை வேலை செய்யவில்லை.
- மாற்கு 3:2. யூதர்களின் சட்டப்படி ஓய்வு நாளில் நீங்கள் ஒருவரையும் சொஸ்தப்படுத்த

? கற்றுக்கொள்ளுங்கள்: மாற்கு 3:1 -6

முடியாது. இயேசு ஏன் இது பிழை என்பதைக் காட்டுகிறார்.

- மாற்கு 3:6. "ஏரோதியர்" இவர்கள் ஏரோது மற்றும் ரோம அரசாங்கத்தின் நண்பர்கள். பொதுவாக பரிசேயர் ஏரோதியரை வெறுப்பார்கள். ஆனால் இப்போது இயேசுவை கொலை செய்ய அவர்கள் ஒன்றிணைகிறார்கள்.

→ பிரசங்கியுங்கள்: மாற்கு 3:1 -6

கடினமான இருதயங்கள்

மாற்கு 3:5

- அவர்கள் இருதயங்கள் கடினமும், பிடிவாதமும் உள்ளவையாயிருந்தன என்பதை மாற்கு 3:1-6ல் நமக்கு என்ன காரியங்கள் வெளிப்படுத்தப் படுகின்றன? ("பிடிவாதமான இருதயம்" என்பது, சத்தியத்தை ஏற்றுக்கொள்ளாமலும், வாழ்க்கையை மாற்றிக் கொள்ளாமலும் இருப்பது) கடினமான இருதயம் எப்படிப்பட்டது என்பதை விளக்கும் ஒரு வார்த்தைப் படத்தைக் குறித்து சிந்திக்கவும்.

இயேசு எவ்வளவு நல்லவர் என்பதையும் யூதத்தலைவர்கள் எவ்வளவு கொடுமையானவர்கள் என்பதையும் காண்பிப்பதற்கு கதையைக் கூறவும். அவர்கள் அந்த சுகவீனமான மனிதனைக் குறித்து சிறிதும் கவலைப் படவில்லை! அவர்கள் இயேசுவை வெறுத்தார்கள், ஏனென்றால் அவர் அந்த மனிதனைக் குறித்து அக்கறையுள்ளவராயிருந்தார்.

மாற்கு 3:4ல் இயேசு ஒரு எளிதான கேள்வியைக் கேட்டார். அவர்கள் ஏன் அதற்கு பதில் கூற விரும்பவில்லை என்பதை நாமறிவோம்! ஏனென்றால்

பிரசங்கியுங்கள்: மாற்கு 3:1 – 6

அவர்கள் இருதயங்கள் கடினமாயிருந்தன. இயேசு நல்லதைச் செய்வதை அவர்கள் விரும்பவில்லை. இயேசு அவர்களுடைய சட்டங்களைப் பின்பற்ற வேண்டும் என்று மட்டுமே விரும்புகிறார்கள்.

» உங்கள் இருதயம் கடினமாக மாறுகிறதா? (கீழே கொடுக்கப்பட்டு இருப்பவைகளைப் போன்ற சில உதாரணங்களைக் குறித்து சிந்தியுங்கள்)

» நீங்கள் வேதாகமத்திற்கு **செவி கொடுத்தும்,** நீங்கள் **செய்ய** விரும்பும் காரிங்களை மாத்திரம் செய்கிறீர்களா? நீங்கள் இயேசுவைப் பற்றி மக்களுக்குக் கூறியும், அவர்களுக்குத் தேவையான **உதவியைச்** செய்யாமலிருக்கிறீர்களா? நீங்கள் பிழை செய்வதாக யாராவது கூறினால் அவர்கள் மேல் கோபம் கொள்கிறீர்களா?

கொலை செய்யும் மதவாதிகள்

மாற்கு 3:6

இந்த யூதர்கள் அவர்களுடைய மதத்தைக் குறித்து மிகக் கண்டிப்பானவர்களாய் இருந்தார்கள். இந்த யூதர்கள் மிக நல்லவர்களென்றும், அவர்களே பரலோகம் போவார்களென்றும் எல்லோரும் நினைத்திருந்தார்கள். இவர்களைப் போன்ற மதப்பற்று உடையவர்களால் ஒரு நல்ல மனிதரை எப்படி வெறுக்க முடியும் என்று நீங்கள் நினைக்கிறீர்களா? அவர்கள் அவரை கொலை செய்ய முயற்சி செய்யும் அளவுக்கு அவரை வெறுத்தார்கள். கடைசியில் இந்த மதவாதிகள் இயேசுவை சிலுவையில் அறைந்து கொலை செய்தார்கள்.

அவர்கள் ஏன் இயேசுவை கொலை செய்ய நினைத்தார்கள்? அவர் ஒருவனை **ஓய்வு நாளில்** குணமாக்கினதே அதற்குக் காரணமாகும். அவர் **அவர்களுடைய சட்டங்களை** உடைத்தார். அவர்களுடைய மதத்தில் ஏதோ பிழையிருப்பதை நாம் காணக்கூடியதாயிருக்கிறது!

» சட்டங்களுக்கு முக்கிய இடம் கொடுக்கும் ஒரு மதம் மிக ஆபத்தான ஒரு மதமாகும். நாம் நம்மை கிறிஸ்தவர்களென்று அழைத்துக்கொண்டு, முழுதுமாக சட்டங்கள் அடங்கிய ஓர் மதத்தையுடையவர்களாய் இருப்பது பிழையாகும். நமது சட்டங்களைப் பின்பற்றாத கிறிஸ்தவர்கள் மேல் கோபம் கொள்வது பிழையாகும்.

» நீங்கள் இயேசுவின் மேல் அன்பு செலுத்துகிறீர்களா, அல்லது உங்கள் சட்டங்களை நேசிக்கிறீர்களா? நீங்கள் நன்மை செய்ய விரும்புகிறீர்களா, அல்லது வெறும் சட்டங்களை பின்பற்ற விரும்புகிறீர்களா? இயேசு உங்களைப் பார்க்கும்போது அது மாற்கு 3:5ஐ போன்றதா? உங்களை மன்னித்து, உங்களுக்கு ஒரு மென்மையான அன்பு நிறைந்த இருதயத்தைத் தரும்படி இயேசுவிடம் கேளுங்கள்.

11 இயேசு 12 சீஷர்களை அழைக்கிறார்

▣ பின்னணி

பெரும்பாலான யூதர்களுக்கு இயேசுவைப் பிடிக்கவில்லை என்று நாம் பார்த்தோம் அவர்கள் இயேசுவைத் தங்கள் மேசியாவாக ஏற்றுக் கொண்டிருக்க வேண்டும். ஆனால் அவர் அவர்களுடைய சட்டங்களைப் பின்பற்றாததால் அவரை அவர்கள் வெறுத்தார்கள். எனவே இப்போது இயேசு அவர்களை விட்டு விலகிப் போகிறார் (மாற்கு 3:7). அவருடைய விசேஷ சீஷர்களாய் இருப்பதற்கு இயேசு 12 பேர்களைத் தெரிந்தெடுத்தார்.பழைய ஏற்பாட்டின் இஸ்ரவேலரைப்போல, பெரும்பாலான யூதர்கள் விசுவாசிக்காமலிருக்கிறார்கள். அவர்களுக்கு இயேசு தேவையில்லை. எனவே இயேசு ஓர் புதிய "இஸ்ரவேலை" அவரைப் பின்தொடர அழைக்கிறார் (மாற்கு 3:13-19). 12 எண்ணைக் கவனிக்கவும். இஸ்ரவேல் கோத்திரங்கள் 12 இருப்பது போல், 12 சீஷர்கள் இருக்கிறார்கள்.

பெரும்பாலான யூதர்கள்	12 சீஷர்கள்
அதிக மதப்பற்று	இயேசுவின் புதிய இஸ்ரவேல்.
இஸ்ரவேலைப் போல	இயேசுவின் புதிய குடும்பம்
இயேசு தேவையில்லை	இயேசுவை பின்பற்றுகிறார்கள்

இதுமுதல் இயேசு அவருடைய சீஷர்களுக்குக் கற்றுக் கொடுப்பதற்கு விசேஷ முயற்சி எடுப்பார். அவர் கூட்டங்களிலும் மக்களுக்குக் கற்றுக்கொடுப்பார். ஆனால், இந்த 12 சீஷர்களுக்கு அவர் அதிகமாகக் கற்றுக்கொடுப்பார்.

⊙ முக்கிய விடயம்

இயேசு 12 சீஷர்களை அழைக்கிறார். யாரை **அவர்** தேவனின் புதிய குடும்பத்தில் சேர்த்துக்கொள்ள விரும்பினாரோ, அவர்களைத் தெரிந்தெடுக்கிறார்.

☆ நீங்கள் செய்ய வேண்டியது

அநேகர் நாம் இயேசுவைத் தெரிவு செய்ய வேண்டுமென நினைக்கின்றனர். அது ஒரு விதத்தில் உண்மையே. ஆயினும், வேதாகமத்தில் இயேசுவே நம்மை முதலில் தெரிந்தெடுக்கிறார் (யோவான்15:16). மாற்கு 3ல் **மக்கள்** இயேசுவைப் பிழையான காரணத்திற்காகத் தெரிந்து கொள்கிறார்கள். அவர்கள் விரைவில் இயேசுவை விட்டுப்போய் விடுகிறார்கள். ஆனால் **இயேசு** தெரிந்தெடுத்த சீஷர்கள் இயேசுவுடன் தொடர்ந்து இருக்கிறார்கள்.

? கற்றுக்கொள்ளுங்கள்: மாற்கு 3:7-19

குறிப்புகள்

- **மாற்கு 3:12.** அவர் யாரென்று **அசுத்த ஆவிகள்** கூறுவதை இயேசு விரும்பவில்லை! அவர் தேவனுடைய குமாரன் என்று இயேசுவும் கூட **கூறவில்லை.** அதை மக்கள் **காண**வேண்டும் என்று அவர் நினைத்தார்.
- **மாற்கு 3:14.** "அப்போஸ்தலர்கள்" இந்த 12 பேர்களும் இயேசுவின் திட்டங்களில் ஓர் முக்கிய இடத்தைப் பெற்றிருந்தார்கள். அவர்கள் சபையின் அஸ்திவாரக் கற்களைப் போன்றவர்கள். இயேசு இந்த மனிதர்களுக்குப் பிசாசுகளைத் துரத்துவது போன்ற விசேஷ வல்லமைகளைக் கொடுத்து இருந்தார். நாம் அப்போஸ்தலர் களைக் குறித்து கற்பிக்கும் போது மிகக் கவனமாய் இருக்க வேண்டும். அவர்கள் செய்த எல்லாவற்றையும் நாமும் செய்ய வேண்டுமென்று நாம் நினைக்கக்கூடாது.

→ பிரசங்கியுங்கள்: மாற்கு 3:7-19

ஜனக்கூட்டம் இயேசுவுக்குப் பின் செல்கின்றது

மாற்கு 3:7~12

நீங்கள் கூட்டங்களுக்குப் பின் செல்கின்றீர்களா? ஓர் பிரபலமான போதகர் அல்லது மக்கள் நிறைந்ததோர் சபையை நீங்கள் விரும்புகிறீர்களா? அது பிழையல்ல. ஆனால் இயேசுவைப் பின்பற்றுவது என்பது **அதற்கும் மேலானதாகும்.**

இயேசு மிகவும் பிரபலமானவராய் இருந்தார். அவர் எங்கு போனாலும் ஜனக்கூட்டம் அவருக்குப் பின் சென்றது. அவர்கள் அவரைக் குறித்துக் கிளர்ச்சியடைந்து இருந்தார்கள். இயேசு அவர்களைக் குணமாக்க வேண்டுமென்று எதிர் பார்த்தார்கள். மாற்கு 3:7ல், இயேசுவை வெறுத்த யூதர்களை விட்டு அவர் விலகிச் சென்றார். ஆனால் அநேக சாதாரண யூதர்கள் அவரைச் சுற்றியிருந்தார்கள்.

இயேசுவுக்குப் பிரபலமாக வேண்டும் என்ற விருப்பம் இருக்கவில்லை. அநேக மக்களுக்கு அவர் பிழையான காரணங்களுக்காகத் தேவைப் பட்டாரென்பதை இயேசு அறிந்திருந்தார். விரைவில் அவர்கள் அவரை விட்டுப் போய் விடுவார்கள் ஏனென்றால் அவருடைய போதனைகளை அவர்கள் விரும்பவில்லை. பின்பு அவர்கள் "இவனை சிலுவையில் அறைந்துக்

கொல்லுங்கள்” என்று சத்தமிடுவார்கள்.

நீங்கள் இயேசுவை சரியான காரணத்திற்காகப் பின் பற்றுகிறீர்களா? அல்லது நீங்கள் வெறுமனே கூட்டத்தின் பின் செல்கிறவர்களாய் இருக்கிறீர்களா? (இயேசுவைப் பின்பற்றுவதற்கான இன்னும் அதிகமாக சரியான காரணங்களைப் பேசுங்கள்)

இயேசு 12 பேரைத் தெரிவு செய்கிறார்

மாற்கு 3:13-19

இயேசு 12 விசேஷ மனிதர்களைத் தெரிவு செய்வதற்காக கூட்டத்தை விட்டுவிலகிச் செல்கிறார். கூட்டம் விரைவில் தன்னை விட்டுப் போய் விடும் என்று இயேசு அறிந்திருந்தார். இயேசுவுக்கு அவருடன் நிலைத்து இருக்கக் கூடிய மனிதர்கள் தேவைப் பட்டது. அவர்களை அவர் தன்னை நம்பும் மனிதர்களாக இருப்பதற்காகத் தெரிவு செய்கிறார். தன்னுடைய மக்கள் எப்படியிருக்க வேண்டும் என்று தேவன் விரும்புகிறார் என்பதை இயேசு அவர்களுக்குப் போதித்துக் காண்பிப்பார். தங்கள் சட்டங்களைப் பின்பற்ற வேண்டுமென்று விரும்பும் யூதர்களைப்போல அவர்கள் இருப்பதை இயேசு விரும்பவில்லை. அவர்கள் தேவன் மேல் அன்பு செலுத்தத்தக்கதாக அவர்களுக்கு ஒரு புதிய இருதயத்தை அவர் கொடுப்பார். (உங்கள் மக்கள் புரிந்து கொள்ள உதவியாய் இருக்குமென்று நீங்கள் நினைத்தால், ‘பழைய இஸ்ரவேல்’ மற்றும் ‘புதிய இஸ்ரவேல்’ இரண்டையும் குறித்து விளக்கவும்)

இந்த 12 மனிதர்களும் இயேசுவால் அவருடைய வேலையைச் செய்ய அனுப்பப்படும் “அப்போஸ்தலர்களாய்” இருப்பார்கள். அவர்கள் இயேசுவின் புதிய குடும்பத்தின் அங்கத்தினர்களாயிருப்பார்கள். இயேசு எப்படிப்பட்ட மக்களைத் தெரிவு செய்வார்?

நாம் அவர்களில் சிலரை ஏற்கனவே சந்தித்திருக்கிறோம். அவர்கள் மிக நல்ல மனிதர்களல்ல. அவர்கள் தங்கள் மதத்தில் மிக வைராக்கியம் உள்ளவர்களுமல்ல. அத்துடன், அவர்கள் புத்திசாலிகளுமல்ல. அவர்கள் சாதாரண மனிதர்கள். சிலர் மீன் பிடிப்பவர்கள் (யாக்கோபு, யோவான், சீமோன், அந்திரேயா) ஒருவன் ஆயக்காரன் (மத்தேயு). அவர்கள் முதலில் அடிக்கடி தோல்வியடைவதை நாம் காணலாம். இயேசு அவர்களுக்குக் கற்றுக் கொடுத்து, அவர்களை மாற்ற வேண்டியிருந்தது. ஆயினும் இயேசுவுக்குத் **தேவையான** மக்கள் அவர்களே. இயேசு அழைக்கும் போது அவர் பின்னே **வரும்** மக்கள் அவர்களே (மாற்கு 3:13).

இயேசு **தான் விரும்புகிறவர்களை** இன்னும் அழைக்கிறார். அவர் நம்மைத் தெரிந்து கொள்கிறார். அவருடைய அப்போஸ்தலர்களாயிருப்பதற்கல்ல. ஆனால், அவரைப் பின்பற்றுவதற்காக. அவர் **எல்லாவித** மனிதர்களையும் அழைக்கிறார். (சில உதாரணங்களைக் கொடுக்கவும்) இயேசுவுக்கு நீங்கள் தேவையாயிருப்பதினால் அவர் உங்களை அழைத்திருப்பாரானால் கர்த்தருக்கு ஸ்தோத்திரம்! அவருடைய அழைப்பைக் கேட்டு இயேசுவைப் **பின்பற்றுகிறவராய்** இருப்பீர்களானால், கர்த்தருக்கு ஸ்தோத்திரம் (யோவான் 10:27,28).

12 இயேசுவின் உண்மையான குடும்பம்

பின்னணி

அநேக யூதர்கள் இயேசுவை வெறுக்கிறார்கள். இயேசு பழைய "இஸ்ரவேலை" விட்டு விலகிப்போய் அவருடைய புதிய "இஸ்ரவேலுக்கு" சொந்தமாகத்தக்கதான சீஷர்களை தெரிவு செய்கிறார் - மாற்கு 3:13~19. இப்போது அங்கு இரு பகுதியினர் இருக்கின்றனர். அங்கே இயேசுவை விசுவாசிக்காத மக்களும், அவரைப் பின்பற்றும் மக்களும் இருக்கிறார்கள்.

மாற்கு 3:20-35ல் இயேசுவின் இந்தப் புதிய குடும்பத்தில் இருப்பது யார் என்று நாம் பார்க்கிறோம்.

முக்கிய விடயம்

சில மக்கள் இயேசுவை வெறுக்கிறார்கள், அவர்கள் இயேசுவை விசுவாசிக்க மறுக்கிறார்கள். இயேசுவின் புதிய குடும்பம் இயேசு சொல்வதை செய்கின்றது.

நீங்கள் செய்ய வேண்டியது

அங்கே நடுப்பிரிவு ஒன்று இல்லை. நம்மில் அநேகர் நடுவில் இருக்க விரும்புகிறார்கள். அவர்கள் இயேசுவை வெறுக்கவோ, அல்லது பின்பற்றவோ மாட்டார்கள். ஆனால் அவர்கள் "இயேசுவுக்காக" இல்லாவிட்டால் அவருக்கு "எதிராக" இருக்கிறார்கள் என்பதே உண்மையாகும். அதை அவர்கள் உணர அவர்களுக்கு உதவி செய்யுங்கள். இயேசு சொல்வதை செய்யாவிட்டால் அவர்கள் இயேசுவின் குடும்பத்திற்குச் சொந்தமல்ல.

குறிப்புகள்

- **மாற்கு 3:23.** "உவமைகள்" இன்னொரு அர்த்தமுள்ள கதைகள் அல்லது படங்கள். ஒப்பிடுக மாற்கு 4:1-20.
- **மாற்கு 3:25.** "வீடு" இயேசு ஒரு வீட்டிலுள்ள குடும்ப மக்களை குறிப்பிடுகிறார்.
- **மாற்கு 3:28-30.** அநேக மக்கள் தாங்கள் மன்னிக்க முடியாத தொரு பாவத்தைச் செய்து விட்டதாகப் பயப்படுகிறார்கள். மாற்கு3:28 இதைத் தெளிவாகக் கூறுகிறது. **எல்லா** பாவங்களும் மன்னிக்கப்பட முடியும். நாம் இயேசுவைப் பற்றி ஏதாவது பிழையாகக் கதைத்திருக்கக் கூடும். நாம் தேவனிடம் கேட்டால் அந்த பாவத்தை அவர் மன்னிப்பார். பரிசுத்த ஆவியானவருக்கு விரோதமான பாவம் (அல்லது தூஷணம்) வித்தியாசமானது. மாற்கு 3ல் மக்கள் இயேசு யார் என்பதை **கண்டுக்கொள்ள மறுக்கிறார்கள்.** இயேசு அற்புதமான காரியங்களைச் செய்கிறார், ஆனால் அவர்கள் அவருக்குள் ஒரு பிசாசு இருக்கிறது என்று கூறுகிறார்கள். பரிசுத்த ஆவியானவர் இயேசு யார்

கற்றுக்கொள்ளுங்கள்: மாற்கு 3:20 – 35

என்பதை நமக்குக் காண்பிக்கும் போது **நாம் இயேசுவை வெறுப்போமானால்,** அப்போது நாம் மன்னிக்கப்பட மாட்டோம். நீங்கள் இயேசுவின் மேல் அன்பு செலுத்தி, அவர் உங்கள் பாவத்தை மன்னிக்க வேண்டும் என்று விரும்புகிறவரானால், அப்போது நீங்கள் இந்தப் பாவத்தைச் செய்தவரல்ல.

பிரசங்கியுங்கள்: மாற்கு 3:20 – 35

இயேசுவை வெறுக்கும் மக்கள்

மாற்கு 3:22~30

இயேசுவை சிலர் அதிகமாக வெறுப்பதைக் குறித்து உங்களுக்கு ஆச்சரியமாயிருக்கிறதா? அவர் நன்மையான காரியங்களை மாத்திரமே செய்யும்போது ஏன் மக்கள் அவரை வெறுக்க வேண்டும்?

மாற்கு 3:22ல் காணப்படும் யூதர்கள் முக்கிய தலைவர்களாய் இருந்தார்கள். அநேக மக்கள் அவர்கள் சொல்லுவதைக் கேட்பார்கள். இயேசுவைப் பற்றி அவர்கள் கூறுவது அநியாயமானது. இயேசுவை அவர்கள் ஏன் அவ்வளவு வெறுக்கிறார்கள் என்பது உங்களுக்குப் புரிகிறதா?

இயேசு அவர்கள் கூறுவது முட்டாள்தனமானது என்று காண்பிக்கிறார். (மாற்கு 3:23-27).

இயேசு சாத்தானுக்காக வேலை செய்யவில்லை! அப்படி அவர் சாத்தானுக்கு வேலை செய்தால் அவர் பிசாசுகளை துரத்த மாட்டார்.

⊞ (இதை தெளிவாக்குவதற்கு இயேசுவின் விளக்கத்தை உபயோகிக்கவும்.)

அவர்கள் கூறுவது மிகவும் கடுமையானது என்று இயேசு எச்சரிக்கிறார் (மாற்கு 3:28-30).

இந்த யூத தலைவர்கள் அவர்கள் பரலோகம் போவதாக நினைத்தார்கள். அவர்கள் அதற்கான பட்டியலில் முதலிடம் வகிப்பதாக அவர்கள் நினைத்தார்கள்! ஆனால் இயேசுவை வெறுக்கும் ஒருவருக்கும் தேவனின் மன்னிப்பு கிடையாது.

(மன்னிக்கப்படாத பாவம் என்று இயேசு சொன்னதின் அர்த்தத்தை விளக்கவும் ~ குறிப்பைப் பார்க்கவும்)

இயேசுவை நேசிக்கும் மக்கள்

மாற்கு 3:20~21,31~35

இயேசுவின் சொந்தக் குடும்பத்திலும் எல்லோரும் இயேசுவை நேசிக்கவில்லை (மாற்கு 3:20-21). அவர்கள் இயேசுவுக்குப் பைத்தியம் எனக் கூறினார்கள். அவர்கள் இயேசு அவருடைய வேலையை செய்வதை தடை செய்ய முயற்சித்தார்கள். இயேசு கடினமாக வேலை செய்வதையும், அதிக அக்கறை காண்பிப்பதையும் அவர்கள் சரி என்று நினைக்கவில்லை.

» நீங்கள் இயேசுவைப்போல் அக்கறையுள்ளவர்களாய் இருக்கிறீர்களா? அல்லது **சிறிய** மதம் போதும் என்று நினைக்கிறீர்களா? இயேசுவை பின்பற்றுவது உங்கள் வாழ்க்கையை ஆட்கொள்ளக்கூடாது என்று நினைக்கிறீர்களா? கவனமாக சிந்தித்துப் பார்க்கவும் ~ நீங்கள் உண்மையிலேயே இயேசுவை நேசிக்கிறீர்களா?

இயேசுவின் உண்மையான குடும்பம் அவர் சொல்வதைச் செய்கிறது (மாற்கு 3:31-35). இயேசு உடனே தன் சகோதரர்களையும், தாயையும் பார்க்கப் போகவில்லை. இது மக்களுக்கு அதிர்ச்சியைக் கொடுத்தது! ஆனால் இயேசு அவருடைய உண்மையான குடும்பம் அவருடன் இருக்கும் மக்களே எனக் கூறுகிறார். அவர் சொல்வதைக் கேட்பவர்கள் அவர்களே. அவர்கள் தேவ சித்தத்தைச் **செய்பவர்கள்.**

» இயேசுவின் சொந்த சகோதரர்களையும், சகோதரிகளையும் போல் நாம் இருக்கலாம். அவர்கள் இயேசுவைக் கட்டுப்படுத்த நினைக்கிறார்கள். அவர்களுக்கு அவருடைய வார்த்தைக்குக் கட்டுப்பட விருப்பமில்லை. ஓர் உண்மையான கிறிஸ்தவன் **இயேசுவின் போதனைக்குக் கீழ்ப்படிகிறவனாய் இருப்பான்.** (மத்தேயு 7:24~27ல் இயேசு கூறிய கதையைக் கூறவும்). நீங்கள் தேவனின் உண்மையான குடும்பத்திற்குச் சொந்தமா?

13 கேளுங்கள்!

வேதாகமத்தின் இந்தப் பகுதியில் வரும் இரண்டு உரையாடல்களில் முதலாவது இதுவாகும். முதல் உரையாடல் இயேசு ஏன் உவமைகளை உபயோகிக்கிறார் என்பதைக் குறித்ததாகும். இரண்டாவது உரையாடல் விதைக்கிறவனின் உவமையைப் பற்றியதாகும்.

பின்னணி

ஏற்கனவே, இயேசுவும் அவருடைய போதனையும் மக்களை இரண்டு குழுக்களாகப் பிரிந்திருந்தது.

- இயேசுவை ஏற்றுக்கொள்ளாத மக்கள்
- இயேசுவை விசுவாசிக்கும் மக்கள்

அதுமுதல் இயேசு இரண்டாவது குழு மக்களுடன் தன் நேரத்தை அதிகமாக செலவழிக்கிறார். அவர் அவருடைய சீஷர்களுக்கும், அவரை ஏற்றுக்கொள்ளும் மக்களுக்கும் போதிக்கிறார்.

இயேசுவின் **உவமைகளும்** கூட மக்களை இரண்டு பகுதிகளாகப் பிரித்தன.

மாற்கு 4:1–20

முக்கிய விடயம்

“கேட்கிறதற்குக் காதுள்ளவன் கேட்கக்கடவன்” (மாற்கு 4:9).

(நீங்கள் வேதாகமத்தைப் கற்பிக்கும்போது மாற்கு 4:9 போன்ற வசனங்களைத் தேடுங்கள். அவைகள் அந்தப் போதனைகளைத் திறப்பதற்கான சாவியைப் போன்றதாகும். இந்த உவமை நாம் எப்படி தேவனுடைய வார்த்தைக்கு செவிமடுக்கிறோம் என்பதைக் குறித்ததாகும். எனவே உவமையின் முடிவில் நாம் எப்படி செவி கொடுக்கிறோம் என்பதைக் குறித்து மிகுந்த ஜாக்கிரதையாய் இருக்க வேண்டும் என்று இயேசு நமக்குக் கூறுகிறார்.)

நீங்கள் செய்ய வேண்டியது

மாற்கு 4:11-12ல் இயேசு சொல்வதைக் கவனமாக கேட்கவும். (நாம் அதை அடுத்த பக்கத்தில் விளக்கியிருக்கிறோம்). அது நமக்குக் கடினமாய்த் தோன்றலாம். நாம் இயேசு சொல்வதைத் தள்ளிவிடக் கூடாது. நாம் விரும்புகிற விதத்தில் இயேசுவின் வார்த்தைகளை மாற்றக் கூடாது. தேவன் உங்களை ஓர் ஆசிரியராக இருக்க அழைத்திருப்பாரானால், நீங்கள் வேதாகமம் சொல்வதைக் கற்றுக் கொடுக்க வேண்டும்.

குறிப்புகள்

- **மாற்கு 4:2.** “உவமைகள்” தேவனையும், தேவனுடைய இராஜ்யத்தையும் குறித்துப் போதிக்கும் கதைகள். மக்கள் அநேகமாக உண்மையை ஓர் நேரடியான விதத்தில் கற்றுக் கொள்ள தயாராயிருக்க மாட்டார்கள். எனவே இயேசு

கற்றுக்கொள்ளுங்கள்: மாற்கு 4:1 -20 (1)

மக்கள் சிந்திப்பதற்காக உவமைகளைக் கூறினார். அநேகமாக இயேசுவின் உவமைகள் அவர்களுடைய பாவத்தை சுட்டிக் காட்டின. இயேசுவின் உவமைகள் மக்களை இரண்டு குழுக்களாகப் பிரித்தன. இயேசுவுக்கு செவி கொடுக்கும் ஒரு குழு, இயேசுவுக்கு செவி கொடுக்காத ஒரு குழு. ஒரு உவமை ஒரு சல்லடை அல்லது வடி கட்டியைப் போன்றதாகும். அது நல்லதையும், கெட்டதையும் பிரிக்கிறது.

பிரசங்கியுங்கள்: மாற்கு 4:1 -20 (1)

செவி கொடுக்கும் மக்களுக்கு

மாற்கு 4:1~3,9

அங்கே ஒரு பெரும் ஜனக்கூட்டம் இயேசு சொல்வதைக் கேட்டது. ஆயினும் அவர்கள் எல்லோருக்கும் சரியான காதுகள் இருக்கவில்லை!

- நமக்கு எப்படியான காதுகள் இருக்க வேண்டுமென்று இயேசு விரும்புகிறார்?

நாம் ஆலயத்திற்கு வரும் கூட்டத்துடன் இருக்கலாம். நாம் வேதாகமத்திற்கு செவி கொடுத்து, செய்தியைக் கேட்கலாம். அது ஓர் நல்ல செய்தி என்று கூட நாம் கூறலாம்.

ஆனால் தேவனுடைய செய்தி நமது வாழ்க்கைக்குள் சென்று நம்மை மாற்றும் போதே நமக்கு நல்ல காதுகள் இருக்கின்றன.

இயேசுவின் நிலங்களைப் பற்றிய கதை தங்களைப் பற்றியதே என கூட்டம் அறிந்திருந்தது. மாற்கு 4:9ல் இயேசு “நீங்கள் அதைக் குறித்து என்ன செய்யப் போகிறீர்கள்“? என்று கேட்கிறார். அந்தக் கதை அவர்களைப் பற்றிய உண்மையைக் கூறுகிறது. அவர்கள் அதை கவனிப்பார்களா? நாம் அதைக் கவனிப்போமா?

பிரசங்கியுங்கள்: மாற்கு 4:1-20 (1)

(இது மிக முக்கியமானது! மக்களுக்கு விளக்க ஒரு உதாரணத்தைக் கூறவும். இது உகந்ததாயிருக்கலாம்) நீங்கள் ஒரு கால்பந்தாட்டப் போட்டியைப் பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள். உங்கள் அணி ஒரு கோல் போடும் போது நீங்கள் மகிழ்ச்சி அடைவீர்கள்.அந்த போட்டியைக் குறித்து பின்பு கதைப்பீர்கள். ஆனால் அப்போட்டி உங்களை மாற்றாது! அதுபோல் நீங்கள் ஆலயம் வருவீர்கள். கூட்டத்தை மகிழ்ச்சியாக அனுபவிப்பீர்கள். பாடல்கள் பாடுவீர்கள். **ஆனால் அது உங்களை மாற்றுமா?** அல்லது கால்பந்தாட்டத்தைப் பார்த்தது போலிருக்குமா?

செவி கொடுக்காத மக்களுக்கு

மாற்கு 4:10-12

இயேசு கதையை முடித்த போது என்ன நடந்தது என்று கவனியுங்கள். அந்தக்கதை அவர்களை சிந்திக்கப் பண்ணினது. இயேசு அவர்களைக் குறித்துத்தான் கதைத்தார் என்று அவர்கள் அறிந்திருந்தார்கள். ஆயினும் ஒரு சிலரே கதையைப் பற்றி இயேசுவிடம் கேட்பதற்கு மிஞ்சி இருந்தார்கள்.

இயேசு அவருடைய கதையை விளக்குகிறார். ஆனால் முதலில் அவர் ஏன் **உவமைகள்** மூலம் கற்பிக்கிறார் என்பதை விளக்கு கிறார். அது உண்மையை அறிந்து கொள்ள விரும்பும் மக்கள் யார் என்பதை அறிந்து கொள்வதற்கே ஆகும் (மாற்கு 4:11,12).

இயேசு சொல்வது நமக்கு அதிர்ச்சியாயிருக்கலாம். அவர் உவமைகள் மூலம் பேசுவது **மக்களை வெளியேற்றவேயாகும்!** அவருடைய கதை மக்களை அவரைவிட்டு அகற்றிவிடும் என்று இயேசு அறிந்திருந்தார். ஆனால் அவர் அதைக் குறித்துக் கவலைப் படவில்லை. உண்மையில் அவர்கள் அகன்றுபோக வேண்டும் என்பதே அவர் விருப்பமாகும். அவரை மக்கள் பிழையான காரணங்களுக்காக பின் தொடருவதை அவர் விரும்பவில்லை. இயேசு தான் உவமைகள் மூலம் கதைப்பது மக்களை **நியாயந் தீர்ப்பதற்கே ஆகும்** என்று கூறுகிறார். இதிலிருந்து நாம் என்ன படிக்கிறோம்?

இயேசு தன்னை அறியாத மக்களை நியாயம் **தீர்க்கவில்லை.** இந்த மக்கள் யூதர்களாகும். அவர்கள் தங்கள் மேசியாவாகிய இயேசுவை வரவேற்றிருக்க வேண்டும். ஆனால் அவர்கள் கடின இருதயமுள்ளவர்கள் ஆகவிருந்தார்கள். அவர்கள் இயேசுவுக்கு செவி கொடுக்க மறுத்தார்கள். எனவே இயேசு அவர்களை **நியாயம் தீர்க்கிறார்.** அவர்களுக்கு அவர் நேரான வழியில் கற்பித்துக் கொடுக்கவில்லை. மாறாக ஏசாயா தீர்க்கதரிசி கூறினது போல அவர்களால் சரியாகப் புரிந்து கொள்ள முடியாத உவமைகள் மூலம் அவர்களுடன் பேசுகிறார் (மாற்கு 4:12).

> இயேசுவின் வார்த்தை ஒன்று நம்மை மாற்றும் அல்லது நம்மை நியாயம் தீர்க்கும். உங்கள் நிலை என்ன?

14 விதைக்கிறவனின் உவமை

பின்னணி

இயேசுவின் **உவமைகள்** மக்களை இரண்டு குழுக்களாகப் பிரித்தன. கதையைக் கேட்டபின் அதிகமானோர் அவரைவிட்டு சென்றுவிட்டதைக் குறித்து இயேசு கவலைப்படவில்லை. சிலர் அந்த உவமையின் உண்மையான அர்த்தத்தை அறிந்து கொள்ள அங்கேயே இருந்தார்கள்.

மாற்கு 4:10

இயேசு அவருடைய சீஷர்களுக்கு கற்று கொடுக்க விரும்பினார் என்பது உங்களுக்கு நினைவு இருக்கட்டும். அவர் அவர்களுக்குக் கற்றுக்கொடுக்கும் ஒரு விஷயம் எப்படி விதைப்பது என்பதாகும். இந்த உவமையில் **நிலங்களுக்கு** பாடங்கள் இருக்கும் அதேவேளை **விதைப்பவர்களுக்கும்** பாடங்கள் இருக்கின்றன.

முக்கிய விடயம்

தேவனுடைய வார்த்தை அதை கேட்கும் சிலரைத்தான் இரட்சிக்கிறது. ஆனால் அவர்கள் அதிகமான அறுவடையைக் கொடுப்பார்கள்.

நீங்கள் செய்ய வேண்டியது

எல்லோரும் தாங்கள் "நல்ல நிலம்" என்று நினைக்க விரும்புகிறார்கள். **நல்ல விளைச்சலே** முக்கியம் என்பதை மக்கள் உணர நாம் உதவி செய்ய வேண்டும். நாம் தேவ செய்தியை கேட்க விருப்பம் உள்ளவர்களாய் இருக்கலாம். ஆனால் அது விவசாயிக்கு பிரயோஜனம் இல்லை. அவன் அறுவடை சமயத்தில் நல்ல விளைச்சலையே எதிர்ப்பார்ப்பான்.

அந்த விளைச்சல் என்ன? அவர் வார்த்தை நம்மை மாற்றி இருக்கிறது என்று காட்டும் எதை தேவன் நம் வாழ்க்கையில் தேடுகிறார்? அவரை மகிழ்ச்சி அடையச் செய்வது எது?

குறிப்புகள்

- **மாற்கு** 4:3. "விதைக்கிறவன்" அல்லது விவசாயி. இந்த விவசாயி விதைகளை தன் நிலங்களில் விதைத்தான். அவன் நடந்து போகும் போது விதைகளை தன் கையினால் விசிறினான்.

நிலங்களுக்கு ஒரு செய்தி

மாற்கு 4:14~20

⊞ இந்த நான்கு வகை நிலங்களைப்போல நான்கு வகை மனிதர்களைக் கற்பனை செய்யவும். அவர்கள் தேவனுடைய செய்தியை கேட்கும் போது என்ன நடக்கிறது என்பதைக் குறித்து கதைக்கவும். அவர்கள் அதிகமாக எந்த வகை மனிதர்களைப் போலிருக்கிறார்கள் என்பதை அவர்கள் கண்டு கொள்ள அவர்களுக்கு உதவி செய்யவும். அவ்வாறு கதைத்த பின் மக்கள் நிலங்களைக் குறித்து அதிகமாக சிந்திக்கத்தக்கதாக வெவ்வேறு குழுக்களாகப் பிரியலாம்.

- **வழியருகே (மாற்கு 4:4,15).** சாத்தான் விதைகளைத் தேடிக் கொண்டிருக்கும் ஒரு பறவையைப் போலிருக்கிறான். தேவனுடைய வார்த்தை நமது வாழ்க்கைக்குள் ஆழமாகப் போவதை அவன் வெறுக்கிறான். நாம் அதை விரைவில் மறந்துவிட வேண்டுமென்று விரும்புகிறான்.
- **கற்பாறை (மாற்கு 4:5-6,16,17).** இந்த மக்கள் வேதாகமத்தை விருப்பத்துடன் கேட்பார்கள். கிறிஸ்தவர்களாக வேண்டுமென்று தம் கைகளை உயர்த்துவார்கள். ஆனால், அது கஷ்டமாகும் போது என்ன நடக்கிறது? ஏன்
- **முள்ளுள்ள இடங்கள் (மாற்கு 4:7,18-19).** இந்த மக்களும் வளர்ச்சியடைகிறார்கள். தேவனுடைய வசனம் அவர்களை மாற்றத் தொடங்குகிறது. ஆனால் அவர்கள் இந்த வாழ்க்கையின் காரியங்களில் அதிக அக்கறை உள்ளவர்களாயிருக்கிறார்கள். அவர்கள் களைகளைப் பிடுங்கவில்லை. இந்தக்களைகள் என்ன?
- **நல்ல நிலம் (மாற்கு 4:8,20).** இவ்வாறு நீங்கள் சொல்கிறீர்களா: "தேவனே நீர் என்னை இப்படியாக மாற்றும்" என் வாழ்க்கையில் ஒரு பெரும் அறுவடை வேண்டும். நான் தேவனுக்கு மகிமையைக் கொண்டு வர விரும்புகிறேன். மற்றவர்கள் இயேசுவை அறிந்து கொள்ள நான் உதவ வேண்டும்.

» நாம் யாவரும் நல்ல விதைகளை (வார்த்தைகளை) கேட்கிறோம்! ஆனால், அவை நமது வாழ்க்கையை மாற்றுகின்றதா? அது நம்மை நமது பாவங்களிலிருந்து விடுவித்து இயேசுவை விசுவாசிக்கப் பண்ணுகிறதா? அது உங்களை அவர் மேல் அன்பு செலுத்தி அவருக்கு கீழ்ப்படிய வைக்கிறதா? தேவன் விரும்பும் ஒரே நிலம் **நல்ல விளைச்சலைத்** தரும் நிலமேயாகும்.

விதைப்பவர்களுக்கு ஒரு செய்தி

மாற்கு 4:11

இயேசு இந்தக் கதையை அவருடைய **சீஷர்களுக்குக்** கூறினார். அவர்கள் தேவனுடைய வார்த்தையை விதைக்கும் மக்களாய் இருக்கப் பழக வேண்டும். தேவன் இவைகளை நமக்குக் கற்றுக் கொடுக்கும் போது, அதை நாம் மற்றவர்களுக்குக் கூற வேண்டும்! நாம் விதைப்பவர்களாக மாறுகிறோம். விதைப்பவர்கள் இரண்டு காரியங்களை அறிய வேண்டும்

➡ பிரசங்கியுங்கள்: மாற்கு 4:1-20 (2)

1. சிலர் மட்டுமே இரட்சிக்கப்படுவார்கள். இறுதியில் ஒரு வகை நிலமே விவசாயிக்கு நல்ல விளைச்சலைத் தந்தது. அநேக மக்கள் கேட்பார்கள். சிலவேளைகளில் அநேகர், தாம் நல்ல கிறிஸ்தவர்கள் என்று கூறுகிறார்கள். ஆனால் ஒரு சிலரே இயேசுவைப் போல மாறுவார்கள் என்பது துக்ககரமானதாகும். சிலர் மாத்திரமே உண்மையாக இரட்சிக்கப்படுவார்கள். நாம் இதை **எதிர்பார்க்க** வேண்டும் என்று இயேசு கூறுகிறார்.

2. அங்கு ஓர் பெரும் அறுவடையிருக்கும் (மாற்கு 4:20). நாம் அதிக துக்கப்படக் கூடாது. ஒரு நிலம் மாத்திரமே விளைச்சலைக் கொடுத்தது. ஆனால் அது ஒரு **பெரிய** விளைச்சலைக் கொடுத்தது! ஒருவர் மாத்திரமே உண்மையான கிறிஸ்தவனாய் மாறக் கூடும், ஆனால் அந்த மனிதர் தேவனுக்கு அதிக மகிமையைக் கொண்டு வருவார். நாம் தேவனுடைய விதையை விதைப்பது ஒரு கடினமான காரியமாகும். அது சிலவேளைகளில் ஏமாற்றத்தைக் கொண்டு வரலாம். ஆனால் நாம் ஒருபோதும் அதை விட்டு விடக் கூடாது. இறுதியில் அங்கே ஓர் பெரும் அறுவடை **இருக்கும்**.

கலாத்தியர் 6:9

15 தேவனின் சத்தியத்தைப் பகிர்ந்து கொள்ளுங்கள்

பின்னணி

இயேசு இப்போதுதான் விதைக்கிறவனின் உவமையைக் கூறியிருக்கிறார். அது இயேசுவின் போதனையைக் குறித்ததொரு உவமையாகும். மாற்கு 4ம் அதிகாரத்தில் வரும் ஏனைய உவமைகள் இவ்விதைக்கிறவனின் உவமையின் பின்தொடர்ச்சியாகும். இன்னும் இரண்டு விதைகளைக் குறித்த உவமைகளும் இருக்கின்றன (மாற்கு 4:26-32). அவைகளும் நாம் இயேசுவின் வார்த்தைகளைக் கேட்கும் விதத்தைக் குறித்துக் கற்பிப்பவைகளாகும்.

மாற்கு 4:21-25ல் வரும் இரண்டு உவமைகளும் கூட இயேசுவின் வார்த்தைகளை நாம் எப்படிக் கேட்கிறோம் என்பதைக் குறித்ததாயிருக்கின்றன. நாம் நல்ல நிலமானால் இயேசுவின் வார்த்தையைக் கேட்டவுடன் அடுத்து நாம் என்ன செய்வோம்? நாம் அதை மற்ற மக்களுடன் பகிர்ந்து கொள்வோம்.

முக்கிய விடயம்

நாம் தேவனுடைய வசனத்தை மற்ற மக்களுடன் பகிர்ந்து கொள்ள வேண்டும்.

நீங்கள் செய்ய வேண்டியது

இந்த இரண்டு உவமைகளிலும் இயேசு என்ன சொல்ல நினைக்கிறார் என்பதை **சரியாகப்** புரிந்து கொள்வது கடினமாகும்.

மாற்கு 4:1-34ஐ அநேக முறை வாசித்து அதைப் புரிந்து கொள்ள ஜெபியுங்கள். மாற்கு 4:21-25ல் வரும் உவமைகள் எப்படிப் பொருந்துகின்றன?

உங்கள் பேச்சில், **முக்கிய விடயம்** தெளிவாய் இருப்பதை உறுதி செய்து கொள்ளுங்கள். அது மிக முக்கியமானதொரு செய்தி. நாம் மக்களை குழப்பி விடக் கூடாது.

குறிப்புகள்

- **மாற்கு 4:22.** நாம் நிரந்தரமாக ஒன்றையும் மறைத்து வைப்பதில்லை. நாம் ஒன்றை மறைத்து வைப்பதின் நோக்கம், அதை சரியான நேரத்திற்காகப் பத்திரப்படுத்தி வைத்து இருப்பதற்கேயாகும். அப்போது நாம் எதை மறைத்து வைத்திருந்தோம் என்பதை மக்களுக்குக் காண்பிப்போம்! தேவன் இயேசுவைக் குறித்த நற்செய்தியை நீண்ட காலமாக மறைத்து வைத்திருந்தார். பழைய ஏற்பாட்டில் அதைப்பற்றி சில குறிப்புகளை நமக்குக் கொடுத்திருந்தார். ஆனால் இப்போது எல்லா மக்களும் அதைக் கேட்பதற்காக செய்தியை வெளிப்படுத்துவதற்கான நேரம் வந்துவிட்டது.
- **மாற்கு 4:24.** “நீங்கள் எந்த அளவினால் அளக்கிறீர்களோ அந்த அளவினால் உங்களுக்கு

? கற்றுக்கொள்ளுங்கள்: மாற்கு 4:21 – 25

அளக்கப்படும் (NIV). GNB எனும் ஆங்கில மொழி பெயர்ப்பு இப்படி கூறுகிறது. "நீங்கள் மற்றவர்களை நியாயம் தீர்க்க உபயோகிக்கும் அதே சட்டங்களினால் நீங்களும் தேவனால் நியாயம் தீர்க்கப்படுவீர்கள்". முதல் மொழி பெயர்ப்பு சிறப்பாய் இருக்கிறது. இயேசு உபயோகிக்கும் வார்த்தை "அளவு". அதாவது ஒரு கரண்டி அல்லது சாடியைப் போல. நாம் எப்படி அவருடைய வசனத்தைப் பகிர்ந்து கொள்கிறோம் என்பதைக் குறித்து இயேசு இங்கே கூறுகிறார் என்று நான் நினைக்கிறேன். நாம் ஒரு சிறுகரண்டியையா அல்லது ஒரு பெரிய வாளியையா தேவனுடைய வார்த்தையைப் பகிர்ந்து கொள்ள உபயோகிக்கிறோம்? நாம் அவருடைய வசனத்தைப் பகிர்ந்து கொள்ளும்போது அதைத் தாராளமாகச் செய்ய வேண்டுமென்று அவர் விரும்புகிறார். அப்போது அவரும் நம்முடன் தாராளமாயிருப்பார்.

➡ பிரசங்கியுங்கள்: மாற்கு 4:21 – 25

ஒரு விளக்காயிருங்கள்!

மாற்கு 4:21~23

⊞ ஒரு கதையைக் கூறவும் அல்லது நடித்துக் காட்டவும். இருள் சூழ்ந்த நேரத்தில் ஒருவரிடம் ஒரு விளக்கு அல்லது டோர்ச் (Torch) இருக்கிறது. ஆனால் அதை அவர் மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்பவில்லை. அவர் எல்லா வெளிச்சத்தையும் தனக்கு மட்டுமே வைத்துக் கொள்ள விரும்புகிறார். எனவே அவர் வெளிச்சத்தை ஒரு துப்பட்டியின் கீழ் மறைத்து வைக்கிறார்! இப்போது ஒருவருக்கும் வெளிச்சமில்லை! எவ்வளவு மடத்தனம்!

உலகத்தின் ஒளியாகிய இயேசு வந்திருக்கிறார். இயேசு இல்லாமல் எல்லோரும் இருட்டில் இருப்பார்கள். இயேசு சத்தியத்தைத் தனக்குள்ளேயே வைத்துக் கொண்டிருந்தாரா? இல்லை. ஒளி பிரகாசிக்க வேண்டும். சத்தியம் வெளியே வர வேண்டும். தேவனுடைய வசனம் பகிர்ந்துக் கொள்ளப்பட வேண்டும். எனவே இயேசு தேவனுடைய சத்தியத்தைப் போதித்தார்.

இயேசுவின் ஒளி உங்களிடம் இருக்கின்றதா? தனக்கிருக்கும்

➡ பிரசங்கியுங்கள்: மாற்கு 4:21 –25

ஒளியை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்பாத ஒரு கிறிஸ்தவனைக் குறித்து சற்று கற்பனை செய்து பாருங்கள். மற்றவர்கள் என்ன நினைப்பார்கள் என்று நினைத்து ஒரு வேளை அவருக்குப் பயமாயிருக்கலாம். எனவே ஒளி சிறிதேனும் வெளிவராமல் இருக்க அவர் கடினமாக முயற்சி செய்யக் கூடும். அதை அவர் எப்படிச் செய்கிறார்? **நீங்கள்** அதை சில நேரங்களில் எப்படிச் செய்கிறீர்கள்?

யோவான் ஸ்நானகனை இயேசு 'எரிந்து பிரகாசிக்கிற ஒளி' என்று அழைத்தார். அது உங்கள் விடயத்திலும் உண்மையா? அது உண்மையாயிருக்க வேண்டுமென்று நீங்கள் ஜெபிப்பீர்களா? இந்தவாரம் நீங்கள் யாருடன் தேவனுடைய சத்தியத்தைப் பகிர்ந்து கொள்ள விரும்புகிறீர்கள்?

ஒரு வாளியாயிருங்கள்

மாற்கு **4:24–25**

⊞ ஒரு பணக்கார மனிதன் அல்லது மனுஷி சுத்தமான நீர் நிறைந்த ஒரு பெரிய ஏரிக்குச் சொந்தக்காரராய் இருக்கிறார் என்று கற்பனை செய்து கொள்ளுங்கள். அந்த ஊரில் மழை இல்லாததால் ஒருவருக்கும் நீர் இல்லை. அப்போது எல்லோரும் இந்த ஏரி சொந்தக்காரரிடம் வந்து தண்ணீர் கேட்கிறார்கள். அவர் ஒரு சிறு கிண்ணத்தில் கொஞ்சம் தண்ணீர் கொடுப்பாரா, அல்லது அவர் ஒரு பெரிய வாளியில் அதைக் கொடுப்பாரா?

இயேசு கூறுகிறார்: 'தாராளமாய்க் கொடுங்கள்! அதிகமாகக் கொடுங்கள்! இந்த உவமைகள் நாம் எப்படி தேவனுடைய வார்த்தையைக் கேட்கிறோம் என்பதைக் குறித்ததாகும். நாம் தேவனுடைய வார்த்தையைக் கேட்கும் போது அதை மற்றவர்களுக்குக் கொடுக்க வேண்டும். நாம் நீர் நிறைந்ததொரு ஏரிக்கு சொந்தக்காரர்கள் போலிருக்கிறோம். எல்லோரும் தாகமாயிருக்கிறார்கள். அவர்கள் தேவனுடைய சத்தியத்தை அறிந்து கொள்ள வேண்டும். அதை நீங்கள் முழுதுமாக உங்களுக்குள் வைத்துக் கொள்வீர்களா? அல்லது ஒரு சிறு பாத்திரத்தில் கொஞ்சம் எடுத்துக் கொடுப்பீர்களா? அல்லது நீங்கள் ஒரு பெரிய வாளியைப் போலிருப்பீர்களா? நீங்கள் அதிகமாகத் தேவனுடைய வார்த்தையைப் பகிர்ந்து கொள்வீர்களா?'

அதன்பின் என்ன நடக்கிறது? மாற்கு **4:25.** நம்மிடம் எவ்வளவு அதிகமாக இருக்கிறதோ, அவ்வளவு அதிகமாகப் பெற்றுக் கொள்வோம். நாம் தேவனுடைய வசனத்தை உபயோகிக்கும் போது நாம் பலமுள்ளவர்களாய் மாறுகிறோம். நாம் மற்றவர்களுக்குக் கொடுக்கும் போது நாம் நிறைவடைகிறோம். நீங்கள் அறிந்த கிறிஸ்தவர்களைக் குறித்து நினைத்துப் பாருங்கள் இயேசுவின் வார்த்தைகள் சத்தியமாகும்! தேவனுடைய வார்த்தையைக் கேட்டும் அதைக் குறித்து ஒன்றும் செய்யாத மக்களுக்கு என்ன நடக்கிறது. அவர்கள் தேவனை விட்டு விலகிப் போகிறார்கள். இறுதியில் எல்லாவற்றையும் இழந்து போகிறார்கள்.

16 விதை முளைத்து வளருகிறது!

பின்னணி

இயேசு விதைகளைக் குறித்து இன்னும் இரண்டு உவமைகளைக் கூறுகிறார். அவர் தன்னுடைய **சீஷர்களுக்கு** கற்றுக் கொடுக்க விரும்புகிறார் என்பதை நினைவில் வைத்துக் கொள்ளவும். அவர்களும் அவரைப்போல போதகர்களாக வேண்டுமென்று அவர் விரும்புகிறார். எப்படி தேவனுடைய வசனமாகிய விதை முளைத்து வளருகிறது என்பதை அவர்கள் அறிந்து கொள்ள வேண்டுமென்று அவர் விரும்புகிறார். ஒன்றும் நடக்காமலிருக்கும் போது சீஷர்கள் விட்டு விடக்கூடாது என்பதை உணர்த்த அவர் மேலும் இரண்டு உவமைகளைக் கூறுகிறார் மாற்கு **4:26~34.**

முக்கிய விடயம்

தேவனுடைய வார்த்தை வளரும் என்று விசுவாசியுங்கள்.

நீங்கள் செய்ய வேண்டியது

நம் மக்களுடன் இந்த உவமைகள் பேசச் செய்ய வேண்டும். இயேசுவின் உவமைகளைப் போன்ற கதைகளைக் கூறுங்கள். வாழ்க்கையின் உண்மைச் சம்பவங்களாகத் தோன்றக் கூடிய கதைகளை அவர்களுக்குக் கூறுங்கள். உங்கள் மக்களில் சிலர் அவர்கள் இருந்த இடத்தை விட்டுப் போய், பின் மீண்டும் அங்கு வந்தபோது ஏதாவது அல்லது யாராவது உயரமாக வளர்ந்திருப்பதைக் கண்டது அவர்களுக்கு நினைவிருக்கிறதா? கடுகு விதையைப் போன்றதொரு சிறு விதை, ஓர் பெரிய மரமாக வளரும் என்பது உங்கள் மக்களுக்குத் தெரியுமா? அல்லது முன்பு மிகச் சிறியதாக இருந்து பின் மிகப் பெரியதாக மாறும் மற்றவைகளைக் குறித்து அவர்களுக்குத் தெரியுமா? அவர்களுக்குத் தெரிந்தவற்றைப் பயன்படுத்தி விளக்கவும்.

குறிப்புகள்

- **மாற்கு 4:26,30.** “பரலோக ராஜ்யம் ... ஒப்பாயிருக்கிறது” என்று இயேசு சொன்னதின் அர்த்தம் “பரலோக ராஜ்யத்தைப் பற்றி சிலவற்றை நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்” என்பதாகும். ஒரு உவமையை ஆரம்பிக்கு முன் இயேசு எப்போதும் இந்த வார்த்தைகளை உபயோகித்தார். இந்த உலகத்தை விட பரலோக ராஜ்யம் எவ்வளவு வித்தியாசமானது என்பதை இயேசுவின் உவமைகள் காண்பிக்கின்றன. தேவனுடைய ராஜ்யத்தில் தான் தேவன் அரசாளுகிறார். இயேசு நமது ராஜாவாக இருப்பாரானால் நாம் தேவனுடைய ராஜ்யத்திற்கு சொந்தமானவர்கள்.

? கற்றுக்கொள்ளுங்கள்: மாற்கு 4:26 – 34

- **மாற்கு 4:26-29.** விதையை விதைத்தபின் விவசாயி வேறொன்றும் செய்யத் **தேவை இல்லையென்று** இயேசு கூறவில்லை. தேவனுடைய வார்த்தையை ஒரு கிறிஸ்தவன் இன்னொருவருக்கு அறிவித்த பின் வேறொன்றும் **செய்ய வேண்டியதில்லை** என்று அவர் சொல்லவில்லை. நாம் ஜெபிக்க வேண்டும். அடிக்கடி நாம் இன்னும் அதிகமாக தேவனுடைய வார்த்தையைக் கூற வேண்டும். ஆனால் முக்கிய விடயம் என்னவெனில், நம்மால் விதையை வளர வைக்க முடியாதென்பதேயாகும்.

→ பிரசங்கியுங்கள்: மாற்கு 4:26 – 34

அது தானாக வளருகிறது

மாற்கு 4:26~29

செடிகள் வளருவதற்காக அவைகளுடன் பேசும் மக்களைக் குறித்து நான் கேள்விப் பட்டிருக்கிறேன்! எவ்வளவு முட்டாள்தனமான செயல்!

⊞ தன்னுடைய விதைகளைக் குறித்த கவலையினால் தூக்கமில்லாமலிருக்கும் ஒரு விவசாயியைக் கற்பனை செய்யுங்கள். மிகக் குளிராய் இருக்கிறது. சூரியன் இல்லை. எனவே அவன் தன் படுக்கையை விட்டெழுந்து தன் விதைகளை வளரப்பண்ண முயற்சி செய்கிறான். எவ்வளவு முட்டாள்தனம்! அவன் செய்ய வேண்டியது காத்திருப்பதே. அவனுடைய எந்த உதவியுமின்றி விதைகள் வளரும். தேவன் சூரியனையும், மழையையும் கொடுக்கிறார். எனவே செடி தானாய் வளருகிறது.

அந்த அதிசயத்திற்காக கர்த்தருக்கு ஸ்தோத்திரம்! ஒவ்வொரு வருடமும் சிறு விதைகள் முளைத்து, வளர்ந்து நமக்கு சாப்பாட்டிற்கு விளைச்சலைத் தருகின்றன. ஒரு விதை ஒன்றும் செய்ய முடியாததொரு சிறு பொருளாகக் காணப்படுகின்றது. ஆனால்

அதற்குள் உயிர் இருக்கிறது. ஒரு பெரிய செடியாக வளருவதற்குத் தேவையான யாவும் ஒரு விதைக்குள் இருக்கின்றன.

அவருடைய வார்த்தைகளும் அப்படியே என்று இயேசு சொல்கிறார். அவை மிகச் சிறியன போல் தோன்றும். அவை முக்கியமானவைகளாகவோ, அல்லது சக்தியுள்ளவைகளாகவோ காணப்படுவதில்லை. **ஆனால் அவைகளில் ஜீவன் இருக்கிறது.** தேவனுடைய வார்த்தைகள் நமது வாழ்க்கையில் வளருகின்றன. அவை நல்ல விளைச்சலைத் தருகின்ற விதத்தில் வளருகின்றன.

> தேவனுடைய வார்த்தைகள் வளர விசுவாசியுங்கள். நீங்கள் தேவனுடைய வார்த்தையைப் போதிக்கும் போது விதையைக் குறித்துக் கவலைப்பட வேண்டாம். அதற்கு அதனுடைய சொந்த ஜீவன் இருக்கிறது. நீங்களல்ல, தேவனே அவைகளை வளரச் செய்கிறார். தேவனுடைய வார்த்தையைத் தொடர்ந்து விதைத்துக் கொண்டேயிருங்கள். ஒரு நாள் அது எப்படி வளர்ந்துவிட்டது என்பதைக் காண்பீர்கள்.
> **ஒப்பிடுக ஏசாயா 55:10,11 பார்க்கவும்.**

அது பெரிதாக வளருகிறது

மாற்கு 4:30–32

(கதையைக் கூறவும். மிகச் சிறிதான ஒன்று மிகப் பெரிதாக வளருகிறது! என்ன ஆச்சரியம்! பறவைகள் உண்ணக் கூடியதான ஒரு விதை, பறவைகள் உட்காரத்தக்கதானதொரு பெரிய மரமாக வளருகிறது.)

தேவனின் வார்த்தையும் அப்படித்தான். நீங்கள் இயேசுவையும், சிலுவையையும் பற்றிக் கூறுகிறீர்கள். அதைக் கேட்பவர்களுக்கு அதில் அவ்வளவு ஆர்வமில்லை. நீங்கள் சொன்னவைகளால் யாருக்கும் பிரயோஜனமில்லை என நினைக்கிறீர்கள். நீங்கள் துக்கத்துடன் வீடு செல்கின்றீர்கள். அந்த விதை வலுவற்றதாகக் காணப் படுகின்றது. அது ஒருவரையும் மாற்றாது என்று நினைக்கிறீர்கள். ஆயினும், யாரோ ஒருவர் அதைக் கேட்டிருக்கிறார். விதை அவருக்குள் வளருகிறது. அவருடைய எல்லாப் பாவங்களும் மன்னிக்கப்பட்டு, அவருடைய முழு வாழ்க்கையும் மாறுகிறது. அவர் அநேகருக்கு இயேசுவைப் பற்றிக் கூறுகிறார். அவருக்கு நித்திய ஜீவன் இருக்கிறது. தேவனுடைய வார்த்தைகள் ஒரு பெரிய மரமாக வளர்ந்து விட்டது!

> தேவனுடைய வார்த்தை வளருமென்று நம்புங்கள். அது ஒன்றும் செய்யவில்லை என்று தீர்மானத்திற்கு வரவேண்டாம், அப்படியாக உங்களுக்குத் **தோன்றும் போது** அதிகமாக எதுவும் நடப்பதாக நமக்குத் தெரியாமலிருக்கலாம். ஆனால் சிறியவைகள் பெரிதாக வளரமுடியும் என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்.
>
> தேவனுடைய வார்த்தை வளருமென்று நம்புங்கள் மிகச் சிறிதாகத் தோன்றுகின்றது என்பதற்கான விதையை **மாற்ற** முயல வேண்டாம். மக்களை கவருவதற்காக அதை பெரிதுபடுத்திக் காண்பிக்க வேண்டாம். தேவனையும் பாவத்தையும், இயேசுவையும் அவருடைய சிலுவையையும் குறித்த செய்தியை நம்புங்கள்.

17 இவர் யாரோ?

பின்னணி

மாற்கு சுவிசேஷத்தில் இதுவரை:

- இயேசு தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்த நற்செய்தியை பிரசங்கிக்க வந்திருக்கிறார்.
- இயேசு அவருடைய அதிகாரத்தை, மக்களின் மேலும், நோய்கள் மேலும், பாவத்தின் மேலும் காண்பிக்கிறார்.
- அநேக யூதர்கள் இயேசுவை வெறுக்கிறார்கள். அவர்கள் அவரை கொலை செய்ய நினைக்கிறார்கள்.
- இயேசு அந்த மக்களை விட்டு விலகி "புதிய இஸ்ரவேலராக" இருப்பதற்கு சீஷர்களை அழைக்கிறார்.
- அவருடைய சீஷர்கள் தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்து புரிந்து கொள்ள உதவியாக இயேசு உவமைகள் மூலம் அவர்களுக்குப் போதிக்கிறார்.

ஆயினும், உண்மையாகவே இயேசு யார் என்பதை சீஷர்கள் இன்னும் புரிந்து கொள்ளவில்லை.

மாற்கு 1-8 அதிகாரங்களில் வரும் பெரிய கேள்வி இதுதான்: **"இவர் யாரோ?"** என்ற அவர்களின் கேள்விக்கு நாம் பதிலளிக்க வேண்டுமென்று மாற்கு விரும்புகிறார்.

முக்கிய விடயம்

காற்றும்,அலைகளும் இயேசுவுக்குக் கீழ்ப்படிகின்றன. நாம் நமது விசுவாசத்தை அவர் மேல் வைக்க வேண்டும்.

நீங்கள் செய்ய வேண்டியது

பயமா அல்லது விசுவாசமா? சில மக்கள் இயேசுவை நம்பவோ, அவருடைய அதிகாரத்திற்குப் பயப்படவோ தேவையில்லையென்று நினைக்கிறார்கள். நாம் இயேசுவின் அதிகாரத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்க வேண்டுமென்பதைக் குறித்து மற்றவர்களுக்கும் காண்பிக்கக் கவனமாயிருக்க வேண்டும். அவர் நம்மை இரட்சிப்பதற்கு நாம் அவரை நம்பாவிட்டால், நாம் அதிகமாக பயப்படவேண்டும்.

குறிப்புகள்

- **மாற்கு 4:39.** வழக்கமான ஒரு புயலுக்குப் பின் அலைகள் அடங்குவதற்கு பல மணி நேரமெடுக்கும். இந்த அற்புதம் இயேசுவின் அதிகாரத்தை வெளிப்படுத்துகிறது.

இவர் யாரோ?

மாற்கு 4:35-41

முதலில் இயேசு கவலைப் பட்டதாகத் தெரியவில்லை. படகு அமிழ்ந்து கொண்டிருக்கும்போது அவர் தூங்கிக் கொண்டிருக்கிறார்! அவர் அவர்களுடைய போதகர், ஆனால் அவருடைய சீஷர்களுக்கு உதவி செய்ய அவர் ஒன்றும் செய்யாமலிருக்கிறார்!

» சில வேளைகளில் உங்களுக்கும் அப்படித் தோன்றுகின்றதா? நீங்கள் பிரச்சினைக்குள் இருக்கிறீர்கள். இயேசு உங்களுக்கு உதவி செய்யவில்லை. அவருக்கு ஏதாவது செய்ய அதிகாரம் இருக்கிறது என்று உங்களுக்குத் தெரியும். ஆனால் இயேசு நித்திரையாயிருப்பது போல் தோன்றுகிறது. அப்போது அவருக்கு அக்கறையில்லையென்று நினைக்கத் தோன்றுமல்லவா? **ஆனால் அதை நம்ப வேண்டாம்!** (ஏசாயா 43:1-3)

அப்போது இயேசு தான் யாரென்பதைக் காண்பிக்கிறார்.

⊞ நீங்கள் ஒரு படகில் இருப்பதாக நினைத்துக்கொள்ளுங்கள். அப்போது ஒரு புயல் வருகிறது. நீங்கள் எல்லோரிடமும் "பயப்பட வேண்டாம்" "நான் அதை நிறுத்துகிறேன்" என்று சொல்லிவிட்டு "காற்றே நில்", கடல் அலைகளே அமைதியாய் இருங்கள்! என்று சத்தமாய் நீங்கள் கூறியும் ஒன்றும் நடக்காவிட்டால் உங்கள் நண்பர்கள் உங்களை பைத்தியக்காரன் என்று நினைப்பார்களல்லவா? ஆம், அவர்கள் நினைப்பது சரியே.

- ஆனால், இயேசு எப்படி காற்றுடனும், அலைகளுடனும் இப்படிக் கதைக்கிறார்? அவைகள் ஏன் உடனே இயேசுவுக்கு கீழ்ப்படிக்கின்றன? இவர் யார்? யாருக்கு மாத்திரம் இப்படியான அதிகாரம் இருக்கிறது.

('இவர் யாரோ?' எனும் இந்தக் கேள்விக்கு நீங்கள் பதில் கொடுக்காமலிருக்கத் தீர்மானிக்கலாம். உங்கள் மக்கள் தாங்களாகவே அதற்கான விடையைக் கண்டு பிடிக்கலாம். சீஷர்களுக்கும் இன்னும் அதன் விடை தெரியவில்லை. கடலை உண்டாக்கின கடவுளால் மட்டுமே இதைச் செய்ய முடியுமென்று நாமறிவோம். ஆனால், இயேசு கடவுளென்பதை சீஷர்களால் இன்னும் கண்டு கொள்ள முடியவில்லை!)

பயமா அல்லது விசுவாசமா?

மாற்கு 4:40

இயேசு அமைதியாயிருந்த போது சீஷர்கள் பயந்தார்கள். அவர் இப்போது கடலை அமைதியாயிருக்கப் பண்ணும் போது அவர்கள் பயப்படுகிறார்கள். அங்கு காற்றில்லை, அலைகள் இல்லை. இயேசு அவர்களைக் காப்பாற்றியிருக்கிறார். ஆம், அவர்கள் இப்போது அதிகமாகப் பயப்படுகிறார்கள்!

அவர்கள் இயேசுவின் அதிகாரத்தைக் கண்டு அச்சம் அடைகிறார்கள். ஏனென்றால் **இயேசு யாரென்று** அவர்களுக்குத் தெரியவில்லை.

இயேசு அவர்களுடைய **கடவுள்** என்றும், **இரட்சகர்** என்றும்

பிரசங்கியுங்கள்: மாற்கு 4:35-41

அவர்கள் புரிந்து கொண்டிருக்க வேண்டும். அவர்களை அவர் புயலிலிருந்து காப்பாற்றினார். அவர்கள் பயப்பட ஒன்றுமில்லை.

இயேசு **கடவுளாயிருக்கிறார்.** அவருக்கு எங்கள் மேல் எல்லா அதிகாரமும் உண்டு. அவர் நினைத்ததை எங்களுக்கு செய்ய அவரால் முடியும். ஒருநாள் அவர் நமது நீதிபதியாயிருப்பார். அவருக்கு நீங்கள் பயமா?

இயேசு **இரட்சகராயிருக்கிறார்.** அவரை நீங்கள் விசுவாசித்தால், அவருடைய அதிகாரத்திற்கு பயப்பட வேண்டிய அவசியமில்லை. இயேசு நமது பாவங்களிலிருந்து நம்மை இரட்சிக்கவே வந்தார்.

யோவான் 3:16~18,31

அவருடைய அதிகாரம் **நமக்கு** உதவுவதற்கேயாகும். அது நமக்கு எதிரானதல்ல. எனவே எவ்வளவு பெரிய புயல் வந்தாலும் நாம் பயப்படத் தேவையில்லை. ஏனென்றால் இயேசு எங்களைப் பார்த்துக்கொள்வார்.

18 இயேசுவுக்கு பிசாசுகள் மேல் அதிகாரமுண்டு

▣ பின்னணி

மாற்கு 1-8 அதிகாரங்களில் வரும் பெரிய கேள்வி “இயேசு யார்? என்பதாகும். இப்போது நாம் மாற்கு 5ம்அதிகாரத்திற்கு வந்திருக்கிறோம். இயேசுவுக்கு இவைகள் யாவையும் செய்ய அதிகாரம் இருப்பதை நாம் அறிவோம்.

- வியாதியஸ்தர்களை குணமாக்குதல் (குஷ்ட ரோகிகளையும் கூட), மற்றும் பிசாசுகளை துரத்துதல்.
- பாவங்களை மன்னித்தல்.
- தேவனுடைய வல்லமையோடு போதித்தலும் சீஷர்களை அழைத்தலும்.
- கடலுக்குக் கட்டளையிட்டு அதைக் கீழ்ப்படிய வைத்தல்.

ஆயினும்,சீஷர்கள் இன்னும் “இவர் யாரோ” என்ற கேள்வியை கேட்கிறார்கள் (மாற்கு 4:41). அவர்கள் இன்னும் இயேசுவை தேவனுடைய குமாரனாக விசுவாசிக்கவில்லை. மாற்கு 5ல் இயேசு தான் யாரென்பதை மீண்டும் காட்டுகிறார். மக்கள் அவரை விசுவாசிப்பார்களா, அல்லது அவருடைய அதிகாரத்தைக் கண்டு பயப்படுவார்களா?

📖 மாற்கு 5:1~43

⊙ முக்கிய விடயம்

இயேசுவுக்குப் பிசாசின் மேல் அதிகாரமுண்டு. நாம் நமது விசுவாசத்தை அவர் மேல் வைத்து அவர் நமக்குச் செய்ததை மற்றவர்களுக்குச் சொல்ல வேண்டும்.

★ நீங்கள் செய்ய வேண்டியது

மாற்கு 4:35-41க்கான நமது குறிப்புகளை நீங்கள் பார்ப்பீர்களானால், நாம் இதே தலைப்புகளைக் கொடுத்து இருப்பதைக் காணலாம். கதைகள் வித்தியாசமானாலும், அவை இயேசுவைப்பற்றிய அதே முக்கிய காரியங்களைக் கற்றுக் கொடுக்கின்றன. இந்தப் பெரும் பாடங்களை உங்கள் மக்களுக்கு விளக்கிக் காண்பிக்கும்படி தேவனிடம் கேளுங்கள். அவர்கள் உண்மையில் இயேசு யார் என்பதைக் கண்டுகொண்டு அவரை முழுமையாக விசுவாசிக்க வேண்டும்.

✺ குறிப்புகள்

- **மாற்கு 5:1.** உங்களிடம் ஒரு வேதாகம நிலப்படம் இருக்குமானால், அதைப் பார்க்கவும். இந்த நிலப்பரப்பு புறஜாதி மக்கள் (யூதர் அல்லாதவர்கள்) அதிகமாக வாழ்ந்த ஏரியின் ஒரு பகுதியாகும்.

கற்றுக்கொள்ளுங்கள்: மாற்கு 5:1 -20

- **மாற்கு 5:13.** பன்றிகளுக்காக கவலைப்பட வேண்டாம். இயேசு கொடூரமானவரல்ல என்பதை நாமறிவோம். இயேசு நியாயமாக நடப்பவர். இந்த **மனிதனுக்கு** அந்தப் பிசாசுகள் செய்த தீங்கே முக்கிய காரியமாகும். அவனை நரகத்திற்குக் கொண்டு போக நினைத்திருந்த பிசாசுகளிடம் இருந்து அவனை இயேசு விடுதலை செய்தார்.
- **மாற்கு 5:20.** “தெக்கப்போலி” என்பது 10 நகரங்களைக் கொண்டதோர் பகுதியாகும். இயேசு சொன்னதை விட அதிகமான மக்களுக்கு எப்படி அந்த மனிதன் அவரைப்பற்றிக் கூறினான் என்பதை கவனிக்கவும்.

பிரசங்கியுங்கள்: மாற்கு 5:1 -20

இவர் யாரோ?

மாற்கு 5:1~13

(மாற்கு 5:3~5ஐ உபயோகித்து இந்த மனிதனை விவரிக்கவும். அவனுடைய பெலன், அவனுக்குள் இருந்த அநேக அசுத்த ஆவிகள், அவனுடைய பெரும் வேதனை. எல்லோரும் அவனுக்கு அஞ்சினார்கள்.)

- இந்த பயங்கரமான மனிதன் அவரை நோக்கி ஓடிவரும் போது இயேசு என்ன செய்கிறார்?

  ஏன் இயேசு அங்கிருந்து ஓடிவிட வில்லை?

  மாற்கு 5:6-10ல் யார் பயப்படுகிறார்கள்?

இந்த மனிதன் இயேசுவுக்கு பயந்ததின் காரணம், அவன் **இயேசுவை யாரென்று அறிந்து இருந்ததேயாகும்** (மாற்கு 5:7). சீஷர்கள் இன்னும் குருடர்களாக இருக்கிறார்கள். ஆனால் அந்த மனிதனுக்குள் இருந்த பிசாசுகள் அவரைக் காண்கின்றன (யாக்கோபு 2:19). அந்த மனிதன் மிகவும் பயந்திருக்கிறான். ஆனால் தேவனுடைய குமாரனுக்கு முன்பாகப் பணிந்து கொள்கிறான். இயேசுவுக்கு தான் நினைத்ததை அவைகளுக்குச் செய்ய அதிகாரம் இருக்கிறது என்பதை அந்த

மனிதனுக்குள்ளிருந்த பிசாசுகள் அறிந்திருக்கின்றன. அவருடைய இரக்கத்திற்காக மாத்திரமே அவைகளால் கெஞ்ச முடியும்.

» நாம் தேவனுடைய குமாரனை அறிந்திருப்போமானால் **அசுத்த ஆவிகளுக்கு ஒருபோதும் நாம் பயப்பட வேண்டிய அவசியமில்லை.** அசுத்த ஆவிகள் இயேசுவுக்கு பயப்படுகின்றன. ஏனென்றால் இயேசுவுக்கு அவைகள் மேல் அதிகாரமிருக்கிறது.

» நீங்கள் இன்னும் அசுத்த ஆவிகளுக்கு அஞ்சுகின்றீர்களா? இயேசு அவைகளை நியாயம் தீர்ப்பார் என்பதை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள். தேவனுடைய குமாரனாகிய இயேசுவை நம்புங்கள். பயப்படவேண்டாம்.

பயமா அல்லது விசுவாசமா?

📖 மாற்கு 5:14~20

என்ன வினோதம்!📖 மாற்கு 5:15,17 அந்த மனிதன் இப்போது அமைதியடைகிறான், ஆனால், மக்கள் அஞ்சுகிறார்கள்! அவர்களை இந்த பயங்கரமான மனிதனிடமிருந்து இயேசு காப்பாற்றி இருக்கிறார், ஆனால், இயேசுவை அவர்கள் அங்கிருந்து போகும்படி கேட்டுக்கொள்கிறார்கள்.

ஏன் அப்படி? இயேசுவின் வல்லமையைக் குறித்து அவர்கள் பயப்படுகிறார்கள். இயேசு அவர்களுக்கு செய்யக் கூடியதைக் குறித்து அவர்கள் அச்சம் அடைகிறார்கள்.

» நீங்கள் இயேசுவின் அதிகாரத்தைக் குறித்து பயப்படுகிறீர்களா? இயேசுவுக்கு உங்கள் மேல் அதிகாரமிருப்பதால் அவரைப் பின்பற்ற நீங்கள் அஞ்சுகிறீர்களா? உங்கள் மேல் அவர் அதிகாரம் செலுத்துவதை நீங்கள் விரும்பாமலிருக்கலாம். கவனமாக சிந்தித்துப் பார்க்கவும். இயேசு ஒருவரே இரட்சகர் அவர் நம்மை விட்டுப் போய் விட வேண்டுமென்று நினைப்பது பெரும் பிழையாகும்.

இப்போது இந்த மனிதன் வித்தியாசமானவனாயிருக்கிறான். அவனுக்கு **விசுவாசமிருக்கிறது** 📖 மாற்கு 5:18~20. அவன் இயேசுவை விசுவாசிக்கிறான். ஏனென்றால் அவர் அவனை விடுதலை செய்திருக்கிறார். அவன் இயேசுவோடு கூட இருக்க விரும்புகிறான்.

ஆனால் இயேசு அவனுக்கு ஒரு வேலையைக் கொடுக்கிறார் என்பதைக் கவனிக்கவும். அவன் தன் **குடும்பத்தாரிடம்** மாத்திரம் அல்லாது, அவன் சந்தித்த எல்லாரிடமும் இயேசு அவனுக்குச் **செய்த எல்லாவற்றையும்** கூறினான்.

» இயேசு உங்களுக்கு எவ்வளவு உதவிகள் செய்திருக்கிறார்?

அதில் நீங்கள் எவ்வளவு மற்றவர்களுக்குக் கூறுவீர்கள்?

19 விசுவாசத்தைக் குறித்த பாடங்கள்

பின்னணி

மாற்கு சுவிசேஷத்தில் இதுவரை மக்கள் இயேசுவின் மேல் விசுவாசம் வைத்ததாகத் தெரிய வில்லை. சீஷர்கள் ஏன் அவரை விசுவசிக்கவில்லை என்று இயேசு அவர்களைப் பார்த்து கேட்க வேண்டியிருந்தது. மாற்கு 4:40

இப்போது மாற்கு விசுவாசத்துடன் இயேசுவிடம் வரும் இரண்டு நபர்களை நமக்குக் காட்டுகிறார். அவர்கள் இயேசுவின் அன்பும், அதிகாரமும் தங்களுக்கு உதவி செய்யும் என்று நம்புகிறார்கள் மாற்கு 5:21~43. மாற்கு எப்படி இந்த இரண்டு கதைகளையும் ஒன்றாக இணைக்கிறாரென்று பாருங்கள். இந்த இரண்டு கதைகளும் ஒரே பாடத்தைக் கற்றுக் கொடுப்பதாலேயே அவர் அப்படிச் செய்கிறார்.

நாம் அந்தப் பகுதியை இரண்டாகப் பிரித்திருக்கிறோம். ஏனென்றால் அவைகளிலிருந்து நாம் அதிகமாகக் கற்றுக் கொள்ள வேண்டியிருக்கிறது.

முக்கிய விடயம்

யவீருவையும், அப்பெண்ணையும் போல இயேசுவின் மேல் விசுவாசம் வையுங்கள்.

நீங்கள் செய்ய வேண்டியது

இந்தக் கதைகள் இயேசுவின் மேல் வைக்கும் விசுவாசத்தைக் குறித்து நமக்குக் கூறுகின்றன. இந்த இருவரும் தங்களுடைய தேவையில் இயேசுவால் தங்களுக்கு உதவ முடியுமென்று விசுவாசித்தார்கள். நமக்கும் இயேசு தேவை. முக்கியமாக நம்மை நமது பாவத்திலிருந்து இரட்சிக்க இயேசு நமக்குத் தேவை. நமது பாவங்களிலிருந்து நம்மை இரட்சிக்க இயேசுவை எப்படி விசுவாசிக்க வேண்டும் என்று அறிந்து கொள்ள இந்த கதைகள் நமக்கு உதவுகின்றன. அவர்களுடைய மிகப் பெரிய தேவை இதுவே என்பதை உங்கள் மக்கள் கண்டு கொள்ள ஜெபியுங்கள். இயேசுவை நம்புவது மிகப்பாதுகாப்பானது என்பதை அவர்கள் அறிந்து கொள்ள உதவி செய்யுங்கள்.

குறிப்புகள்

- மாற்கு 5:22. யவீரு ஓர் முக்கியமான யூதன். அவன் ஜெப ஆலயத்தில் மக்களுக்கு கற்றுக் கொடுப்பவன். நாம் வாசித்து அறிந்திருக்கும் மற்ற யூதத் தலைவர்களை விட இவன் எவ்வளவு வித்தியாசமானவனாய் இருக்கிறான் என்பதைக் கவனிக்கவும்.

? கற்றுக்கொள்ளுங்கள்: மாற்கு 5:21 – 34

- **மாற்கு 5:25.** உதிரப்போக்கு அந்தப் பெண்ணை பழைய ஏற்பாட்டு சட்டங்களின்படி **"அசுத்தமானவளாக்குகிறது"** அதன்படி, மற்றவர்களுடன் சேர்ந்து தேவனை ஆராதிக்கப் போக அவளால் முடியாது. மற்றவர்களை விட்டு தான் பிரிக்கப்பட்டிருப்பதை அவள் உணர்கிறாள். அவளைப் பற்றி மக்கள் என்ன நினைப்பார்கள் என்பதைக் குறித்து அவள் பயப்படுகிறாள்.

பிரசங்கியுங்கள்: மாற்கு 5:21 – 34

இயேசுவின் மேலுள்ள விசுவாசம் பணிவானது

மாற்கு 5:22

யவீரு ஒரு மிக முக்கியமான மனிதன். ஆனால், இயேசு அதை விட மிக முக்கியமானவர் என்பதை அவன் அறிந்திருந்தான். எனவே அவன் இயேசுவை பணிந்து கொள்கிறான்.

இயேசுவின் மேல் நமக்கு உண்மையான விசுவாசம் இருக்குமானால், நாம் அதிக பணிவுள்ளவர்களாயிருப்போம். நாம் எவ்வளவு நல்லவர்கள் என்று நம்மைக் குறித்து நாம் நினைக்க மாட்டோம்.

இயேசு எவ்வளவு நல்லவர் என்றே நாம் நினைப்போம். நாம் இயேசுவிடம் வந்து, அவரை வணங்கி, நம்மேல் இரக்கம் பாராட்டும்படி அவரிடம் கேட்போம்.

இயேசுவின்மேல் விசுவாசம் ஒரு பெரும் தேவையின் மூலம் வருகிறது

மாற்கு 5:23,25,26

இந்த மக்கள் இயேசுவை விசுவாசித்தார்கள். ஏனென்றால், அவர்களுக்குத் தேவையிருந்தது. (அவர்களுடைய பெருந்தேவையை விவரிக்கவும். அவர்களுக்குத்

தேவைப்படுவது சிறிய ஒன்றல்ல என்பதையும், அது அவர்கள் வாழ்க்கையில் மிக முக்கியமான ஒன்றாக இருக்கிறது என்பதையும் அவர்களுக்குக் காண்பிக்கவும்.)

நாம் இயேசுவிடம் நமது சிறிய தேவைகளில் நமக்கு உதவும்படி கேட்கலாம். ஆனால், இயேசு நம்முடைய **பெரிய தேவையை** சந்திக்க வந்தார். நமக்குள் இருக்கும் பாவம் நம்மைக் கொன்று கொண்டிருக்கிறது. நாம் நரகத்திற்குப் போகும் அபாயத்தில் இருக்கிறோம். உங்களுடைய அந்தப் பெரிய தேவையுடன் இயேசுவிடம் செல்லுங்கள். உங்களை இரட்சிக்கும்படி இயேசுவைக் கேளுங்கள்.

இயேசுவின்மேல் மட்டும் விசுவாசம்

வேறு ஒன்றும் தங்களுக்கு உதவி செய்ய முடியாது என்பதை இந்த இரண்டு பேரும் அறிந்திருந்தார்கள். அந்தப் பெண் அநேக வைத்தியர்களிடம் சென்று இருக்கிறாள். யவீரு தன் மகள் கிட்டத்தட்ட மரித்து விட்டாள் என்பதை அறிந்திருந்தான். அவர்களுடைய ஒரே நம்பிக்கை இயேசுவே.

உங்கள் ஒரே நம்பிக்கை இயேசுவா? உங்கள் பாவத்திலிருந்து உங்களைக் கழுவி சுத்தப்படுத்தும் வல்லமையுடன் உலகத்தில் இருக்கும் ஒரே நபர் இயேசுவாகும். மரணத்திலிருந்தும், நரகத்திலிருந்தும் உங்களை இரட்சிக்க இயேசுவால் மட்டுமே முடியும். வேறு எதையும் நம்ப வேண்டாம். இயேசுவிடம் மாத்திரமே செல்லுங்கள்.

இயேசுவின் மேலுள்ள விசுவாசம் நம்மை வெட்கப்பட விடாது

மாற்கு 5:21-22ஐக் கற்பனை செய்யுங்கள். திடீரென்று கூட்டத்தினூடே ஒரு மனிதர் மற்றவர்களைத் தள்ளிக் கொண்டு முன்னேறுகிறார். அவர் நாகரீகமான முறையில் நடக்கவில்லை, மற்றவர்கள் என்ன நினைப்பார்கள் என்பதைக் குறித்து அவருக்குக் கவலையில்லை. இவருக்கு இயேசு உடனே தேவை!

மாற்கு 5:33ஐ கற்பனை செய்யவும். அந்தப் பெண் முதலில் பயப்படுகிறாள். ஒரு அசுத்தமான பெண்ணை மக்கள் எப்படிக் கொடூரமாக நடத்துவார்கள் என்று அவளுக்குத் தெரியும். ஆனால் அவள் இப்போது இயேசுவை விசுவாசிக்கிறாள். அவளுக்கு அவர் செய்ததைக் கூற அவள் வெட்கப்படவில்லை.

இயேசுவின் மேல் உங்களுக்கு விசுவாசமிருந்தால் நீங்கள் வெட்கப்பட மாட்டீர்கள். நீங்கள் அந்தப் பெண்ணைப் போல் மறைந்திருக்க நினைக்கலாம். இயேசுவிடம் செல்ல வேண்டும் ஆனால் அதை ஒருவரும் அறியக்கூடாது. ஆனால் இயேசு நாம் அவரைக்குறித்து வெட்கப்படக் கூடாதென்று விரும்புகிறார்.

20 விசுவாசத்தைக் குறித்த மேலதிக பாடங்கள்

▣ பின்னணி

சென்ற முறையின் பின்னணியைப் பார்க்கவும்.

இயேசுவின் அதிகாரத்தை எப்படி மாற்கு காண்பிக்கிறார் என்பதை நினைவுப்படுத்திக் கொள்ளவும். இயேசுவுக்கு பாவம், நோய்கள், அசுத்த ஆவிகள், கடல் இப்படியாக எல்லாவற்றின் மேலும் அதிகாரம் இருக்கிறது!

இயேசுவின் அதிகாரத்தை மீண்டும் மாற்கு 5ல் கவனிக்கவும். இயேசு எவ்வளவு அமைதியாக இருக்கிறார் என்பதைப் பார்க்கவும். மரித்துக் கொண்டிருக்கும் ஒரு பெண்ணைப் பார்ப்பதற்குப் போகும் வழியில் அவர் எப்படி ஒரு பெண்ணுடன் பேசுவதற்கு நிற்கிறார் என்பதைப் பார்க்கவும். சுகமாவதற்கு எப்படி அந்தப் பெண்ணுக்கு இயேசுவின் வஸ்திரத் தொங்களை மட்டுமே தொட வேண்டியிருந்தது என்பதைக் கவனிக்கவும். எப்படி இயேசு ஒரு மரித்த சிறு பெண்ணிடம் கதைத்து அவளை முற்றிலுமாக குணமாக்கி எழுப்புகிறார் என்பதைப் பார்க்கவும்.

⊙ முக்கிய விடயம்

யவீருவையும், அந்தப் பெண்ணையும் போல இயேசுவை விசுவாசியுங்கள்.

★ நீங்கள் செய்ய வேண்டியது

விசுவாசத்தைக் குறித்து நாம் உங்களுக்கு சில பாடங்களைக் கற்று கொடுத்துள்ளோம். இந்தப் பாடங்கள் யவீருவைக் குறித்த கதையிலிருந்து வருகின்றன. நீங்கள் இந்தப் பாடத்தை கற்றுக் கொடுக்கும் போது அந்தக் கதையை உயிரோட்டமுள்ள விதத்தில் கூற முயற்சி செய்யுங்கள். யவீரு எப்படியான உணர்வுடன் இருந்திருப்பான் என்பதை உங்கள் மக்கள் கற்பனை செய்ய அவர்களுக்கு உதவுங்கள்.

✹ குறிப்புகள்

- **மாற்கு 5:39.** இயேசு அந்த சிறு பெண் “நித்திரையாய்” இருப்பதாகக் கூறுகிறார். எல்லோருக்கும் அவள் மரித்து விட்டாளென்று தெரியும். இயேசுவுக்கும் அவள் மரித்து விட்டாளென்று தெரியும். ஆயினும், இயேசுவுக்கு அது ஒரு பிரச்சினையல்ல என்பதே அவர் அப்படிக் கூறியதின் அர்த்தமாகும். இயேசுவுக்கு மரித்த மனிதனை “எழுப்ப” வல்லமையுண்டு.

  யோவான் 11:11–14

- **மாற்கு 5:43.** அவர் செய்த அற்புதங்களைக் குறித்து மற்றவர்களிடம் சொல்ல வேண்டாமென இயேசு அடிக்கடி மக்களிடம் கூறினார்.

? கற்றுக்கொள்ளுங்கள்: மாற்கு 5:35 – 43

அற்புதங்களைக் குறித்து மக்கள் கிளர்ச்சியடையக் கூடாது என்பதே அவர் நோக்கமாகும். அற்புதங்கள் **அவர் யார் என்பதைக் காண்பிக்க வேண்டும்** என்று அவர் விரும்பினார். இன்று இது எங்களுக்கு மிக முக்கியமாகும். அற்புதங்கள் முக்கியமல்ல. மக்களுக்கு இயேசு அவர்களைக் குணமாக்கத் தேவைப்படுவதை விட அவரை அவர்கள் **அறிந்து** கொள்வதே முக்கியமாகும். அவர்கள் உலகத்தின் ஒரே இரட்சகராகிய தேவனுடைய குமாரனாகிய இயேசுவை விசுவாசிப்பது அவசியம்.

→ பிரசங்கியுங்கள்: மாற்கு 5:35 – 43

இயேசுவின் மேலுள்ள விசுவாசம் நம்மை பொறுமையுடன் காத்திருக்கப் பண்ணுகிறது

நீங்கள் யவீரு என்று கற்பனை செய்து கொள்ளுங்கள். உங்கள் மகள் மரித்துக் கொண்டிருக்கிறாள். இயேசு வந்து கொண்டிருக்கிறார். ஆனால் அவர் மெதுவாக வருகிறார். வழியில் அவர் ஒரு பெண்ணிடம் பேச நிற்கிறார். அப்போது “உங்கள் மகள் மரித்து விட்டாள்” என்ற துக்க செய்தியை நீங்கள் கேள்விப்படுகிறீர்கள்.

யவீரு காத்திருக்க வேண்டி இருந்தது. அது அவனுக்கு எவ்வாறு உதவியது? காத்திருக்கும் **உணர்வானது** ஒரு கஷ்டமான காரியமாகத் தோன்றுகிறது. ஆனால் உண்மையில் அது நல்லது. இயேசு யவீருவின் விசுவாசத்தைப் பலப்படுத்துகிறார்.

» நமக்குக் காத்திருக்க விருப்பமில்லை – ஆனால் நாம் இயேசுவை விசுவாசிக்க வேண்டும். அவர் சில வேளைகளில் உதவி செய்வதற்கு தாமதமாக வருவதாக உங்களுக்குத் தோன்றும் – ஆனால் நீங்கள் இயேசுவை விசுவாசிக்க வேண்டும். நிலைமை மோசமடைந்திருக்கலாம் – ஆனால் நீங்கள் இயேசுவை நம்ப வேண்டும்.

➡ பிரசங்கியுங்கள்: மாற்கு 5:35–43

இயேசுவின்மேல் விசுவாசம் பயத்தை விட சக்தி வாய்ந்தது

மாற்கு 5:35,36

"உம்முடைய குமாரத்தி மரித்துப் போனாள்" இயேசு மிகவும் தாமதித்து விட்டதாக தோன்றலாம். ஆனால், இயேசு என்ன சொல்லுகிறார்?

(உங்கள் மக்களை அவர்களுடைய பயத்தைக்குறித்து சிந்திக்கும்படி கூறவும்). இயேசு நமக்கு என்ன கூறுகிறார் (மாற்கு 5:36)?

இயேசுவை விசுவாசிப்பது என்பது, நாம் அவர் சொல்லுவதை நம்புவது

மாற்கு 5:36

யவீரு இரண்டு செய்திகளைக் கேட்கிறான். ஒன்று "உம்முடைய குமாரத்தி மரித்துப் போனாள்" என்பது, மற்றது "பயப்படாதே விசுவாசமுள்ளவனாய் இரு" என்பது. அவனால் இயேசுவின் வார்த்தையை நம்ப முடியுமா? உண்மையில் அது இலகுவான காரியமல்ல. ஆனால், இயேசு ஒரு போதும் பொய் சொல்ல மாட்டார்.

எப்போது இயேசுவின் வார்த்தைகளை உங்களால் நம்பக் கடினமாயிருக்கிறது? உங்கள் எண்ணங்களையா, அல்லது இயேசு சொல்வதையா நீங்கள் நம்புவீர்கள்? எது பாதுகாப்பானது? (⊕ ஒரு வார்த்தைப் படத்தின் மூலம் விளக்கவும் உதாரணமாக, இயேசுவின் வார்த்தைகள் ஒரு பெரிய கற்பாறையைப் போன்றதாகும். கடல் அலைகள் உங்களைச் சுற்றி மோதியடிக்கின்றன. ஆனால் அந்த பெரும் கற்பாறையின் மேல் நிற்பது எப்போதுமே பாதுகாப்பாயிருக்கும்).

இயேசுவின் மேலுள்ள விசுவாசம் ஒருபோதும் ஏமாற்றமடையச் செய்யாது

மாற்கு 5:42

இந்தப் பெண் மரித்து விட்டாள் என்பதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள். அவளுடைய உடல் குளிர்ந்து விட்டது. ஆயினும் யவீரு அவளை இயேசு உயிரோடு எழுப்புவார் என்று விசுவாசிக்கிறான். அவன் ஏமாற்றப்பட்டானா? இல்லை. அவள் உடனே உயிரடைந்து நல்லதோர் சாப்பாட்டைச் சுவைக்கத் தயாராகிறாள்.

இயேசுவால் கூடாத காரியம் ஒன்றுமே இல்லை. அவரை நாம் சாத்தியம் அற்றவைகளுக்காக விசுவாசிக்கலாம். இயேசு நமக்கு வாக்குக் கொடுத்திருந்தால் நிச்சயம் நம்மை ஏமாற்றமடைய விடமாட்டார்.

I யோவான் 5:14,15

கற்றுக்கொள்ளுங்கள்: மாற்கு 6:1 – 6

21 இயேசுவின் சொந்த ஊர்

பின்னணி

மாற்கு 5 இயேசுவை விசுவாசித்த மூன்று பேரை நமக்குக் காண்பித்தது. ஆயினும் அநேக மக்கள் இயேசுவை விசுவாசிக்க வில்லை. அவர்களுக்கு அவருடைய அற்புதங்கள் தேவைப் பட்டன. ஆனால் இயேசு தேவனிடமிருந்து தம்மை இரட்சிக்க வந்திருக்கிறார் என்பதை அவர்கள் நம்ப மறுக்கிறார்கள்.

மாற்கு 6ல் இயேசுவின் சொந்த ஊர் மக்கள் கூட அவரை நிராகரிப்பதை நாம் பார்க்கிறோம். இதை மாற்கு முன்பும் காண்பித்திருக்கிறார். **மாற்கு 3:20,21,31–35**

இயேசு நாசரேத்துக்குப் போன போது நடந்ததைக் குறித்து லூக்கா நமக்கு இன்னும் அதிகமாகக் கூறுகிறார். இறுதியில் அவர்கள் இயேசுவை மலையில் இருந்து தள்ளிவிட முயற்சி செய்ததையும் லூக்கா கூறுகிறார் **லூக்கா 4:16–30.**

முக்கிய விடயம்

இயேசுவை நன்கு அறிந்திருக்கும் இந்த மக்களுக்கு இயேசு தேவைப் படவில்லை.

நீங்கள் செய்ய வேண்டியது

எப்படி நாமும் நாசரேத்து மக்களைப் போல் இருக்கக்கூடும்? நமது மக்கள் ஒருவேளை இயேசுவைக் குறித்து தகாத விதமாய் பேசாமல் இருக்கலாம். ஆனால் அவர்களுக்கும் அதே விசுவாசக்குறைவு இருக்கக் கூடும். அவர்களுக்கு அதிகமாக இயேசுவைப் பற்றி தெரிந்து இருக்கலாம். ஆயினும், அவர்கள் இயேசுவை தள்ளி வைப்பவர்களாய் இருக்கக் கூடும். இயேசு அவர்களுக்கு தேவனாக இருப்பதை அவர்கள் விரும்பாமலிருக்கக் கூடும். அவர்கள் இயேசுவை தங்கள் இரட்சகராக விசுவாசிக்காமலிருக்கக் கூடும்.

நீங்கள் கற்றுக்கொடுக்கும் போது, தேவன் உங்கள் மக்களுக்கு விசுவாசத்தைக் கொடுக்கும்படி ஜெபியுங்கள்.

குறிப்புகள்

- **மாற்கு 6:1.** இயேசுவின் சொந்த ஊர் நாசரேத்து அங்கே அவர் வளர்ந்தார்.
- **மாற்கு 6:5,6.** அவர்களுடைய அவிசுவாசத்தால் அங்கே இயேசுவால் அற்புதங்கள் செய்ய முடியவில்லை. இயேசு மக்கள் தன்னை விசுவாசிப்பதற்கு உதவியாகவே அற்புதங்களைச் செய்தார். அவர்கள் விசுவாசிக்கா விட்டால், அப்போது இயேசு அற்புதங்கள் செய்ய மாட்டார்.
- **மாற்கு 6:6.** இயேசு “வியப்படைந்தார்” அல்லது “ஆச்சரியப்பட்டார்” இயேசு

? கற்றுக்கொள்ளுங்கள்: மாற்கு 6:1-6

முழுமையாகக் கடவுளும், அதேவேளை முழுமையாக மனிதனுமாயிருந்தார். ஒரு மனிதனாக அவர் எல்லாவற்றையும் அறிந்திருக்க வில்லை. அவர் நாசரேத்து மக்களைக் குறித்து ஆச்சரியப் படுகிறார். இந்த மக்கள் இயேசுவைக் குறித்து அதிகமாக அறிந்திருக்கிறார்கள். ஆயினும், அவர்கள் அவரை விசுவாசிக்காமலிருக்கிறார்கள். அவர்கள் இருதயக் கடினத்தைக் கண்டு இயேசு ஆச்சரியப்படுகிறார்.

→ பிரசங்கியுங்கள்: மாற்கு 6:1-6

இயேசுவைப் பற்றி அதிகமாக அறிந்திருக்கும் மக்கள்

மாற்கு 6:2~3

அவர்களுக்கு இயேசுவைப் பற்றி என்ன தெரியும்?

- இயேசுவின் **போதனைகளும்,** அவருடைய **ஞானமும்** அவர்களை ஆச்சரியப்பட வைக்கின்றன.
- அவருடைய **அற்புதங்களைக்** குறித்து அவர்கள் அறிந்து இருக்கிறார்கள்.
- அவர் ஒரு **“தச்சனாக”** (மரவேலை செய்வோன்) அந்த ஊரில் வளரும் போது, அவர்கள் அவருடன் இருந்தார்கள்.

அவர்கள் இயேசுவில் எந்த கெட்ட காரியத்தையும் காணவில்லை. இயேசுவைப் பற்றி அவர்கள் நல்லவைகளையே அறிந்து இருந்தார்கள். அப்படியிருந்தும் அவர்கள் அவரை ஏற்றுக்கொள்ள மறுக்கிறார்கள் (மாற்கு 6:3).

» இயேசுவைப்பற்றி உங்களுக்கு என்ன தெரியும்? அவை யாவும் நல்லவையா? நீங்கள் அவரை விசுவாசிக்க பயப்படும் ஏதாவது ஒன்று இயேசுவிடம் இருக்கின்றதா? அப்படி இல்லாத

பட்சத்தில் ஏன் நீங்கள் அவரை ஏற்றுக்கொள்ளக் கூடாது?

எவ்வளவு அதிகமாக நாம் இயேசுவை அறிகிறோமோ, அவ்வளவு அதிகமாக நாம் அவரை விசுவாசிக்க வேண்டும்.

(இயேசுவை விசுவாசிக்க வேண்டியதின் அவசியத்திற்கான பல காரணங்களை உங்கள் மக்களுக்குக் கூறவும்.) நாம் இயேசுவைப் பற்றி பல நல்ல காரியங்களை அறிந்திருக்கிறோம். ஏன் நீங்கள் அவரை விசுவாசிக்காமலிருக்க வேண்டும்?

இயேசுவை விசுவாசிக்காத மக்கள்

மாற்கு 6:3,6

இந்த மக்கள் ஏன் இயேசுவை விசுவாசிக்கவில்லை என்பதை மாற்கு நமக்குக் கூறுகிறார். **அவர்களுக்கு விருப்பமில்லை.** அவர்கள் இயேசுவை அறிந்திருந்தார்கள்! ஆனால், இயேசு அவர்களை விட சிறந்தவரென்று ஏற்றுக் கொள்ள அவர்கள் விரும்பவில்லை. தாங்கள் எப்படி வாழ வேண்டுமென்று இந்த "தச்சன்" தங்களுக்கு சொல்லிக் கொடுப்பதை அவர்கள் விரும்பவில்லை.

இயேசு மிகவும் விசேஷமானவர் என்பதை அவர்களால் **காண** முடிந்தது. ஆனால் அவர்கள் அவர்மேல் அன்பு செலுத்தவோ, அவரை விசுவாசிக்கவோ இல்லை. மாறாக அவரை வெறுத்தார்கள்.

நீங்களும் இந்த மக்களைப் போலிருக்கிறீர்களா? இயேசுவைப் பற்றிய எல்லா உண்மைகளையும் நீங்கள் நம்புகிறீர்கள். ஆனால் அவர் உங்கள் தேவனாயிருப்பதை நீங்கள் விரும்பவில்லை, ஏன் அப்படி?

ஆச்சரியமான உங்கள் விசுவாசக் குறைவுக்காக இயேசுவிடம் நீங்கள் மன்னிப்புக் கேட்க வேண்டியிருக்கிறதா?

இயேசுவைக் குறித்து அதிகமாக அறிந்தும், அவரை வேண்டாமென்று சொல்லும் மக்களைக் குறித்து நீங்கள் அதிர்ச்சியடைகின்றீர்களா? அவர்கள் எப்படி வாழ வேண்டுமென்று தச்சனாகிய இயேசு அவர்களுக்குக் கூறுவதை அவர்கள் விரும்பாததே அதற்குக் காரணமாகும். அவர்களுக்கு இயேசு அவர்களுடைய ராஜாவாக இருப்பதில் விருப்பமில்லை.

? கற்றுக்கொள்ளுங்கள்: மாற்கு 6:6–13

22 இயேசுவைக் குறித்து எல்லோருக்கும் கூறுங்கள்

▣ **பின்னணி**

மக்களுக்கு இயேசுவின் செய்தி தேவையில்லாமல் இருக்கும் போது என்ன நடக்கிறது என்பதை மாற்கு 6:1-29 நமக்குக் கூறுகிறது.

- **மாற்கு 6:1-6 இயேசுவுக்கு** அவருடைய சொந்த ஊரில் என்ன நடந்ததென்பதை நமக்குக் கூறுகிறது.
- **மாற்கு 6:14-29** எரோது ராஜாவை மனந்திரும்பும்படி சொன்ன போது **யோவான் ஸ்நானகனுக்கு** என்ன நடத்ததென்பதை நமக்குக் கூறுகிறது.
- இவைகளுக்கு நடுவே, மக்களை மனந்திரும்பி இயேசுவை ஏற்றுக் கொள்ளும் படி கூறினால் 12 **சீஷர்களுக்கு** என்ன நடக்கக் கூடும் என்பதை **மாற்கு** 6:6-13 நமக்குக் கூறுகிறது.

⊙ **முக்கிய விடயம்**

நாம் எல்லோருக்கும் இயேசுவைப் பற்றிய நற்செய்தியைக் கூற வேண்டும். ஆனால், எல்லோரும் அதை ஏற்றுக் கொள்வார்கள் என்று எதிர்பார்க்கக்கூடாது.

☆ **நீங்கள் செய்ய வேண்டியது**

இந்தப் பகுதியில் இருக்கும் சில காரியங்கள் இன்று நமக்கு மிக முக்கியமாகும். மற்றவைகள் 12 சீஷர்களுக்கானதாகும். நமக்குரியன எவை என்று எப்படி நாம் சொல்வது? நமது வேலை (பணி) **வித்தியாசமானது**, அதே வேளை **ஒன்றானதுமாயிருக்கிறது** என்பதை நாம் நினைவில் வைத்துக் கொள்வது நமக்கு உதவியாக இருக்கும்.

- அது **வித்தியாசமானது** என்பதற்கு ஒரு காரணம் அன்று சீஷர்கள் **யூதர்களிடம்** கதைத்தார்கள். ராஜா வந்திருப்பதால் அவர்கள் மக்களை மனந்திரும்பும்படி கூறினார்கள். மக்கள் அவர்களை ஏற்றுக் கொள்ள வேண்டும். ஏனென்றால் அவர்கள் இந்த நற்செய்தியைக் கொண்டு வந்தார்கள். நம்மைப் பொருத்த வரை நாம் பேசும் அநேக மக்களுக்கு அதிகமாக ஒன்றும் தெரியாது. நாம் பொறுமையாக இருக்க வேண்டும்.
- **அது ஒன்றானது,** ஏனென்றால் உலகெங்கும் போய் நற்செய்தியை அறிவிக்கும்படி இயேசு தன் சபைக்குக் கூறி இருக்கிறார். எல்லோரும் இயேசுவைப் பற்றி அறிய வேண்டும். நாம் மக்களுக்கு நற்செய்தியை அறிவிக்கும்போது இயேசு நம்மோடு இருப்பதாக விசுவாசிக்க வேண்டும். ஆனால் நாம் உணவு, அல்லது பணம் இல்லாமல் போகத் தேவை இல்லை.

? கற்றுக்கொள்ளுங்கள்: மாற்கு 6:6 - 13

குறிப்புகள்

- **மாற்கு 6:7.** அவர்கள் இயேசுவைக் குறித்து உண்மையை கூறுகிறார்கள் என்பதை நிரூபிப்பதற்காக இயேசு அவர்களுக்கு அசுத்த ஆவிகளின் மேல் அதிகாரம் கொடுத்தார். இன்று நமக்கு அது வித்தியாசமானது, ஏனென்றால் இப்போது நமக்கு வேதாகமம் இருக்கிறது. இயேசுவைப் பற்றி **தேவன் என்ன கூறுகிறார்** என்பதை நாம் மக்களுக்கு காண்பிக்க முடியும்.
- **மாற்கு 6:11.** யூதர்களல்லாத மக்கள் வசிக்கும் ஒரு ஊரை விட்டு வெளியே வரும் போது யூதர்கள் தங்கள் கால்களில் படிந்த தூசியை உதறிப் போடுவார்கள். அது யூதர் அல்லாதவர்களைக் குறித்து அவர்கள் என்ன நினைத்தார்கள் என்பதைக் காட்டுகின்றது. ஆனால் இங்கே இயேசுவைக் குறித்த நற்செய்தியை விசுவாசிக்காத **யூதர்களைக்** குறித்து **தேவன்** என்ன நினைப்பாரென்பதை அது காட்டுகிறது. அவர்கள் இனி அவருடைய பிள்ளைகளல்ல என்பதை தேவன் அவர்களுக்குக் காட்ட விரும்புகிறார்.

→ பிரசங்கியுங்கள்: மாற்கு 6:6 - 13

இயேசுவைக் குறித்து எல்லோருக்கும் கூறுங்கள்

மாற்கு 6:7,12

- **மாற்கு 6:6: இயேசு** கிராமங்களுக்குப் போகிறார்.
- **மாற்கு 6:7:** இயேசு அவருடைய **சீஷர்களை** கிராமங்களுக்கு அனுப்புகிறார்.

இயேசு அவருடைய சீஷர்களுக்கு அவர்கள் செய்ய வேண்டியதைக் காட்டுகிறார். அதன்பின் அவைகளைச் செய்வதற்கு அவர்களை அனுப்புகிறார். இயேசுவைப் போலவே அவர்களுக்கும் வியாதியஸ்தர்களைக் குணமாக்கவும், அசுத்த ஆவிகளைத் துரத்தவும் வல்லமையிருந்தது. இயேசுவே தேவனிடமிருந்து வந்த இரட்சகர் என்பதை எல்லா மக்களும் அறிந்து கொள்ள வேண்டும். அவர்கள் மனந்திரும்பி (தங்கள் பாவங்களை விட்டு) இயேசுவை விசுவாசிக்க வேண்டும்.

இயேசுவின் முக்கிய வேலை நமது பாவங்களுக்காக மரித்து மீண்டும் உயிர்தெழுவதாகும். இயேசு **நமக்கு** (அவருடைய சீஷர்களுக்கு) கொடுக்கும் வேலை, அவரைக் குறித்து எல்லோருக்கும் கூறுவதாகும்.

பிரசங்கியுங்கள்: மாற்கு 6:6-13

எல்லா யூதர்களும் அவர்களுடைய இரட்சகர் வந்துவிட்டாரென்று அறிந்துகொள்ள வேண்டும். உலகின் எல்லா மக்களும் இரட்சகர் வந்துவிட்டாரென்று அறிந்து கொள்ள வேண்டும்.

» உங்களுடைய கிராமத்தில் அல்லது நகரத்திலுள்ள அனைவரும் இயேசுவைக் குறித்து அறிந்திருக்கிறார்களா? உங்களுக்கு அருகிலுள்ள கிராமங்களிலுள்ளவர்கள் இயேசுவைப்பற்றி அறிந்திருக்கிறார்களா? அவர்களுக்கு இயேசுவைப் பற்றிய **உண்மை** தெரியுமா?

» அவர்கள் இயேசுவைக் குறித்து அறிந்து கொள்ளவேண்டும். அவர்களுக்கு அதை அறிவிக்கக் கூடியவர்கள் யார்? மத்தேயு 28:18-20

எல்லோரும் நற்செய்தியை விரும்பி ஏற்றுக் கொள்வார்களென்று எதிர்பார்க்க வேண்டாம்

மாற்கு 6:11

இயேசுவைக் குறித்து மக்களுக்கு கூறுவது எளிதான காரியம் என்று நினைக்க வேண்டாம்.

மக்கள் **இயேசுவையே** ஏற்றுக் கொள்ளாவிட்டால், அவர்கள் இயேசுவின் **சீஷர்களையும்** ஏற்றுக் கொள்ள மாட்டார்கள்! அநேக மக்கள் தங்கள் பாவங்களை விட்டு மனந்திரும்பி இயேசுவை ஏற்றுக் கொள்ள விரும்ப மாட்டார்கள். அவர்கள் நம்மை விரட்டி விடலாம். அல்லது நம்மை காயப்படுத்தவும் கூடும்.

- எனவே நாம் செய்தியை ஏற்றவிதமாக மாற்றலாமா?
- மக்கள் அதைக் கேட்க விருப்பப்படாததால் நாம் இயேசுவைப் பற்றிக் கூறுவதை நிறுத்தி விடலாமா?

இல்லை! மக்கள் **நமது** கிராமங்களுக்கு அல்லது நகரங்களுக்கு இயேசுவைப் பற்றிக் கூற வந்ததை நினைத்துக் கொள்ளுங்கள். அது அவர்களுக்கு எளிதான வேலையல்ல. ஆனால் அவர்கள் பின்வாங்கவில்லை. அதன் பலனாக இன்று நாம் இயேசுவை அறிந்திருக்கிறோம். (இதைக் குறித்ததொரு உண்மை சம்பவத்தைக் கூறவும்)

மாற்கு 6:11ல் இயேசு சீஷர்களிடம் அவர்களை ஏற்றுக்கொள்ளாத கிராமங்களை விட்டுப்போகும்படி கூறுகிறார். இயேசுவை ஏற்றுக் கொள்ள மறுப்பது எப்போதுமே ஒரு பிழையான காரியமாகும். ஆனால், நாம் இயேசுவைப் பற்றிக் கூறும் மக்கள் அந்த யூதர்களை விட வித்தியாசமானவர்கள். அவர்களுக்கு உண்மை என்னவென்று தெரியாது. எனவே நாம் பொறுமையாயிருக்க வேண்டும். அவர்கள் நம்மைக் காயப்படுத்துவார்களென்றும் கூட எதிர்பார்த்து, அதற்குத் தயாராய் இருக்க வேண்டும்.

23 ஏரோதும் யோவான் ஸ்நானகனும்

பின்னணி

மாற்கு 6:1-29 மக்கள் இயேசுவின் செய்தியைக் கேட்க விரும்பாதபோது என்ன நடந்தது என்பதை நமக்குக் கூறுகிறது.

- **மாற்கு 6:1-6 இயேசுவுக்கு** அவருடைய சொந்த ஊரில் நடந்தது என்ன என்பதை நமக்குக் கூறுகிறது.
- **மாற்கு 6:6-13** மக்களை மனந்திரும்பி இயேசுவை ஏற்றுக் கொள்ளும்படி கூறும்போது 12 **சீஷர்களுக்கு** என்ன நடக்க கூடுமென்பதை நமக்குக் கூறுகிறது.
- **மாற்கு 6:14-29** ஏரோதுவை மனந்திரும்பும்படி கூறியபோது **யோவான் ஸ்நானகனுக்கு** என்ன நடந்தது என்பதைக் கூறுவதுடன், அவன் மனந்திரும்ப மறுத்தபின் **ஏரோதுக்கு** என்ன நடந்தது என்பதையும் இது நமக்குத் தெரிவிக்கிறது.

முக்கிய விடயம்

துன்பம் அனுபவிக்கத் தயாராயிருக்க வேண்டும். யோவான் ஸ்நானகனைப் போல் இருக்கவேண்டும்!

உடனே மனந்திரும்ப வேண்டும். ஏரோதுவைப் போலிருக்கக் கூடாது!

நீங்கள் செய்ய வேண்டியது

ஏரோதுவைப் பற்றிய இந்தக் கதை அநேகருக்குத் தெரியாமல் இருக்கலாம். அதைப் புரிந்து கொள்ள எப்படி அவர்களுக்கு உதவ முடியுமென்பதைக் குறித்து சிந்திக்கவும். யோவான், ஏரோது, ஏரோதியாள், ஏரோதியாளின் மகள் முதலானோரைக் குறித்துள்ள வேதவாக்கியங்களை வெவ்வேறு மக்களை வாசிக்கப் பண்ணலாம். அவர்கள் வாசிக்கும் முன்பதாக, ஒவ்வொருவரையும் பற்றிக் அவர்களுக்குக் கூறி விளக்கலாம்.

குறிப்புகள்

- **மாற்கு 6:16.** ஏரோது பயந்தான். அவன் பிழை செய்து விட்டது அவனுக்குத் தெரியும். ஏன் **இயேசு** அற்புதங்கள் செய்பவர் என்று அவன் அறியவில்லை? யோவான் நிச்சயமாக இயேசுவைப் பற்றி அவனுக்குக் கூறியிருப்பான். நாம் இயேசுவை ஏற்றுக்கொள்ள மறுக்கும்போது, நாம் உண்மையைக் கண்டு கொள்ள முடியாதவர்கள் ஆகிறோம். ஏரோதுவின் கதையைத் தொடரவும் (லூக்கா 23:8-12, அப். 12:23).
- **மாற்கு 6:17.** யோவான் ஸ்நானகனைக் குறித்த இந்த நீண்டகதை அநேக மாதங்களுக்கு முன்பு நடந்தது. மாற்கு அதை இதில் புகுத்தக்

கற்றுக்கொள்ளுங்கள்: மாற்கு 6:14–29

காரணம், அது ஓர் உண்மையான போதகனுக்கு இன்னொரு உதாரணமாக இருப்பதுவேயாகும். மக்களை மனந்திரும்பச் செய்வது சுலபமான காரியமல்ல.

பிரசங்கியுங்கள்: மாற்கு 6:14–29

நாம் செய்தியை மாற்றக் கூடாது

மாற்கு 6:17–18

+ இயேசுவுக்காக மரித்ததோர் உண்மைக் கிறிஸ்தவனைக் குறித்ததொரு கதையைக் கூறவும். அந்தக் கிறிஸ்தவன் ஏன் மரித்தான்? அவன் சத்தியத்தைப் போதித்ததே அதற்குக் காரணமாகும். அவன் தன் உயிரைக் காத்துக் கொள்ள இயேசுவின் செய்தியை மாற்றவில்லை.

யோவான் ஸ்நானகன் உண்மையைக் கூறினபடியால் அவன் மரிக்க நேர்ந்தது (கதையைக் கூறவும். அவன் செய்த பிழையை ஏரோது ராஜாவுக்கு சுட்டிக் காட்டுவது எவ்வளவு கடினமான காரியம் என்பதைக் கற்பனை செய்யவும் (மாற்கு 6:18). யோவான் சிறையில் இருப்பதைக் கற்பனை செய்யவும். அவன் வெளியேவர ஆவலாயிருக்கிறான்! ஏரோது அவனை சீக்கிரம் அழைப்பா னென்று அவன் அறிவான். யோவான் ஏரோதுக்கேற்றபடி நல்லவிதமாகப் பேசினால் அவன் ஒருவேளை அவனை வெளியே விட்டுவிடுவான்).

ஆனால்,யோவான் செய்தியை மாற்றப் போவதில்லை. அவன் ஏரோதுவிடம் அவன் செய்வது

பிழையென்றும், அவன் மனந் திரும்ப வேண்டுமென்றும் கூறுகிறான். அதனால் இறுதியில் ஏரோது யோவானின் தலையைத் துண்டிக்கிறான்.

இந்தக் கதை உங்களுக்குப் பயத்தை உண்டாக்குகிறதா? அல்லது அது உங்களைப் பெலப்படுத்துகிறதா?

நாம் செய்தியை மாற்றினால் மக்கள் நம்மை எதிர்க்க மாட்டார்கள். ஆனால் அவர்கள் இயேசுவைக் குறித்த உண்மையை அறிந்து கொள்ள மாட்டார்கள். அப்போது இயேசு நம்மைக் குறித்து சந்தோஷப்பட மாட்டார். **மத்தேயு 5:10–12.**

செய்தி நம்மை மாற்ற வேண்டும்

1. ஏரோது கேட்க விரும்பினான் ஆனால், மாற விரும்பவில்லை.

மாற்கு 6:20

இயேசுவைக் குறித்து அநேக காரியங்களை யோவான் ஏரோதுவிடம் கூறியிருப்பானென்று நாம் நிச்சயமாக நம்பலாம். ஏரோது அவைகளைக் கேட்க விரும்பினான். ஆனால், அவன் அண்ணன் மனைவியாகிய ஏரோதியாளை விட்டுவிட அவன் விரும்பவில்லை. அவன் மனம் மாற விரும்பாதபடியால், இயேசுவை அவன் விசுவாசிக்க விரும்பவில்லை.

நீங்களும் அப்படியானவரா? இயேசுவைக் குறித்துக் கேட்க உங்களுக்கு ஆசை. நீங்கள் ஆலயத்துக்கு வருகிறீர்கள் ஆனால் ஏதாவதொன்று இயேசுவைப் பின்பற்ற விடாமல் தடுக்கிறது. அது என்ன? நீங்கள் விரும்பும் பாவம் என்ன?

2. ஏரோது யோவானை விரும்பினான். ஆனாலும் அவனைக் கொன்றான்! மாற்கு 6:27

ஏரோது ஏன் யோவானைக் கொன்றான்? ஏரோது யோவானின் செய்தியை ஏற்றுக் கொண்டு இருந்தால் யோவானை அவன் கொன்றிருப்பானா? நாம் இயேசுவுக்குப் பதிலாகப் பாவத்தைத் தெரிந்தெடுக்கும்போது என்ன நடக்கிறது?

ஏரோதின் இருதயம் கடினப் பட்டதால் அவன் தேவனின் தீர்க்கதரிசியைக் கொன்று விட்டான்!

இயேசுவை நம்புவதாகக் கூறும் சில கிறிஸ்தவர்களை நீங்கள் அறிவீர்களா? பல வருடங்களுக்கு முன் அவர்கள் சபைக்கு வந்தார்கள். ஆனால் அவர்கள் பாவத்தைவிட அவர்களுக்கு மனமில்லை. அவர்கள் இப்போது இயேசுவின் மேல் அன்பு செலுத்துகிறார்களா? அவர்கள் இப்போது தேவனின் வார்த்தையைக் கேட்கிறார்களா?

ஏரோதுவைப் போலிருக்க வேண்டாம்!

24 இயேசு ஐயாயிரம் ஆடுகளைப் போஷிக்கிறார்!

பின்னணி

மாற்கு 6:1-29 இயேசுவின் செய்தியை மக்கள் விரும்பாத போது என்ன நடக்கிறதென்பதை நமக்குக் கூறுகிறது.

இப்போது சீஷர்கள் தங்கள் ஊழியத்தைச் செய்து விட்டு திரும்பியிருக்கிறார்கள்

மாற்கு 6:7,30.

அவர்களுடைய ஊழியம் மிக வெற்றிகரமாயிருந்ததாகத் தோன்றுகிறது. அநேக மக்கள் இயேசுவைக் காண விரும்புகிறார்கள். இயேசுவும், சீஷர்களும் அமைதியானதோர் இடத்திற்குச் சென்று இளைப்பாற விரும்புகிறார்கள். ஆனால் ஆயிரக்கணக்கான மக்கள் ஏரியைச் சுற்றிப் பல மைல்கள் ஓடி இயேசுவைக் கண்டுபிடிக்கிறார்கள்.

மாற்கு 6:30~33

அவர்களுக்கு என்ன வேண்டும்? அவர்களுக்குத் தேவை அவருடைய **செய்தியா** அல்லது **அற்புதங்களா?**

முக்கிய விடயம்

இயேசு வெறும் அற்புதங்கள் செய்பவரல்ல. அவர் நமது உண்மையான தேவையை சந்திக்க வந்தார்.

நீங்கள் செய்ய வேண்டியது

இந்தப் பகுதி கற்பித்துக் கொடுப்பதற்குக் கடினமானதாகும். ஏனென்றால் இயேசு அவருடைய **செய்கைகளின்** மூலமும் பேசுகிறார். இந்த அற்புதத்திற்கு **அர்த்தமுண்டு** (மாற்கு 6:52).

இந்த அற்புதத்தை நன்றாகப் புரிந்து கொள்ள யோவான் 6ம் அதிகாரத்தை கவனமாகப் படிக்கவும்.

அப்பத்தையும், மீனையும் விட இயேசுவைப் பற்றி அதிகமாகக் உரையாடவும். ஏனென்றால் இந்த அற்புதம் இயேசு யாரென்று காட்டுகிறது.

குறிப்புகள்

- மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான் யாவரும் இந்த அற்புதத்தைக் குறித்து எழுதி இருக்கிறார்கள். இது எவ்வளவு முக்கியமானது என்பதை அது காட்டுகிறது.
- **மாற்கு 6:31.** சீஷர்களுக்கு சற்று ஓய்வு தேவையாயிருந்தது. ஆயினும் மக்களுக்கு அதைவிட பெரிய தேவைகளிருந்தன.
- **மாற்கு 6:34.** ஒரு “மேய்ப்பன்” என்பது ஆடுகளை மேய்ப்பவன் ஆகும். ஒரு மேய்ப்பன் ஆடுகள் காணாமல் போகாதபடிக்கு அவைகளை நடத்துவான்.

கற்றுக்கொள்ளுங்கள்: மாற்கு 6:30–44

- **மாற்கு 6:37.** அவருடைய **சீஷர்களுக்குப்** போதிப்பதற்கு இயேசுவிடம் அநேக பாடங்கள் இருக்கின்றன. இந்தப் பெரும் கூட்டத்தை அவரால் மட்டுமே போஷிக்க முடியும் என்பதை அவருடைய சீஷர்கள் காண வேண்டுமென இயேசு விரும்பினார். இந்த அற்புதத்தின் பின் அவர்கள் இயேசுவை அதிகமாக விசுவாசிப்பார்களா?

மாற்கு 6:45~52 ஐ வாசிக்கவும்.

பிரசங்கியுங்கள்: மாற்கு 6:30–44

நமக்கு எது தேவை?

மாற்கு 6:34

- அந்த நாளின் முடிவில் மக்களுக்கு **உணவு தேவையாயிருக்கிறது.** அவர்களுக்குத் தேவையான உணவை வாங்குவதற்கு வழி ஒன்றுமில்லை. எனவே இயேசு இந்த அருமையான அற்புதத்தைச் செய்கிறார்.
- ஆயினும், மக்களின் **தேவை இந்த உணவை விட மேலானதாகும்.** இந்த மக்கள் கூட்டத்தை இயேசு பார்க்கும் போது அவர் எதைக் காண்கிறார்? மாற்கு 6:34

அவர்கள் காணாமல் போன ஆடுகளைப் போலிருக்கிறார்கள். வாழ்க்கையில் எங்கு போவது என்று தெரியாமல் அவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் போக வேண்டிய சரியான வழியை அவர்களுக்குக் காட்டுவதற்கு அவர்களுக்கோர் மேய்ப்பன் இல்லை. அவர்கள் ஒருவரை ஒருவர் பின் தொடருகிறார்கள். அவர்கள் கிளர்ச்சியூட்டக் கூடிய புதிய காரியங்களின் பின்னே போய்க் கொண்டிருக்கிறார்கள். இப்போது அவர்கள் கிளர்ச்சி ஊட்டக்கூடிய, அற்புதங்களைச்

செய்யும் ஒரு மனிதனைக் காண்கிறார்கள்.

அவர்களுக்கு என்ன தேவை? உண்மையில் இயேசு யார் என்று அவர்கள் அறிய வேண்டும். இயேசுவே வழியும், சத்தியமும், ஜீவனுமாயிருக்கிறார் என்பதை அவர்கள் அறிய வேண்டும். (யோவான்14:6). இயேசுவே அவருடைய ஆடுகளுக்காக தன் ஜீவனைக் கொடுக்கும் நல்ல மேய்ப்பன் என்பதை அவர்கள் அறிய வேண்டும்.

நீங்களும் அந்த மக்களைப் போல் இருக்கின்றீர்களா? நீங்கள் கூட்டத்தைப் பின்பற்றுகிறீர்களா? சமீபத்திய கிளர்ச்சி ஊட்டும் போதனைகளுக்குப் பின் செல்லுகிறீர்களா? **நீங்கள் அற்புதங்களை விரும்புகிறீர்களா? நீங்கள் உண்மையான இயேசு யாரென்று அறிந்து கொள்ள வேண்டும்.** (பாவிகளின் இரட்சகரும், நமது வாழ்க்கையின் ஆண்டவருமான இயேசுவைக் குறித்துக் கூறுங்கள்)

இயேசு என்ன தருகிறார்?

இயேசு வெறுமனே அவர்களை **கேட்பதை** மட்டும் கொடுக்காமல், அவர்களுக்குத் **தேவையானதையும்** கொடுக்கிறார்.

- இயேசு அவர்களுக்கு **ஆகாரம்** கொடுக்கிறார். அவர்கள் பசியாயிருப்பதைக் குறித்து அவர் கவலைப்படுகிறார்.
- இயேசு அவர்களுக்கு **நல்ல போதனைகளைக்** கொடுக்கிறார் மாற்கு 6:34. அவர்கள் உண்மையை அறிய வேண்டும்.
- இயேசு அவர்களுக்கு **பிரத்தியேகமான**தொரு அற்புதத்தையும் செய்கிறார். அது அவர்கள் வயிறுகளை நிரப்பிக் கொள்ளவோ, அல்லது அவர்களைக் கிளர்ச்சியடையச் செய்யவோ அல்ல. அது **இயேசு யார்** என்பதை அவர்கள் அறியச்செய்வதற்காகும். அது அவர்களுக்குப் போதிக்கும் ஒரு அடையாளமாகும். அது தொலைந்து போன ஆடுகளை இயேசுவிடம் வரவழிகாட்டும் ஒரு **அடையாளக்** குறியைப் போன்றதாகும்.

இந்த அற்புதம் மக்களை வேதாகமத்தில் காணப்படும் **இன்னொரு அற்புதத்தைக்** குறித்து நினைக்க வைக்கிறது. வனாந்திரத்தில் இஸ்ரவேல் மக்களுக்குக் கொடுத்தது போல இயேசு அவர்களுக்கு வானத்தில் இருந்து உணவைக் கொடுக்கிறார். இந்தக் கதையை யோவான் சொல்லும் போது இயேசு அதன்பின் “ஜீவஅப்பம் நானே” என்று கூறுவதைக் குறிப்பிடுகிறார். **யோவான் 6:32–36.**

அற்புதங்கள் ஒருபோதும் நம்மைத் திருப்திப்படுத்தாது. அவை அப்பத்தைப் போன்றவை. மீண்டும் விரைவில் நமக்குப் பசி வந்து விடும். ஆனால் இயேசு நமது உண்மையான தேவையை சந்திக்க வந்தார். நமக்கு அவர் தேவை. அவரே ஜீவஅப்பம். அவர் நம்மை நிரந்தரமாகத் திருப்திப்படுத்துகிறார்.

25 கடினமான இருதயங்கள்

பின்னணி

மாற்கு 3ல் இயேசு அவருடைய 12 சீஷர்களை அழைக்கிறார். இயேசு அவர்களுக்கு அநேக காரியங்களைக் கற்றுக் கொடுக்கிறார். அவர் யார் என்ற உண்மையை அவர்கள் புரிந்து கொள்ள வேண்டுமென்று அவர் விரும்புகிறார். (மாற்கு 6ல்) மற்றவர்களுக்குக் கிறிஸ்து என்னும் மேசியா வந்திருப்பதையும், அதனால் அவர்கள் மனந்திரும்ப வேண்டுமென்பதையும் குறித்து கூறுவதற்கு இயேசு சீஷர்களை அனுப்புகிறார்.

அநேக யூதத் **தலைவர்கள்** இயேசுவுக்கு விரோதமாய் இருப்பதை மாற்கு நமக்குக் காண்பிக்கிறார். ஜனக் **கூட்டங்கள்** இயேசுவை விரும்புகின்றன, ஆனால் அநேகருக்கு அவருடைய அற்புதங்கள் மட்டுமே தேவைப் படுகின்றன. **சீஷர்களும்** கூட இயேசுவை விசுவாசிப்பதில் மந்தமாகவே இருக்கிறார்கள்.

மாற்கு 4:35~41 மற்றும் 6:45~52இல் மீண்டும் சீஷர்கள் அச்சம் அடைகிறார்கள். இப்போது கூட இயேசு யாரென்று அவர்கள் புரிந்து கொள்ளவில்லை. மாற்கு 6:52 அது ஏன் என்று நமக்குக் கூறுகிறது.

முக்கிய விடயம்

நாம் இயேசுவைக் குறித்து அதிகமாக அறிந்திருந்தாலும், நமக்கு கடின இருதயம் இருக்கலாம். நாம் நமக்காக இயேசுவை விசுவாசிக்க வேண்டும்.

நீங்கள் செய்ய வேண்டியது

நமது இருதயம் கடினமாயிருக்கும் போது, நம்மால் எதையும் சரியாகப் புரிந்து கொள்வது கடினம். சீஷர்களைப் போல, நாம் இயேசுவை நேசிக்கிறோம் என்று நினைக்கிறோம். ஆலயம் செல்ல விரும்புகிறோம். ஆனால் நாம் இயேசுவை நமது இரட்சகராக விசுவாசிப்பதில்லை, அப்போது நமது இருதயம் கடினப்படுகிறது. (⊞ கடினமான இருதயம் என்ன என்பதை விளக்குவதற்கு ஒரு வார்த்தைப் படத்தைக் கண்டு பிடிக்கவும். தேவனுடைய வார்த்தை நம்முடன் பேசும்போது நாம் இன்னும் மாறாமல் இருப்பதையே அது குறிக்கிறது.)

குறிப்புகள்

- **மாற்கு 6:48.** “நாலாம் ஜாமம்” காலை 3 மணிமுதல் 6 மணிவரையிலான நேரம்.
- **மாற்கு 6:49.** “ஆவி” (Ghost) மரித்த மனிதனைப் போல காட்சியளிக்கும் ஒரு ஆவி.
- **மாற்கு 6:52.** “அவர்கள் இருதயம் கடினமுள்ளதாய் இருந்தது”. சில ஆங்கில மொழிப்பெயர்ப்புகள் அதை இப்படி எழுதியிருக்கின்றன. “அவர்கள் மனதினால் அதை கிரகித்துக் கொள்ள முடியவில்லை”.

கற்றுக்கொள்ளுங்கள்: மாற்கு 6:45 – 56

- **மாற்கு 6:53-56.** இயேசு பிரபலமானவராயிருக்கிறார். அநேக மக்கள் அவர் தங்களை குணமாக்க வேண்டும் என்று விரும்பினார்கள். இயேசு அவர்களுக்குத் தன் வல்லமையைக் காட்டுகிறார். ஆயினும், அவர்களும் சீஷர்களைப் போலவே இயேசு உண்மையில் யார் என்பதை உணராமலிருக்கிறார்கள். அவர் ஏன் வந்திருக்கிறார் என்பதை அவர்களறிந்து கொள்ளவில்லை. அவர்களுக்கு வெறுமனே அவர் தங்கள் வியாதிகளைக் குணமாக்க வேண்டும்.

பிரசங்கியுங்கள்: மாற்கு 6:45 – 56

அவர்கள் பயந்தார்கள்

மாற்கு 6:50

இயேசு ஜனக்கூட்டத்தை விட்டுப் போகிறார் (அவர் யாரென்று அறியாத மக்கள்). இயேசு தன் சீஷர்களை விட்டுப் போகிறார். (அவர் யாரென்று அறியாதவர்கள்). இயேசு தனிமையில் தன் பிதாவை நோக்கி ஜெபிக்கிறார். (எல்லாவற்றையும் அறிந்திருப்பவர்). அதன் பின் தான் யாரென்பதை மீண்டும் போதிப்பதற்காக சீஷர்களிடம் இயேசு திரும்பச் செல்கிறார்.

கடலில், சீஷர்களுக்கு அது கடினமான வேலை (கதையைக் கூறவும்)

- அவர்கள் பயப்பட வேண்டிய அவசியம் இருந்ததா? ஏன் அவர்கள் பயந்தார்கள்?

அவர்கள் அது இயேசு என்று அறிந்திராதபடியால் பயப்பட்டார்கள்.

» இயேசு நம்முடனிருக்கும் போது நாம் பயப்பட வேண்டிய அவசியமில்லை! நீங்கள் எப்போது பயப்படுகிறீர்கள்? நீங்கள் பயப்படும்போது இயேசுவை நினைப்பீர்களா? அல்லது அவரை மறந்து விட்டீர்களா?

பிரசங்கியுங்கள்: மாற்கு 6:45–56

ஏசாயா 43:1–3. இயேசு அவருடைய மக்களுடன் இருப்பதாக வாக்குப்பண்ணுகிறார். இயேசு நம்மைக் கவனித்துக்கொள்ளும் போது நாம் எப்போதுமே பாதுகாப்பாயிருப்போம்! 'நான் பயப்படுகிற நாளில் உம்மை நம்புவேன்' என்று தாவீது தேவனைப் பார்த்துக் கூறினான் (சங்கீதம் 56:3). உங்களால் அப்படி கூற முடியுமா?

அவர்கள் புரிந்து கொள்ளவில்லை

மாற்கு 6:52

- இயேசுவை ஒரு ஆவி என்று ஏன் அவர்கள் நினைத்தார்கள்? ஏன் அவர்கள் அது இயேசு என்று நினைக்கவில்லை?

அவர்கள் இன்னும் இயேசுவைப் **புரிந்து கொள்ளாமல்** இருந்த தாலேயே, அது இயேசு என்று அவர்கள் நினைக்கவில்லை. இயேசு கடல் அலைகள் அமைதியாயிருக்கும்படி கட்டளை இட்டதை அவர்கள் கண்டார்கள். அவர் ஐந்து அப்பங்களையும், இரண்டு மீன்களையும் கொண்டு 5000 பேரைப் போஷித்ததை அவர்கள் கண்டார்கள். ஆயினும், இயேசு யாரென்று அவர்கள் இன்னும் அறியாமலிருந்தார்கள். எனவே இயேசுவால் தண்ணீரின் மேல் நடக்க முடியுமென்று அவர்கள் நினைக்கவில்லை.

மாற்கு அதிர்ச்சியளிக்கக் கூடிய தொன்றைக் கூறுகிறார். "அவர்கள் இருதயம் கடினமுள்ளதாயிருந்தது." இயேசு யார் என்று காட்டும் அநேக காரியங்களை அவர்கள் கண்டார்கள். ஆனால் இன்னும் அவர்கள் அவரை விசுவாசிக்க இல்லை. இப்போது அவர்களால் உண்மையைக் காண முடிய வில்லை. அவர்கள் இருதயம் அதிகமாகக் கடினப்பட்டிருக்கிறது.

நாம் அந்த சீஷர்களைப் போல் இருக்கலாம். நாம் இயேசுவைப் பற்றி அதிகமாக அறிந்திருந்தும், அவரை விசுவாசிக்காமல் இருக்கலாம். அப்போது என்ன நடக்கிறது? நமது இருதயம் கடினப்படுகிறது. நாம் அநேக விடயங்களைக் கேட்கிறோம். ஆனால் அவை ஒன்றும் நம்மை மாற்றுவதில்லை. **இன்றே** இயேசுவிடம் திரும்புங்கள்!

எபிரேயர் 3:12–15.

26 பரிசேயர் உண்மையில் எப்படிப்பட்டவர்கள் என்பதை இயேசு காட்டுகிறார்

பின்னணி

பரிசேயர் இயேசுவை வெறுத்தார்கள் என்று நாம் பார்த்தோம். அவர் அவர்களுடைய சட்டங்களைக் கைக் கொள்ளவில்லை. அவர் அதிகப் பிரபலமானவராகயிருக்கிறார். பரிசேயர் உண்மையில் எப்படிப் பட்டவர்களென்பதை மக்களுக்கு இயேசு காட்டுகிறார்.

இப்போது சில பரிசேயர்கள் எருசலேமிலிருந்து வருகிறார்கள். அப்போது என்ன நடக்கிறது என்று பார்ப்போம்!

மாற்கு 7:1~23. இது மிக முக்கியமானதொரு பகுதி. பரிசேயர் இடமும், யூதத் தலைவர்களிடமும் இருந்த பிழையை அது நமக்குக் காட்டுகிறது. அதே வேளை, எல்லா இடங்களிலும் வசிக்கும் மக்களிடம் இருக்கும் பிழையையும் அது நமக்குக் காட்டுகிறது. அது நமது பிரச்சினைக்கான முக்கிய காரணத்தை நமக்குக் காட்டுகிறது.

முக்கிய விடயம்

தேவன் உண்மையான ஆராதனையை விரும்புகிறார். வெறும் வார்த்தைகளையல்ல. நாம் அவர் மேல் நமது முழு இருதயத்தோடு அன்பு செலுத்த வேண்டுமென்று அவர் விரும்புகிறார்.

நீங்கள் செய்ய வேண்டியது

கவனமாகக் குறிப்புகளைப் பார்க்கவும். தேவனுடைய கட்டளைகளுக்கும், நமது சட்டங்களுக்கும் வித்தியாசம் இருப்பதை உங்கள் மக்கள் புரிந்து கொள்ளக்கூடும். வேதாகமத்திலிருந்து வராத சட்டங்கள் உங்கள் சபையில் இருக்கின்றதா? உங்கள் சபை பாரம்பரியங்களைக் குறித்து நீங்கள் அதிக அக்கறையுள்ளவராய் இருக்கின்றீர்களா? ஆனால், சபை மக்கள் பொய் சொல்லுவதை, அல்லது கிசுகிசுப்பதைக் குறித்து கவலையற்றவராயிருக்கின்றீர்களா?

குறிப்புகள்

- **மாற்கு 7:1-4.** சந்தையில் யூதர்கள், யூதரல்லாத மக்களுடன் கலந்தார்கள். அது அவர்களை தேவனுக்கு முன்பாக "அசுத்தப் படுத்தியது" என்று அவர்கள் எண்ணினார்கள். அந்த நேரங்களில் அவர்கள் உணவு உட்கொண்டால் அவர்கள் உற்புறத்திலும் "அசுத்தமாகி விடுவார்கள்" என்று அவர்கள் விசுவாசித்தார்கள். எனவே மத ரீதியான விதத்தில் அதை தடுப்பதற்கு அவர்கள் தங்கள் கைகளை கழுவுவார்கள். இது பழைய ஏற்பாட்டிலிருந்து **வரவில்லை.** (சாப்பிடும் முன் நமது கைகளை கழுவிக் கொள்வது நல்லது. ஆனால் அவர்கள் அதை ஒரு மதச் சடங்காக மாற்றியிருந்தார்கள்.)
- **மாற்கு 7:5.** "முன்னோர்களின் அல்லது மூதாதையர்களின் பாரம்பரியம்" மூத்தவர்கள் (தலைவர்கள்) யூதர்கள் தேவனுடைய பிரமாணங்களைப் பின்பற்றுவதற்கு உதவியாய் இருப்பதற்காக சில சட்டங்களை உருவாக்கினார்கள். தேவனுடைய சட்டங்களுடன், நமது சட்டங்களைக் கூட்டுவது

கற்றுக்கொள்ளுங்கள்: மாற்கு 7:1-13

எப்போதுமே ஆபத்தானது. நமது சட்டங்களும், பாரம்பரிய பழக்கங்களும் தேவனுடைய சட்டங்களை விட நமக்கு முக்கியமாக மாறிவிடக்கூடும். (மாற்கு 7:8)

- **மாற்கு 7:6.** “மாயக்காரர்” என்பது பாசாங்கு செய்பவனைக் குறிக்கிறது. அதாவது அவனுடைய உண்மைத் தன்மையை மறைத்து தன்னை வேறு விதமானவனாக வெளிப்படுத்துவது. இந்த மனிதர்கள் தேவனைப் பின்பற்றுபவர்களைப் போல் தோன்றினாலும், அவர்கள் உண்மையில் தேவன் மேல் அன்பில்லாதவர்களாய் இருந்தார்கள். அவர்கள் உண்மையில் தங்கள்மேல் அன்பு செலுத்தினார்கள். தேவன் மேலல்ல.
- **மாற்கு 7:11.** ஒரு யூதனுக்குப் பணமிருக்கிறது. அவனுடைய பெற்றோருக்கு உதவி தேவையாயிருக்கிறது. அவனுக்கு அவன் பணத்தைக் கொடுக்க இஷ்டமில்லை. அவன் அதை “கொர்பான்” என்னும் காணிக்கை யாகக் கொடுப்பதாகக் கூறுகிறான். அதாவது அவன் அதை தேவனுக்குக் கொடுக்க வாக்குப்பண்ணியிருப்பதால், அவனால் தன் பெற்றோருக்கு உதவிசெய்ய முடியாது என்று அவன் கூறுகிறான்.

பிரசங்கியுங்கள்: மாற்கு 7:1-13

நாம் பாசாங்கு செய்வதை இயேசு வெறுக்கிறார்

மாற்கு 7:6

தேவன் அவர்களைக் குறித்து மகிழ்ச்சியடைவாரென்று இந்த யூதர்கள் நினைத்தார்கள். அவர்களே எல்லோரிலும் பார்க்க சிறந்தவர்கள் என்பது அவர்கள் எண்ணம். தாங்கள் தேவனுடைய எல்லாச் சட்டங்களையும் கடைப்பிடிப்பதுடன் இன்னும் அதிகமான சட்டங்களையும் கடைப்பிடிப்பதாக இந்த யூதர்கள் நினைத்தார்கள். சீஷர்களை அவர்கள் கெட்டவர்களாக நினைத்தார்கள். ஏனென்றால் அவர்கள் சரியான விதத்தில் தங்கள் கைகளை கழுவவில்லை. (இந்த உதாரணத்தை மாற்கு 7:1~4ல் இருந்து விளக்கவும்)

- ஏன் இயேசு அவர்களுக்கு விரோதமாகக் கடினமானவை களைக் கூறுகிறார்? ஏன் அவர்களை “மாயக்காரர்” என்று அவர் அழைக்கிறார்?

இந்த யூதர்கள் **வெளிப்புறமாக நல்லவர்களாய் காண்பிக்க விரும்பினார்கள்.** ஆனால் தேவன் நாம் **உட்புறத்தில் நல்லவர்களாக இருக்க வேண்டுமென்று** விரும்புகிறார்.

➡ பிரசங்கியுங்கள்: மாற்கு 7:1-13

நாம் செய்யும் **வெளிப்பிரகாரமாக நல்லவைகளாய்த் தோன்றும்** காரியங்களைக் குறித்து சிந்திக்கவும். (ஆலயம் செல்வது, துதித்துப் பாடுவது, ஜெபிப்பது, ஒருவரைக் குறித்து நல்ல வார்த்தைகளைப் பேசுவது). தேவன் இப்படியானவைகளின் மூலம் எப்போது மகிழ்ச்சி அடைகிறார்? அவைகளினால் எப்போது மகிழ்ச்சியடையாமல் இருக்கிறார்?

» நாம் பாசாங்கு செய்வதை இயேசு வெறுக்கிறார். அவர் எங்கள் உட்புறத்தைப் பார்க்கிறார். நாம் நமது இருதயத்தில் பேசுபவைகளை அவர் கேட்கிறார். மற்றவர்களுக்குத் தெரியாமல் நாம் செய்பவைகளை அவர் காண்கிறார்.

- மாற்கு 7:6 எனக்கும் பொருந்துமா?

தேவனுடைய கட்டளைகளை நாம் விட்டு விடுவதை இயேசு வெறுக்கிறார்

📖 மாற்கு 7:8

⊞ உங்கள் பிள்ளை உங்களுக்குக் கீழ்ப்படிவதைப்போல் பாசாங்கு செய்வதை நீங்கள் விரும்புவீர்களா? அது உங்களுக்குக் கீழ்ப்படிவது போல் காண்பித்தாலும், அதற்கு அதன் சொந்த திட்டங்கள் இருக்கின்றன. எனவே அதற்கு உண்மையாக உங்களுக்குக் கீழ்ப்படிய விருப்பமில்லை. (ஒரு உதாரணத்தை நினைக்கவும்)

இயேசு தெரிந்து கொண்ட உதாரணம் **இந்த யூதர்களைக் குறித்த உண்மையை வெளிப்படுத்தினது.** அவர்கள் **தங்கள்** சட்டங்களில் அக்கறை உள்ளவர்களாயிருந்தார்கள். ஏனென்றால் அது அவர்களை நல்லவர்களாகக் காண்பித்தது. ஆனால் அவர்கள் தேவனுடைய கட்டளைகளில் அக்கறை கொள்ளவில்லை. ஏனென்றால் அவர்கள் தேவன் மேல் அன்பு செலுத்தவில்லை. ('கொர்பானைக்' குறித்து விளக்கவும். உதாரணம் மாற்கு 7:9-13) அவர்கள் **தங்கள்** சட்டத்தை (கொர்பான்) வைத்துக்கொள்ள விரும்புகிறார்கள். ஏனென்றால் அது இலகுவானது. அவர்கள் தேவனுடைய கட்டளையை விட்டு விடுகிறார்கள். (உன் தகப்பனையும், தாயையும் கனம் பண்ணுவாயாக) ஏனென்றால் அவர்களுக்கு தேவன் மேல் அன்பில்லை.

» மாற்கு 7:8 இயேசுவின் வார்த்தைகள் மிகவும் சக்தி வாய்ந்தவை. அவர் உங்களுடன் பேசுகின்றாரா? நீங்கள் தேவனுடைய கட்டளைகளை நேசிக்கிறீர்களா? அல்லது மற்றவர்கள் பார்க்கும் போது மாத்திரம் அவைகளை கைக்கொள்கின்றீர்களா? (சில உதாரணங்களைக் கொடுக்கவும்).

நீங்கள் ஒரு நல்ல கிறிஸ்தவன் என்று மற்றவர்கள் நினைக்க வேண்டுமென்று விரும்புகிறீர்களா? ஆனால் உண்மையில் **உங்களை** சந்தோஷப்படுத்தும் காரியங்களை செய்து கொண்டு இருக்கிறீர்களா? நீங்கள் எல்லாச் சபைப் பாரம்பரியங்களையும் கடைப்பிடிப்பதில் மட்டும் கவனமாயிருந்து, தேவனுடைய கட்டளைகளைத் தள்ளி வைக்கிறீர்களா? (சில உதாரணங்களைக் கொடுக்கவும்).

27 பிரச்சினை நமக்குள் இருக்கிறது

பின்னணி

மாற்கு 7:1–13. பரிசேயருக்கு ஒரு பெரும் பிரச்சினையிருப்பதை இயேசு அவர்களுக்குக் காண்பித்திருக்கிறார். அவர்கள் தங்களை பக்திமான்களைப் போல் காட்டுவார்கள். ஆனால் உண்மையில் அவர்கள் தங்களை திருப்திப்படுத்தவே விரும்புவார்கள். அவர்கள் தேவன்மேல் அன்பு செலுத்துவதாகக் கூறுவார்கள். ஆனால் உண்மையில் அவர்கள் தங்கள் மேல் மாத்திரமே அன்பு செலுத்துவார்கள். அவர்கள் வெளிப் பிரகாரமாக அநேக சடங்குகளைப் பின்பற்றுவார்கள், ஆனால் இருதயத்தில் தேவனுடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படிய மாட்டார்கள்.

இயேசு இப்போது அவர்களுடைய பிரச்சனையின் ஆணி வேரை அவர்களுக்குக் காட்டுகிறார். பாவம் வெளியேயிருந்து **அவர்களுக்குள்** வந்துவிடுமென்று அவர்கள் பயந்தார்கள். ஆயினும் **இயேசு நமக்குள்** ஏற்கனவே பாவம் இருப்பதாகக் கூறுகிறார். வெளியே இருந்து உள்ளேபோகும் உணவு நம்மை தேவனுடைய கண்களில் "அசுத்தப்" படுத்தாது. ஆனால் நமது இருதயத்திலிருந்து வரும் பாவமே நம்மை அசுத்தப்படுத்தும்.

மாற்கு 7:14–23

பாவப் பிரச்சினை இருதயத்திலிருந்தே வருகிறது.

பழைய ஏற்பாட்டில் அவருடைய மக்களுக்கு ஓர் புதிய இருதயத்தைக் கொடுக்கப்போவதாக தேவன் வாக்குப் பண்ணியிருந்தார். நம்மை நமது உட்புறத்தில் மாற்றுவதற்கு ஒரு இரட்சகரை அனுப்புவதாக அவர் வாக்களித்திருந்தார்.

எசேக்கியல் 36:26, யோவான் 3:3

முக்கிய விடயம்

பாவம் நமக்குள்ளிருந்து வருகிறது. எனவே தேவன் நமது உட்புறத்தை மாற்ற வேண்டும்.

நீங்கள் செய்ய வேண்டியது

இயேசுவின் போதனை மிக முக்கியமானது. அநேகர் **தாங்கள் வெளிப்புறத்தில் நன்றாயிருந்தால் போதுமென்று** நினைக்கிறார்கள். அவர்கள் நன்மையான காரியங்களைச் செய்கிறார்கள். ஒரு கிறிஸ்தவனாக வாழ முயற்சிக்கிறார்கள். ஆயினும், அவர்கள் பரிசேயரைப் போலிக்கிறார்கள். அவர்களுக்கு ஒரு புதிய இருதயம் தேவை. அவர்களுடைய பாவம் அவர்களுக்குள்ளே இருப்பதை தேவன் காண்பிக்கும்படி உங்கள் மக்களுக்காக ஜெபியுங்கள்.

குறிப்புகள்

- மாற்கு 7:14,17. பரிசேயர்கள் புரிந்து கொள்ளவில்லை. அதேபோல் **ஜனக்கூட்டங்களும், சீஷர்களும்** கூட புரிந்து கொள்ளவில்லை. பாவம்

? கற்றுக்கொள்ளுங்கள்: மாற்கு 7:14 – 23

இருதயத்திலிருந்து வருகிறது என்பதை அவர்களும் அறிந்து கொள்ள வேண்டியிருந்தது.

- **மாற்கு 7:19.** உணவு நம்மை தேவனுடைய பார்வையில் அசுத்தப்படுத்தாது. பழைய ஏற்பாட்டின் உணவைக் குறித்த சட்டங்கள் இஸ்ரவேல் மக்களுக்கு அவர்களுடைய தேவனுடைய பரிசுத்தத்தைக் குறித்துப் படிப்பிப்பதற்கான பாடங்களைப் போன்றதாகும். ஆனால் இயேசு அந்த உணவுச்சட்டங்கள் முடிந்து விட்டன என்று நமக்குக் காட்டுகிறார். நமது வயிற்றுக்**குள் இருந்து** வெளியே வருவதைக் குறித்து தேவன் கவலைப் படுவதில்லை. நமது இருதயத்திலிருந்து **வெளியே** வருபவைகளைக் குறித்தே அவர் அக்கறையுள்ளவராயிருக்கிறார்.
- **மாற்கு 7:21.** முடிந்தால் இவைகள் என்ன என்பதை கண்டு பிடிக்கவும். இவைகள் நாம் **செய்யும்** கெட்டவைகள் (விபசாரம் - பாலியல் பாவங்கள் முதலியன), **பேசும்** கெட்டவைகள் (ஏமாற்று - பொய் சொல்லுதல் போன்ற பாவங்கள்), மற்றும் **நினைக்கும்** கெட்டவைகள் (பெருமை - மற்றவர்களைவிட மேல் என்று நினைப்பது போன்றவை) முதலியவற்றைக் குறிக்கின்றன.

➡ பிரசங்கியுங்கள்: மாற்கு 7:14 – 23

பாவம் வெளியிலிருந்து வருவதில்லை

📖 மாற்கு 7:15,18,19

⊞ சில நாடுகளில் மக்கள் தங்கள் சுத்தமான வீடுகளுக்குள் அழுக்கு வெளியிலிருந்து வருவதை விரும்புவதில்லை. எனவே வெளியிலிருந்து வருபவர்களை தங்கள் காலணிகளை நீக்கி விட்டு வீட்டுக்குள் வரும்படி கூறுவார்கள். ஆயினும் அவர்கள் வீடுகளுக்குள் அநேக அசுத்தமானவைகள் இருக்கும் - கெட்ட வார்த்தைகள், கெட்ட எண்ணங்கள், தொலைக் காட்சியில் கெட்ட காட்சிகள் போன்றவை. உண்மையான அழுக்கு வீட்டுக்குள் தான் இருக்கிறது. (நீங்கள் இந்த உதாரணத்தை மாற்றிக் கூறலாம்).

பரிசேயர் பாவம் வெளியிலிருந்து வந்ததாக நினைத்தார்கள். அவர்கள் அசுத்தமான எதையும் சாப்பிடாமல் இருக்கத்தக்கதாக தங்கள் கைகளை இந்த மதரீதியான முறையில் கழுவினார்கள். ஆனால் இயேசு அது முட்டாள்தனமானது எனக் கூறுகிறார். உணவு வயிற்றுக்குள் சென்று பின் வெளியே போய்விடுகிறது. இதற்கும் பாவத்திற்கும் சம்பந்தமில்லை. உண்மையான அழுக்கு அவர்களுக்குள் ஏற்கனவே இருக்கிறது.

➡ பிரசங்கியுங்கள்: மாற்கு 7:14-23

- பாவத்தோடு சம்பந்தப்படாத மற்ற **வெளிப்பிரகாரமானவைகள்** என்ன?

பாவமான காரியங்கள் வெளியிலிருந்து நமது வாழ்க்கைக்குள் வர நாம் அனுமதிக்கக் கூடாது. பாவமான காரியங்கள் நமது இருதயத்துக்குள் வந்து நமது உட்புறத்தை அதிக கேடுள்ளதாக்கி விட முடியும்.

> **I சாமுவேல் 16:7.** நீங்கள் வெளியே கிறிஸ்தவனைப்போல காட்டிக் கொண்டு, உள்ளே ஒரு கெட்ட இருதயத்தை இன்னும் வைத்துக்கொண்டிருக்கிறீர்களா?

பாவம் உள்ளிருந்து வருகிறது

மாற்கு 7:20–23

வித்தியாசமான வகையான பாவங்களைக் குறித்து சிந்திக்கவும். ஒவ்வொன்றும் எங்கே ஆரம்பிக்கின்றது? அது உள்ளே ஆரம்பிக்கிறது. அது கெட்ட எண்ணங்களில் தொடங்குகிறது. இயேசுவின் பட்டியலில் அவர் குறிப்பிடும் முதலாவது பாவம் "பொல்லாத சிந்தனைகள்" (மாற்கு 7:21). நாம் உட்புறத்தில் கெட்டவர்களாயிருக்கிறோம். (இயேசுவின் பட்டியலில் காணப்படும் பாவங்களைக் குறித்து கதைக்கவும். அவை யாவும் உட் புறத்திலிருந்து வருவதை அவர்களுக்குக் காண்பிக்கவும். எல்லாப் பாவமும் **தேவனுக்கு** விரோதமானது என்பதை அவர்களுக்கு விளக்கவும்)

(உதாரணங்களைப் பயன்படுத்தவும். நீங்கள் ஒரு கிறிஸ்தவனாக விரும்புகிறீர்கள். எனவே நீங்கள் பொருட்களை திருடுவதை விட்டு விடுகிறீர்கள். ஆனால் திருடும் ஆசை இன்னும் உங்களிடம் இருக்கிறது. எனவே யாருக்கும் தெரியாமல் அதை செய்யப் பார்க்கிறீர்கள். மக்கள் நீங்கள் திருந்திவிட்டதாக நினைக்கிறார்கள். ஆனால் உள்ளே நீங்கள் கெட்டவராகவே இருக்கிறீர்கள். உங்கள் இருதயம் திருட்டை விரும்புகிறது)

> தேவன் உங்களுடன் இன்று பேசினாரா? உங்கள் இருதயம் எவ்வளவு கெட்டது என்பதை நீங்கள் காண்கிறீர்களா? அப்படியானால் அதைப்பற்றி தேவனிடம் கூறுங்கள். நீங்கள் எவ்வளவு கெட்டவர் என்பதைக் கூறுங்கள். அதைக் குறித்து எவ்வளவு மனம் வருந்துகிறீர்கள் என்பதைக் கூறுங்கள்.

யாரால் உங்கள் உட்புறத்தை சுத்தமாக்க முடியும்?

- **உங்களால்** உங்கள் இருதயத்தை மாற்ற **முடியாது**. நீங்கள் முயற்சி செய்யலாம். ஆனால் இன்னும் நீங்கள் உட்புறத்தில் கெட்டவராகவே இருப்பீர்கள்.
- உங்கள் இருதயத்தை **தேவனால்** மாற்ற **முடியும்**. உட்புறம் கெட்டுப் போயிருக்கும் மக்களுக்காக வந்த வைத்தியன் இயேசுவே (மாற்கு 2:17). அசுத்தமான இருதயத்தைக் கழுவி சுத்தப் படுத்த அவருடைய இரத்தத்தினால் மட்டுமே கூடும். அதனால்தான் அவர் சிலுவையில் மரிக்கும்படி வந்தார். உங்கள் இருதயத்தை சுத்தப்படுத்த நீங்கள் இயேசுவை நம்புவீர்களா? **I யோவான் 1:9**

28 ஒரு புறஜாதிப் பெண் பெரும் விசுவாசத்தைக் காட்டுகிறாள்!

பின்னணி

யூதர்கள் தாங்கள் "சுத்தமானவர்கள்" என்று நினைக்கிறார்கள். ஆனால் இயேசு அவர்கள் சுத்தமானவர்கள் அல்ல, ஏனென்றால் பாவம் உள்ளேயிருந்து வருகிறது என்று கூறுகிறார். மாற்கு 7:1~23.

இப்போது இயேசு யூதர்களை விட்டுப் பிரிந்து "புறஜாதியார்" வசிக்கும் ஒரு பகுதிக்குச் செல்கிறார். புறஜாதியார் (அல்லது கிரேக்கர்) என்பது யூதரல்லாத ஜனங்கள். யூதர்கள் புறஜாதியார் சுத்தமில்லாதவர்கள் என்று நினைத்தார்கள். ஆயினும் புறஜாதியாரும் யூதர்களைப் போன்றவர்களே என்பதை இயேசு காண்பிக்க விரும்பினார். யூதர்களாயினும், புறஜாதியார் ஆயினும், அவர்களுடைய **உட்புறத்தை** மாற்ற அவர்களுக்கு தேவன் அவசியம்.

யூதர்களாகிய சீஷர்கள் இயேசு ஒரு புறஜாதிகளின் நகரத்திற்கு சென்றபோது என்ன நினைத்து இருப்பார்கள் என்று கற்பனை செய்து பாருங்கள். யூதர்கள் தேவன் புறஜாதிகளைக் குறித்து அக்கறை கொள்வதில்லை என்று நினைத்தார்கள்.

மாற்கு 7:24~8:10. நாம் ஏற்கனவே மாற்கு சுவிசேஷத்தில் வாசித்தவைகளைப் போலவே சில கதைகள் இருக்கின்றன. பெரிய வித்தியாசம் என்னவென்றால் இயேசு இப்போது அவர் யார் என்பதை **புறஜாதியாருக்கு** காண்பிப்பதேயாகும்.

முக்கிய விடயம்

இயேசு அவரை விசுவாசிக்கும் **எவரையும்** ஏற்றுக்கொள்கிறார்.

நீங்கள் செய்ய வேண்டியது

இயேசு புறஜாதியாரின் நகரங்களுக்குப் போவதைக் காண்பது சீஷர்களுக்கு கஷ்டமாய் தோன்றுகிறது. உங்கள் மக்கள் இதைப் புரிந்து கொள்ள வேண்டும். உங்கள் ஜாதிக்கு அல்லது நாட்டிற்கு பழைய எதிரிகள் இருக்கின்றார்களா? நீங்கள் சில மக்களை கீழானவர்களாக நினைக்கின்றீர்களா? இயேசு அந்த மக்களுக்காகவும்,உங்களுக்காகவும் வந்தார்.

குறிப்புகள்

- **மாற்கு 7:24.** இயேசு தீரு என்னும் ஒரு புறஜாதி பட்டணத்திற்குச் சென்றார். இயேசு புறஜாதி மக்களைத் தேடிப் போகவில்லை. அவர்கள் அவரைத் தேடி வந்தார்கள். இயேசுவின் வேலை அவர் யாரென்பதை யூதர்களுக்குக் காண்பிப்பதாகும். உலகத்தின் மற்ற நாடுகளுக்கு நற்செய்தியை எடுத்துச் செல்லும்படி அவர் நமக்குக் கூறியிருக்கிறார்.

? கற்றுக்கொள்ளுங்கள்: மாற்கு 7:24 – 30

- **மாற்கு 7:27.** இது இரக்கமற்ற செயல் போலக் காணப்படு கின்றது. ஆனால் இயேசு ஒருபோதும் கடுமையாய் நடப்பவரல்ல. யூதர்கள் சில வேளைகளில் புறஜாதியாரை "நாய்கள்" என்று அழைத்தார்கள். அதன் அர்த்தம் அவர்களுக்கு தேவனுடைய ராஜ்யத்தில் இடமில்லை என்பதேயாகும். இயேசு அந்தப் பெண்ணின் மேல் தன் அன்பைக் காட்டுவாரென்று நமக்குத் தெரியும். எனவே அவர் அப்படிச் சொன்னதின் அர்த்தம் "உன்னைப் பற்றி யூதர்கள் என்ன நினைக்கிறார்களென்று உனக்குத் தெரியும். அப்படியிருக்க, ஏன் என்னிடத்தில் வந்தாய்?" இயேசு அந்தப் பெண்ணை விரட்டுவதற்காக அப்படிச் சொல்லவில்லை. அவர் மேலுள்ள அவளுடைய விசுவாசத்தை வெளியே கொண்டு வருவதற்காகவே அவர் அப்படிக் கூறுகிறார்.

→ பிரசங்கியுங்கள்: மாற்கு 7:24 – 30

பெரும் தேவை

மாற்கு 7:24~28

இயேசுவின் உதவியை நாடி அவரிடம் வரும் மக்களை அவர் எப்போதுமே ஏற்றுக் கொள்வார்.

- இந்தப் பெண் எவ்வளவு **நம்பிக்கையற்ற நிலை**யில் இருந்தாளென்று பாருங்கள். அவள் இயேசு வீட்டை விட்டு வெளியே வரும்வரை காத்திருக்க வில்லை. அவளுக்கு **உடனே** அவரைப் பார்க்க வேண்டும்!

இயேசு தன் சீஷர்களுடன் தனியாக இருக்க விரும்பினார். ஆயினும், அவர் அந்தப் பெண்ணை வெறுமனே அனுப்பி விடவில்லை. அவரைத்தேடி வரும் மக்களுக்கு உதவி செய்ய எப்போதுமே அவருக்கு நேரம் இருந்தது.

- இந்தப் பெண்ணின் **தாழ்மையைப்** பாருங்கள். இயேசு அவளை மாற்கு 7:27ல் சொன்னதை அவள் பொருட்படுத்தவில்லை. அதற்கு அவள் "எனக்கும் யூதர்களுக்கும் வித்தியாசமில்லை" என்று கூறவில்லை. இயேசுவிடமிருந்து எதையும் பெற்றுக் கொள்ளும் தகுதி தனக்கில்லை என்பதை அவள் அறிந்திருந்தாள். நீங்களும் அவளைப் போல் இருக்கின்றீர்களா?

➡ பிரசங்கியுங்கள்: மாற்கு 7:24 – 30

» நீங்கள் யாராயிருந்தாலும் பரவாயில்லை. நீங்கள் எவ்வளவு கெட்டவரானாலும் பரவாயில்லை நீங்கள் ஒரு கிறிஸ்தவ குடும்பத்திலிருந்து வரா விட்டாலும் பரவாயில்லை.

இயேசு உங்களுக்குத் தேவை என்பதை அறிந்து அவரிடம் வந்தால், அவர் உங்களை வெறுமனே திருப்பி அனுப்ப மாட்டார்.

பெரும் விசுவாசம்

அவர் மேல் விசுவாசம் வைக்கும் மக்களை இயேசு எப்போதுமே ஏற்றுக் கொள்வார்.

- அவள் எப்படி அவரிடம் **பிச்சை** கேட்பது போல் கெஞ்சுகிறாள் என்று பாருங்கள். ("பிச்சை" என்றால் "மிக உறுதியாகக் கேட்பது".) "முடிந்தால் எனக்கு உதவி செய்யும்" என்று அவள் கேட்கவில்லை. பிசாசைத் துரத்த இயேசுவால் கூடும் என்று அவள் **அறிந்திருந்தாள்**. அவள் இயேசுவிடம் கெஞ்சுவதற்குக் காரணம், இயேசுவால் மட்டுமே அந்தப் பிசாசைத் துரத்த முடியும் என்பதை அவள் அறிந்து இருந்ததே ஆகும்.
- அவள் எப்படி **தொடர்ந்து கேட்டுக் கொண்டிருக்கிறாள்** என்பதைப் பாருங்கள். இயேசு அவள் விசுவாசத்தை சோதிக்கும் போது அவள் தன் முயற்சியைக் கைவிடாமல் இருக்கிறாள். மேசையின் கீழ் விழும் துணிக்கைகளை சாப்பிட முடியுமானால், அவள் ஒரு "நாயாக" இருப்பதைக் குறித்து அவள் கவலைப்படவில்லை.
- **இயேசு சொல்வதை அவள் எப்படி ஏற்றுக் கொள்கிறாள்** என்பதைப் பாருங்கள் (மாற்கு 7:29). அவள் சந்தோஷத்துடன் வீடு செல்கிறாள். ஏனென்றால் அவள் இயேசுவை நம்புகிறாள். அவளுடைய மகள் சுகமாய் இருப்பதைக் காணும் எதிர்ப்பார்ப்புடன் அவள் போகிறாள்.

இயேசுவை சீஷர்கள் கவனித்துக் கொண்டிருக்கிறார்களென்பதை நாமறிவோம். இதைப் போல **யூதர்கள்** விசுவாசித்ததை அவர்கள் காணவில்லை. ஆனால் இந்தப் **புறஜாதிப்** பெண் விசுவாசிக்கிறாள்.

» நீங்கள் யாராயிருந்தாலும் பரவாயில்லை. மற்றவர்களுக்கு நீங்கள் தேவைப்படாவிட்டால் பரவாயில்லை. அவரை விசுவாசிக்கும் **எவரையும்** இயேசு ஏற்றுக்கொள்கிறார். நீங்கள் இந்தப் பெண்ணைப் போலிருப்பீர்களா? உங்கள் பெரும் தேவையை இயேசுவிடம் கொண்டு வருவீர்களா? உங்களை இரட்சிக்கும்படி அவரிடம் கெஞ்சுவீர்களா? அவருடைய வாக்குத்தத்தத்தை விசுவாசிப்பீர்களா?

யோவான் 6:35

» அவரை நம்பும் **எவரையும்** இயேசு ஏற்றுக்கொள்ள ஆயத்தமாயிருக்கிறார். நீங்கள் எப்படி? நீங்கள் சிலரை குறித்துத் தாழ்வாக அல்லது அவர்கள் சரியில்லை என்று நினைக்கிறீர்களா? நாம் எல்லோரையும், ஒவ்வொருவரையும் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

29 ஒரு அற்புதத்துடன் கூடிய ஒரு செய்தி

பின்னணி

இப்போது இயேசு புறஜாதியாரின் பகுதியில் இருக்கிறார். இயேசு யார் என்பதை யூதர்கள் புரிந்து கொள்ள வில்லை. அதை புறஜாதியார் புரிந்து கொள்வார்களா?

சீஷர்களும் கூட சரியாக அவரைப் புரிந்து கொள்ளவில்லை. அவர்கள் செவிடர்களைப் போலிருக்கிறார்கள். இயேசு அவர்களுக்கு போதிக்கிறார். ஆனால் அவர்கள் இன்னும் அவரை தேவனுடைய குமாரன் என்று விசுவாசிக்க வில்லை. (மாற்கு 7:18).

மாற்கு 8:1~10. இது சென்ற முறை அவர்களுக்கு உணவு இல்லாமலிருந்ததைப் போன்ற சம்பவம். ஆனால் சீஷர்கள் அப்பொழுது என்ன நடந்தது என்பதை மறந்துவிட்டார்கள்! **மாற்கு 8:17~18~21.**

மாற்கு 7:31-37 ன் சம்பவம் வெறும் ஒரு அற்புதமல்ல. அது அற்புதத்துடன் கூடிய ஒரு **செய்தியாகும்**. செவிடர்களைப் போன்ற சீஷர்களுக்கு அது வேறு விதத்தில் படிப்பிக்கிறது.

முக்கிய விடயம்

நமக்கும்கூட ஓர் அற்புதம் தேவை. நாம் விசுவாசிப்பதற்காக இயேசு நமது காதுகளை திறக்க வேண்டும். நாம் மற்றவர்களுக்கு சொல்வதற்காக இயேசு நமது வாய்களைத் திறக்க வேண்டும்.

நீங்கள் செய்ய வேண்டியது

இந்த அற்புதம் சீஷர்களுக்குக் கற்றுக் கொடுப்பதற்கான ஒரு படத்தைப் போன்றதாகும். மற்ற அற்புதங்களைவிட இது கஷ்டமானதல்ல. அப்படியானால் ஏன் இயேசு இதை ஒரு பெரிய அற்புதத்தைப் போல் காட்டுகிறார்? ஏன் இயேசு பெருமூச்சு விடுகிறார். ஏன் அவர் துக்கப்படுகிறார்?

அவருடைய சீஷர்களும், மக்களும் இந்த செவிட்டு மனிதனைப் போலிருப்பதை இயேசு காண்கிறார். அவர்கள் தேவனுடைய உண்மைக்கு செவிடர்களாய் இருக்கிறார்கள். அவர்களது இருதயங்களை மாற்ற அவர்களுக்கும் ஓர் அற்புதம் அவசியம். இதை எப்படி உங்கள் மக்களுக்கு விளக்குவதென்று சிந்திக்கவும்.

குறிப்புகள்

- மாற்கு 7:31. “தெக்கப்போலி” அல்லது “பத்துப் பட்டணங்கள்” என்பது ஒரு புறஜாதிப் பகுதி. **மாற்கு 5:20**
- மாற்கு 7:34. “பெருமூச்சு” அல்லது “வேதனைக்குரல்” இயேசு மிகவும் துக்கப்படுகிறார். ஏன்? அது அந்த மனிதன் செவிடனாயிருந்ததினாலல்ல. மக்கள் அவரை விசுவாசிக்காததே முக்கிய பிரச்சினையாகும் (மாற்கு 8:12).

? கற்றுக்கொள்ளுங்கள்: மாற்கு 7:31 – 37

- **மாற்கு 7:36.** இயேசு அவருடைய அற்புதங்களைக் குறித்து மக்கள் பேசுவதை விரும்பவில்லை. அவர்கள் அவரைக் குறித்து பிழையான செய்தியைக் கொடுப்பதை அவர் விரும்பவில்லை. இயேசு வெறும் “அற்பதங்களைச் செய்யும் ஒரு மனிதரல்ல“ உண்மையிலேயே இயேசு யாரென்று அறிந்து இருந்தால் அவர்கள் அவருக்குக் **கீழ்ப்படிந்து** இருப்பார்கள்.

➡ பிரசங்கியுங்கள்: மாற்கு 7:31 – 37

இயேசு துக்கப்படுகிறார்

மாற்கு 7:34

அந்த செவிட்டு மனிதனைக் குறித்து இயேசு துக்கப்படுகிறார். நாம் பிரச்சினைக்குள் இருக்கும் போது எப்போதுமே இயேசு துக்கப்படுகிறார். உலகத்தில் இருக்கும் வியாதிகள், வேதனைகள் முதலியவற்றைக் குறித்து இயேசு துக்கப்படுகிறார். ஆனால் மக்கள் தன்னை விசுவாசிக்காமலிருக்கும் போது அவர் அதைவிட அதிக துக்கமடைகிறார். (இயேசு உண்மையில் யார் என்று சரியாக ‘கேட்க’ முடியாமல் செவிடர்களாயிருக்கும் சீஷர்களுக்கும், நமக்கும் இந்த மனிதன் எப்படியொரு உதாரணமாக இருக்கிறான் என்பதை விளக்கவும்)

» இயேசு உங்களைப் பார்க்கும்போது, அவர் பெருமூச்சு விடுவாரா? நீங்கள் அதிகமாக அவரைப் பற்றி அறிந்திருந்தும், அது உங்கள் இருதயத்திற்குள் போகாததைக் கண்டு இயேசு துக்கப்படுகிறாரா?

» நீங்கள் செவிடராயிருக்க விரும்புகிறீர்களா? நிச்சயமாக இல்லை. ஆனால் இயேசுவின் வார்த்தைக்கு செவி கொடுக்க முடியாத ‘செவிடராய்’ இருப்பது (ஆவிக்குரிய செவிடு) அதை விட மோசமானது. அதைக் குறித்து நீங்கள் கவலைப்படுகிறீர்களா?

இயேசு ஓர் அற்புதம் செய்கிறார்

மாற்கு 7:33~35

முதலில் இயேசு இந்த மனிதனைத் தன்னால் குணமாக்க முடியுமென்று காட்டுகிறார். அந்த மனிதனுக்கு காது கேட்காது. எனவே அவன் பார்க்கத்தக்கதான சில காரியங்களை இயேசு செய்கிறார். அவர் அவருடைய விரல்களை அவன் காதுகளில் வைக்கிறார். அவன் நாக்கைத் தொடுகிறார். அவனை இயேசு குணமாக்கப் போகிறார் என்பதை அந்த மனிதன் இப்போது அறிந்து கொள்கிறான்.

அதன்பின் அவனுக்கு தேவனின் அற்புதம் தேவை என்பதை இயேசு காட்டுகிறார். எனவே அவர் வானத்தை அண்ணாந்து பார்க்கிறார். அதன் பின் அவனுடைய காதுகளுக்கும், நாவிற்கும் திறக்கும்படி கட்டளை இடுகிறார். அப்போது அவைகள் திறக்கின்றன!

» ஒரு செவிட்டு மனிதனுக்கு தன்னை கேட்கப் பண்ண முடியாது. நம்மை விசுவாசிக்கப் பண்ண நம்மால் முடியாது. அதற்கும் தேவனின் அற்புதம் தேவை. இயேசுவைக் குறித்து கேட்பது மட்டும் போதாது. இயேசு நமது ஆவிக்குரிய காதுகளை திறக்க வேண்டும். அப்போதுதான் நம்மால் உண்மையைப் புரிந்துக் கொள்ள முடியும். அதுபோல இயேசு நமது வாய்களையும் திறக்க வேண்டும். அப்போது நம்மால் இயேசு உண்மையில் யார் என்பதை மக்களுக்குக் கூற முடியும்.

இதைச் செய்ய நீங்கள் இயேசுவிடம் கேட்பீர்களா? உங்களுக்காக கேளுங்கள். உங்கள் நண்பர்களுக்காக கேளுங்கள்.

இயேசு அற்புதமானவர்

மாற்கு 7:34 வாசிக்கவும்

இந்த மக்கள் இயேசுவைப் பற்றி எல்லோருக்கும் கூறினார்கள். அவர்கள் அவர் அற்புதமானவரென நினைத்தார்கள்.

- அவர்கள் இயேசுவைப் பற்றி மக்களுக்கு கூறியிருக்க வேண்டுமா, அல்லது கூறாமல் இருந்திருக்க வேண்டுமா?

அவர்கள் உண்மையில் இயேசுவின் மேல் அன்பு செலுத்தவில்லை. அவர்கள் அவருக்குக் கீழ்ப்படிய வில்லை. நாம் இயேசுவின் மேல் அன்பு கூர்ந்தால், அவருக்குக் கீழ்ப்படிவோம்.

» நீங்கள் இயேசு அற்புதமானவரென்று நினைத்தால், அப்போது முதலில் நீங்கள் அவருக்குக் **கீழ்ப்படிய** வேண்டும். நீங்கள் இயேசு சொல்வதை செய்யாமலிருந்தால், இயேசு எவ்வளவு நல்லவரென்று மற்றவர்களுக்குக் கூறவேண்டாம்.

» இயேசு நம்மை இரட்சித்து மாற்றும் போது அவர் நாம் மௌனமாயிருப்பதை விரும்புவதில்லை. நாம் நமது அற்புதமான இயேசுவைப் பற்றிய உண்மையை எல்லோருக்கும் கூறவேண்டுமென அவர் எதிர்பார்க்கிறார்.

? கற்றுக்கொள்ளுங்கள்: மாற்கு 8:1 – 10

30 மீண்டும் வானத்திலிருந்து அப்பம்!

▣ பின்னணி

இயேசுவைப் பற்றிய **சில** கதைகளையே மாற்குவால் நமக்குக் கூறமுடியும். ஆனால், வானத்திலிருந்து வரும் அப்பத்தைக் குறித்து ஏன் அவர் **இரண்டு** கதைகளை சேர்த்து இருக்கிறார்? **மாற்கு 6:30~44, மாற்கு 8:1~10** எவ்வளவு விஷயங்கள் ஒரே மாதிரியாய் இருக்கின்றன என்று பார்க்கவும்.

என்ன நடந்தது என்பதை மாத்திரம் சொல்ல மாற்கு விரும்பவில்லை என்பது ஞாபகமிருக்கட்டும். அவரிடம் எங்களுக்கு ஒரு **செய்தி இருக்கிறது**. அது மாற்குவின் "சுவிசேஷம்" (நற்செய்தி). ஆனால் ஏன் அவர் வானத்திலிருந்த அந்த அப்பத்தைக் குறித்து **மீண்டும்** கூறுகிறார்.

இப்போது இயேசு ஒரு **புற ஜாதியாரின்** பகுதியில் இருக்கிறார் என்பது உங்களுக்கு நினைவிருக்கும். உண்மையாக அவர் யார் என்பதை இயேசு சீஷர்களுக்குப் கற்பித்துக் கொடுக்க விரும்புகிறார். அவரே இரட்சகரென்று அவர் சீஷர்களுக்கு காட்ட விரும்புகிறார். அவரே **உலகத்தின்** இரட்சகர். **யூதர்களுக்கு** மட்டுமல்ல. **மாற்கு 8:11~21.** இயேசு அவர்கள் அந்த அற்புதத்தைப் **புரிந்து கொள்ள** வேண்டுமென்று விரும்பினார் என்பதை இது காட்டுகிறது. அவர் யாரென்பதை அவர்கள் காண வேண்டும்.

எனவே இயேசு அதே அற்புதத்தை புறஜாதியாருக்குச் செய்கிறார். இது **சீஷர்களுக்கு தான் யாரென்று காட்டுவதற்கே** ஆகும்.

▣ முக்கிய விடயம்

இயேசுவே எல்லோருக்காகவும் வந்திருக்கும் இரட்சகர். யூதர்களுக்கு மாத்திரமல்ல.

★ நீங்கள் செய்ய வேண்டியது

இந்தச் சம்பவம் மாற்கு 6ல் வரும் சம்பவம் போலவே இருக்கிறது. இதைத்தான் நாம் பார்க்க வேண்டுமென்று மாற்கு விரும்புகிறார். சென்ற முறையைப் போலவே இந்த அற்புதத்தைக் குறித்து கூற வேண்டாம். இயேசு ஏன் யூதர்களையும், புறஜாதியினர் களையும் போஷிக்கிறார் என்பதைக் காண்பிக்கவும்.

▣ குறிப்புகள்

- உங்களிடம் ஓர் வேதாகம நிலப்படமிருக்குமாயின் புற ஜாதியாரின் பகுதியினூடே இயேசுவின் பயணத்தைத் தொடர்ந்து பார்க்கவும். அவர் **தீருவுக்குச்** சென்று (மாற்கு 7:24). பின் **தெக்கபோலிக்குச்** சென்றார் (மாற்கு 7:31). அதன் பின் இயேசு திரும்பி யூதர்களின் பகுதியாகிய **தல்மனூத்தாவின்**

? கற்றுக்கொள்ளுங்கள்: மாற்கு 8:1 -10

எல்லைகளுக்கு வந்தார். (மாற்கு 8:10).

- **மாற்கு 8:8.** மாற்கு "கூடைகளுக்கு" உபயோகிக்கும் வார்த்தை மாற்கு 6:43இல் பாவித்த வார்த்தையை விட வித்தியாசமானது ஏனென்றால், யூதர்களைவிட புறஜாதியர் ஒரு வித்தியாசமான வகைக் கூடையை உபயோகித்தார்கள்.

→ பிரசங்கியுங்கள்: மாற்கு 8:1 -10

அதே அன்பு

மாற்கு 8:1~3

நீங்கள் சிலரைக் குறித்து அதிக அக்கறை காட்டும் அதே வேளை, வேறு சிலரைக் குறித்து அக்கறை காட்டாமலிருக்கிறீர்களா? சிலர் பட்டினியாயிருப்பதைக் குறித்து நீங்கள் கவலையில்லாமல் இருக்கக் கூடும் ஏனென்றால் ஒருவேளை உங்களுக்கு அவர்களைப் பிடிக்காமலிருக்கலாம். அல்லது உங்களைப் பொருத்தவரை அவர்கள் முக்கியமில்லாதவர்களாய் இருக்கலாம்.

இயேசு தன் சொந்த ஜனத்தின் மேல் காட்டிய **அதே அன்பை** இந்த புறஜாதி மக்கள் மேலும் காட்டுகிறார். அவர்கள் பசியாய் இருப்பதைக் குறித்தும் அவர் கவலைப்படுகிறார். அவர் மாற்கு 6ல் 5000 யூத மக்களைப் போஷித்தது போலவே, இங்கு 4000 புறஜாதியாரை போஷிக்கிறார். (இதைக் குறித்து மேலும் உரையாடவும். இவர்கள் மேல் இயேசு காட்டிய அக்கறையைக் குறித்துக் கூறவும். இந்த அற்புதமும், மாற்கு 6ல் இயேசு செய்த அற்புதமும் எப்படி ஒரே மாதிரியானவையாய் இருக்கின்றன என்பதை காட்டவும்).

- சீஷர்கள் இதைப்பற்றி என்ன நினைத்திருப்பார்களென்று கற்பனை செய்து பாருங்கள். அவர்கள் புறஜாதி மக்களை

மதிக்கவில்லை என்பது உங்களுக்குத் தெரியும். தேவன் யூதர்களைக் குறித்து மட்டுமே அக்கறையுள்ளவராயிருப்பதாக அவர்கள் நினைத்திருந்தார்கள். இந்த புறஜாதி மக்களுக்கு அவர்கள் போஜனத்தைப் பகிர்ந்து கொடுக்கும் வேளையில் அவர்கள் என்ன நினைத்திருப்பார்கள் என்று கற்பனை செய்து பாருங்கள். (மாற்கு 8:6)

» இயேசு தன் சீஷர்கள் தன்னை யாரென்று அறிய வேண்டுமென்று விரும்புகிறார். இயேசு யாரென்று நீங்கள் அறிந்து இருக்கிறீர்களா? **எல்லா விதமான மக்கள்** மேலும் அக்கறையுள்ள இரட்சகரே அவர். நீங்கள் விரும்பாத மக்கள் மேலும் அவர் அக்கறையுள்ளவராயிருக்கிறார். அவர் சிறுபிள்ளைகள் மேலும், வயது முதிர்ந்தவர்கள் மேலும் அக்கறை உள்ளவராயிருக்கிறார். அவர் ஆண்கள் மேல் அக்கறை செலுத்துவது போலவே பெண்கள் மேலும் அக்கறை செலுத்துகிறார்.

» இயேசு உங்களுக்கு இரட்சகராக இருக்க வேண்டுமென்று விரும்புகிறீர்களா? நீங்கள் விரும்பாத மக்களுக்கும் இயேசு இரட்சகராக இருக்க வேண்டுமென்று நீங்கள் விரும்புகிறீர்களா?

அதே எதிர்ச்செயல்

📖 மாற்கு 8:4-10

சீஷர்கள் முன்பிருந்தது போலவே இருக்கிறார்கள்.

📖 **மாற்கு 8:4.** "சென்ற முறையைப் போல ஏன் அவர்களுக்கு வானத்தில் இருந்து அப்பத்தைக் கொடுக்கக் கூடாது?" என்று ஒருவரும் கூறவில்லை. இந்த கூட்டத்திற்கு உணவு கொடுப்பது கூடாத காரியம் என்று அவர்கள் நினைக்கிறார்கள். ஏனென்றால் அவர்கள் இன்னும் இயேசுவை யாரென்று அறியவில்லை. 📖 மாற்கு 8:21

மக்கள் முன்பிருந்தது போலவே இருக்கிறார்கள்.

📖 **மாற்கு 8:8,9.** அவர்கள் யாவரும் சாப்பிட்டுத் திருப்தியடைந்து இருந்தார்கள். இயேசு அவர்களைப் போஷித்ததைக் குறித்து அவர்கள் மகிழ்ச்சியடைந்திருந்தார்கள் ஆயினும் அவர்கள் இயேசுவை விட்டுப் போக மனதாயிருந்தார்கள். அவர்களும் இயேசு முன்பு போஷித்த 5000 யூதர்களைப் போலவே இருந்தார்கள். அவர்கள் இயேசுவின் அற்புதத்தை விரும்பினார்கள். ஆனால் இயேசு யார் என்பதை அவர்கள் புரிந்து கொள்ளவில்லை. 'இயேசுவால் எங்களுக்கு அப்பமும், மீன்களும் கொடுக்க முடியுமானால், நிச்சயம் அவர் கடவுளாக இருக்க வேண்டும். அவர் எங்களுக்காக வந்திருக்க வேண்டும் என்று அவர்கள் நினைக்கவில்லை.' அதனால் அவர்கள் இயேசுவை பின்பற்றாமல், வீட்டுக்குப் போய் விட்டார்கள்.

» நாம் இயேசுவைப் பற்றி அநேக காரியங்களைக் கேட்கிறோம். அவைகளைக் கேட்க ஆசைப்படுகிறோம்.

நாம் கதைகளை நம்புகிறோம். ஆயினும், இயேசு யார் என்பதை நாம் உண்மையில் அறிந்திருக்கிறோமா? அப்படி அறிந்திருந்தால் அது எப்படி வெளிப்படும்?

31 கடின இருதயத்துடன் குருடும், செவிடும்

பின்னணி

விரைவில் சீஷர்கள் இயேசு யார் என்பதை புரிந்து கொள்வார்கள் - மாற்கு 8:29. கடைசியில் அவர்களுக்குப் புரியும். அவர்கள் **எப்படி** புரிந்து கொள்வார்கள்?

சீஷர்களுக்கு ஒரு **அற்புதம்** தேவைப்பட்டது என்று மாற்கு நமக்குக் காட்டுகிறார். மாற்கு 8:11-21ல் அவர்கள் இன்னும் இயேசு யார் என்பதை அறிந்து கொள்ள வில்லை. அவர்களுடைய இருதயம் இன்னமும் கடினமாய் இருக்கிறது. அவர்கள் விசுவாசிக்க வில்லை. அவர்கள் எப்படி பரிசேயரைப் போலிருக்கிறார்கள் என்பதை கவனிக்கவும். மாற்கு 3:5; 6:52; 7:17, 18.

இப்போது வாசியுங்கள் மாற்கு 8:11, 12, 15, 17, 18, 21

முக்கிய விடயம்

சீஷர்களைப் போல நமது இருதயமும் கடினப்பட்டிருக்கிறது. இயேசுவை விசுவாசிப்பதற்கு நமக்கும் ஓர் அற்புதம் தேவை.

நீங்கள் செய்ய வேண்டியது

நாம் இயேசுவை வெறுக்கும் மக்களைப் போலிக்கக் கூடும் என்று நினைப்பது கடினம். ஆனால் இயேசு பரிசேயரைப் போலவும், ஏரோதைப் போலவும் இருக்க வேண்டாமென சீஷர்களுக்கு எச்சரிக்கிறார். சீஷர்கள் இயேசுவை வெறுக்கவில்லை. ஆனால் அவர்களுக்கும் இயேசுவின் விரோதிகளைப் போலவே **கடின இருதயமிருந்தது.**

நம்முடைய இருதயம் எப்படி இருக்கின்றது? இயேசுவைக் குறித்து சிந்திக்க நேரம் இல்லாதவர்களைப் போல நாம் இருக்கின்றோமா? அவர்கள் இருதயங்களை மாற்றுவதற்கு அவர்களுக்கொரு அற்புதம் தேவை என்பதை அவர்கள் உணர அவர்களுக்கு உதவி செய்யுங்கள்.

குறிப்புகள்

- **மாற்கு 8:15.** மக்கள் அப்பம் செய்வதற்கு "புளித்த மாவை" உபயோகிப்பார்கள். கொஞ்சம் புளித்த மாவு முழு மாவுக் கலவையிலும் பரவிவிடும். இது ஒரு உதாரணம். "இந்தப் பரிசேயரின் **புளித்த மாவு** உங்களுக்கும் பரவாதபடி எச்சரிக்கையாயிருங்கள். உங்களுக்கும் அதே **கடின இருதயம்** வந்து விடும்" என்று இயேசு சீஷர்களை எச்சரிக்கிறார்.
- **மாற்கு 8:15.** "ஏரோது". ஏரோது அந்தப் பகுதிக்கு ரோமர்களால் நியமிக்கப்பட்ட ஆளநராய் இருந்தான். ரோமர்கள் யூதர்களின் கடவுளை நம்பவில்லை. எனவே அவர்கள் இயேசுவையும் நம்பவில்லை.

➔ பிரசங்கியுங்கள்: மாற்கு 8:11-21

எச்சரிக்கையாய் இருங்கள்

📖 மாற்கு 8:11-15

நாம் நம்மை நெருங்கியுள்ள மக்களைப் போல் மாறிவிடக்கூடும்.

- நீங்கள் யாரைப்போல் மாறி இருக்கிறீர்கள்? ஒருவேளை உங்கள் கணவன், அல்லது மனைவி? உங்கள் பெற்றோர் அல்லது நண்பர்கள்? நாம் அவர்களைப்போல சிந்திக்கவும், பேசவும் தொடங்கக் கூடும்.

இயேசு சொல்கிறார்: "கவனமாய் இருங்கள்! எச்சரிக்கையாய் இருங்கள்!" பரிசேயர் இயேசுவை வெறுத்தார்களென்று சீஷர்களுக்குத் தெரியும், அப்படி இருந்த போதிலும் அங்கே ஆபத்து இருந்தது. இப்போது சீஷர்கள் பரிசேயரைப் போல சிந்திக்கத் தொடங்கு கிறார்கள்.

- இயேசுவைக் குறித்து பிழையான காரியங்களை நினைக்கும் மக்கள் யார்? (தொலைக்காட்சி அல்லது வானொலி, அரசியல்வாதிகள், ஆசிரியர்கள், நண்பர்கள்) நீங்கள் இயேசுவைப் பற்றி அவர்களைப்போல சிந்திக்கத் தொடங்கி விட்டீர்களா?

பரிசேயர் எப்படி நினைத்தார்கள்?

📖 மாற்கு 8:11-12. இயேசு துக்கப்பட்டார், ஏனென்றால் அவர்கள் இருதயம் எவ்வளவு கடினமானது என்பதை அவர் கண்டார். அவர்கள் இயேசுவை விசுவாசிக்க விரும்பவில்லை. அவர்கள் இயேசுவை சோதிக்க முயன்றார்கள். அவர்களுக்கு மக்களை இயேசுவுக்கு விரோதமாக திருப்பி விட வேண்டுமென்ற எண்ணமிருந்தது.

▷ இயேசு சொல்கிறார்: 'அந்தப் புளித்த மாவைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள்.' அது எளிதாக நமக்குள் பரவிவிடும். நாம் நம்மைச் சுற்றியுள்ள மக்களைப் போல் இருக்கக் கூடும். **நமக்குக் கடினமான இருதயம் இருக்கக் கூடும். நாம் இயேசுவை விசுவாசிப்பதில் மந்தமாய் இருக்கக் கூடும்.**

கடினமான இருதயங்கள்

📖 மாற்கு 8:16-21

சீஷர்கள் இயேசுவைப் புரிந்து கொள்ளவில்லை. அவர் அப்பத்தைக் குறித்து கதைக்கிறார் என அவர்கள் நினைத்தார்கள். இயேசு இரண்டு கேள்விகளைக் கேட்கிறார்:

1. **'உங்களுக்கு நினைவு இல்லையா?'**

📖 மாற்கு 8:18-20

நிச்சயமாக சீஷர்கள் நடந்ததை நினைவில் வைத்திருந்தார்கள். **ஆனால், அவர்கள் பாடத்தை படிக்கவில்லை.** அவர்கள் இன்னும் இயேசு யாரென்று விசுவாசிக்க வில்லை.

▷ இயேசுவைக் குறித்து நீங்கள் படித்தவை உங்களுக்கு நினைவில் இருக்கிறதா? அது உங்களை மாற்றுகிறதா? இப்போது நீங்கள் இயேசுவை **விசுவாசிக்கிறீர்களா?**

➡ பிரசங்கியுங்கள்: மாற்கு 8:11 –21

2. ‘நீங்கள் இன்னும் உணராதிருக்கிறீர்களா?’

மாற்கு 8:18~20

இல்லை, அவர்கள் உணரவில்லை. அவர்கள் குருடரை அல்லது செவிடரைப் போலிருக்கிறார்கள். அவர்கள் இயேசு செய்த அநேக காரியங்களைக் கண்டார்கள். அவர்கள் இயேசு சொன்ன அநேக காரியங்களைக் கேட்டார்கள். ஆனால் அவர்கள் இருதயம் இன்னும் கடினமாயிருக்கிறது. அவர்களுக்கு ஒரு அற்புதம் தேவைப்பட்டது.

» உங்களுக்கு இயேசுவைப் பற்றி அதிகமாக தெரிந்திருக்கக் கூடும். ஆனால் இயேசு உங்கள் இருதயத்தில் ஒரு அற்புதத்தை செய்திருக்கின்றாரா?

இயேசு உங்கள் உட்புறத்தை மாற்றி, அவரை நம்பத்தக்கதான விசுவாசத்தைக் கொடுத்திருக்கின்றாரா?

அப்படி இல்லாவிட்டால் இப்பொழுதே அவரிடம் கேளுங்கள்!

32 பேதுரு காண்கிறார்!

பின்னணி

சீஷர்கள் இன்னும் குரடராய் இருக்கிறார்கள். அவர்களினால் இயேசு யாரென்பதைக் காண முடியவில்லை. அவர்களுக்கோர் அற்புதம் தேவை.

அடுத்து நாங்கள் வாசிப்பது ஒரு அற்புதத்தைக் குறித்ததாகும். மாற்கு 8:22~26. ஒரு குருடன் பார்க்கிறான். அதொரு **செய்தியுடன்** கூடிய இன்னொரு அற்புதமாகும். (மாற்கு 7:31-35 போல). இந்த அற்புதம் நடந்தவுடனே, பேதுரு இப்போது தன்னால் பார்க்க முடிகிறது என்பதை காட்டுகிறான். அவன் இயேசுவை இப்போது இரட்சகராகிய கிறிஸ்துவாகக் காண்கிறான்.

மாற்கு 8:27~30

மாற்கு 1-8 அதிகாரங்களின் பெரும் கேள்விக்கு மாற்கு 8:29 விடை தருகிறது. “இயேசு யார்?” **இயேசுவே கிறிஸ்துவாகும்.**

மாற்கு சுவிசேஷத்தின் ஏனைய பகுதி இன்னொரு பெரும் கேள்விக்கு விடையளிக்கிறது. “இயேசு ஏன் வந்தார்?”

இயேசு யார்	இயேசு ஏன் வந்தார்
மாற்கு அதிகாரங்கள் 1-8	மாற்கு அதிகாரங்கள் 9-16

முக்கிய விடயம்

இயேசுவே கிறிஸ்து என்று பேதுரு கூறுகிறார்.

குறிப்புகள்

- **மாற்கு 8:23-26.** இயேசு அந்த மனிதனை கிராமத்துக்கு வெளியே கூட்டிச் சென்றார். அதன்பின் அவனை கிராமத்திற்கு திரும்பிப் போக வேண்டாமென்று கூறுகிறார். ஏனென்றால் அந்த அற்புதத்தை மக்கள் அறிந்து கொள்வதை இயேசு விரும்பவில்லை. அது **சீஷர்களை** சிந்திக்க வைப்பதற்கான ஒரு அற்புதம்.
- **மாற்கு 8:23-25.** ஏன் இயேசு அந்த மனிதனின் கண்களை **இரண்டு** முறை தொடுகிறார்? அது முதல் முறை அற்புதம் நடக்காதபடியாலல்ல. இயேசு **அந்த** அற்புதத்தை இரண்டு பகுதிகளாகப் பிரித்துச் செய்தார். ஏனென்றால் அந்த அற்புதத்துடன் ஒரு **செய்தியும்** இருக்கிறது.

இந்த மனிதன் **சீஷர்களைப் போன்றவன்.** சீஷர்கள் விரைவில் காண்பார்கள் - ஆனால் அவர்கள் அரைவாசி மட்டுமே காண்பார்கள். பேதுரு இயேசுவைக் கிறிஸ்து வாகக் காண்கிறார். ஆனால் அவர் மரிக்க வேண்டுமென்ற உண்மையை அவரால் காண முடியவில்லை (மாற்கு 8:31,32). பேதுரு மாற்கு 8:24ல் உள்ள

? கற்றுக்கொள்ளுங்கள்: மாற்கு 8:22 – 30

மனிதனைப் போலிருக்கிறார். மாற்கு சுவிசேஷத்தின் எஞ்சிய பகுதியில் சீஷர்கள் இன்னும் அரைக் குருடர்களாக இருக்கிறார்கள். இயேசு அவர்களுக்குப் போதிக்கிறார். ஆனால் அவர்களால் சரியாகப் பார்க்க முடியவில்லை. இயேசு உயிரோடெழும்பும் வரை அவர்களால் முழு உண்மையை புரிந்து கொள்ள முடியவில்லை.

- **மாற்கு 8:29.** இயேசுவே பழைய ஏற்பாட்டில் தேவனால் வாக்குப் பண்ணப்பட்ட **கிறிஸ்து** (மேசியா) என்பதை பேதுரு காண்கிறார். தேவன் இயேசுவை அவருடைய மக்களை இரட்சிக்க அனுப்பி இருக்கிறாரென்பதை பேதுரு காண்கிறான்.
- **மாற்கு 8:30.** அவர்கள் இன்னும் மக்களிடம் அந்த உண்மையைக் கூறக் கூடாது, ஏனென்றால் "கிறிஸ்துவைக்" குறித்து மக்கள் பிழையான கருத்தைக் கொண்டிருந்தார்கள். முதலில் அவர்கள் கிறிஸ்து எதற்காக வருகிறாரென்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும்.

→ பிரசங்கியுங்கள்: மாற்கு 8:22 – 30

ஒரு முக்கியமான கேள்வி

📖 மாற்கு **8:23,27,29**

⊞ நாம் எல்லோரும் பார்க்க விரும்புகிறோம். ஒன்றைப் பார்க்க முடியாவிட்டால் உங்களுக்கு எப்படியிருக்கும்? ஒரு குருட்டு மனிதன் பார்க்க எவ்வளவு ஆவலுள்ளவனாயிருப்பான் என்பதை கற்பனை செய்து பாருங்கள்.

இயேசு இப்போது ஒரு அற்புதத்தை செய்திருக்கிறார். இந்த குருட்டு மனிதன் பார்க்கத் தொடங்குகிறான். அப்பொழுது இயேசு அவனிடம் ஒரு முக்கியமான கேள்வியைக் கேட்கிறார். "நீ எதையாகிலும் காண்கிறாயா?" அவனுடைய உற்சாகத்திற்கு அளவேயில்லை. அவன் மனிதர்களைப் பார்க்கத் தொடங்குகிறான்.

இயேசு **சீஷர்களிடம்** ஒரு முக்கியமான கேள்வியைக் கேட்கிறார். இதுவரை அவர்கள் குருடாயிருந்தார்கள். இப்பொழுது அவர்களால் பார்க்க முடிகின்றதா? இயேசுவை யாரென்று கண்டு கொள்ள முடியாத மற்ற மனிதர்களைப் போலவே அவர்களும் இருக்கிறார்களா?

📖 மாற்கு **8:27,28.**

அல்லது, அவர்கள் இப்பொழுது வித்தியாசமானவர்களா கடைசியில் அவர்களால் பார்க்க முடிகின்றதா?

📖 மாற்கு 8:29

» இயேசு நம்மிடமும் இன்று அதே கேள்வியைக் கேட்கிறார். மற்ற மனிதர்களுக்கு இயேசுவைப் பற்றி வித்தியாசமான எண்ணங்கள் இருக்கலாம். ஆனால் இயேசு **உங்களிடம்** இந்தக் கேள்வியைக் கேட்கிறார். நீங்கள் இயேசுவைக் குறித்து என்ன நினைக்கிறீர்கள்? இயேசு உங்கள் கண்களை திறந்து விட்டாரா? உங்களுக்குப் புரியாமலிருந்தவைகளை இப்போது தெளிவாகப் பார்க்கின்றீர்களா? யாராவது உங்களிடம் கேட்டால், நீங்கள் என்ன சொல்லுவீர்கள்?

ஒரு முக்கியமான பதில்

📖 மாற்கு 8:29

‘நான் காண்கிறேன்.’ ஒரு குருடன் சொல்லியிருக்கக்கூடிய மிகச் சிறந்த வார்த்தைகள் இவையாகத் தானிருக்க முடியும். இதுமுதல் அவனுடைய முழு வாழ்க்கையும் மாறுகிறது.

‘நீர் கிறிஸ்து’ பேதுரு சொல்லி இருக்கக் கூடிய மிகச் சிறந்த வார்த்தைகள் இவையாகத்தான் இருக்க முடியும். இப்போது அது உண்மையென்று பேதுருவுக்குத் தெரியும். அவருக்கு அது முக்கியம் என்றும் தெரியும். தேவன் இரட்சகரை அனுப்பியிருக்கிறார். பேதுரு அவரை விசுவாசிக்கிறார். மற்றவர்கள் இயேசுவைப் பற்றி பல வித்தியாசமானவைகளைக் கூறலாம். ஆனால் பேதுருவுக்கு உண்மை தெரியும். பேதுரு அதைச் சொல்வதற்கு அஞ்சவில்லை.

» இயேசுவே இரட்சகராகிய கிறிஸ்து என்று நீங்கள் விசுவாசிக்கின்றீர்களா? அது உங்களுக்கு முக்கியமா? அது உங்கள் வாழ்க்கையை மாற்றும் அளவுக்கு முக்கியமா? அதை மற்றவர்களுக்குச் சொல்லும் அளவுக்கு அது உங்களுக்கு முக்கியமா? இயேசு இரட்சகரானபடியால் பேதுருவைப்போல அவரை விசுவாசித்து அவர் பின்னே செல்லுவீர்களா?

» ஒரு வேளை நீங்கள் அரைவாசி உண்மையை மாத்திரமே அறிந்திருக்கலாம். இன்னும் அநேக விஷயங்கள் உங்களுக்கு விளங்கவில்லை. உங்களுக்குப் **புரிந்தவற்றுடன்** தொடங்குங்கள். மற்றவர்களுக்குச் சொல்ல அஞ்ச வேண்டாம். நீங்கள் இயேசுவைப் பின்பற்றும்போது அவர் இன்னும் அதிகமாகக் காண உங்களுக்கு உதவி செய்வார்.

33 சிலுவையின் பாதை

பின்னணி

சீஷர்கள் இப்பொழுது இயேசு யாரென்று காண்கிறார்கள். பேதுரு "நீரே கிறிஸ்து" என்று கூறினார்.

ஆனால் அவர்கள் பாதி உண்மையை மாத்திரமே காண்கிறார்கள். "கிறிஸ்து" எதற்காக வந்தாரென்ற உண்மை இன்னும் அவர்களுக்குப் புரியவில்லை. இப்போது இயேசு யூதர்களை ரோமர்களுக்கு விரோதமாக வழிநடத்துவாரென்று அவர்கள் நினைத்தார்கள். இயேசு தன்னை எருசலேமில் ராஜாவாக பிரகடனப்படுத்துவாரென்று அவர்கள் எதிர்பார்த்தார்கள். அவர்களுக்கு எருசலேமில் முக்கியமான வேலைகள் இருக்குமென்று அவர்கள் நினைத்தார்கள்.

ஆனால் அவர்கள் நினைப்பது தவறாகும். அவர்கள் இயேசு சொல்வதைக் கேட்கவேண்டும். அவர்கள் "கிறிஸ்து" அவர்களை நடத்தும் பாதையில் அவரைப் பின் தொடரவேண்டும்.

மாற்கு சுவிசேஷத்தின் இரண்டாவது பகுதி **கிறிஸ்து ஏன் வந்தார்** என்பதை நமக்கு விளக்குகிறது.

முக்கிய விடயம்

ஒரு உண்மைக் **கிறிஸ்**தவன் சிலுவையின் பாதையில் "**கிறிஸ்து**வை" பின்தொடருவான்.

நீங்கள் செய்ய வேண்டியது

அநேகர் தங்களை கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறார்கள். நாம் சிலுவையின் பாதையில் அவரைப் பின் தொடரும் போது மட்டுமே உண்மைக் கிறிஸ்தவர்களாய் இருக்கிறோமென்று இயேசு நமக்குக் காண்பிக்கிறார். ஆனால் மக்களுக்கு இதை ஏற்றுக் கொள்ள விருப்பமில்லை. அநேகர் ஒரு எளிதான கிறிஸ்தவ வாழ்க்கை வாழ விரும்புகிறார்கள். இயேசு அவர்களுக்கு அநேக நல்லவை களைக் கொடுப்பாரென்று அவர்கள் எதிர்பார்க்கிறார்கள். அவர்களின் சொந்த வழியில் இயேசுவைப் பின் தொடர அவர்கள் விரும்புகிறார்கள். அது பிழையென இயேசு கூறுகிறார். ஒரு கிறிஸ்தவனுக்கு ஒரேயொரு வழி மாத்திரமே உண்டு. அது **இயேசுவின்** வழி.

- நீங்கள் எப்படி இதை உங்கள் மக்களுக்கு தெளிவுபடுத்த முடியும்?

இந்தப் பகுதி மிக முக்கியமானது. உங்களால் ஒன்றுக்கு மேற்பட்ட உரைகளை அதைக் குறித்து நிகழ்த்தலாம்.

குறிப்புகள்

- மாற்கு 8:31. இயேசு தன்னை "மனுஷ குமாரன்" என்று அழைக்கிறார். அவர் ஒரு மனிதன் என்று மட்டும் சொல்லாமல், தானியேல் கூறிய வல்லமையுள்ள "மனுஷ

? கற்றுக்கொள்ளுங்கள்: மாற்கு 8:31 – 38

குமாரன்" தானே என்றும் கூறுகிறார் **தானியேல் 7:13,14.** இயேசு சிலுவைக்குப் போவார், ஆனால் அவரே தேவனின் வல்லமையுள்ள ராஜா. அவர் எல்லாவற்றின் மேலும் ஆட்சி செலுத்துவார்.

- **மாற்கு 8:33.** இயேசு பேதுருவை "சாத்தான்" என்று அழைக்கிறார். ஏனென்றால் அவன் தேவனது திட்டத்திற்கு விரோதமாகக் கதைக்கிறான். பேதுரு இன்னும் சாத்தானைப் போல் சிந்திக்கிறான், அவன் தேவனைப் போல் சிந்திக்க வில்லை. இயேசுவைக் குறித்த தேவனின் திட்டத்தைப் பேதுரு ஏற்றுக்கொள்ள வேண்டும். இயேசு கட்டாயமாக சிலுவைக்குப் போக வேண்டும். அதை பேதுரு தடை செய்ய முயற்சி செய்யக்கூடாது. இயேசு பேதுருவைக் "கடிந்து" கொள்கிறார். (பேதுரு சொல்வது பிழையென்று அவர் கூறுகிறார்).

→ பிரசங்கியுங்கள்: மாற்கு 8:31 – 38

எந்த வகையான கிறிஸ்து?

மாற்கு 8:31~33

⊞ நீங்கள் யாரைப் போலிருக்க விரும்புகிறீர்களா? உங்கள் நாயகன் "Hero" யார்? நீங்கள் யாரைப் பெரியவரென்று நினைக்கிறீர்கள்.

நாம் பலமுள்ள, வெற்றியடையக் கூடிய ஒருவரை பின்பற்ற விரும்புகிறோம். மக்கள் வெறுத்து, கொலை செய்ய நினைக்கும் ஒரு மனிதனை ஒருவரும் பின்பற்ற மாட்டார்கள். நாமும் சீஷர்களைப் போன்றவர்களே. உலகத்தை ஆளுகை செய்யும் இயேசு ராஜாவிற்கு உதவவே சீஷர்கள் விரும்பினார்களே அன்றி அவருடன் ஒருவரும் சிலுவைக்குப் போக விரும்பவில்லை.

உங்களால் பேதுருவைப் புரிந்து கொள்ள முடிகின்றதா? அவர் இயேசுவை தேவனுடைய ராஜாவாகிய "கிறிஸ்து" வாகக் காண்கிறான். எனவே இயேசு எப்படி **தோல்வியடைய** முடியும்? இயேசு எப்படி மரிக்க முடியும்? அது சாத்தியமற்றது என்று பேதுரு எண்ணுகிறார்.

இயேசு ஒரு வித்தியாசமான வகையான ராஜா, அவர் ஒரு வித்தியாசமான வகையான நாயகன் ஏனென்றால் மக்கள் தன்னை சிலுவையில் அறைந்து கொலை செய்ய அவர் அனுமதித்தார். எனவே அவர் பெரியவர். நாம் அவரைப் பின்பற்றுகிறோம். இயேசு நமது

பாவங்களுக்காக மரித்தார். ஒரு நாள் நாம் யாவரும் இயேசு ராஜா என்பதைக் காண்போம். இயேசு ஒரு வல்லமையுள்ள ராஜாவாக திரும்ப வருவார் (மாற்கு 8:38). ஆனால் மக்கள் முதலில் அவரை நிராகரித்தார்கள். அவரைத் தள்ளி விட்டார்கள். இயேசுவை அவர்கள் தங்கள் ராஜாவாக வைத்துக் கொள்ள விரும்பவில்லை. அவர்கள் அவரை சிலுவையில் அறைந்து கொன்றார்கள்.

நீங்கள் இந்த இயேசுவைப் பின்பற்றுவீர்களா? மக்கள் வெறுக்கும் இயேசுவை நீங்கள் பின்பற்றுவீர்களா? மக்கள் இயேசுவைப் பற்றி கெட்ட காரியங்களைச் சொல்லும்போது, நீங்கள் ‘இயேசுவே என் இரட்சகரும், ராஜாவுமாயிருக்கிறார் என்று சொல்லுவீர்களா?’

எவ்வகையான கிறிஸ்தவன்?

மாற்கு 8:34–38

உண்மையான கிறிஸ்தவன் என்று ஒரேயொரு வகைதான் உண்டு. ஒரு **கிறிஸ்தவன் கிறிஸ்துவைப்** பின்பற்றுகிறவனாயிருக்கிறான். கிறிஸ்து சிலுவைக்குச் சென்றார். அதோடு நமக்குள்ள சம்பந்தம் என்ன என்பதை இயேசு கூறுகிறார். (இயேசு கூறுபவைகளை விளக்க உதாரணங்களைக் கூறவும். அவைகள் சீஷர்களுக்கு எதைத் தெரிவிக்கின்றன என்பதைக் குறித்து சிந்திக்கவும். அவை நமது உண்மை வாழ்க்கையில் நமக்கு தெரிவிப்பதென்ன என்பதைக் குறித்த எண்ணிப் பாருங்கள்).

- **இயேசு, சுயமல்ல;** மாற்கு **8:34.** நான் இயேசுவுக்கு “ஆம்” என்று சொல்லும் போது, சுயத்திற்கு “இல்லை” என்று சொல்லுகிறேன். **எனக்கு** வாழ்க்கையில் நன்மையாயிருக்கும் என்பதற்காக நான் கிறிஸ்தவனாக மாற மாட்டேன். அது எனக்கு வாழ்க்கையில் நன்மையாய் இருக்கும் என்பதற்காக அல்ல. என் வாழ்க்கையில் எனக்கு எவ்வளவு கஷ்டம் வந்தாலும் நான் **இயேசுவை** பின்பற்றுவேன்.
- **சிலுவை, வாழ்க்கையல்ல;** மாற்கு **8:34,35.** நான் என் வாழ்க்கையை இயேசுவுக்காக அர்ப்பணிக்கிறேன். நான் **என்னுடைய** நேரம், தேவைகள், குடும்பம், என் வாழ்க்கை முதலியவற்றைப் பிடித்துக் கொண்டிருப்பதில்லை. நான் இயேசுவுக்குச் சொந்தமானதால் துன்பமனுபவிக்க தயாராய் இருக்கிறேன். இயேசு எனக்காக சிலுவைக்குச் சென்றதால், நான் அவருக்காக மரிக்க சம்மதிக்கிறேன்.
- **சுவிசேஷம், உலகமல்ல;** மாற்கு **8:35,36.** நான் இயேசுவைப் பின்பற்றும்போது எனக்கு ஒரு பெரிய வீடோ, அதிக பணமோ தேவையில்லை. இவை முக்கியமல்ல. ஏனென்றால் இயேசு என் “ஆத்துமாவை” (சதா காலமும் ஜீவிக்கும் உண்மையான நான்) இரட்சித்து இருக்கிறார். இப்போது மக்களுக்கு சுவிசேஷம் கூறுவதே எனக்கு முக்கியம். எல்லோரும் இயேசுவைக் குறித்து அறிந்து கொள்ள வேண்டும்.

நீங்கள் இந்த வகையானதொரு கிறிஸ்தவரா? வேறு வகையில்லை. நாம் இயேசுவை இந்த சிலுவையின் பாதையில் பின்பற்றாவிட்டால் அவர் நம்மைக் குறித்து என்ன நினைப்பார்?

மாற்கு **8:38.**

34 ஓர் விசேடக் காட்சி

▣ பின்னணி

இயேசுவே தேவனுடைய குமாரன் ஆகிய கிறிஸ்துவெனும் உண்மையை இறுதியில் சீஷர்கள் காண்கிறார்கள். மாற்கு சுவிசேஷத்தின் இரண்டாவது பகுதியில் கிறிஸ்து கட்டாயமாக **மரிக்க** வேண்டுமென்ற உண்மையை இயேசு காட்டுகிறார். அத்துடன் அவர்களும் தங்கள் வாழ்க்கையை கட்டாயமாக இயேசுவுக்காக அர்ப்பணிக்கத் தயாராக இருக்க வேண்டும் என்பதையும் அவர் கூறுகிறார். இதை அவர் **மாற்கு 8:31-38ல்** கூறியிருக்கிறார். இப்போது இயேசு அவர்களுக்கு இன்னும் அதிகமாகப் போதிப்பார்.

அவருடைய மூன்று சீஷர்களுக்கான முதல் பாடம் இது. இயேசு **அவருடைய வல்லமையையும், மகிமையையும் அவர்களுக்குக் காட்டுவார்.** சிலுவைக்குப் போகும் இயேசுவின் திட்டம் தவறானதொன்றல்ல. இயேசு தேவனுடைய குமாரன். அவருக்கு அதிகாரமிருக்கிறது. **சிலுவைக்குப் பின்** அவர் தேவனுடைய ராஜ்யத்தில் ராஜாவாக இருப்பார் 📖மாற்கு 9:1~13.

▣ முக்கிய விடயம்

இயேசு தேவனின் குமாரன். மரணத்தை ஜெயித்து, உயிரோடு மீண்டும் எழும்பும் அதிகாரம் அவருக்கிருக்கிறது. எனவே அவருக்கு செவிகொடுங்கள். அவர் சொல்வதை நம்புங்கள்!

★ நீங்கள் செய்ய வேண்டியது

சீஷர்கள் பயந்திருந்தார்களென்பது உங்களுக்கு நினைவிருக்கட்டும். இயேசு சிலுவையைக் குறித்து சொன்னதை அவர்கள் புரிந்து கொள்ளவில்லை. இயேசு சொல்வதை அவர்கள் விசுவாசிக்க வேண்டும். ஆனால் அவர் சொல்வது அவர்களுக்கு விளங்கவில்லை. நாம் எப்போதும் வேதாகமத்தை விசுவாசிக்க வேண்டுமென்பதை உங்கள் பேச்சைக் கேட்பவர்கள் அறிந்து கொள்ள அவர்களுக்கு உதவி செய்யவும். அது அவர்களுக்கு எப்போது கடினமாகத் தோன்றும் என்பதை குறித்து சிந்திக்கவும்.

✺ குறிப்புகள்

- **மாற்கு 9:1.** இயேசுவின் வல்லமையை சீஷர்களுக்குக் காட்டுவதற்கு ஏதாவதொன்று நடக்கும். இயேசு மரணத்தில் இருந்து உயிர்த்தெழும்போது, அல்லது அவர் பரிசுத்த ஆவியானவரை அனுப்பும்போது, அல்லது அவர் கி.பி. 70ல் எருசலேமை நியாயம் தீர்க்கும் போது அவர்கள் அதைப் புரிந்து கொள்பவர்கள் என்ற அர்த்தத்தில் அவர் அப்படிக் கூறியிருக்கக்கூடும். எங்களுக்கு அது தெரியாது. ஆனால், முக்கிய விடயம் **இயேசுவின் வல்லமையை அவர்கள் காண்பார்கள்** என்பதேயாகும். இப்போது இயேசு மூன்று பேர்களுக்கு அதை விசுவாசிக்க உதவி செய்வார்.

கற்றுக்கொள்ளுங்கள்: மாற்கு 9:1 – 13

அதற்காகத்தான் அவர் மலை உச்சிக்கு அவர்களை அழைத்துச் செல்கிறார்.

- **மாற்கு 9:2-3.** அநேக கிறிஸ்தவர்கள் இதை 'மறுரூபமாகுதல்' என்று அழைப்பார்கள். அதன் அர்த்தம் இயேசு தன் ரூபத்தை மாற்றினார் என்பதாகும். அவர்களால் நோக்கிப் பார்க்க முடியாத அளவு அவர் பிரகாசித்தார்.
- **மாற்கு 9:4. எலியாவும்,** மோசேயும் **தீர்க்கதரிசிகளையும்,** நியாயப் பிரமாணத்தையும் பிரதிநிதித்துவப் படுத்துகிறார்கள். அது பழைய ஏற்பாடு அங்கே இயேசுவுடனே கூட நிற்பது போன்றதாகும். எலியாவும், மோசேயும் இயேசுவுடன் உடன்படுகிறார்கள்.
- **மாற்கு 9:11-13.** பழைய ஏற்பாட்டில் எலியா இயேசுவுக்கு முன் வருவாரென்று மல்கியா கூறுகிறார். இயேசு எலியா **வந்து** விட்டாரென்று சொல்கிறார். மல்கியா கூறின "எலியா" யோவான் ஸ்நானகனே என்று இயேசு கற்பித்தார் (மத்தேயு 11:14).

பிரசங்கியுங்கள்: மாற்கு 9:1 – 13

இயேசு உண்மையில் தேவனுடைய குமாரன்

மாற்கு 9:2~7

⊞ நீங்கள் எப்போதாவது ஓர் விசேடக்காட்சி அல்லது திருவிழாவிற்குச் சென்றிருக் கிறீர்களா? (ஒரு உதாரணத்தை நினைக்கவும்) நீங்கள் சில அற்புதமான பொருட்களைக் கண்டீர்கள். அவைகளைப் பார்ப்பதில் நீங்கள் மிகுந்த மகிழ்ச்சியடைந்தீர்கள்.

இயேசு அவருடைய மூன்று சீஷர்களை ஓர் விசேடக்காட்சியைக் காண அழைத்துச் சென்றார். நாம் கண்டிருக்கக் கூடிய எல்லாக் காட்சிகளையும் விட அது மிக அற்புதமாயிருந்தது. ஆனால் இயேசு இதை வெறும் வேடிக்கைக்காகச் செய்யவில்லை. இரண்டு காரியங்களை சீஷர்கள் புரிந்து கொள்ள வேண்டுமென்பதே அதன் நோக்கமாகும்.

1. **இயேசு சிலுவையில் மரிப்பார்.**
2. **இயேசு தேவனுடைய குமாரன்.**

இவை இரண்டையும் ஒன்றாக சீஷர்கள் விசுவாசிக்க வேண்டும் என்று இயேசு விரும்பினார்.

- மலை மேல் நடந்த நிகழ்ச்சி இதை எப்படி அவர்களுக்குக்

கற்றுக் கொடுத்தது?

முதலில் அவர்களால் சரியாகப் புரிந்து கொள்ள முடியவில்லை. அவர்கள் அதிக பயமடைந்ததால் பிழையானவைகளைக் கூறினார்கள்.

📖 மாற்கு 9:5,6. ஆனால் தேவன் பரலோகத்திலிருந்து சொன்னதை அவர்கள் கேட்டார்கள்.

📖 மாற்கு 9:7. இயேசுவின் மகிமையையும், வல்லமையையும் அவர்கள் ஒரு போதும் மறக்க மாட்டார்கள். அவர் அதிக வெண்மையாகவும், பிரகாசமாகவும் காணப்பட்டார். பேதுரு சொன்னது (மாற்கு 8:29) சரியாகத்தான் இருக்கக்கூடும் - இயேசு, கிறிஸ்துவும், ராஜாவும், தேவனுடைய குமாரனுமாய் இருக்கிறார்.

> ≫ இயேசு நாம் இந்த இரண்டு காரியங்களை விசுவாசிக்க வேண்டுமென்று விரும்புகிறார். 1. அவர் சிலுவையில் கொடூரமாக மரித்தார். 2. அவர் உண்மையில் தேவனுடைய குமாரன்.
>
> அவரே ராஜா, ஒரு நாள் நாம் அவரை வெண்மையும் பிரகாசமுமானவராய்க் காண்போம். இயேசுவைக்குறித்த இந்த காரியங்களை நீங்கள் விசுவாசிக்கிறீர்களா?

எனவே அவர் சொல்வதைக் கேளுங்கள்

📖 மாற்கு 9:7~10

- நீங்கள் யார் சொல்வதைக் கேட்கிறீர்கள்? நீங்கள் யாரை விசுவாசிக்கிறீர்கள்? நீங்கள் யாரை நம்புகிறீர்கள்?

சீஷர்கள் இயேசுவை மெதுவாகத் தான் விசுவாசித்தார்கள். பேதுரு அவருடன் தர்க்கத்திலும் ஈடுபட்டார்! (மாற்கு 8:32). இப்பொழுது தேவன் பரலோகத்திலிருந்து அவர்களுக்குக் கூறுகிறார்: “என்னுடைய குமாரனுக்கு செவி கொடுங்கள்!” எலியாவும், மோசேயும் கூட அங்கே இருக்கிறார்கள். அது தேவன் சீஷர்களிடம் இப்படிக் கூறியது போலிருக்கிறது: “பழைய ஏற்பாடு இயேசுவுடன் ஒத்துப் போகிறது.” சீஷர்கள் பழைய ஏற்பாட்டை விசுவாசித்தார்கள். ஆனால், இயேசு சொல்வதெல்லாவற்றையும் அவர்கள் விசுவாசிக்கத் தயாராயில்லை.

அவர் மரிக்கப் போவதாகக் கூறும் போது, அவர்கள் இயேசுவை விசுவாசிக்க வேண்டும். அவர் மரித்தோரிலிருந்து உயிர்த்தெழப் போவதாகக் கூறும்போது அவர்கள் இயேசுவை விசுவாசிக்க வேண்டும். அது மிகவும் கடினமாகத் தோன்றுகிறது. அவர்கள் நினைப்பதை விட அது அதிக வித்தியாசமாயிருக்கிறது.

> ≫ இயேசு வேதாகமத்தில் கூறும் யாவற்றையும் நாம் **எப்போதும்** விசுவாசிக்க வேண்டும்.
>
> ≫ பரலோகத்திலிருந்து வந்த தேவனின் குரலை நினைவு கூறுங்கள்! தேவனுடைய குமாரனுக்கு செவிகொடுங்கள்! ஒரு நாள் இயேசு மீண்டும் வருவார். அவர் சூரியனைப் போல பிரகாசமாயிருப்பார். நீங்கள் அவருக்கு செவிகொடுத்தீர்களா என்று அவர் அறிய விரும்புவார். (இதை வைத்து உங்கள் பேச்சை கேட்பவர்களுக்கு சவால் விடுங்கள்).

35 விசுவாசமில்லாவிட்டால் வல்லமையில்லை

பின்னணி

இயேசு அவருடைய சீஷர்களுக்குக் கற்றுக்கொடுக்க விரும்பும் முக்கிய விடயம் இதுதான் - அவர்களுடைய மேசியா **மரிக்க** வேண்டும். 📖மாற்கு **8:31.** இயேசு அதை மாற்கு 9:31ல் மீண்டும் கூறுகிறார் (அத்துடன் மாற்கு 10:33,34).

இதனோடு எப்படி **மாற்கு 9:14-29** பொருந்துகிறது? அது எப்படி சீஷர்கள் இயேசுவை விசுவாசிக்க வேண்டுமென்று கூறுகிறது?

இயேசு இப்போதுதான் தனது மூன்று சீஷர்களுக்குத் **தன் வல்லமையைக்** காட்டியிருக்கிறார்.

அவர்கள் இயேசு சொல்வதைக் கேட்டு அவருடைய திட்டத்தின் மேல் நம்பிக்கை வைக்கவேண்டும். 📖மாற்கு **9:1–13.**

இப்போது இயேசு மலையிலிருந்து கீழே இறங்கி வந்து மற்ற சீஷர்களை சந்திக்கிறார். அவரில்லாமல் அவர்கள் என்ன செய்திருக்கிறார்கள்? 📖 மாற்கு **9:14–29.** அவர்கள் தங்கள் விசுவாசத்தை அவர் மேல் வைத்திருக்கவில்லை!

முக்கிய விடயம்

இயேசுவை விசுவாசிக்காமல் நம்மால் ஒன்றும் செய்ய முடியாது.

நீங்கள் செய்ய வேண்டியது

1. இயேசுவுக்கு மட்டுமே குணமாக்கும் வல்லமையுண்டு. இயேசுவுக்கு மட்டுமே அசுத்த ஆவிகளுக்கு கட்டளையிடும் அதிகாரமுண்டு. நாம் இயேசுவிடம் குணமாக்கும்படி, அல்லது அசுத்த ஆவியை விரட்டும்படி **கேட்கலாம்**. நாம் தனியாக இதைச் செய்ய முடியாது? 📖 மாற்கு **9:29.**

   இதை நீங்கள் பேசும் மக்களுக்கு விளக்கும் அவசியம் உள்ளதா?

2. சில வேளைகளில் மக்கள் எங்களுக்கு பெரும் விசுவாசம் தேவையென்று கூறுவார்கள். இந்தப் பிள்ளையின் தகப்பன் **இயேசுவின்** வல்லமையே முக்கியமானது என்பதை நமக்குக் காட்டுகிறான். நீங்கள் எப்பொழுதும் கேட்போரிடம் தங்களை அல்ல, இயேசுவை நோக்கிப் பார்க்கச் சொல்லுங்கள்.

குறிப்புகள்

- **மாற்கு 9:17,18,20.** இந்த மனிதனுக்குள் ஒரு அசுத்த ஆவி இருக்கிறது. இது நாங்கள் வலிப்பு என்று அழைக்கும் வியாதியல்ல. வலிப்பு மாற்கு 9:18ல் குறிப்பிட்டுள்ள அறிகுறிகளைக் கொண்டிருக்கலாம். எனவே வலிப்பு நோயுள்ள ஒருவரை நாம் அசுத்த ஆவி உள்ளவரென்று நினைத்து விடக் கூடாது. வலிப்பு வியாதிக்கு மருந்து அவசியம்.

இயேசுவின் மேல் விசுவாசம் இல்லா விட்டால் வல்லமையில்லை

மாற்கு 9:14~19

இயேசு சற்று முன் மலை மேல் இருந்தார். அவருடைய மூன்று சீஷர்கள் அவரின் பெரும் வல்லமையைக் கண்டார்கள். இப்போது மலையை விட்டு கீழே இறங்கி வந்திருக்கிறார்கள். அவர்கள் எதைக் காண்கிறார்கள்.

பிசாசு அந்த பிள்ளையை தன் கட்டுப்பாட்டுக்குள் வைத்து இருப்பதாகத் தோன்றுகிறது. அவனுக்குள் இருப்பது ஒரு பயங்கரமான அசுத்த ஆவி. மற்ற சீஷர்களால் ஒன்றும் செய்ய முடியவில்லை. எனவே கூட்டம் அவர்களுடன் வாக்குவாதத்தில் ஈடுபடுகிறது.

சீஷர்களுக்கு அந்த அசுத்த ஆவியின்மேல் வல்லமையில்லை. **ஏனென்றால் அவர்களுக்கு இயேசுவின் மேல் விசுவாசம் இல்லை.** மாற்கு 9:18,19.

அவர்கள் இயேசுவை நம்பாததே பிரச்சினையாகும். அவர் மரித்து, மீண்டும் உயிர்த்தெழுவதாகக் கூறினார். ஆனால் அவர்கள் அதை நம்பவில்லை. நாம் இயேசுவின் மரணத்திலும், உயிர்த்தெழுதலிலும் விசுவாசமில்லாதிருந்தால், நமக்கு வல்லமையிருக்காது. இயேசுவின் மரணமும், உயிர்த்தெழுதலும் மாத்திரமே பிசாசை மேற்கொள்ளக் கூடிய ஒரே வல்லமையாகும்!

» பிசாசு உங்கள் வாழ்க்கையை தன் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க விரும்புகிறான். அவன் எப்போதுமே இந்த சிறுவனுக்குள் வந்தது போல,மக்களுக்குள் வருவதில்லை. ஆனால் அவன் நம்மை மற்ற விதங்களில் தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க விரும்புவான். (அவைகளை விளக்குக. உதாரணங்கள்: மந்திரவாதியின் பயம், பண ஆசை.) உங்களுக்கு இயேசுவின் மேல் விசுவாசமில்லாவிட்டால் பிசாசுகளுக்கு விரோதமாக உங்களுக்கு வல்லமை இருக்காது.

» நம்மில் அநேகர் இயேசுவை நம்புகிறோம். ஆனால் நம்முடைய விசுவாசத்தை அவர் மேல் வைக்க மறந்து விடுகிறோம். அப்போது நமது வாழ்க்கையில் நமக்கு வல்லமை இருக்காது. நாம் மின்கலம் ('பெட்டரி') இல்லாததொரு வானொலியைப் போன்றோ, அல்லது மின்சாரமில்லாத ஒரு தொலைக் காட்சியைப் போலிருப்போம். நாம் ஜெபிக்க வேண்டும். இயேசுவின் வல்லமையின் மேல் நம்பிக்கை வைக்க வேண்டும். மாற்கு 9:29.

இயேசுவின் மேலுள்ள விசுவாசம் சிறுவனை குணமாக்கியது!

மாற்கு 9:20~29

இயேசுவுக்கு போதுமான வல்லமை இருக்கின்றதா என்பதைக் குறித்து தகப்பனுக்குத் தெரியாது! நிச்சயமாக இயேசுவுக்கு இருக்கிறது! ஆனால் அந்த தகப்பனுக்கு இயேசுவின் வல்லமையின் மேல் **விசுவாசம் இருக்கிறதா?** மாற்கு 9:22,23

- அந்த மனிதன் எவ்வளவு விசுவாசத்தைக் காட்ட

➡ பிரசங்கியுங்கள்: மாற்கு 9:14 – 29

வேண்டும்? மாற்கு 9:24

தகப்பன் முழுமையாக நம்பாமல் இருக்கலாம். ஆனால் இயேசு அவன் விசுவாசத்தைக் கண்டு சந்தோஷப்படுகிறார். உடனே அவர், அந்தச் சிறுவனை விட்டு வெளியே போகும்படி அசுத்த ஆவிக்கு கட்டளையிட, அப்போது அந்தச் சிறுவன் குணமடைகிறான்.

» நீங்கள் உங்கள் விசுவாசம் பெலவீனமாயிருப்பதாக உணருகிறீர்களா? இந்த மனிதனைப்போல் நீங்கள் உணருகிறீர்களா? பயப்பட வேண்டாம். உங்கள் விசுவாசம் பெலவீனமாயிருப்பதற்கு இயேசுவிடம் மன்னிப்பு கேளுங்கள். உங்கள் பலவீனமான விசுவாசத்தை பலமுள்ள இயேசுவின் மேல் வையுங்கள். **நீங்கள்** எவ்வளவு பலவீனமாயிருக்கிறீர்கள் என்பதை நினைத்துக் கொண்டிருக்க வேண்டாம். **இயேசுவைப்** பற்றி அதிகமாக சிந்தியுங்கள். அவருடைய பெரும் அன்பையும், வல்லமையையும் விசுவாசியுங்கள். அவர் உங்கள் ஜெபத்தைக் கேட்பார். அப்பொழுது அவருடைய வல்லமை உங்கள் வாழ்க்கையில் கிரியை செய்யும்.

36 பெரியவனா அல்லது சிறியவனா?

▣ பின்னணி

இயேசுவே கிறிஸ்து என்று இப்போது சீஷர்கள் அறிந்து கொண்டிருக்கிறார்கள். அவர் எப்படிப்பட்ட கிறிஸ்து என்பதை சீஷர்கள் அறிந்து கொள்ள வேண்டுமென்று இப்போது இயேசு விரும்புகிறார். எனவே...

- இயேசு மீண்டும் அவர்களிடம் அவர் மரிக்க வேண்டிய தேவனுடைய திட்டத்தைக் கூறுகிறார். மாற்கு 9:30-32.
- அவர்கள் எப்படியிருக்க வேண்டுமென்பதை மீண்டும் இயேசு அவர்களுக்குப் போதிக்கிறார். அவர்கள் கிறிஸ்துவைப் பின்பற்றுகிறவர்களாயிருப்பதால், அவர்களும் அவரைப் போலிருக்க வேண்டும். அவர்கள் சிறியவர்களாக இருக்க விரும்ப வேண்டும். மாற்கு 9:33-41.

இதுவெ மாற்கு 8,9,10 அதிகாரங்களின் பின்னணியாகும். இந்த இரண்டு காரியங்களையும் புரிந்து கொள்வதற்கு சீஷர்களுக்குக் கடினமாயிருக்கிறது. அவை சீஷர்கள் எதிர்பார்த்ததை விட மிக வித்தியாசமானவை. இவைகளை அநேகமுறை இயேசு தன் சீஷர்களுக்குக் கற்றுக் கொடுக்க வேண்டியிருந்தது.

மாற்கு 8:10.

⊙ முக்கிய விடயம்

இயேசு கிறிஸ்தவர்களை வேலைக்காரர்களாக, சிறியவர்களாக, கடைசியானவர்களாக இருக்க அழைக்கிறார்.

★ நீங்கள் செய்ய வேண்டியது

இது பிரசங்கிப்பதற்கு கடினமான ஒன்றாகும். அநேக சபைகளில் தங்களை முக்கியமானவர்களாக நினைக்கும் மக்கள் இருக்கிறார்கள். அநேகமாக அவர்கள் பணம், நிலம் முதலிய சொத்துக்களுடைய மக்களாய் இருப்பார்கள் அல்லது, அவர்கள் மூப்பர்களாகவோ, திருத்தொண்டர்களாகவோ இருப்பார்கள். அப்படியான மக்களுக்கு இயேசுவின் வார்த்தைகளை ஏற்றுக் கொள்வது கடினமாயிருக்கும். தேவன் உங்களுக்கு உண்மையை பிரசங்கிக்க உதவி செய்ய வேண்டுமென்று ஜெபியுங்கள். சாந்தமாயிருக்க உங்களுக்கு உதவும்படி ஜெபியுங்கள். “பெரிய” மனிதர்கள் “சிறிய” மனிதர்களாக மாற தேவன் அவர்களுக்கு உதவி செய்யயும்படி ஜெபியுங்கள்.

ஒருவேளை நீங்களும்கூட இந்தப் பாடத்தை படிக்க வேண்டியவராய் இருக்கக் கூடும். நாம் தேவனுடைய வார்த்தையை பிரசங்கித்தால், நாம் தேவனுடைய வேலைக்காரராயிருக்கிறோம். நாம் முக்கியமானவர்களல்ல. மக்கள் இயேசுவின் மேல் அன்பு செலுத்துவதை நாம் விரும்ப

கற்றுக்கொள்ளுங்கள்: மாற்கு 9:30 –41

வேண்டும். நாம் நம்மை மற்ற மக்களுக்கு மேலாக வைத்துப் பார்க்கக் கூடாது.

குறிப்புகள்

- **மாற்கு 9:36,37.** இயேசு சிறு பிள்ளைகளை பெரியவர்களை விட அதிகமாக நேசிப்பதில்லை. அவர் ஒரு பாடத்தைக் கற்றுக் கொடுப்பதற்காக சிறு பிள்ளைகளைப் பயன்படுத்து கிறார். சிறு பிள்ளையைப் போல இருக்க நினைக்கும் எவரையும் நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று இயேசு விரும்புகிறார். “சிறு பிள்ளை” என்பதன் அர்த்தம் சிறு பிள்ளையைப் போன்றதொரு மனிதன் என்பதாகும். தன்னைக் குறித்து மற்ற மக்கள் என்ன நினைக்கிறார்கள் என்று அவன் நினைப்பதில்லை. இப்படியான மக்களை அவருக்கு சொந்த மாக்கிக் கொள்ள இயேசு அவர்களை அழைக்கிறார். நாம் “சிறியவர்களை” இயேசுவிடம் வரும்படி அழைக்கும் போது நாம் இயேசுவைப் போலிருக்கிறோம். அது அவரையே நாம் வரவேற்பதைப் போன்றதாகும்! மாற்கு 10:13~16.

பிரசங்கியுங்கள்: மாற்கு 9:30 –41

இயேசு பெரியவரா அல்லது சிறியவரா?

மாற்கு 9:30~32

இயேசு எவ்வளவு உயர்ந்தவரென்று நாமறிவோம். ஆயினும் அவர் **சிறியவராக** மாறினார். அவர் ஒன்றுமில்லையென்று அனைவரும் நினைக்க இடமளித்தார். அவருடைய சொந்த சீஷர்களில் ஒருவனாலேயே அவர் காட்டிக் கொடுக்கவும் பட்டார். இயேசு மக்கள் அவரை வெறுக்கவும், இறுதியில் சிலுவையில் அறைந்து கொல்லவும் அவர்களுக்கு இடம் கொடுத்தார். **அவர் அந்த வகையான கிறிஸ்துவாக மாறினார்.**

» அதற்காக இயேசுவை நீங்கள் நேசிக்கிறீர்களா? அவர் ஒன்றுமில்லாமல் போனதற்காக இயேசுவைத் துதியுங்கள்.

நாம் பெரியவரா அல்லது சிறியவரா?

மாற்கு 9:33~35

- நீங்கள் சீஷர்களைக் குறித்து வாசிக்கும் போது, எப்படி உணருகிறீர்கள்?

அவர் எவ்வளவு “சிறியவராக” மாறப் போகிறாரென்பதை இயேசு சீஷர்களிடம் அப்போதுதான் கூறியிருந்தார். இப்போது சீஷர்கள்

"பெரியவர்களாக" விரும்புகிறார்கள். இயேசு எவ்வளவு துக்கப்பட்டு இருப்பார்!

இயேசுவின் ராஜ்யத்தில் சீஷர்கள் விசேஷித்தவர்களாக இருக்க விரும்பினார்கள். அவர்களுக்கு உயர்ந்த பதவிகள் தேவைப்பட்டன. அவர்கள் விசேஷமான மனிதர்கள் என்று எல்லோரும் அறிந்து கொள்ள வேண்டுமென்று அவர்கள் விரும்பினார்கள். நாமும் அவர்களைப் போலிருக்கக் கூடும். (அவர்களைப் போல நாமிருக்கக் கூடிய வழிகளைக் குறித்துப் பேசவும்).

> நீங்கள் **இயேசுவை** அதிகமாக பிரியப்படுத்த விரும்புகிறீர்களா? அப்படியானால் நாம் 'கடைசியானவர் களாகவும்' 'வேலைக்காரர்களாகவும்' மாற வேண்டுமென்று இயேசு கூறுகிறார் ~ அவரைப்போல. (அது எதைக் காட்டும் என்பதைக் குறித்து கதைக்கவும்.)

நாம் பெரியவர்களையா அல்லது சிறியவர்களையா ஏற்றுக் கொள்கிறோம்?

மாற்கு 9:36~41

சீஷர்களைப்போல நாமும் முக்கியமானவர்களாய் மாற திட்டம் இடக் கூடும். ஆனால், இயேசுவுக்கு அது விருப்பமில்லை. நாம் நம்மைக் குறித்து எண்ணுவதை அவர் விரும்புவது இல்லை. அவர் அக்கறை காட்டும் மக்களுக்கு நாம் சேவை செய்ய வேண்டுமென்றே அவர் விரும்புகிறார். யார் அவர்கள்?

நாம் இயேசுவைப் போல "சிறியவர்களாய்" இருந்தால் நாம் "சிறியவர்களான" மக்களை ஏற்றுக் கொள்வோம். (இயேசு சிறுவர்களைக் குறித்து மட்டும் கூறவில்லை என்பதை விளக்கவும்.) இயேசு மிக முக்கியமானவரானபடியால் அவர் சிறுபிள்ளைகள் மேல் அக்கறை செலுத்த மாட்டார் என்று சீஷர்கள் நினைத்தார்கள்! ஆனால் நாம் **அனைவரின் மேலும்** அக்கறை செலுத்த வேண்டுமென்று இயேசு விரும்புகிறார். நாம் "சிறியவர்களை" ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று அவர் விரும்புகிறார்.

> ஒருவரும் அக்கறை காட்டாத மக்களைக் குறித்து சிந்திக்கவும். இயேசு அவர்களைக் குறித்து அக்கறை உள்ளவராயிருக்கிறார்! நாம் அவர்களுக்கு நற்செய்தியை அறிவிக்க வேண்டுமென்று இயேசு விரும்புகிறார். நாம் இயேசுவிடம் வரும்படி அவர்களை அழைக்க வேண்டும்.

மாற்கு 9:38ல் யோவான் சொல்வது உங்களுக்குப் புரிகின்றதா? இந்த மனிதனை யோவான் ஏற்றுக் கொள்ளவில்லை. அத்துடன் யோவான் தான் சரியென்று நினைக்கிறார். யோவான் வல்லமையை தனக்கு மட்டும் வைத்துக் கொள்ள விரும்புகிறார். ஆனால் இயேசுவிற்கு சேவை செய்யும் எவரையும் நாம் ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று இயேசு விரும்புகிறார்.

37 நரக ஆபத்து

பின்னணி

சீஷர்கள் "பெரியவர்களாக" இருக்க வேண்டுமென்று விரும்புகிறார்கள். இயேசு அவர்கள் "சிறியவர்களாக" இருக்கவேண்டுமென்று கூறுகிறார். இயேசுவின் ராஜ்ஜியத்தில் அவர்கள் முதல் ஸ்தானத்தில் இருப்பதாக சீஷர்கள் நினைக்கக்கூடாது. எல்லோரும் அவருக்கு முக்கியம் என்பதை அவர்கள் காண வேண்டுமென்பதை இயேசு விரும்புகிறார். இயேசு சிறு பிள்ளைகளைக் குறித்தும் கூட அக்கறை உள்ளவராயிருக்கிறார். மாற்கு 9:33-41.

சீஷர்கள் நினைக்கும் விதம் மிகவும் **ஆபத்தானது** - மாற்கு 9:42-50.

முக்கிய விடயம்

நீங்கள் நரகத்திற்குப் போகாமல் இருப்பதை உறுதி செய்து கொள்ளுங்கள். நரகத்திற்குப் போவதை விட நமக்குள்ள யாவையும் இழந்து போவது நல்லது.

நீங்கள் செய்ய வேண்டியது

நாம் ஒரு உண்மைக் கிறிஸ்தவனை பயப்படுத்த தேவையில்லை. ஒரு உண்மையான கிறிஸ்தவன் நரகத்திற்கு போக மாட்டான். ஆனால், நாம் மற்றவர்களை எச்சரிக்க வேண்டும். சிலர் தாங்கள் அநேக வருடங்களாகக் கிறிஸ்தவர்களாய் இருப்பதாக நினைக்கிறார்கள். ஆயினும் அவர்கள் சிந்திக்கும் விதத்தை மாற்றிக் கொள்ளாவிட்டால் அவர்கள் நரகத்திற்கே போவார்கள்.

குறிப்புகள்

- **மாற்கு 9:42.** தானியத்தை மாவாக்குவதற்கு மக்கள் ஒரு எந்திரக்கல்லை உபயோகிப்பர்.. அது பாரமானதொரு கல்லாகும்.
- **மாற்கு 9:43-47.** பாவத்தை நாம் எதிர்க்க வேண்டுமென்பதை இது காட்டுகிறது. பாவத்தை நிறுத்துவதற்கு நாம் நம்மால் முடிந்த எல்லாவற்றையும் செய்ய வேண்டுமென்று இயேசு கூறுகிறார். பாவம் மிகப் பயங்கரமானது. அது நரகத்திற்கு நம்மை வழி நடத்துகிறது. நாம் நம்மைக் காயப்படுத்திக் கொள்வதை இயேசு விரும்ப **மாட்டார்.** நாம் நமது கையை வெட்டிப் போட்டால், அது நம்மை பாவம் செய்வதிலிருந்து காப்பாற்றாது. பாவம் நமக்கு **உள்ளே,** நமது இருதயத்தில் இருந்து வருகிறது என்பதை இயேசு கற்றுக் கொடுக்கிறார். மாற்கு 7:21.
- **மாற்கு 9:49.** ஒரு பலி உப்பினால் பரிசுத்தமாக்கப்படுவது போல, எல்லோரும் அக்கினியால் பரிசுத்தமாக்கப்படுவார்கள். (சுத்தமாக்கப்படுதல்). தேவன் அக்கினியைப் போன்றவர். அவர் பரிசுத்தமும், தூய்மையுமானவர். இயேசு நம்மைப் பரிசுத்தப் படுத்தினால் மாத்திரமே நம்மால் தேவனை சந்திக்க ஆயத்தமாய் இருக்க முடியும்.
- **மாற்கு 9:50.** ஒரு உப்புக் குவியல் அதன் சாரத்தை இழந்து போகலாம். மழை உப்பைக்

? கற்றுக்கொள்ளுங்கள்: மாற்கு 9:42 – 50

கழுவி அதைக் குப்பையாக்கிப் போடலாம். நாமும் அது போலிருக்கக் கூடும். நாம் வெளியே உப்பைப் போல் காணப்பட்டாலும் சாரமற்று இருக்கலாம். நாம் ஒரு கிறிஸ்தவனைப் போலக் காணப்பட்டாலும். இயேசுவைப் போல் இல்லாமல் இருக்கலாம்.

→ பிரசங்கியுங்கள்: மாற்கு 9:42 – 50

என்னுடைய சிறியவர்களை துன்பப்படுத்த வேண்டாம்

மாற்கு 9:42

⊞ நாம் மிருகங்களின் குட்டிகளை அடித்தால் அந்த மிருகங்கள் எவ்வளவு கோபப்படும் என்பதை நினைத்துப் பாருங்கள்.

இயேசுவும் அவருடைய "சிறியவர்களை" குறித்து அப்படித்தான் இருப்பார். அவரை நம்பும் ஒவ்வொரு மனிதனும் அவருக்கு மிகவும் மதிப்பு வாய்ந்தவனும், விசேஷமானவனும் ஆக இருக்கிறான். அவர்களைத் துன்பப்படுத்தினால் இயேசு மிகவும் கோபப்படுவார்.

நீங்கள் எப்போதாவது யாரையாவது இடறப் பண்ணியோ, அல்லது தள்ளியோ கீழே விழப்பண்ணி இருக்கிறீர்களா? ஒரு இளம் கிறிஸ்தவனை அப்படிச் செய்வது எவை? அவர்களை பாவத்துக்குள் விழப்பண்ணுபவைகள் என்ன? அல்லது, அவர்களை இயேசுவை விட்டு திரும்பப் பண்ணுபவைகள் யாவை? (விடைகள் - நாங்கள் கெட்ட உதாரணங்களாய் இருக்கலாம், நாம் இரக்கமில்லாமல் நடந்து கொள்ளலாம். நம்மிடம் கிசுகிசு... முதலியன இருக்கலாம்)

இயேசு ஏன் சீஷர்களை எச்சரித்தார்? சீஷர்கள் தங்களை மிக முக்கியமானவர்களாகக் கருதினார்கள். இயேசுவின் “சிறியவர்களை” அவர்கள் **ஏற்றுக் கொள்ள விரும்பவில்லை.** இது “சிறியவர்களை” இயேசுவை விட்டு அப்பால் இருக்கப் பண்ணும். சீஷர்கள் மாறாவிட்டால், இயேசு மிகவும் கோபப்படுவார். இயேசுவைக் கோபப்படுத்துவதை விட கடலில் மூழ்குவது நல்லது.

நரகத்திற்குப் போக வேண்டாம்

மாற்கு 9:43~50

சீஷர்கள் இன்னும் பிழையான கருத்தைக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் மாறாவிட்டால் நரகத்திற்குப் போவார்கள். அவர்கள் மிக ஆபத்தான நிலையிலிருக்கிறார்கள். சீஷர்கள் இன்னும் இயேசுவின் ராஜ்ஜியத்தில் முக்கியமானவர்களாக இருக்கவே விரும்புகிறார்கள். அதை அவர்கள் விட வேண்டும். உங்களுக்கு முக்கியமானவராக இருக்க விருப்பமிருந்தால், அப்போது உங்களால் இயேசுவின் ராஜ்ஜியத்திற்குள் **பிரவேசிக்க முடியாது**. எனவே நீங்கள் நரகத்திற்குப் போவீர்கள்.

» நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? நரகத்திற்குப் போவதிலும் பார்க்க நாம் **ஒன்றுமில்லாதவர்களாய்** மாறுவது நல்லதல்லவா? நரகத்திற்குப் போவதிலும் பார்க்க, ஒரு காலை அல்லது ஒரு கண்ணை இழப்பது நல்லதல்லவா? நரகத்திற்குப் போவதிலும் பார்க்க, மக்கள் உங்களை வெறுப்பதை சகிப்பது நல்லதல்லவா?

(நரகம் எப்படிப்பட்டது என்பதைக் குறித்துக் கதைக்கவும். மாற்கு 9:48. கனிவாகப் பேசுங்கள். ஆனால் தீவிரமாக இருங்கள். சத்தமிட வேண்டாம். நீங்கள் அவர் மேல் அன்பு செலுத்துவதையும், அதனால் அவர்கள் நரகத்திற்குப் போவதை நீங்கள் விரும்பவில்லை என்பதையும் நீங்கள் பேசும் மக்களுக்குக் காண்பியுங்கள். நரகம் என்பது ஒருபோதும் அணையாமல் எரியும் அக்கினியாகும். அது உங்கள் உட்புறத்தைத் தின்னும் ஒரு புழுவைப் போன்றதாகும்.)

மாற்கு 9:50. நாம் உண்மையான கிறிஸ்தவர்களாயிருக்க வேண்டும். நாம் சாரமற்ற வெறும் உப்பைப் போல காட்சியளிப்பதில் பிரயோஜனமில்லை. எல்லோரும் நீங்கள் ஒரு கிறிஸ்தவன் என்று நினைக்கலாம். ஆனால் நீங்கள் **உள்ளே** ஒரு கிறிஸ்தவனாயிருக்க வேண்டும். அப்படி இல்லாவிட்டால். நீங்கள் நரகத்திற்குப் போவீர்கள்.

» இதை நினைத்து ஜெபியுங்கள். நீங்கள் உண்மையான ஒரு கிறிஸ்தவனாய் இருப்பதை தடை செய்வது என்ன? எதை வெட்டிவிட வேண்டியிருக்கிறது? அது கஷ்டமாயிருக்கும். ஆனால், **நரகத்திக்குப் போக வேண்டியதில்லை!**

? கற்றுக்கொள்ளுங்கள்: மாற்கு 10:1 –12

38 விவாகரத்து செய்ய வேண்டாம்!

பின்னணி

இயேசு அவருடைய **சீஷர்களுக்குக்** கற்றுக் கொடுக்க விரும்புகிறார். கிறிஸ்து யார் என்பதை அவர்கள் புரிந்து கொள்ள வேண்டுமென்று அவர் விரும்புகிறார். அத்துடன் அவர்கள் எப்படி கிறிஸ்துவைப் பின்பற்ற வேண்டும் என்பதையும் அவர்கள் அறிந்து கொள்ள வேண்டுமென்று அவர் விரும்புகிறார்.

அவர்கள் **சிறியவர்களாக** மாறப் பழக வேண்டுமென்பதை நாம் பார்த்தோம். 📖 மாற்கு 9:33~50.

இயேசு மீண்டும் அவர்களுக்கு இந்தப் பாடத்தை கற்றுக் கொடுப்பார். 📖 மாற்கு 10:13~16.

பாவம் மிகத் கொடியது என நாம் பார்த்தோம். 📖 மாற்கு 9:42~48. இயேசுவைப் பின்பற்றும் எவரும் பாவத்தைக் குறித்து அசதியாயிருக்க முடியாது.

அப்படியானால், **திருமணத்தில்** இருக்கும் பாவம் என்ன? 📖 மாற்கு 10:1~12

முக்கிய விடயம்

கிறிஸ்தவர்கள் தேவனுடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படிய வேண்டுமென்று இயேசு கூறுகிறார். நாம் விவாகரத்து செய்யக் கூடாது என்று தேவன் கூறுகிறார்.

நீங்கள் செய்ய வேண்டியது

நாமும் சீஷர்களைப் போல் இருக்கிறோம். நாம் மற்றவர்கள் செய்வதையும் அவர்கள் சொல்வதையும் கேட்டு அதன்படி செய்யக் கூடும். மற்ற மக்கள் விவாகரத்து செய்கிறார்கள். எனவே நாமும் அப்படிச் செய்யலாமென்று (பிழையாக) நினைக்கிறோம். இயேசு தேவனுடைய வார்த்தை மாறவில்லை என்று நமக்குப் போதிக்கிறார். நாம் சாக்கு சொல்லாமல் நமது திருமண வாக்குறுதிகளைக் கடைப்பிடிக்க வேண்டும்.

தேவன் இதைக் குறித்து சொல்லுவதை மக்கள் மதிக்க உங்களால் எப்படி அவர்களுக்கு உதவி செய்ய முடியுமென்பதை சிந்திக்கவும்.

குறிப்புகள்

- **மாற்கு 10:2.** இது இயேசுவை சிக்க வைப்பதற்கானதொரு கேள்வி பரிசேயருக்கு உண்மையில் இதைக் குறித்த உண்மையை அறிந்து கொள்ளும் நோக்கம் இருக்கவில்லை.
- **மாற்கு 10:3,4.** 📖 உபாகமம் 24:1~4. மோசே அதை அனுமதித்ததின் நோக்கத்தை அவர்கள் மாற்றக்கூடாது! மோசே விவாகரத்தை ஏற்றுக் கொள்ளவில்லை! ஆனால் விவாகரத்து நடந்தது.

கற்றுக்கொள்ளுங்கள்: மாற்கு 10:1 - 12

மோசமானக் **காரியங்கள் நடப்பதை தடுக்கவே** தேவன் மோசே மூலமாக அதை அனுமதித்தார். திருமணத்தைக் குறித்த தேவனின் தெளிவான வார்த்தைகள் ஆதியாகமம் 2:24ல் இருக்கின்றன. மாற்கு **10:7,8.**

- மாற்கு 10:11,12. தேவன் விவாகரத்தை ஏற்றுக் கொள்வதில்லை. நாம் நமது திருமண பந்தத்தை முறித்து வேறொருவரை திருமணம் செய்தால் நாம் தேவனுடைய ஏழாவது கற்பனையை மீறுகிறோம். ஏனென்றால் நாம் இன்னொருவருடன் உடலுறவு வைத்துக் கொள்கிறோம். (மத்தேயு 19:9. நமது கணவன், அல்லது மனைவி வேறொரு நபருடன் உடலுறவு வைத்துக் கொண்டால் நாம் மீண்டும் திருமணம் செய்யலாம்).

பிரசங்கியுங்கள்: மாற்கு 10:1 - 12

நாம் பாவத்தை வெறுக்க வேண்டும்

மாற்கு **10:1~5**

- சில கிறிஸ்தவர்கள் இப்படி நினைக்கிறார்கள்: 'இயேசு என்னை மன்னிப்பார். எனவே நான் இந்தப் பாவத்தை செய்தால் பரவாயில்லை.' இதற்கு நீங்கள் எப்படி பதிலளிப்பீர்கள்?

பிதாவைப் போலவே இயேசுவும் பாவத்தை வெறுக்கிறார். இயேசு தேவனாவார். இயேசுவை பின்பற்று கிறவர்கள் பாவத்தை வெறுக்க வேண்டும். நாம் பரிசேயரைப் போலிருக்கக் கூடாது. நாம் தேவனுடைய கட்டளைகளை தவிர்க்க முயற்சி செய்யக்கூடாது. நாம் சாக்கு சொல்லக் கூடாது.

- யூதர்களிடமிருக்கும் பிழை என்னவென்று இயேசு கூறுகிறார்? மாற்கு **10:5.**

» நாம் கடின இருதயமுள்ளவர்களாய் இருக்கக் கூடாது. அவருடைய கட்டளைகளைப் பின்பற்ற உங்களுக்கு உதவும்படி தேவனிடம் கேளுங்கள். தேவனுடைய எல்லாக் கட்டளைகளும் நல்லவையே ~ அவை நாம் நல்ல முறையில் வாழ்வதற்கு நமக்கு உதவி செய்கின்றன.

விவாகரத்து செய்ய வேண்டாம்

மாற்கு **10:6~12**

விவாகரத்து செய்ய வேண்டாமென்று இயேசு சொல்கிறார். ஏனென்றால் தேவன் எப்போதுமே “விவாகரத்து செய்ய வேண்டாம்” என்றே கூறி இருக்கிறார். இயேசு தேவனின் எந்த கற்பனையையும் மாற்றவில்லை. ஏனென்றால் அவை யாவும் குறைவு அற்றவையாய் இருந்தன.

- ஆணுக்கும் பெண்ணுக்குமான தேவனின் திட்டமென்ன? மாற்கு 10:6~8.
- நாம் விவாகரத்து செய்து, மீண்டும் திருமணம் செய்யும் போது எந்த கற்பனையை மீறுகிறோம். மாற்கு 10:11,12.
- எனவே இயேசு நமக்கு என்ன கூறுகிறார்? மாற்கு 10:9.

இயேசுவின் வார்த்தைகள் விளங்கிக் கொள்ள கடினமானவை கள் அல்ல. அவைகளை **ஏற்றுக் கொள்ள** உங்களுக்குக் கடினமாய் இருக்கின்றதா? சீஷர்களுக்கு அது கடினமாயிருந்தது. அவர்கள் மீண்டும் அதைக் குறித்து இயேசுவிடம் கேட்டார்கள். மாற்கு 10:10. நாம் தேவனுடைய வார்த்தையை கைக்கொள்ள வேண்டுமென்று இயேசு கூறுகிறார். நாம் கிறிஸ்தவர்களாயிருக்க விரும்பினால், இயேசு சொல்வதை நாம் பின்பற்ற வேண்டும்.

(நீங்கள் பேசுகிறவர்களுக்குக் கேள்விகள் இருக்கலாம். அவர்களுக்கு பதில் சொல்லுவது உங்களுக்கு கடினமாய் இருக்கலாம். எனவே இங்கே சில உதாரணங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.)

- **நான் எனது கணவன்/மனைவியின் அன்பை இழந்து விட்டால் என்ன செய்வது?** இது விவாகரத்துக்கான தொரு காரணமல்ல. அன்பு செலுத்த கடினமாக முயற்சி செய்யுங்கள். நடைமுறை வழிகளில் அன்பைக் காட்டுங்கள். தேவனுடைய உதவிக்காக ஜெபியுங்கள்.
- **என்னுடைய கணவன்/மனைவி இன்னொருவருடன் உடலுறவில் இருந்தால் என்ன செய்வது?** நீங்கள் விவாகரத்து செய்து விட்டு (மீண்டும் திருமணம் செய்யலாம் என்று) இயேசு கூறுகிறார். ஆயினும், உங்களுக்கு முடியுமானால், ஒப்புரவாகி உங்கள் திருமண வாழ்க்கையை சரி செய்து கொள்ளுங்கள்.
- **நான் பாவம் செய்து விட்டேன். நான் எனது கணவன்/ மனைவியை விவாகரத்து செய்து விட்டேன். தேவன் என்னை மன்னிப்பாரா?** ஆம்! அவர் எல்லாப் பாவத்தையும் மன்னிப்பார். அவரை இப்போது திருப்திப்படுத்த முயற்சி செய்யுங்கள். மீண்டும் திருமணம் செய்ய வேண்டாம். நீங்கள் மீண்டும் திருமணம் செய்து இருந்தால், இந்தத் திருமண வாழ்க்கையில் நல்ல விதமாக நடக்க அதிக முயற்சி செய்யுங்கள்.
- **எனக்கு இரண்டு மனைவிகள் இருக்கிறார்கள்? நான் என்ன செய்வது?** இது ஒரு கஷ்டமான கேள்வி. இரண்டு மனைவிகள் வைத்திருப்பது பிழையாகும். ஆனால் அவர்கள் இருவரையும் நீங்கள் பராமரிக்க வேண்டும். நீங்கள் இருவருக்கும் வாக்குறுதி அளித்திருக்கிறீர்கள்.

39 சிறுபிள்ளைகளைப் போல தேவனின் பரிசை ஏற்றுக் கொள்

பின்னணி

எவ்விதமான மனிதன் தேவனுடைய ராஜ்ஜியத்திற்குள் பிரவேசிப்பான்? எந்த விதமான மனிதன் இயேசுவைப் பின்பற்றுவான்? இதுவரை சீஷர்கள் அதைப் புரிந்து கொள்ளவில்லை.

மாற்கு 9:33-37. மாற்கு 9:37 பார்க்கவும். இப்போது மாற்கு 10:13 பற்றி சிந்திக்கவும்.

சீஷர்கள் நினைத்த விதத்தில் என்ன பிழையிருக்கிறது? அவர்களுடைய பிழையான சிந்தனைகளை அநேக முறை மாற்கு சுவிசேஷத்தில் காண்கிறோம். **மாற்கு 9:35.**

முக்கிய விடயம்

பரலோகம் போக வேண்டுமானால், நீங்கள் சிறுபிள்ளையைப் போல் இருக்க வேண்டும். தேவனுடைய பரிசை நீங்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

நீங்கள் செய்ய வேண்டியது

பெரியவர்களைப் போலவே சிறு பிள்ளைகளும் முக்கியமானவர்கள் என்று தேவன் நினைக்கிறார். இதை மக்கள் புரிந்து கொள்ள நாம் எப்படி அவர்களுக்கு உதவி செய்ய முடியும்?

எல்லோரும் தாங்கள் முக்கியமானவர்களென்று நினைக்க விரும்புகிறார்கள். ஆயினும், இயேசு நாம் நம்மை சிறிதேனும் முக்கியமற்றவர்களாய் கருத வேண்டுமென்று விரும்புகிறார். நீங்கள் பேசும் மக்கள் சிறு பிள்ளைகள் போல மாற தேவன் உதவி செய்ய வேண்டுமென்று ஜெபியுங்கள்.

குறிப்புகள்

- **மாற்கு 10:13.** சீஷர்கள் மக்களை "கடிந்து கொண்டார்கள்" அல்லது "திட்டினார்கள்". அதன் அர்த்தம் அவர்கள் மக்களை விரும்ப வில்லை. எனவே அவர்களை துரத்தினார்கள். ஆயினும் இயேசு சீஷர்களைக் கடிந்து கொண்டார்.
- **மாற்கு 10:14.** இயேசு சிறு பிள்ளைகளைக் குறித்து கதைக்கும் போது, அவர் அதை ஒரு உதாரணமாகக் காட்டுகிறார். நாம் **சிறுபிள்ளைகளைப்** போல் இருக்க வேண்டும். (**மாற்கு 9:42 பார்க்கவும்**). எல்லா மக்களையும் போல, சிறு பிள்ளைகளும் இயேசுவிற்கு முக்கியமானவர்கள்.

இயேசு சிறு பிள்ளைகள் முக்கியமானவர்கள் என்று கூறுகிறார்

மாற்கு 10:14

உங்கள் கிராமத்தில் வாழும் சில வித்தியாசமான மக்களைக் குறித்து சிந்தியுங்கள். அதாவது வித்தியாசமான வேலைகள் செய்பவர்கள், பெரியவர்கள், சிறியவர்கள், ஆண்கள், பெண்கள் முதலானோர். நீங்கள் யாரை மிக முக்கியமானவர்களாகக் கருதுகிறீர்கள்? யாரை முக்கியமற்றவர்களாகக் கருதுகிறீர்கள்?

- மக்கள் தாங்களே மிக முக்கியமானவர்களாயிருக்க வேண்டுமென்று நினைக்கிறார்களா?
- முக்கியமான மக்கள் முக்கியமில்லாத மக்களைக் குறித்து என்ன நினைக்கிறார்கள்?
- மாற்கு **10:13.** முக்கியமான மக்கள் சிறு பிள்ளைகளைக் குறித்து என்ன நினைக்கிறார்கள்? மாற்கு **10:14.** இயேசு என்ன சொல்லுகிறார்?
- எனவே இயேசு யார் முக்கியமானவர்களென்று கூறுகிறார்?

எல்லோரும் சமம் என்று இயேசுவுக்குத் தெரியும். நாம் சிறு பிள்ளைகளை விடவோ, அல்லது மற்றவர்களை விடவோ சிறந்தவர்களென்று நாம் நினைப்பதை அவர் விரும்புவதில்லை.

உங்கள் கிராமத்திலோ, அல்லது சபையிலோ உள்ளவர்கள் மற்றவர்களைவிட அவர்கள் சிறந்தவர்கள் என்று நினைக்கிறார்களா? ஏன் அவர்கள் இந்த விதமாக சிந்திக்கிறார்கள்.

அவர்கள் பிள்ளைகளைப் போலிருக்க வேண்டுமென்று இயேசு கூறுகிறார்

மாற்கு 10:15

பெருமையுள்ளவர்கள் பரலோகம் போக முடியாது. தங்களை முக்கியமானவர்களாக நினைப்பவர்கள் பரலோகம் போக முடியாது. நாம் பரலோகம் பேவதற்கு **சிறுபிள்ளைகள்** போல் இருக்க வேண்டும்.

நாம் எப்படி பரலோகம் போக முடியும்? மாற்கு 10:15ல் இயேசு உபயோகிக்கும் வார்த்தைகளைப் பாருங்கள். “**ஏற்றுக் கொள்ளா விட்டால்**” அல்லது “**பெற்றுக் கொள்ளாவிட்டால்**”. ஒரு சிறு பிள்ளை ஒரு பரிசை **ஏற்றுக் கொள்வதைப்** போல, நாம் அதை ஏற்றுக் கொள்ள வேண்டும். அப்படித்தான் நாம் பரலோகம் போக முடியும்.

சிறுபிள்ளைகள் எப்படி பரிசுகளை ஏற்றுக் கொள்கிறார்களென்று நினைத்துப் பாருங்கள். அவர்களுக்குப் பெருமையில்லை. அவர்கள் பரிசை பெற்றுக் கொள்வதற்குத் தகுதியற்றவர்கள் அல்ல என்று அவர்கள் நினைப்பதில்லை. அதை அவர்கள் உடனே பெற்றுக் கொள்வார்கள். அவர்கள் அந்த பரிசுக்கான விலையைக் கொடுக்க

➡ பிரசங்கியுங்கள்: மாற்கு 10:13-16

நினைப்பதில்லை. அதை அவர்கள் **வெறுமனே பெற்றுக் கொள்வார்கள்.** அவர்கள் முகத்தில் புன்னகையாய் இருக்கும். அவர்கள் “நன்றி” என்று சொல்லுவார்கள்.

» பரலோகத்திற்குப் போகும் ஒரே வழி தேவன் நமக்குக் கொடுக்கும் யாவையும் ஏற்றுக் கொள்வதாகும். நாம் சிறு பிள்ளைகள் போலிருக்க வேண்டும்.

அதன் அர்த்தம் என்ன?

- கிராமத்திலுள்ள சிறிதேனும் முக்கியமற்ற ஒரு சிறுபிள்ளைக்கு தேவனின் பரிசை ஏற்றுக் கொள்ள முடியும்.
- மோசமான மனிதன் தேவனின் பரிசை ஏற்றுக்கொள்ள முடியும்.
- நமது அறிவு, அல்லது ஞானஸ்நானம் நமக்கு இந்த தேவனின் பரிசைப் பெற்றுக் கொடுக்காது

நாம் எல்லோரும் ஒரே மாதிரியானவர்கள் நாம் யாவரும் தேவனிடமிருந்து ஒரு இலவசப் பரிசைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

40 அவன் நல்லவனென்று நினைக்கும் ஒரு பணக்காரன்

▪ பின்னணி

எப்படிப் பரலோகத்தில் பிரவேசிப்பது என்று இயேசு நமக்கு **கூறியிருக்கிறார்.** 📖 மாற்கு **10:14–15.** அந்த ஐசுவரியவான் சிறுபிள்ளையைப் போன்றவனா? 📖 மாற்கு **10:17–22.**

பிற்பாடு இயேசு பணக்காரர்களைக் குறித்துப் போதிக்கிறார். அவர்களால் பரலோகத்திற்குள் பிரவேசிக்க முடியுமா? 📖 மாற்கு **10:23–31.** மாற்கு 10:31இல் இயேசு இப்படியாக இந்தப் போதகத்தை முடிக்கிறார்.

⊙ முக்கிய விடயம்

தேவன் ஏற்றுக்கொள்வதற்கு அவர்கள் கிட்டத்தட்ட நல்லவர்களாய் இருப்பதாக சில மக்கள் நினைக்கிறார்கள். இயேசு அவர்கள் நினைப்பது பிழையென்று காட்டுகிறார்.

★ நீங்கள் செய்ய வேண்டியது

நமது நற்செயல்களைக் குறித்து தேவன் என்ன நினைக்கிறார்? தேவனுடைய தரத்தை நம்மால் எட்ட முடியாது என்பதை எப்படி மக்கள் புரிந்து கொள்ள நாம் அவர்களுக்கு உதவி செய்ய முடியும்?

✹ குறிப்புகள்

- **மாற்கு 10:18.** “நல்லவனாய்” இருப்பது எவ்வளவு கடினமான காரியம் என்பதை அந்த மனிதன் உணர வேண்டுமென்று இயேசு விரும்பினார். இயேசு அவன் நல்லவனல்ல என்ற அர்த்தத்தில் இதைக் கூறவில்லை. அவர் தேவனல்ல என்ற அர்த்தத்திலும் இயேசு கூறவில்லை!
- **மாற்கு 10:21.** இந்த மனிதன் அவன் நினைக்கும் அளவுக்கு ஒரு நல்ல மனிதனல்ல என்பதை இயேசு அறிவார். எனவே அவர் அவனுக்கு ஒரு **சோதனையைக்** கொடுக்கிறார். அது அவனுடைய பாவத்தை அவனுக்குக் காட்டும். அது பணக்காரன் என்ற விதத்தில் அவன் தன் பணத்தையும், பதவியையும் அதிகம் நேசிப்பதை அவனுக்குக் காட்டும். அந்த மனிதன் கிட்டத்தட்ட நல்லவன் என்ற அர்த்தத்தில் அப்படிக் கூறவில்லை! அந்த மனிதனிடம் ஒரேயொரு குறைதான் இருக்கிறது என்ற அர்த்தத்திலும் அவர் அப்படிக் **கூறவில்லை!**

➡ பிரசங்கியுங்கள்: மாற்கு 10:17–22

அந்த மனிதனின் பிரச்சினை

📖 மாற்கு 10:17~20

அந்த மனிதனின் பிரச்சினை அவன் பெரிய பணக்காரனாயிருந்தது அல்ல. அவனுடைய மோசமான பிரச்சினை அவன் தான் **மிகவும் நல்லவன்** என்று நினைப்பதே ஆகும்.

📖 மாற்கு 10:18. இயேசு எப்படி அந்த மனிதனிடம் கேள்வி கேட்கிறாரென்று பாருங்கள். அவனுக்கு “நல்ல” என்பதின் அர்த்தம் தெரியவில்லை. அவன் தான் **பெரும்பாலும்** தேவனால் ஏற்றுக்கொள்ள கூடிய **நல்லவன்** என்று நினைக்கிறான். அவன் தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்ளுவதாக நினைக்கிறான்.

ஆயினும் அதில் அவனுக்கு உறுதியில்லை. சிலவேளை அவன் அதில் எதையாவது தவற விட்டிருக்கக் கூடும். எனவே அவன் இயேசுவிடம் **ஓடிவந்து** நித்திய ஜீவனைப் பெற்றுக் கொள்ள இன்னும் **என்ன செய்ய** வேண்டும் என்று கேட்கிறான்.

> அநேகர் இந்த மனிதனைப் போல் சிந்திக்கிறார்கள். அவர்கள் செய்த எல்லா நல்ல காரியங்களையும் குறித்து அவர்கள் கதைப்பார்கள். நாம் பெரும்பாலும் நல்லவர்கள் என்று நினைப்போமானால், நாம் தேவனை விட்டு வெகு தூரத்தில் இருக்கிறோம் என்பதே உண்மையாகும். நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். 📖 மாற்கு 10:14~15.

இயேசுவின் பதில்

📖 மாற்கு 10:21~22

அந்த மனிதன் **வெளியில் மாத்திரமே** நல்லவனாயிருப்பதை இயேசு அறிவார். எனவே அவனுடைய பிழையை அவனுக்குக் காட்டுவதற்கு ஒருவழியைத் தெரிந்தெடுக்கிறார்.

> ⊞ கற்பனை செய்து பாருங்கள்! நீங்கள் விரும்பும் ஏதோவொன்றை அடைவதற்கு ஒரு ஏணியில், அல்லது மரத்தில் நீங்கள் ஏறுகின்றீர்கள். நீங்கள் இப்போது ஏறத்தாழ உச்சியை அடைந்து விட்டீர்கள். அப்பொழுது ஓர் நண்பர் கீழேயிருந்து சத்தமிடுகிறார்: ‘நீ கீழே இறங்கி வந்தால்தான் உச்சியை எட்ட முடியும்!.’ நீங்கள் ஒருபோதும் அவரை நம்ப மாட்டீர்கள்.

இந்த மனிதனும் அப்படித்தான். அவன் ஏறத்தாழ உச்சியை அடைந்து விட்டதாக நினைக்கிறான். இயேசு சொல்கிறார்: “நீ எப்படி பரலோகம் போகலாமென்று நான் உனக்கு சொல்லித் தருகிறேன். நீ எல்லாவற்றையும் விற்க வேண்டும்”. அது உண்மையில் அவனை உச்சிக்கு கொண்டு செல்லாது. மாறாக, அது அவனை நேராக ஏணியின் **கீழே** கொண்டு போய்விடும். அப்போது அவனிடம் ஒன்றுமிருக்காது. அவன் சிறு பிள்ளையைப் போலிருப்பான். எனவே யாரும் அவனை முக்கியமானவனாகக் கருத மாட்டார்கள். ஆகவே அவன் அதை ஒருகாலும் செய்யப் போவதில்லை.

➡ பிரசங்கியுங்கள்: மாற்கு 10:17-22

ஆயினும் **பரலோகம் போவதற்கு அது ஒன்றே வழியாகும்.**

பணக்காரனாயிருப்பது மிக முக்கியமென்று மக்கள் நினைத்தார்கள். ஒருவர் பணக்காரனாயிருந்தால், தேவன் அவரை ஆசீர்வதிப்பதாக அவர்கள் எண்ணினார்கள். இந்த மனிதன் அவனுக்கிருந்த யாவற்றையும் விட்டுவிட்டு கடைசியானவனாக இருக்க விருப்பப்பட மாட்டான். 📖மாற்கு **10:31.**

சுருக்கம்: அவன் பூரணப்படுவதற்கு அவன் கடைசியாக செய்ய வேண்டிய ஒரு காரியத்தை இயேசு சொல்கிறார். அவன் எவ்வளவு பெருமையுள்ளவனாயிருக்கிறான் என்பதை இயேசு அவனுக்குக் காட்டுகிறார். நாம் பரலோக ராஜ்ஜியத்திற்குள் போக வேண்டுமானால் **நாம் நமது பாவத்தைக் காண வேண்டும். நாம் நல்லவர்களென்று நினைக்கக் கூடாது.**

» நீங்கள் ஏணியின் அடிக்கு வர ஆயத்தமா, அல்லது இன்றும் உங்கள் நற்செயல்களைக் குறித்து பெருமைப்பட்டுக் கொண்டிருக்கிறீர்களா?

அவர்கள் ஒரு நன்மையுமே செய்ய வில்லை என்று அறிந்திருக்கும் மக்களுக்கு தேவன் நித்திய ஜீவனைக் கொடுக்கிறார். தாழ்மையும், தேவன் தருவதை ஏற்றுக் கொள்ள விரும்புகிறவர்களுமான மக்களுக்கு தேவன் நித்திய ஜீவனைக் கொடுக்கிறார்.

கற்றுக்கொள்ளுங்கள்: மாற்கு 10:23-31

41 நீங்கள் கடைசியாக இருக்க விரும்புகிறீர்களா?

பின்னணி

மாற்கு 10:17-22. பரலோகத்திற்குள் பிரவேசிக்க அந்த பணக்கார மனிதன் சிறுபிள்ளையைப் போல மாற வேண்டும்.

மாற்கு 10:32-34. அவர் மரிக்கப் போவதைக் குறித்து இயேசு சீஷர்களுக்குக் கூறுவது இது மூன்றாவது முறையாகும். அவர்கள் இயேசுவை ஒரு கடினமான பாதையில் பின்பற்ற வேண்டும். அவர்கள் கடைசியாக இருக்க விரும்ப வேண்டும். (மாற்கு 8:31-38, மாற்கு 9:30-35).

மாற்கு 10:23-31.

இவை யாவும் எப்படி ஒன்று சேருகின்றன என்பதை உங்களால் காண முடிகிறதா?

முக்கிய விடயம்

இயேசுவைப் பின்பற்ற வேண்டுமானால், **நீங்கள் கடைசியாக இருக்க வேண்டும் - மாற்கு 10:31.**

நீங்கள் செய்ய வேண்டியது

1. மாற்கு 10:31ஐப் போன்ற இந்த அதிகாரத்தின் முக்கிய வசனங்களை எப்போதும் தேடுங்கள். **மாற்கு 9:35** ஐ மீண்டும் பார்க்கவும்.

2. சீஷர்கள் எல்லாவற்றையும் விட்டு விட்டார்கள். ஆனால் அவர்கள் இன்னும் அந்த பணக்கார மனிதனைப் போலிருந்தார்கள். அவர்கள் முதலாவதாயிருக்க விரும்பினார்கள். நாமும் அவர்களைப் போல இருக்கின்றோமா? இதைப் போன்ற பிழையான எண்ணங்களை எந்த விதங்களில் நாம் வைத்துக் கொண்டிருக்க முடியும்?

குறிப்புகள்

- **மாற்கு 10:25, 27.** இயேசுவின் உதாரணம் நமக்கு சிரிப்பை ஏற்படுத்துகிறது. உண்மையிலேயே அது சாத்தியமற்றதுதான்! ஒட்டகம் பெரிய குதிரையைப் போன்ற தொன்றாகும். மக்கள் பாலை வனத்தில் ஒட்டகத்தின் மேல் சவாரி செய்வார்கள்.

- **மாற்கு 10:30.** இயேசுவின் வாக்குறுதிக்கு அர்த்தம் என்ன? அது கிறிஸ்தவர்கள் பெரும் பணக்காரர்களாக மாறுவார்கள் என்பதல்ல. நாம் இயேசுவுக்காக நமது வீட்டை விட்டு விட்டால் அவர் நமக்கு 100 வீடுகளை கொடுக்க மாட்டார். ஆனால் அநேக கிறிஸ்தவ இல்லங்களில் நம்மை ஏற்றுக் கொள்வார்கள்! அதுபோல இயேசு பல விதங்களில் நம்மை ஆசீர்வதிப்பார். இயேசு நமக்கிருக்கும்போது நாம் ஐசுவரியவான்களாய் இருப்பதை உணருவோம். **யாக்கோபு 2:5, பிலிப்பியர் 3:7,8.**

- **மாற்கு 10:30.** "துன்புறுத்தப்படுதல்" என்பது நாம் இயேசுவைப் பின்பற்றுவதால் மக்கள் நம்மை துன்புறுத்த முயற்சிப்பார்கள் என்பதாகும்.

➡ பிரசங்கியுங்கள்: மாற்கு 10:23-31

ஊசியின் காதில் ஒட்டகம் நுழைய முடியாது

📖மாற்கு 10:23~27

மாற்கு 10:25 உடன் நீங்கள் இணங்குகிறீர்களா?

உண்மையில் இயேசு சொல்வது சரியே. ஆனால், பணக்காரனுக்கு இரட்சிக்கப்படுவது **ஏன்** "சாத்தியமற்றது" (மாற்கு 10:27)?

மாற்கு 10:22ல் வரும் பணக்கார மனிதனை உங்களுக்கு நினைவு இருக்கும். அவன் தேவன் மேல் அன்பு செலுத்துவதை விட **அவன் மேல்** அன்பு செலுத்தினான். அவன் தேவனை விட அதிகமாக **தன் பணத்தின்** மேல் அன்பு செலுத்தினான்.

- நீங்கள் பேசும் மக்கள் தேவனை விட எதின்மேல் அதிக அன்பு செலுத்துகிறார்கள்? இது அவர்கள் இரட்சிப்புக்குத் தடையாயிருப்பதை அவர்களுக்குக் கற்றுக் கொடுங்கள்.

(அவர்களுக்கு கற்றுக்கொடுக்கும் போது மாற்கு 10:27ஐ ஞாபகப்படுத்திக் கொள்ளுங்கள். மக்களை மாற்றும்படி தேவனிடம் கேளுங்கள்.)

இயேசுவை பின்பற்றுபவர்கள் கடைசியாயிருக்க வேண்டும்

📖மாற்கு 10:28~31

"அப்படியானால், யார் இரட்சிக்கப்படக் கூடும்" என்ற கேள்வியை மாற்கு 10:26ல் சீஷர்கள் கேட்கிறார்கள். ஒரு பதில் இதோ: தாங்கள் நல்லவர்கள் அல்லது முக்கியமானவர்களென்று நினைக்காதவர்கள்.

- தேவனுடைய ராஜ்ஜியத்தில் **தனக்கொரு** இடம் கிடைக்க தான் தகுதியுள்ளவனென்று பேதுரு நினைக்கின்றாரா? 📖மாற்கு 10:28

இயேசுவைப் பின்பற்றியதால் பேதுரு தனக்கொரு இடத்தைப் பரலோகத்தில் **சம்பாதிக்கவில்லை.** அவர் அந்த பணக்கார மனிதனைப் போல் சிந்திக்கக் கூடாது! 📖மாற்கு 10:31.

> ⊠ நீங்கள் இயேசுவுக்காக எல்லாவற்றையும் நன்றாகச் செய்து இருப்பதாக நினைக்கிறீர்கள்? நீங்கள் இதைச் செய்திருக்கிறீர்கள், அதைச் செய்திருக்கிறீர்கள். எனவே, நீங்கள் மிக நல்ல மனிதராகத்தானிருக்க வேண்டும். இல்லை, இயேசு யாரை முதல் ஸ்தானத்தில் வைக்கிறார்? (மாற்கு 10:31)

- ஆனால், இயேசுவைப் பின்பற்றினபோது சீஷர்கள் **ஏதாவது நல்லதைச்** செய்தார்களா? 📖மாற்கு 10:28.

ஆம், அவர்கள் ஏதோ ஒரு நல்ல காரியத்தை செய்திருக்கிறார்கள். 📖மாற்கு 10:29,30. அவர்கள் எல்லாவற்றையும் விட்டு விட்டு இயேசுவைப் பின்தொடர்ந்து இருக்கிறார்கள். இதைப்போல இயேசுவை விசுவாசிக்கும் எவரையும் இயேசு நன்றாகப் பார்த்துக் கொள்வார். நாம் எதற்கும் தகுதியற்றவர்கள். ஆனால் இயேசு நம்மைக் குறித்து மகிழ்ச்சியடைகிறார்.

➡ பிரசங்கியுங்கள்: மாற்கு 10:23-31

» கிறிஸ்தவர்களை ஊக்கப்படுத்துங்கள்! அவர்கள் அநேக துன்பங்களை அனுபவிக்க நேரிடலாம் (மாற்கு 10:30 பிரச்சனைகளை வாக்களிக்கிறார்!), ஆனால் இயேசு அவர்களைப் பார்த்துக் கொள்வார். அவர்கள் இழப்பதை விட அதிகமாக ஆதாயப்படுத்திக் கொள்வார்கள்.

கிறிஸ்தவர்கள் பணம் படைத்தவர்களாகவும், வசதி நிறைந்தவர்களாகவும் இருப்பார்கள் என்று இயேசு சொல்லவில்லை. ஒரு வீடு கூட இல்லாமலிருந்த இயேசுவையே நாம் பின்பற்றுகிறோம் (இதை நீங்கள் பேசும் மக்கள் புரிந்து கொள்வதை உறுதி செய்து கொள்ளவும் ~✱ குறிப்புகளைப் பார்க்கவும்.)

கிறிஸ்தவர்களுக்கு இயேசு கொடுத்திருக்கும் எல்லா நன்மையானவைகளையும் குறித்து சிந்தித்து, அவைகளுக்காக இயேசுவைத் துதியுங்கள்!

42 இயேசு ஏன் வந்தார்?

பின்னணி

விரைவில் இயேசு எருசலேமுக்குப் போவார் - மரிப்பதற்காக. மாற்கு 10:32~34.

அவர்கள் எருசலேமுக்கு ஆட்சி செய்வதற்காகப் போகப்போவதாக **சீஷர்கள்** இன்னும் நினைக்கிறார்கள்! அவர்கள் மிக முக்கியமான மனிதர்களாகப் போவதாக அவர்கள் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் இயேசுவின் ராஜ்ஜியத்தில் ஆட்சி செலுத்துபவர்களாக இருப்பார்கள் என்று எண்ணுகிறார்கள்.

மீண்டும் ஒருமுறை இயேசு அவர்களுக்கு உண்மையைக் கூறுகிறார். அவர்கள் அவரைப் போல மாற வேண்டுமென்று இயேசு சீஷர்களுக்கு கூறுகிறார். அவர்கள் முதலாவதாக அல்ல, ஆனால் கடைசியாக இருக்கத் தயாராய் இருக்க வேண்டும்.

மாற்கு 10:31. அவர்கள் ஊழியம் செய்ய தயாராயிருக்க வேண்டும், ஆட்சி செய்வதற்கல்ல.

மாற்கு 10:35~45.

முக்கிய விடயம்

இயேசு **ஊழியம்** செய்யவும், அவருடைய மக்களுக்காக மரிக்கவும் வந்தார். எனவே அவர்களும் ஊழியம் செய்ய விரும்ப வேண்டும்.

நீங்கள் செய்ய வேண்டியது

இந்த பகுதியில் இரண்டு சக்தி வாய்ந்த செய்திகள் காணப் படுகின்றன. நாம் **இயேசு எவ்வளவு அற்புதமானவர்** என்பதைக் காண்பிக்க வேண்டும். அப்போது மக்கள் அவர் மேல் அன்பு செலுத்தி, அவரை நம்புவார்கள். **கிறிஸ்தவர்கள்** இயேசுவைப் போல **ஊழியம் செய்யப் பழக வேண்டுமென்று** நாம் விரும்ப வேண்டும்.

குறிப்புகள்

- **மாற்கு 10:38.** “குடிக்கும் பாத்திரத்தில் குடிக்கவும்”, “ஸ்நானம்” இயேசு இந்த உதாரணங்களை அவருடைய **மரணத்தைக்** குறித்துப் பேசுவதற்கு உபயோகிக்கிறார். அவர் தேவனுடைய கோபாக்கினை என்னும் பாத்திரத்தில் குடிப்பார் அவர் தேவனுடைய நியாயத்தீர்ப்பின் வெள்ளத்தில் “ஞானஸ்நானம்“ பண்ணப்படுவார்.
- **மாற்கு 10:39-40.** சீஷர்கள் பிழையான பதிலைக் கொடுக்கிறார்கள். இயேசு அனுபவிக்க வேண்டிய துன்பத்தை அவர்களால் அனுபவிக்க முடியாது என்பது உண்மைதான். ஆயினும் இயேசு அவர்கள் துன்பம் அனுபவிப்பார்களென்று அவர்களை எச்சரிக்கிறார். இயேசுவால் அவர்களுக்கு

கற்றுக்கொள்ளுங்கள்: மாற்கு 10:32–45

நல்ல பதவிகளை வாக்களிக்க முடியாது. ஆனால் அவர்கள் துன்பம் அனுபவிப்பார்கள் என்பதைக் குறித்து உறுதி அளிக்க முடியும்.

- **மாற்கு 10:45.** அவர் **எதற்காக** வந்தார் என்பதை இயேசு கூறுவது (மாற்கு சுவிசேஷத்தில்) இது மூன்றாம் முறையாகும். அவர் சுவிசேஷத்தைப் **பிரசங்கிக்க** வந்தார் (மாற்கு 1:38). **பாவிகளை** அழைக்க வந்தார் (மாற்கு 2:17). இப்போது அவர் **ஊழியம் செய்யவும், மரிக்கவும்** வந்ததாக இயேசு கூறுகிறார்.
- **மாற்கு 10:45.** “மீட்பு அல்லது மீட்டு”. ஒரு அடிமையை விடுவிப்பதற்காக மீட்புப் பணம் செலுத்துவார்கள். இயேசு பாவிகளை விடுவிக்க வந்தார். அதற்குரிய விலையாக அவருடைய சொந்த இரத்தத்தை அவர் செலுத்தினார்.

பிரசங்கியுங்கள்: மாற்கு 10:32–45

இயேசு மரிக்க வந்தார்

மாற்கு 10:32~34,45

மாற்கு 10:32ஐ கற்பனை செய்யவும்! **இயேசு** முன்னால் நடக்கிறார். அவருக்கு எருசலேமில் என்ன நடக்குமென்பதை இயேசு அறிவார். ஆனால் அவர் அதற்குத் தயாராயிருக்கிறார். **சீஷர்கள்** இயேசுவின் பின்னே செல்கிறார்கள். அவர்கள் பயப்படுகிறார்கள். அவர்களுக்கு எருசலேமிற்குப் போக விருப்பமில்லை.

எனவே இயேசு சீஷர்களுடன் பேசுவதற்கு நிற்கிறார். அவர் **மரிப்பதற்கு வந்தார்** என்பதை அவர்கள் அறிந்து கொள்ள வேண்டுமென்று இயேசு விரும்பினார்! இயேசுவை மக்கள் கொலை செய்யும்போது, அது பிழையாக நடந்த ஒரு செயலாய் இருக்காது. அது தேவனின் திட்டமாகும். இயேசு ஒரு நாயகனாக மரிக்க மாட்டார். அவர் ஒரு கெட்ட மனிதனாக மரிப்பார்.

» மக்கள் அவர் மேல் துப்புவார்களென்று இயேசு அறிவார். அவர்கள் அவரைப் பார்த்து நகைத்து, அவரை சபிப்பார்கள் என்பது அவருக்குத் தெரியும். அப்படியிருந்தும் இயேசு சிலுவைக்கு ‘ஆம்’ என்று சொல்கிறார். ஏனென்றால் நம்மை இரட்சிப்பதற்கான ஒரே வழி

சிலுவையே. அவர் சிலுவைக்கு ஆம் என்று சொன்னதற்காக நீங்கள் அவர் மேல் அன்பு செலுத்துகிறீர்களா? நீங்களும் சிலுவைக்கு 'ஆம்' என்று சொல்லுவீர்களா? கஷ்டமாயிருக்கும் போது கூட நீங்கள் இந்த அன்புள்ள இரட்சகரின் பின் செல்வீர்களா?

இயேசு சேவை செய்ய வந்தார்

மாற்கு 10:45

ராஜாக்கள் சேவை செய்வதில்லை. இராஜாக்கள் உயர்ந்த ஆசனங்களில் அமர்ந்திருப்பார்கள். இராஜாக்கள் மக்களை அவர்களுக்கு சேவை செய்யும்படி கூறுவார்கள்!

அப்படித்தான் யாக்கோபும், யோவானும் நினைத்தார்கள். இயேசு ராஜாவாயிருக்கிறார் - அவர்கள் அவர் பக்கத்தில் அமர வேண்டுமென்று விரும்பினார்கள். மற்றவர்கள் மேல் ஆட்சி செலுத்த வேண்டுமென்றும் அவர்கள் விரும்பினார்கள் (மாற்கு 10:35-41).

ஆனால் இந்த இராஜா வித்தியாசம் ஆனவர். இயேசு ராஜா **சேவை செய்ய** வந்தார். அவர் தனக்காக வரவில்லை. அவர் மற்றவர்களுக்காக வந்தார். தன் உயிரை அவர்களுக்காகக் கொடுக்கும்படி அவர் வந்தார். எனவே சீஷர்களுக்கு இயேசுவிடம் ஒரு பாடம் இருக்கிறது. மாற்கு 10:42-45.

இயேசு கௌரவத்தைத் தேடி வரவில்லை, ஆனால், துன்பப் படவே வந்தார். இயேசு வேலைக்காரர்களை வைத்துக் கொள்ள வரவில்லை, ஆனால், வேலை செய்ய வந்தார். அவருடைய சீஷர்கள் **இயேசுவைப் போலிருக்க விரும்பினார்களா?**

நாம் **முக்கியமானவர்களாய்** இருக்க விரும்புவதை இயேசு விரும்புவதில்லை. நாம் **மற்றவர்களுக்கு சேவை செய்ய** வேண்டுமென்று அவர் விரும்புகிறார். நாம் மற்ற மக்களுக்கு **மேலாக** இருப்பதை அவர் விரும்பவில்லை. நாம் அவர்களுக்குக் **கீழாயிருக்க** வேண்டும் என்பதே அவர் விருப்பமாகும். அவர் உங்களுக்கு ஊழியம் செய்ததற்காக நீங்கள் இயேசுவை நேசிக்கிறீர்களா? எனவே நீங்களும் ஒரு ஊழியக்காரனாக இருப்பீர்களா? இதை எப்படி உங்கள் வாழ்க்கையில் வெளிப்படுத்துவீர்கள்?

இயேசு கொடுக்க வந்தார்

மாற்கு 10:45

இயேசு நம்மைப் போன்ற மனிதர்களுக்காகத் தன் வாழ்க்கையை கொடுக்க வந்தார். அவருடைய மக்களை விடுதலையாக்கும் பொருட்டு அதற்கான விலையை இயேசு செலுத்தினார். நாம் வாழ வேண்டுமென்பதற்காக அவர் மரித்தார். அவர் அவ்வளவு அதிகமாகக் கொடுத்ததற்காக நீங்கள் இயேசுவை நேசிப்பீர்களா? எனவே அவருடைய இலவச பரிசை நீங்கள் ஏற்றுக் கொள்வீர்களா? அவருடைய அன்பை, மன்னிப்பை, வாழ்க்கையை நீங்கள் **ஏற்றுக்கொள்வீர்களா?**

கற்றுக்கொள்ளுங்கள்: மாற்கு 10:46–52

43 இயேசு குருட்டுக் கண்களைத் திறக்கிறார்

பின்னணி

மாற்கு 8:10ல் இயேசு சீஷர்களுக்குப் போதிக்கிறார். அவர் மரிப்பார் என்பதை அவர்கள் அறிந்து கொள்ள வேண்டுமென்று இயேசு விரும்பினார். அவர்களுக்கு அது முக்கியமானது அல்ல ஆனால், அவர்கள் துன்பம் அனுபவிக்கத் தயாராயிருக்க வேண்டும். ஏனென்றால் இயேசு துன்பமனுபவிப்பவர்.

இப்போது மாற்கு ஏன் நமக்கு இந்தக் கதையைக் கூறுகிறார்?
மாற்கு 10:46~52

அந்தக் குருடன் சீஷர்களுக்கு ஒரு முக்கிய பாடத்தை கற்றுக் கொடுக்கின்றான். இயேசு ஏன் வந்தார் என்பதை சீஷர்கள் இன்னும் புரிந்து கொள்ளாமலிருக்கின்றனர். அந்தக் குருடன் இப்போது அவர்களை விட அதிகமாகக் காண்கிறான்! அவன் சீஷர்களைப் போல முக்கியமானவனாயிருக்க விரும்பவில்லை, இயேசு அவன் மேல் அன்பு செலுத்த வேண்டும் என்பதே அவன் விருப்பமாயிருந்தது! **மாற்கு** 10:15-23 ஐக் குறித்து சிந்திக்கவும்.

முக்கிய விடயம்

இயேசு கொடுக்க வந்தார். நாம் பெற்றுக்கொள்ள விரும்புகிறோமா?

நீங்கள் செய்ய வேண்டியது

இந்தப் பேச்சு கிறிஸ்தவர்களல்லாத மக்களுக்கு பிரயோஜனமாய் இருக்கும். எல்லோரையும் அவர்களுடைய நண்பர்களை அழைத்து வரும்படி கூறுங்கள். நாம் யாவரும் நம்மை நல்ல கிறிஸ்தவர்களாக ஆக்கிக் கொள்ள ஏதாவது **செய்ய** விரும்புகிறோம். அல்லவா? நாம் இயேசுவிடம் **கேட்டால்** மாத்திரம் போதும் என்பதை மக்கள் அறிந்து கொள்ள அவர்களுக்கு உதவி செய்யவும். உங்கள் பேச்சு எல்லோருக்கும் புரிந்து கொள்ளும் விதத்தில் இருக்க முயற்சி செய்யுங்கள்.

குறிப்புகள்

- **மாற்கு 10:46.** ஒரு குருடனுக்கு வேலை செய்ய முடியாது. எனவே அவன் வீதியில் அமர்ந்து பணம் (பிச்சை) கேட்பான். ஆயினும் பர்த்திமேயு **இயேசுவால்** பணத்தை விட மிக உயர்ந்த ஒன்றை அவனுக்குக் கொடுக்க முடியுமென்று அறிந்திருந்தான்.
- **மாற்கு 10:47.** பர்த்திமேயு இயேசுவை "தாவீதின் குமாரன்" என்று அழைக்கிறான். இயேசுவே தேவனால் அனுப்பப்பட்ட ராஜா (மேசியா) என்பதை அவன் அறிந்திருக்கிறான். அவன் இயேசுவிடம் தனக்கு "இரங்கும் படி" கேட்கிறான். ஏனென்றால் அவனுக்கு ஓர் பெரிய தேவை இருந்தது, அதைத் தீர்க்க இயேசுவிடம் பெரும் அன்பு இருந்தது.

ஏழைக் குருடன் கேட்கின்றான்

மாற்கு 10:46-50

⊞ உங்களுக்கு ஒரு முக்கிய தேவை இருக்குமானால், யாரிடம் கேட்பீர்கள்? உங்கள் பிரச்சினைக்கு செவி சாய்க்கக் கூடியதொரு அன்பு நிறைந்த மனிதரிடமே நிச்சயமாக அதை கூறுவீர்கள். நீங்கள் கேட்பதைக் கொடுக்கக்கூடிய ஒருவரிடமே அதைக் கேட்பீர்கள்.

இயேசுவே சரியான நபர் என்பதை பர்த்திமேயு அறிந்திருந்தான். இயேசுவே தேவனுடைய இராஜா என்பதை அவன் நம்பினான். இயேசுவால் ஒரு குருடனை பார்வையடையச் செய்ய முடியுமென்று அவன் விசுவாசித்தான். இயேசு அவன் சொல்வதைக் கேட்பார் என்று அவன் நம்பினான். எனவே அவன் அவரைச் சத்தமிட்டுக் கூப்பிட்டான். இயேசு அவனுக்குப் பதில் அளிக்கும் வரை அவன் ஓயவில்லை.

இயேசு **கொடுக்க** வந்தார். மாற்கு 10:45. இயேசு உங்களையும், என்னையும் போன்ற மனிதர்களுக்காகத் தன் ஜீவனைக் கொடுக்க வந்தார். அவர் நமக்கு அவருடைய அன்பையும், மன்னிப்பையும் கொடுக்க வந்தார். நமது பாவத்திற்கான விலையை அவர் செலுத்த வந்தார். (இயேசு யார் என்பதை விரிவாக விளக்கவும். அவர் ஏன் சிலுவையில் மரிக்க வந்தாரென்பதை எடுத்துக் கூறவும். மாற்கு 10:33,34)

» இயேசு **கொடுக்க** வந்திருந்தால் நாம் என்ன செய்ய வேண்டும்? **கேட்க வேண்டும்!** நாம் அந்த குருடனைப் போலிருக்க வேண்டும். நாம் அதிகம் இயேசு தேவையுள்ளவர்களாய் இருக்க வேண்டும். அவர் நமக்குப் பதிலளிக்கும் வரை நாம் அவரை நோக்கிக் கதற வேண்டும். அவருடைய இரக்கத்தைக் காண்பிக்கும்படி நாம் இயேசுவிடம் கேட்க வேண்டும்.

ஒரு ஏழைக்குருடன் பெற்றுக் கொள்ளுகிறான்

மாற்கு 10:51-52

பர்த்திமேயு சரியான நபரிடம் கேட்டான்! இயேசு அவனை அமைதியாய் இருக்கும்படி சொல்லவில்லை. "ஒரு ஏழை, அசுத்த, குருட்டு மனிதனைக் குறித்து எனக்குக் கவலை இல்லை" என்று இயேசு சொல்லவில்லை. மாறாக அவனிடம் இந்தப் பெரிய கேள்வியைக் கேட்கிறார்:

"நான் உனக்கு என்ன செய்ய வேண்டும்?"

இயேசுவை நம்பும் எவரையும் அவர் ஒரு போதும் ஏமாற்றுவது இல்லை. அந்த குருடன் பார்க்கிறான். அதன்பின் அவன் என்ன செய்கிறான்? மாற்கு 10:52

» இயேசு **உங்களுக்கு** என்ன செய்ய வேண்டுமென்று விரும்புகிறீர்கள். இயேசுவுக்கு இன்னும் நம்மை சுகமாக்க **முடியும்.** ஆனால் இயேசு அதைவிட அதிக முக்கியமான ஒன்றை நமக்குக் கொடுக்க வந்தார். இயேசு அவருடைய

➞ பிரசங்கியுங்கள்: மாற்கு 10:46–52

ஜீவனை சிலுவையில் **கொடுக்க** வந்தார். அவருடைய இலவச பரிசாகிய பாவ மன்னிப்பைப் **பெற்றுக் கொள்ள** உங்களுக்கு விருப்பமா? அந்தக் குருடனைப் போல உண்மையாகவே இயேசுவின் பின்செல்ல உங்களுக்கு விருப்பமா? அப்படியானால் அந்தக் குருடனைப்போலக் கேளுங்கள். அப்பொழுது பெற்றுக் கொள்வீர்கள்! **மத்தேயு 7:7~8**

(நீங்கள் இதைக் குறித்து கதைக்க விரும்பலாம் **மாற்கு 10:36,37.** அந்த நேரத்தில் யாக்கோபும், யோவானும் கேட்டதை இயேசு **கொடுக்கவில்லை.** கேட்பதற்கு பிழையான வகையான காரியம் என்ன?)

கற்றுக்கொள்ளுங்கள்: மாற்கு 11:1 -11

44 ராஜா வருகிறார்!

பின்னணி

மாற்கு சுவிசேஷத்தின் இரண்டாவது பகுதி **இயேசு ஏன் வந்தார்** என்பதைப் பற்றியதாயிருக்கிறது. மாற்கு 8:10ல் இயேசு அதிகமாக சீஷர்களுடன் **கதைத்தார்**. அவர் மரிக்க வந்திருப்பதாக இயேசு சீஷர்களிடம் கூறினார்.

இப்போது **செயல்படுவதற்கான** நேரம் வந்திருக்கிறது. மாற்கு 11ல் அவர் சிலுவையில் மரிப்பதற்கு ஒரு வாரத்திற்கு முன் எருசலேமுக்கு வருகிறார். மக்களுக்கு அவர்களுடைய ராஜாவை விசுவாசிக்க ஒரு கடைசி சந்தர்ப்பமிருக்கிறது. ஆயினும் அவர்கள் அவரை ஏற்றுக் கொள்ளாமல் கொலை செய்வார்கள்.

மாற்கு 11ல் மக்கள் இயேசுவை **வரவேற்கிறார்கள்**. அவரே தேவனால் வாக்களிக்கப்பட்ட ராஜா. அவர்கள் மிகவும் கிளர்ச்சி உற்று இருந்தார்கள். இறுதியாக நேரம் வந்து விட்டது என்று அவர்கள் நினைக்கிறார்கள். இனி அவர்களுக்கு எருசலேமில் ஒரு ராஜா இருப்பார்! மாற்கு 11:1-11.

முக்கிய விடயம்

இயேசு தேவனுடைய ராஜா. ஆனால் நமக்கு வேண்டிய ராஜா அவரா?

நீங்கள் செய்ய வேண்டியது

ஜனக்கூட்டத்தைப் போல நாமிருப்பது எளிது. இயேசுவை துதித்துப் பாடி நாம் கிறிஸ்தவர்கள் என்று சொல்லுவது எளிது. ஆயினும் அநேகருக்கு இயேசு அவர்கள் ராஜாவாக இருப்பதில் விருப்பமில்லை.

அவர்களுக்குத் தேவை ஒரு நாயகனே அன்றி ஒரு இரட்சகன் அல்ல. அவர்களுக்கு உதவி செய்ய ஒருவர் தேவை, சேவை செய்யும் ஒரு ராஜாவல்ல. அவர்களுக்கு, யாவும் நன்றாய் இருப்பதாக உணர வேண்டும். மக்கள் அவர்களை வெறுக்கக் கூடாது. ஒரு கழுதையின் மேல் ஏறி வந்து சிலுவைக்குப் போகும் ஒரு ராஜா அவர்களுக்குத் தேவையில்லை.

குறிப்புகள்

- **மாற்கு 11:2.** ஒரு கழுதை குதிரையை விட சிறியது. சாதாரண மனிதர்கள் சில வேளைகளில் ஒரு கழுதையின் மேல் ஏறிச் செல்வார்கள். ஆனால் ராஜாக்கள் எப்போதும் குதிரையின் மீதேறியே சவாரி செய்வார்கள். ஆனால் இயேசு வித்தியாசமானதொரு ராஜா. அவர் ஒரு கழுதையின் மேல் அமரும் ராஜா. அவர் சமாதானத்தைக் கொண்டு வரும் தாழ்மையான ஒரு ராஜா தேவன் அனுப்புவதாக வாக்குப் பண்ணின விதமான ராஜா

? கற்றுக்கொள்ளுங்கள்: மாற்கு 11:1-11

அவரே. ஒப்பிடுக. சகரியா 9:9-10.

- மாற்கு 11:8. அவர்கள் இயேசுவை தங்கள் ராஜாவாக வரவேற்பதற்காக இப்படிச் செய்தார்கள்.
- மாற்கு 11:9,10. "ஓசன்னா" என்றால் "இரட்சியும்" அல்லது "துதி" என்று அர்த்தம். மக்கள் மேசியாவைப் (ராஜா) பற்றிய சங்கீதமொன்றின் வார்த்தைகளை உபயோகிக்கிறார்கள். சங்கீதம் 118:25-26. அவர்கள் இயேசு தேவனின் ராஜா என்பதைக் காண்கிறார்கள். அவர்கள் தேவனைத் துதிக்கிறார்கள். தேவனுடைய ராஜா வந்து அவர்களை இரட்சிக்க வேண்டுமென்று அவர்கள் விரும்புகிறார்கள்.

→ பிரசங்கியுங்கள்: மாற்கு 11:1-11

ராஜாவுக்கு ஒரு கழுதை தேவை

மாற்கு 11:1-6

இயேசுவுக்கு ஒரு கழுதை தேவைப் படுகிறது. அவர் அதில் ஏறி எருசலேமுக்குள் சவாரி செய்யப் போகிறார். அவரே தேவனின் ராஜா என்று மக்கள் கூற வேண்டுமென்று அவர் விரும்புகிறார். இதுவரை அவர் பெரும் ஜனக்கூட்டங்களை தன் பக்கம் ஈர்க்க விரும்பினதில்லை. இப்போது அவர் யார் என்பதை மக்கள் சொல்ல வேண்டிய நேரம் வந்திருக்கிறது. அது ஒரு முக்கிய பண்டிகை (பஸ்கா) காலமாய் இருந்ததால் அநேக மக்கள் எருசலேமை நோக்கிப் போய்க் கொண்டிருந்தார்கள். இவர்கள் இயேசுவை ராஜாவாக ஏற்றுக் கொள்வார்கள்.

எனவே ஏறிச் செல்வதற்கு இயேசுவுக்கு ஒரு கழுதை தேவைப் பட்டது. அவருக்கு ஒரு குதிரை தேவையில்லை. அவருக்கு ஒரு கழுதைக் குட்டியே தேவையாய் இருந்தது. பழைய ஏற்பாட்டில். தேவனுடைய ராஜா ஒரு கழுதையின் மேல் வருவாரென்று சகரியா தீர்க்கதரிசி கூறினான். தேவனுடைய ராஜா ஒரு பணிவான ராஜா. அவர் யுத்தத்திற்காக வரவில்லை. அவர் சமாதானத்தைக்

கொண்டு வர வந்திருக்கிறார்.

ராஜாவுக்கு ஒரு கழுதை தேவை. அந்தக் கழுதையை எங்கிருந்து பெற்றுக்கொள்வது என்பது ராஜாவுக்குத் தெரியும் என்பதைக் கவனிக்கவும். ராஜாவுக்கு அந்தக் கழுதையை எடுத்துக் கொள்ள அனுமதிக்க மக்களிடம் கூறும் உரிமையிருந்தது. அவர் தன் மரணத்திற்கு நேரே போகும்போது ராஜாவாகிய இயேசு எல்லாவற்றையும் தன் முழு கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்தார்.

» நிச்சயமாகவே இயேசு கடவுளின் ராஜாவாக இருக்கிறார். தேவன் பழைய ஏற்பாட்டில் கூறியுள்ளபடி அவர் எல்லாவற்றையும் நிகழப் பண்ணுகிறார். ஆனால், இயேசுவைப் போன்றதொரு பணிவான ராஜா உங்களுக்கு வேண்டுமா?

ஒரு கழுதையின் மேல் சவாரி செய்யும் ராஜாவை வரவேற்கவும்

📖 மாற்கு 11:7-11

மக்கள் அதிக கிளர்ச்சியுற்று இருக்கிறார்கள். அவர்கள் தங்கள் வஸ்திரங்களை இயேசுவுக்காகத் தரையில் விரிக்கிறார்கள்.அவர்கள் மரங்களிலிருந்து கிளைகளைத் தறித்து ராஜாவை வரவேற்கிறார்கள். அவர்கள் சத்தமிடுகிறார்கள், பாடுகிறார்கள், இயேசுவுக்காக தேவனைத் துதிக்கிறார்கள். கடைசியில் தேவன் அவருடைய ராஜாவை அவர்களுக்கு சேவை செய்ய அனுப்பியிருக்கிறார்.

அவர்கள் செய்வது சரியே. எல்லோரும் இயேசுவுக்காக தேவனைத் துதிக்க வேண்டும். அவரே தேவனால் அனுப்பப்பட்ட இரட்சகர். நம் எல்லோருக்கும் இயேசு நிச்சயம் தேவை.

ஆயினும், கழுதையின் மேல் சவாரி செய்யும் ஒரு ராஜா உண்மையிலேயே அவர்களுக்குத் தேவையா? ஒரு வாரத்தின் பின் யூதர்களின் ராஜா சிலுவையில் மரிப்பாரென்று நமக்குத் தெரியும். இப்போது அவர்கள் இயேசுவைத் துதிக்கிறார்கள் - விரைவில் அவர்கள் அவரைக் கொன்று விடுவார்கள். அவர் தேவனின் ராஜா - ஆனால் அவர்களுக்கு அவர் தேவையில்லை. அவர் அவர்கள் பின்பற்ற விரும்புகிற வகையானதொரு வீர ராஜாவாக இல்லை.

» இயேசுவைப் பற்றி நீங்கள் என்ன அறிந்திருக்கிறீர்கள் என்பதைக் கவனமாக சிந்திக்கவும் (நாம் மாற்கு சுவிசேஷத்தில் இருந்து படித்தவற்றைப் பற்றிப் பேசவும்) **இயேசு உண்மையிலேயே நீங்கள் பின்பற்ற நினைக்கும் வகையானதொரு ராஜாவா?**

» நாம் இயேசுவைப் பற்றி பாடல்கள் பாடுவது நல்லது. நாம் இயேசுவை துதிப்பதும், அவரை ராஜா என்று அழைப்பதும் நல்லது. ஆனால் உண்மையிலேயே நீங்கள் இயேசுவை உங்கள் வாழ்க்கையின் ராஜாவாக ஏற்றுக் கொள்வீர்களா? கழுதையின் மேல் சவாரி செய்து, சிலுவைக்குப் போகும் ராஜாவை நீங்கள் பின்பற்றுவீர்களா?

45 ராஜா அவருடைய ஆலயத்திற்கு வருகிறார்

பின்னணி

மக்கள் ராஜாவாகிய இயேசுவை எருசலேமுக்குள் வரவேற்று இருக்கிறார்கள். அவர்கள் தேவனைத் துதித்திருக்கிறார்கள். தேவன் அவர்களுடைய இரட்சகரை அனுப்பியிருக்கிறார். 📖மாற்கு 11:1-11.

தேவனது ராஜா இரட்சகர் மாத்திரமல்ல. அவர் நியாயாதிபதியுமாய் இருக்கிறார். தேவனுடைய ராஜா ஆலயத்திற்குள் வரும்போது எதைக் காண்பார்? அவர் என்ன செய்வார்?📖மாற்கு 11:12-19, மல்கியா 3:1-2 உடன் ஒப்பிடுக.

முக்கிய விடயம்

நாம் அவரைப் பின்பற்றுவதாகப் பாசாங்கு செய்வது ராஜாவாகிய இயேசுவுக்குப் பிடிக்காது. அவர் நம்மில் கனியைப் பார்க்க விரும்புகிறார் - உண்மையான விசுவாசமும், அன்பும்.

குறிப்புகள்

- **மாற்கு 11:11.** "தேவாலயம்". தேவன் யூதர்களிடம் அங்கு போய் அவரை ஆராதிக்கும்படி கூறினார். அங்கே அவர்கள் தேவனுக்குப் "பலி" செலுத்து வதற்கு மிருகங்களைக் கொல்ல வேண்டும். எருசலேமிலிருந்த தேவாலயமே அவர்களுடைய ஆராதனையின் மத்திய ஸ்தானமாகும்.
- **மாற்கு 11:13-14.** இயேசு அத்தி மரத்தை **தேவாலய ஆராதனைக்கு ஒரு உதாரணமாகப்** பார்க்கிறார். அந்த மரத்தில் அநேக இலைகளிருந்தன. ஆனால் அதில் கனிகளில்லை. அது நல்ல மரமாகக் காட்சியளித்தது. ஆனால் அது நல்ல மரமல்ல. இயேசு அந்த மரத்தை நியாயம் தீர்க்கிறார். (மாற்கு 11:14). அவர் தேவாலயத்தை நியாயம் தீர்க்கப் போவதைக் காண்பிக்கவே இந்த மரத்திற்கு அப்படிச் செய்கிறார்.
- **மாற்கு 11:15.** இயேசு குற்றம் அற்றவராயிருந்தார். அவர் கோபம் கொண்டபோது பாவம் செய்யவில்லை. அவர் கோபப் பட்டது சரியே. ராஜா தேவாலயத்திற்கு வந்து, அது பாவத்தால் நிறைந்திருப்பதைக் கண்டார்.
- **மாற்கு 11:15,16.** யூதர்களுக்கு "பஸ்கா" என்று அழைக்கப்படும் பண்டிகையின் அந்தக் காலம் மிக முக்கியமானதாகும். அவர்கள் தேவனுக்கு மிருகங்களைப் பலி செலுத்து வதற்காக தேவாலயத்திற்கு வருவார்கள். அங்கு பணத்தை மாற்றிக் கொள்வதில் தவறு ஏதுமில்லை. ஏனென்றால் மிருகங்களை வாங்குவதற்கு அவர்களுக்குப் பணம் தேவை. ஆனால் அவர்கள் மக்களை

கற்றுக்கொள்ளுங்கள்: மாற்கு 11:11-19

ஏமாற்றி, பணக்காரர்கள் ஆகுவதற்கு தேவாலயத்தை உபயோகிக்கிறார்கள். அவர்களுக்கு தேவனைக் குறித்து அக்கறையில்லை. அவர்கள் தங்களுக்கு பணம் சம்பாதிக்க விரும்பினார்கள்.

- **மாற்கு 11:17.** முக்கிய பிரச்சினை மக்கள் ஒருவரை ஒருவர் ஏமாற்றிக் கொண்டது அல்ல. யூதர்கள் **தேவனிடத்தில்** திருடினார்கள். அவர்கள் தேவாலயத்தில் தேவனை ஆராதிப்பது போல் பாசாங்கு செய்தாலும், உண்மையில் அவர்கள் தங்களைக் குறித்தே அக்கறை உள்ளவர்களாய் இருந்தார்கள்.

பிரசங்கியுங்கள்: மாற்கு 11:11-19

கனியில்லாததொரு மரம்

மாற்கு 11:11-14

இயேசு இன்று நமது கூட்டத்திற்கு திடீரென்று வந்தால் அவர் எதை எதிர்பார்ப்பார்?

இயேசு **வெளிப்பிரகாரமான** காரியங்களைப் பார்ப்பாரா? நாம் எவ்வளவு கூட்டங்கள் வைக்கிறோம்? நமது உடைகள் எவ்வளவு அழகாய் இருக்கின்றன. எவ்வளவு சத்தமாக நாம் பாடுகிறோம்?

அல்லது, இயேசு தமது **உட்புறத்தைப்** பார்ப்பாரா? அன்பு, விசுவாசம், பரிசுத்த வாழ்க்கை முதலியவற்றைத் தேடுவாரா?

இந்த உட்புறமானவைகளைத் தான் வேதாகமம் **கனி** என்று அழைக்கிறது.

இயேசு ராஜா எருசலேமிலுள்ள அவருடைய தேவாலயத்தை நோக்கிப் போகிறார். அங்கு தேவனுடைய மக்கள் தேவன் மேல் அன்பு செலுத்தி அவரை ஆராதிப்பதை அவர் காண்பாரா? அவர் அங்கே கனியைக் காண்பாரா?

அவர் போகும் வழியில் அவர் ஒரு அத்தி மரத்தைப் பார்க்கிறார். அது இலைகள் நிறைந்து காணப் படுகிறது. ஆனால் கனி இல்லை. அது பார்க்க நன்றாக இருக்கிறது, ஆனால் அதில் உண்பதற்கு

➡ பிரசங்கியுங்கள்: மாற்கு 11:11-19

கனியில்லை. அது தேவாலயத்தில் நடந்ததைப் போலிருக்கிறது!

இயேசு அந்த மரத்தை சபிக்கிறார். மாற்கு 11:14. இதில் தேவாலயத்திற்கு ஒரு செய்தி இருக்கிறது. அநேக யூதர்களின் பொய் ஆராதனையை இயேசு நியாயம் தீர்ப்பார்.

> இயேசு நமது கூட்டங்களுக்கு **உண்மையிலேயே** வருகிறார். அவர் உங்கள் வாழ்க்கையில் காணும் கனி என்ன? அவை வெளிப்பிரகாரமாய் இருப்பதால், இயேசு துக்கமும் கோபமும் அடைகின்றாரா?

ஆராதனையில்லாத ஒரு தேவாலயம்

மாற்கு 11:15-19

- இயேசு ராஜா தன்னுடைய தேவாலயத்திற்கு வரும்போது அவர் எதை எதிர் பார்க்கிறார்?
- அவர் எதைப் பார்க்கிறார்?

அவை யாவும் வெளிப் பிரகாரமானவை! அவர்கள் தேவனை ஆராதிப்பதாக பாசாங்கு செய்கிறார்கள். அவர்கள் மிருகங்களை தேவனுக்கு பலி செலுத்துவார்கள். அவர்கள் பஸ்காவை தேவனுக்கு மிக விசேடமான நேரமாக கடைப் பிடிப்பார்கள். எல்லாம் பார்ப்பதற்கு நன்றாயிருக்கிறது. ஆனால் இயேசு அங்கே உண்மையான கனி இல்லாததைக் காண்கிறார். அங்கே அன்பில்லை. உண்மையான ஜெபமில்லை. உண்மையான ஆராதனையில்லை.

இயேசு ராஜா கோபப்பட்டது சரியே. ராஜா ஆலயத்தில் போலியான ஆராதனையை ஏற்றுக் கொள்ள மாட்டார்.

இயேசு ஆலயத்தில் செய்ததை குறித்து தலைவர்கள் என்ன நினைத்தார்கள்? அவர்கள் தங்கள் பிழைகளைக் குறித்து மனஸ்தாபப் படுகிறார்களா? அல்லது அவர்கள் தேவனுடைய ராஜாவை வெறுக்கிறார்களா? மாற்கு 11:18

> இயேசுவே தேவனிடமிருந்து வந்த இரட்சகர். அவர் தேவனிடமிருந்து வந்த **நீதிபதியுமாவார்.** இயேசு நமது வாழ்க்கையில் கனியைத் தேடுகிறார். நாம் வெளிப்புறத்தில் மாத்திரம் கிறிஸ்தவர்களாக காட்சியளிக்கும் போது அவர் நம் மேல் கோபப்படுகிறார். உங்களை மன்னித்து உங்கள் இருதயத்தை மாற்ற இயேசுவிடம் கேட்பீர்களா?

46 தேவனிடத்தில் விசுவாசம் உள்ளவர்களாயிருங்கள்!

பின்னணி

இயேசு இப்போது அவருடைய பெரும் அதிகாரத்தைக் காட்டி இருக்கிறார். தேவாலயத்தை நியாயம் தீர்ப்பதற்கு அவருக்கு உரிமையிருக்கிறது. எல்லாம் அவர் கட்டுப்பாட்டில் உள்ளது. மாற்கு 11:15–19.

மறுநாள் பேதுரு பட்டுப்போன அத்தி மரத்தைக் கண்டபோது அவர் மிகவும் ஆச்சரியப்படுகிறார். இயேசு மீண்டும் அவருடைய பெரும் வல்லமையைக் காண்பித்திருக்கிறார். மாற்கு 11:20–21

இந்த வல்லமை எங்கிருந்து வந்தது என்பதை அவருடைய சீஷர்கள் அறிந்து கொள்ள வேண்டுமென்று இயேசு விரும்புகிறார். விரைவில் அவர் அவர்களை விட்டுப் போய் விடுவார். ஆனால், அவர்கள் தேவனுடைய வல்லமையின் மேல் விசுவாசம் வைக்கலாம். மாற்கு 11:22–25.

முக்கிய விடயம்

தேவனை விசுவாசி அப்போது எல்லாம் சாத்தியமாகும்.

நீங்கள் செய்ய வேண்டியது

நாம் இந்த இரண்டு பிழைகளை விடாமலிருக்க முயற்சிக்க வேண்டும்.

1. நாம் **கேட்க வேண்டுமென்று தீர்மானிக்கும் யாவற்றையும்** தேவன் தருவாரென்று அவர் வாக்களிக்கவில்லை. “தேவனிடத்தில் விசுவாசமாய் இருங்கள்” என்று இயேசு சொல்லுகிறார். தேவனுக்கு சித்தமில்லாத எதையும் அவர் செய்வதில்லை. நமக்கு நன்மையற்ற எதையும் அவர் தரமாட்டார். 1 யோவான் 5:14–15; 1 யோவான் 3:22; யோவான் 15:7. முதலிய வசனங்களைக் குறித்து சிந்திக்கவும். நாம் தேவனுடைய சித்தத்திற்கு விரும்பும்போது, தேவனுக்கு அதை நமக்குக் கொடுப்பது சிரமமல்ல.
2. இந்த வாக்குறுதி நமக்குரியது அல்ல என்று நாம் நினைக்கக் கூடாது! அது சில முக்கியமான வர்களுக்கு மட்டும் சொந்தமானதல்ல. **எவரும் கேட்கலாம்** என்று இயேசு கூறுகிறார். நமக்கு பெரும் விசுவாசம் இருக்க வேண்டும் என்ற அவசியமில்லை. ஏனென்றால் நமக்கு ஒரு பெரிய கடவுளிருக்கிறார். தேவன் சொல்வதை செய்பவர் என்பதை மட்டுமே நாம் விசுவாசிக்க வேண்டும். மத்தேயு 17:20–21.

குறிப்புகள்

- **மாற்கு 11:20.** ஒரே நாளில் அந்த அத்திமரம் பட்டுப்போய்

கற்றுக்கொள்ளுங்கள்: மாற்கு 11:20-25

விட்டது. நியாயம் தீர்ப்பதற்கு இயேசுவுக்கு தேவனின் அதிகாரமிருக்கிறது.

- **மாற்கு 11:25.** மற்றவர்களை **மன்னிப்பது** எவ்வளவு முக்கியம் என்பதைக் கவனிக்கவும். தேவன் நமக்கு எவ்வளவு மன்னித்திருக்கிறார் என்பதை நினைத்துப் பாருங்கள். நாம் மற்றவர்களை மன்னிக்கா விட்டால் தேவன் நமது ஜெபங்களுக்கு பதில் கொடுக்க மாட்டார்.

பிரசங்கியுங்கள்: மாற்கு 11:20-25

தேவனிடத்தில் விசுவாசமாயிருங்கள்

மாற்கு 11:22

இயேசு சீஷர்களை விட்டு விரைவில் சென்று விடுவார். பெரும் அற்புதங்களைச் செய்ய அவர் அங்கு இருக்க மாட்டார். அப்போது அவர்கள் அநேக பெரும் பிரச்சினைகளை சந்திப்பார்கள். அவர்களுக்கு என்ன தோன்றும்?

தேவனிடத்தில் விசுவாசமாயிருங்கள். தேவனின் வல்லமை அங்கே சீஷர்களுக்கு இருக்கும் என்பதை அவர்கள் அறிய வேண்டுமென்று இயேசு விரும்புகிறார். அவர்கள் தேவனை விசுவாசிக்கப் பழக வேண்டும். இப்போது அவர்கள் இயேசுவை பின்பற்றி அவர்களுக்கு வேண்டியதை அவரிடம் கேட்கிறார்கள். விரைவில் அவர்கள் **தேவன்** மேலுள்ள விசுவாசத்தில் வாழ்ந்து, அவர்களுக்குத் தேவையான யாவற்றையும் அவரிடம் கேட்க வேண்டும்.

- அநேக வேளைகளில் நமக்கு தேவன் மேல் உண்மையான விசுவாசம் இருப்பதில்லை. ஏன் அப்படி?
- தேவனை நம்புவது ஏன் நமக்குப் பாதுகாப்பாயிருக்கும்? தேவன் எப்படிப்பட்டவர்?

தேவனால் கூடாதது ஒன்றுமில்லை

மாற்கு 11:23~24

(இதைக் குறித்து ஒரு கதை சொல்லவும். நீங்கள் கேள்விப் பட்டிருக்கக் கூடிய ஒரு நபரைக் குறித்துக் கூறலாம். அல்லது வேதாகமத்திலிருந்து ஒரு சம்பவத்தைக் கூறலாம். உதாரணம்: எலியா. யாக்கோபு 5:1~5~18; 1 இராஜாக்கள் 17:1, 18:41~45)

அநேக காரியங்கள் நமக்குக் கடினமாயிருக்கும். நாம் ஒரு பெரிய பிரச்சினையைக் காண்கிறோம். அதைக் குறித்து எங்களால் ஒன்றும் செய்ய முடியாது என்பதை நாம் உணர்கிறோம். எனவே நாங்கள் துக்கப்படுகிறோம். முயற்சிகளை நாம் கைவிட்டு விடுகிறோம். ஆனால் தேவனால் அதைத் தீர்க்க முடியும் என்பதை அநேக வேளைகளில் நாம் மறந்து விடுகிறோம். அது அவருடைய சித்தமாயிருக்கும் பட்சத்தில், நாம் தேவனிடத்தில் கேட்டால் அவர் அதைச் செய்வார்.

- நமக்குக் கடினமான காரியங்களைக் குறித்து மட்டும்தான் நாம் தேவனிடத்தில் கேட்க வேண்டுமென்று இயேசு கூறுகிறாரா?அது எவ்வளவு அசாத்தியம் என்பது முக்கியமா? ஏன்?

உண்மையில் இயேசு நாம் மலைகளைப் பெயர்க்க வேண்டும் என்று கூறவில்லை! அவர் தேவனால் கூடாதது ஒன்றுமில்லை என்பதை நாம் அறிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக அதை ஒரு உதாரணமாக மாத்திரமே கூறுகிறார். எந்த ஒரு பிரச்சினையும் தேவனுக்கு ஒரு பிரச்சினை அல்ல.

உங்களுக்கு ஒரு பிரச்சினை வரும்போது, நீங்கள் என்ன செய்வீர்கள்? துக்கப்படுவீர்களா? அல்லது குழப்பம் அடைவீர்களா? அல்லது விட்டுக் கொடுத்து விடுவீர்களா? அல்லது **தேவன் மேல் விசுவாசம் வைப்பீர்களா?**

கேட்டுப் பெற்றுக் கொள்ளுங்கள்!

மாற்கு 11:23~24

அநேக வேளைகளில் நமக்கு தேவனுடைய சித்தம் என்னவென்று தெரியாது. சரியானது எதுவோ அதைச் செய்ய நாம் தேவனை நம்ப வேண்டும். சில வேளைகளில் நமக்கு தேவனுடைய சித்தம் என்னவென்று தெரியும். எனவே தேவன் பதில் **கொடுப்பாரென்று** நாம் நம்பலாம். நாம் தேவனை விசுவாசிக்கும் போது அவர் பதிலளிப்பார்.

அந்த போதகர் பிரசங்கிக்க வேண்டிய நேரம் வந்து விட்டது. காற்று பலமாக வீசிக் கொண்டிருந்தது. எனவே மக்களுக்கு அவர் சொல்வது கேட்காது. அப்போது அவருக்கு தேவனுடைய வாக்குறுதி நினைவுக்கு வந்தது. அவருடைய பிரசங்கத்தைப் மக்கள் கேட்பது தேவனுடைய சித்தம் என்பதை அவர் அறிந்திருந்தார். எனவே அவர் நிற்கும்படி காற்றுக்கு கட்டளையிட்டார். உடனே காற்று நின்றது. அவர் பிரசங்கித்து முடிந்ததும், மீண்டும் காற்று பலமாக வீசத் தொடங்கினது!

47 இதைச் செய்ய உமக்கு என்ன உரிமையிருக்கிறது?

பின்னணி

யூதத்தலைவர்கள் கோபம் அடைகிறார்கள். அவர்களுக்கு மக்கள் மேல் கட்டுப்பாடு இருந்தது. மக்கள் இயேசுவை நம்பினால் அவர்கள் அந்த கட்டுப்பாட்டை இழந்து விடுவார்கள்.

தலைவர்கள் கோபப்பட்டார்கள். ஏனென்றால், மக்கள் கூட்டம் இயேசுவைத் தங்கள் இராஜாவாக வரவேற்றது. மாற்கு 11:8~10.

தலைவர்கள் கோபப்பட்டார்கள். ஏனென்றால், இயேசு மக்களை தேவாலயத்தை விட்டு வெளியே துரத்தினார். மாற்கு11:15~17.

இப்போது அவர்கள் இயேசுவைக் கொல்ல வழி தேடுகிறார்கள். மாற்கு 11:18.

எனவே அவர்கள் இயேசுவிடம் ஒரு கேள்வி கேட்கிறார்கள்? ஆனால் அவர்களுக்கு அதற்கான உண்மையான பதிலைத் தெரிந்து கொள்ள வேண்டுமென்ற எண்ணம் இருக்கவில்லை. இயேசுவை பிரச்சினைக்குள் சிக்க வைக்க வேண்டுமென்பதே அவர்களது நோக்கமாயிருந்தது. இயேசு தன்னை ராஜா என்று கூறினால் அப்போது அவர்கள் அதை ரோமர்களுக்கு கூறலாம். ஏனென்றால் அப்போது நாடு ரோமர்களின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்தது. அதன்படி ராயனே அவர்களுக்கு ராஜா! எனவே வேறு எவரும் தன்னை ராஜா என்று உரிமை கோர முடியாது!

மாற்கு 11:27~33

முக்கிய விடயம்

இயேசுவுக்கு அவர் விருப்பப்படி செய்வதற்கு எல்லா உரிமையும் இருக்கிறது என்பது நமக்குத் தெரியும். நமது வாழ்க்கையின் மேல் ஆட்சி செலுத்த வேண்டியவர் இயேசு ராஜாவே ஆகும்.

நீங்கள் செய்ய வேண்டியது

நமது வாழ்க்கையின் மேல் இயேசு ஆட்சி செலுத்த வேண்டும் என்று கூறுவது எளிது. ஆனால், நாம் உண்மையிலேயே அதை விரும்புகிறோமா? இயேசுவின் சபையிலும் கூட நாம் காரியங்களை **நமது** வழியில் செய்ய விருப்பமுள்ளவர்களாய் இருக்கலாம். உங்களுக்கு செவி கொடுக்கும் மக்களுக்கு இயேசுவிடம் கொடுக்கக் கடினமாகத் தோன்றும் காரியங்கள் யாவை?

குறிப்புகள்

- மாற்கு 11:29. இயேசு எப்போதுமே ஓர் நேர்மையான கேள்விக்கு பதிலளிப்பார். இந்த முறை, அவர்களுடைய கேள்விக்கு பதிலளிக்காமல் இருப்பது நல்லது என்று இயேசுவுக்குத் தெரியும்.

? கற்றுக்கொள்ளுங்கள்: மாற்கு 11:27-33

அவர்கள் நேர்மையானவர்கள் அல்ல என்று அந்த மக்களுக்கு காண்பிப்பது நல்லது. அவர்கள் அவருடைய கேள்விக்கு பதிலளித்தால், அவர்களுடைய கேள்விக்கு அவர்களுக்குப் பதில் தெரிந்து விடும்!

பிரசங்கியுங்கள்: மாற்கு 11:27-33

யூதர்களிடமிருந்து ஒரு கேள்வி

மாற்கு 11:27-28

⊞ இதைக் கற்பனை செய்யுங்கள். ஒரு சிறு பையன் அவனுக்கு ஒரு பெரிய, பலம் வாய்ந்த மனிதனுடன் கோபம். அவன் அந்த மனிதனை தன் முழுபலத்தையும் உபயோகித்துத் தாக்குகிறான். திடீரென அந்த சிறுவன் தரையில் கிடக்கிறான். அந்த சிறுவனின் தாக்குதல் அந்தப் பெரிய மனிதனை சிறிதேனும் பாதிக்க வில்லை. சிறுவனுக்கு தன் மடத்தனம் புரிகிறது.

யூதத் தலைவர்கள் இந்த சிறுவனைப் போலிக்கிறார்கள். அவர்கள் இயேசுவை வெறுக்கிறார்கள். அவர்களுடைய கேள்வியின் மூலம் அவரைப் புண்படுத்த முயற்சிக்கிறார்கள். ஆனால் இயேசு அதிக வலுவானவராயிருக்கிறார். இறுதியில் அவர்கள் முட்டாள்த் தனத்தை உணர்கிறார்கள்.

- இயேசு அந்தக் கேள்விக்கு பதிலளிக்க வேண்டுமென்று அவர்கள் விரும்பினார்கள். ஆனால், ஏற்கனவே அவர்களுக்கு அதற்கான பதில் தெரியும். அது என்ன?

இவைகளைச் செய்ய இயேசுவுக்கு உரிமையுண்டு. ஏனென்றால் தேவன் அவரை அனுப்பி இருக்கிறார். **தேவன்** அவருடைய குமாரனை ராஜாவாக இருக்கும்படி அனுப்பியிருக்கிறார். தேவாலயம் அவருக்குச் சொந்தம்.

ஆனால் அவர்களுக்கு தேவனின் ராஜா தேவையில்லை. அவர்களுக்கு மக்களையும், தேவாலயத்தையும் **தங்களது** கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கவே விருப்பம். எனவே அவர்கள் இயேசுவை வெறுக்கிறார்கள்.

உங்கள் வாழ்க்கையின் மேல் ஆளுகை செலுத்த யாருக்கு உரிமையுண்டு? எப்படி நீங்கள் வாழ வேண்டுமென்று சொல்லும் உரிமை யாருக்குள்ளது? நீங்கள் பதிலை அறிவீர்கள். இயேசுவுக்கே அந்த உரிமை இருக்கிறது. தேவன் அப்படிதான் கூறுகிறார்.

ஆனால் உங்கள் சொந்த வாழ்க்கையை உங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருக்க நீங்கள் விரும்புகிறீர்களா? இயேசு சொல்வதற்கு விரோதமாக நீங்கள் எதிர்த்து நிற்கிறீர்களா?

இயேசுவிடமிருந்து ஒரு கேள்வி

மாற்கு 11:29-33

இயேசு அவர்களுடைய கேள்விக்கு பதில் சொல்லவில்லை. மாறாக, அவர்களிடம் அவர் ஒரு கேள்வி கேட்கிறார்! அது ஒரு சாதாரண கேள்வியல்ல. அந்தக் கேள்வி அவர்களை பலமாகத் தாக்குகிறது. இயேசு அப்போட்டியில் வெற்றி அடைகிறார்!

- இயேசுவின் கேள்வி ஏன் மிகச் சிறந்ததாயிருக்கிறது? மாற்கு 11:29-32.

யோவான் தேவனிடமிருந்து வந்த ஒரு தீர்க்கதரிசியென்று எல்லோருக்கும் தெரியும். எனவே அவர் சொல்வதை அவர்கள் விசுவாசிக்க வேண்டும் யோவான் இயேசுவே தேவனிடமிருந்து வந்த ராஜா என்று மக்களிடம் கூறினார். எனவே யோவான் தேவனிடமிருந்து வந்திருந்தால், இயேசுவும் கூட தேவனிடமிருந்தே வந்திருக்க வேண்டும்!

இந்த யூதர்கள் இயேசுவின் கேள்விக்கு ஒரு நேர்மையான பதிலைக் கொடுத்தால், அப்போது அவர்கள் தங்கள் சொந்தக் கேள்விக்கு பதிலளிப்பவர்களாய் இருப்பார்கள்! எனவே அவர்கள் அதற்குப் பதில் தங்களுக்குத் தெரியாது என்று கூறி விடுகிறார்கள். அது ஒரு பொய்! இயேசுவின் கேள்விக்கு அவர்களுக்கு பதில் தெரிந்து இருந்தாலும், அதைக் கூற அவர்கள் விரும்பவில்லை.

சில மக்களுக்கு இயேசுவை பின்பற்ற விருப்பமில்லை. அவர்கள் கேள்விகள் கேட்பார்கள். ஆனால் அவர்களுக்கு உண்மையை தெரிந்து கொள்ளும் ஆசை இல்லை. அவர்கள் கேள்விகளுக்கு பதில் அளிப்பார்கள். ஆனால் உண்மையை கூற மாட்டார்கள். அவர்கள் வாழ்க்கையின் மேல் இயேசு ராஜா ஆட்சி செலுத்துவதை அவர்கள் விரும்புவது இல்லை. நீங்களும் அப்படியானவரா?

48 கனி எங்கே

பின்னணி

யூதர்களின் தலைவர்கள் இயேசுவை கொல்லுவதற்கு வகை தேடுகிறார்கள். அவர்கள் இயேசுவை எதையாவது சொல்ல வைத்து அதை ரோம ஆட்சியாளனான ஏரோதுவிடம் புகார் செய்ய நினைத்துக் கொண்டு இருக்கிறார்கள். மாற்கு 11:27~28; மாற்கு 12:13~15.

இயேசு அந்தத் தலைவர்களின் பாவத்தை அவர்களுக்குக் காண்பிக்க விரும்புகிறார். இயேசுவே தேவனிடமிருந்து வந்த மேசியா. ஆனால் தேவனால் அனுப்பப்பட்ட ராஜாவை அவர்கள் கொல்ல நினைக்கிறார்கள். மாற்கு 11:17~18; மாற்கு 12:1~12

இந்தக் கதை மாற்கு 11:28ன் கேள்விக்கான பதிலைத் தருகிறது. தேவனுடைய குமாரனுக்கு இவைகளைச் செய்ய உரிமை இருக்கிறது!

முக்கிய விடயம்

தேவன் அவருடைய குமாரனை கனி தேடும்படி அனுப்பி இருக்கிறார். ஆனால் அவர்கள் அவரை கொல்லுகிறார்கள்.

குறிப்புகள்

- மாற்கு 12:1. ஒரு “திராட்சை தோட்டம்”. அதில் மக்கள் திராட்சைச் செடியை வளர்ப்பார்கள். திராட்சைக் கொடியிலிருந்து திராட்சைப் பழங்கள் கிடைக்கும். அதில் இருந்து திராட்சை ரசம் செய்வார்கள்.
- மாற்கு 12:1. “தோட்டக்காரர்”. இக்கதையில் இவர்கள் விவசாயிகள். அவர்கள் திராட்சை செடியை வளர்ப்பார்கள். அவர்களுக்கு அந்த நிலம் சொந்தமல்ல. அவர்கள் அதை சொந்தக்காரருக்காக பராமரிப்பார்கள்.
- மாற்கு 12:1. இந்தக் கதை **ஏசாயா 5:1-7ல்** இருந்து வருகிறது. இக்கதையில் திராட்சைத் தோட்டம் இஸ்ரவேலைக் குறிக்கிறது. தேவன் அவருடைய பிள்ளைகளுக்காக கூடிய வரை எல்லாவற்றையும் செய்து இருக்கிறார். ஆனால் அங்கே நல்ல கனியில்லை. மாறாக இஸ்ரவேலர் கெட்ட கனியை கொடுக்கிறார்கள்.

இயேசு கதையை சற்று மாற்றுகிறார். அவருடைய கதையில் அவன் தோட்டக்காரர்களிடம் (குடியிருப்போர்) திராட்சைத் தோட்டத்தை விட்டுப் போனதாகக் கூறுகிறார். தோட்டக்காரர்கள் என்பது யூதத் தலைவர்களைக் குறிக்கிறது. தேவன் அவருடைய ஊழியக்காரரை (தீர்க்கதரிசிகள்) கனிகளுக்காக அனுப்பும் போது தோட்டக்காரர்கள் (தலைவர்கள்) அவர்களைப் பிடித்து

? கற்றுக்கொள்ளுங்கள்: மாற்கு 12:1 -12

அடிக்கிறார்கள். (கடைசித் தீர்க்கதரிசி யோவான் ஸ்நானகன். யூதத் தலைவர்கள் அவனுக்கு செவி கொடுத்தார்களா?) கடைசியாக தேவன் அவருடைய குமாரனை அனுப்புகிறார். ஆனால் தலைவர்கள் கனிகளை தாங்களே வைத்துக் கொள்ள நினைக்கிறார்கள். அவர்கள் திருடர்கள் (மாற்கு 11:17). மக்களை அவர்கள் தங்கள் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்க விரும்புகிறார்கள். எனவே தேவனுடைய குமாரனை அவர்கள் கொலை செய்கிறார்கள்.

- **மாற்கு 12:7.** "சுதந்தரவாளி" சொந்தக்காரனின் மகன். திராட்சைத் தோட்டம் மகனுக்கு சொந்தமாகும். எனவே தோட்டத்தை அவர்கள் எடுத்துக் கொள்வதற்காக மகனை கொன்று போடுகிறார்கள்.
- **மாற்கு 12:10.** இயேசு இந்த வார்த்தைகளை **சங்கீதம்** 118:22,23ல் இருந்து உபயோகிக்கிறார். யூதர்கள் அவர்களுடைய மேசியாவுக்கு என்ன செய்வார்கள் என்பதை இந்த சங்கீதம் கூறுகிறது. கட்டிடத்தின் (தேவாலயம்) மிக முக்கிய கல்லை அவர்கள் ஆகாதென்று தள்ளுகிறார்கள். அந்தக் கல் இயேசுவே.

→ பிரசங்கியுங்கள்: மாற்கு 12:1 -12

தேவன் அவருடைய குமாரனை அனுப்பி இருக்கிறார்

மாற்கு 12:6-8

(கதையை எப்படி சொல்லுவதென்று சிந்தியுங்கள் (அல்லது நடித்துக் காட்டுங்கள்). எல்லோருக்கும் புரியும்படி அதைச் செய்யுங்கள் இயேசு இந்தக் கதையின் மூலம் கூறுவது என்ன என்பதை உங்கள் மக்கள் புரிந்து கொள்வதை உறுதி செய்து கொள்ளுங்கள். உரிமையாளர் = தேவன். தோட்டக்காரர் (குடியிருப்போர்) = யூதத் தலைவர்கள். ஊழியக்காரர்கள் = தீர்க்கதரிசிகள். மகன் = இயேசு)

கதையில் தோட்டச் சொந்தக்காரன் பல ஊழியக்காரர்களை முதலில் அனுப்பினான். ஆயினும் தோட்டக்காரர்கள் அவர்கள் சொல்லுவதை கேட்கவில்லை. ஆனால் உரிமையாளர் விடுவதாக இல்லை. இறுதியில் அவன் தன் சொந்த மகனை அனுப்பினார். "நிச்சயமாக என் மகனை மதிப்பார்கள்" என்று அவர் கூறினார்.

- உரிமையாளர் தனக்கு கனிகள் வேண்டுமென்று எவ்வளவு விரும்பினார்?
- தேவன் ஏன் அவருடைய குமாரனை அனுப்பினார்?

➡ பிரசங்கியுங்கள்: மாற்கு 12:1 –12

தேவன் இயேசுவை ஒரு முக்கிய காரணத்திற்காக அனுப்பினார். இயேசு ராஜாவாயிருக்கும்படி தேவனிடத்திலிருந்து வந்தார். அவருக்குச் சொந்தமானதைப் பெற்றுக் கொள்ள வந்தார். அவர் "என் கனிகளை எனக்குக் கொடுங்கள். என் மக்களை எனக்குக் கொடுங்கள்" என்றார்.

அப்போது தலைவர்கள் "இல்லை, எங்களுக்கு கனிகள் வேண்டும் நாம் தேவனுடைய குமாரனை கொன்று போடுவோம்" என்றார்கள்.

» தேவனுடைய குமாரனுக்கு **நாம்** என்ன செய்வோம்?

தேவன் அவரை அனுப்பிருக்கிறார் என்பதை மறக்க வேண்டாம். அது மிக முக்கியமாகும். அவர் நம்மிடம் கனியைக் கேட்கிறார். நாம் பாவத்தை விட்டு மனந்திரும்பி அவர் மேல் விசுவாசம் வைக்கும்படி தேவன் நமக்குச் சொல்லுகிறார். (மாற்கு 1:15). நீங்கள் 'இல்லை, நீர் எனக்கு வேண்டாம். என்னை விட்டுப் போய்விடும்' என்று சொல்லுகிறீர்களா? 'எனக்கு இப்போது நேரம் இல்லை' என்று சொல்லுகிறீர்களா? நீங்கள் தேவனுடைய சொந்தக் குமாரனைப் பார்த்து 'வேண்டாம்' என்று சொல்லுவீர்களா?

தேவன் என்ன செய்வார்?

📖 மாற்கு 12:9

"என் மகனை அவர்கள் கொன்று போடுவதைக் குறித்து எனக்குக் கவலையில்லை" என்று தேவன் கூறுவாரா? அவர்களுக்குத் தேவையானால் என் கனிகளை எடுத்துக் கொள்ளட்டும் என்று தேவன் கூறுவாரா? "என் மகனுக்கு என்ன செய்ய வேண்டுமென்று அவர்கள் தீர்மானித்துக் கொள்ளட்டும்" என்று தேவன் கூறுவாரா?

நிச்சயமாக இல்லை. தேவன் கோபப்படுவார். அவருடைய மகனை ஏற்றுக் கொள்ள விரும்பாத மக்களை தேவன் தண்டிப்பார். அவருடைய கனிகளை அவருக்குக் கொடுக்காத மக்களை அவர் நியாயந் தீர்ப்பார்.

தேவனுடைய புதிய ஆலயமாகிய சபையில் இயேசுவே முக்கிய கல்லாக இருப்பார். இதைத்தான் பழைய ஏற்பாடு கூறுகிறது.

📖 மாற்கு 12:10–11

» நாம் தேவனுடைய குமாரனுக்கு 'இல்லை' என்று சொல்வோமானால், தேவன் நம்மை என்ன செய்வார். அவர் மரணத்தை விட்டு உயிர்த்தெழுந்து, ராஜாவாக இருக்கிறார் என்பதை நினைத்துப் பாருங்கள். நம்முடைய வாழ்க்கை அவருக்குச் சொந்தம். நாம் அவருடைய கனிகளைத் திருடினால் அவர் நம்மை நியாயம் தீர்ப்பார்.

49 தேவனுக்கு சொந்தமானதை தேவனுக்குக் கொடுங்கள்

▪ **பின்னணி**

மாற்கு 12:1-12ன் ▪ **பின்னணி**யைப் பார்க்கவும்.

இதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். மாற்கு 11-12 அதிகாரங்களில் நாம் வாசித்த யாவும் இயேசுவின் வாழ்க்கையின் கடைசி வாரத்தில் நடந்தது. அந்த வாரத்தின் இறுதியில் அவர்கள் இயேசுவைக் கொன்று விடுவார்கள். ஆயினும் மாற்கு 12ம் அதிகாரம் இயேசு எல்லாவற்றையும் அவருடைய கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருக்கிறார் என்பதைக் காட்டுகிறது. இயேசு தானாகவே அவரை அவர்களுக்கு ஒப்புக் கொடுக்கும்போது மட்டுமே அவர்களால் இயேசுவை கொல்ல முடியும்.

▪ **முக்கிய விடயம்**

தேவனுக்கு சொந்தமானதை தேவனுக்குக் கொடுங்கள்.

★ **நீங்கள் செய்ய வேண்டியது**

அநேக கிறிஸ்தவர்கள் தாங்கள் **முற்றிலும்** தேவனுக்கு சொந்தமானவர்கள் என்பதை புரிந்து கொள்ளாமலிருக்கிறார்கள். அவர்கள் தேவனுக்கு கொஞ்சம் பணத்தையும், கொஞ்சம் நேரத்தையும் மாத்திரம் கொடுக்கிறார்கள். மிகுதியை வைத்து தங்களை மகிழ்ச்சிப்படுத்திக் கொள்ளுகிறார்கள்.

I கொரிந்தியர் 6:19–20; ரோமர் 6:13

▪ **குறிப்புகள்**

- **மாற்கு 12:13.** “பரிசேயர்” என்பவர்கள் அவர்களுடைய மதத்தை நேசிக்கும் யூதர்கள். “ஏரோது” தேவனைப் பற்றியோ, அல்லது மதத்தைப் பற்றியோ அக்கறையில்லாத கூட்டம். இரண்டு பிரிவினரும் இயேசுவை வெறுத்தார்கள். எனவே, அவரை கொல்லுவதற்கு அவர்கள் ஒன்று சேருகிறார்கள். **மாற்கு 3:6.**
- **மாற்கு 12:14-15.** அவர்கள் இயேசுவைக் குறித்து நல்லவைகளைச் சொல்வதாக நடிக்கிறார்கள். அவர்கள் தன்னை மதிப்பதாக இயேசு எண்ண வேண்டுமென்று அவர்கள் நினைக்கிறார்கள். ஆனால் அவர்களுக்கு உண்மையில் என்ன தேவை என்பது இயேசுவுக்குத் தெரியும். அவர்கள் அவரை பிரச்சினைக்குள் சிக்க வைக்க நினைக்கிறார்கள். இயேசுவின் பதிலை அவருக்கு விரோதமாக உபயோகிக்க அவர்கள் முயற்சிக்கிறார்கள்.
- **மாற்கு 12:15.** அது ஒரு சாமர்த்தியமான கேள்வி இயேசு அதற்கு “ஆம்” என்று பதில் அளித்தால் சாதாரண யூதர்கள் அவருக்கு விரோதமாக மாறி விடுவார்கள். அவர் அதற்கு “இல்லை” என்று பதிலளித்தால், அவர் ரோம ஆளுநரான

? கற்றுக்கொள்ளுங்கள்: மாற்கு 12:13-17

ஏரோதுவுடன் பிரச்சினையில் மாட்டிக் கொள்ள நேரிடும்.

- **மாற்கு 12:15.** ரோம நாணயத்தில் (தெனாரியஸ்) இராயனுடைய (பேரரசன்) முகத்தின் உருவம் பொறிக்கப்பட்டு இருக்கும். இராயன் அந்த நாட்களில் உலகத்தின் பல பாகங்களில் உள்ள நாடுகளுக்கு (ரோம பேரரசு) ராஜாவாக இருந்தான். பணம் கூட இராயனுக்கு சொந்தமாயிருந்தது.

பிரசங்கியுங்கள்: மாற்கு 12:13-17

இராயனுக்குக் கொடுங்கள்!

மாற்கு 12:13~17

(இதை விளக்கவும். இயேசுவை பிரச்சினையில் சிக்க வைப்பதற்காக இரண்டு பிரிவினரும் ஒன்று சேர்கிறார்கள். அந்தக் கேள்வி எவ்வளவு சாமர்த்தியமானதென்பதை காண்பிக்கவும். அதன்பின் இயேசுவின் விவேகமான பதிலைக் குறித்துப் பேசவும்.)

“ஒரு ரோம நாணயத்தை எனக்குக் காட்டுங்கள்“ ரோமர்கள் யூதர்களின் மேல் ஆட்சி செலுத்தினார்கள். அதை யூதர்கள் வெறுத்தார்கள். தேவனுடைய பிள்ளைகள் இராயனுக்கு வரி செலுத்தக் கூடாதென்று யூதர்கள் நினைத்தார்கள்.

ஆயினும் அவர்கள் யாவரும் ரோம நாணயங்களைப் பாவித்தார்கள். இயேசு அவர்களிடம் ஒரு நாணயத்தைக் காட்டும்படி கேட்கிறார். எல்லா ரோம நாணயங்களிலும் இராயனின் முகம் இருந்தது. எனவே நாணயம் இராயனுக்கு சொந்தமானது. ஆகவே, இராயன் தனக்கு வரி செலுத்த வேண்டுமென்று கூறினால், அவர்கள் அதைச் செலுத்த வேண்டும்.

பிரசங்கியுங்கள்: மாற்கு 12:13-17

நீங்களும் உங்கள் அரசாங்கத்திற்கு வரி செலுத்த வேண்டியிருக்கலாம்.இராயனைப் போல, உங்கள் அரசாங்கமும் பிழையான காரியங்களைச் செய்து கொண்டிருக்கக் கூடும். இயேசு நாம் நமது வரிகளை சரியாக செலுத்த வேண்டுமென்று விரும்புகிறார். எனவே அதைக் குறித்து முறையிடவோ, இந்த விஷயத்தில் ஏமாற்றவோ வேண்டாம்!

ரோமர் 13:1~7

தேவனுக்குக் கொடுங்கள்!

மாற்கு 12:7

அவர்கள் கேள்வி சாமர்த்தியம் ஆனது. ஆனால் இயேசுவின் பதில் அதைவிட திறமையானது. இயேசு சொல்வது உண்மையென்று இரு பிரிவினருக்கும் தெரியும். அவர்கள் இராயனுக்கு வரி செலுத்த வேண்டும் ஏனென்றால் அது அவனுக்கு சொந்தமானது. அதுபோல், அவர்கள் தேவனுக்குச் சொந்தமானதை தேவனுக்குக் கொடுக்க வேண்டும்.

நாமும் நாணயத்தைப் போன்றவர்கள். நாம் தேவனின் சாயலைக் கொண்டு இருக்கிறோம். அவர் எங்களைப் படைத்தார். நாம் அவருக்குச் சொந்தம். எனவே அவர் நம்மிடம் கேட்கும் யாவையும் நாம் அவருக்குக் கொடுக்க வேண்டும்.

- **தேவன் நம்மிடம் எதைக் கேட்கிறார்?**

  (மாற்கு 12:29~31)

“தேவனுக்குச் சொந்தமானதை தேவனுக்குக் கொடுங்கள்” என்று சொல்லுவதற்கு தேவன் அவருடைய சொந்தக் குமாரனை அனுப்புகிறார். ஆயினும் இந்த மக்கள் அதைக் கேட்க மாட்டார்கள். அவர்கள் உண்மையில் தேவன் மேல் அன்பு செலுத்தவில்லை. அவர்களுடைய வாழ்க்கையை தேவனுக்கு ஒப்புவிக்க அவர்களுக்கு விருப்பமில்லை. எனவே அவர்கள் தேவனுடைய குமாரனைக் கொல்ல முயற்சிக்கிறார்கள்.

இயேசு **நம்மிடம்** கூறுகிறார்: ‘தேவனுக்கு சொந்தமானதை தேவனுக்கு கொடுங்கள்‘. அதைச் செய்வதில் நீங்கள் மகிழ்ச்சியடைகிறீர்களா? ‘என்னுடைய பணம் தேவனுடைய பணம், என்னுடைய நேரம் தேவனுடைய நேரம், என்னுடைய முழு வாழ்க்கையும் தேவனுக்கே சொந்தம்’ என்று நீங்கள் சொல்லுகிறீர்களா?

நாம் யாவரும் தேவனிடத்தில் திருடி இருக்கிறோம். நாம் நமக்காக வாழ்ந்து இருக்கிறோம். இயேசு நம்முடைய எல்லாக் கடனையும் சிலுவையில் செலுத்த வந்தார் என்பதை நினைவில் கொள்ளுங்கள். அவர் நம்மை மன்னிக்க வந்தார். அவர் நமது வாழ்க்கைக்கு உரிமை கோரவும் நம்மை மீண்டும் அவருடையவர்களாக்கிக் கொள்ளவும் வந்தார். நீங்கள் தேவனுக்கு எதை திருப்பிக் கொடுக்க வேண்டும்?

50 ஓர் தீய தவறு

▣ பின்னணி

வித்தியாசமான பிரிவுகளைச் சேர்ந்த யூதர்கள் இயேசுவிடம் கேள்வி கேட்க வருகிறார்கள். அவர்களுக்குப் பதிலைத் தெரிந்து கொள்ள வேண்டுமென்ற அவசியம் இருக்கவில்லை. அவை கடினமான கேள்விகள். இயேசுவால் அவைகளுக்குப் பதிலளிக்க முடியாது என்று அவர்கள் நினைக்கிறார்கள். இயேசுவை சிக்க வைப்பதே அவர்கள் நோக்கம். இயேசுவை முட்டாளாக்க அவர்கள் முயற்சிக்கிறார்கள். இறுதியில் அவரைக் கொல்ல நினைக்கிறார்கள்.

இயேசுவை சோதிக்க வந்த அடுத்த பிரிவு **சதுசேயராகும்.** 📖 மாற்கு 12:18~27

▣ முக்கிய விடயம்

ஓர் தீய தவறை செய்ய வேண்டாம். வேதாகமம் கூறுவதை நம்புகள்!

☆ நீங்கள் செய்ய வேண்டியது

சதுசேயரைப்போல ஓர் தீய தவறை நாமும் செய்யக் கூடும். நாம் மற்றவர்களோ, அல்லது பராம்பரியமோ கூறுவது சரியென்று நினைத்து அதில் உறுதியாக நிற்கலாம். அல்லது புதிய போதனைகளைக் கேட்டு அவைகளைப் பின்பற்றுவதில் துரிதமாக இருக்கலாம். அந்தப் போதனைகள் நம்மைக் கவரலாம். அவைகள் நமக்கு பல நல்ல வாக்குறுதிகளை அளிக்கலாம். அந்த வேளைகளில் நாம் **தேவன்** வேதாகமத்தில் என்ன கூறி இருக்கிறாரென்று கவனமாகப் பார்க்கத் தவறி விடக்கூடும். நாம் வேதாகமம் சொல்வதை விசுவாசிக்காமல் போகலாம். அப்போது நாம் குருடர்களாகி விடுகிறோம்.

✹ குறிப்புகள்

- **மாற்கு 12:18. “சதுசேயர்”** பரிசேயரை விட வித்தியாசம் ஆனவர்கள். அவர்கள் மோசேயினால் எழுதப்பட்ட முதல் ஐந்து பழைய ஏற்பாட்டுப் புத்தகங்களை மட்டுமே ஏற்றுக் கொண்டார்கள். மரித்தோர் மீண்டும் உயிர்த்து எழும்புவார்கள் என்று அவர்கள் நம்பவில்லை.
- **மாற்கு 12:20.** சதுசேயர் ஒரு கதையை உருவாக்குகிறார்கள். அவர்கள் உயிர்தெழுதலின் நாளை (மரித்த நமது உடல்கள் உயிரடையும் நாள்) விசுவாசிக்க வில்லை. அவர்கள் கதை உயிர்த்தெழுதலை முட்டாள்த் தனமானதாக ஆக்கியதாக நினைத்தார்கள். ஒரு பெண் ஏழு முறை, ஏழு சகோதரர்களை திருமணம் செய்கிறாள். ஒருவன் மரித்தால் அவன் சகோதரன் அவன் மனைவியை திருமணம் செய்ய வேண்டுமென்று பழைய ஏற்பாடு கூறுகின்றது. இப்படியாக ஏழு பேரும் மரித்துப் போகிறார்கள். எனவே

? கற்றுக்கொள்ளுங்கள்: மாற்கு 12:18 – 27

உயிர்தெழுதலில் அவள் யாருக்கு மனைவியாயிருப்பாள் என்பதே கேள்வி. இந்தக் கேள்விக்கு பதிலளிப்பது இயேசுவுக்குக் கடினமென்று அவர்கள் நினைத்தார்கள்.

- **மாற்கு 12:26-27.** (**யாத்திராகமம் 3:6**) தேவன் பெரும் வாக்குத்தத்தங்களை ஆபிரகாமுக்கும், ஈசாக்குக்கும், யாக்கோபுக்கும் கொடுத்தார். அவர்கள் இந்த உலகத்தில் உயிரோடிருக்கும் போது அந்த வாக்குத்தத்தங்களை சுதந்தரித்துக் கொள்ளவில்லை. ஆனால் தேவன் வாக்குத் தத்தங்களை நிறைவேற்றுகிறவர். தேவன் இன்னும், ஆபிரகாம்,ஈசாக்கு, யாக்கோபு முதலியவர்களின் தேவனாயிருக்கிறார். அவர்கள் ஒன்றும் இல்லாமல் போய் விடவில்லை. அவர்களின் ஆவிகள் இன்னும் உயிரோடுதான் இருக்கின்றன. அவர்கள் உயிர்த்தெழுதல் நடக்கும் நாளுக்காக காத்திருக்கிறார்கள். அவர்கள் சரீரங்கள் உயிரடையும். அப்போது அவர்கள் விசுவாசித்த தேவனுடைய வாக்குத் தத்தங்களை அவர்கள் சுதந்தரிப்பார்கள்.

→ பிரசங்கியுங்கள்: மாற்கு 12:18 – 27

உயிர்த்தெழுதலைக் குறித்து ஓர் கேள்வி

மாற்கு 12:23

சதுசேயர் இயேசுவை முட்டாளாக்கப் பார்க்கிறார்கள். (சதுசேயர் சொன்ன கதையை விளக்கவும். அதற்கு பதிலளிப்பது இயேசுவுக்கு ஒரு பிரச்சினையாயிருக்குமென்று அவர்கள் ஏன் நினைத்தார்கள்?)

இயேசுவுக்கு அதற்குப் பதில் சொல்வது எளிதாக இருந்தது. **மாற்கு 12:25.** பரலோகத்தில் நமக்கு உண்மையான உடல்கள் இருக்கும். ஆனால் அவை பூமியிலுள்ள நமது உடல்களைப் போலிருக்காது. பரலோகத்தில் நமக்கு உண்மையான நண்பர்கள் இருப்பார்கள். ஆயினும், உலகத்திலுள்ளது போல் அது இருக்காது. நாம் திருமணம் செய்ய மாட்டோம். நமக்குப் பிள்ளைகளும் இருக்காது! **1 கொரிந்தியர் 15:35~44**

» ஒரு நாள் நமது உடல்கள் உயிர்தெழும் என்பதை நம்புவது மிக முக்கியமாகும். நமக்கு உண்மையான சரீரங்கள் இருக்கும். இதைவிட நல்ல சரீரங்கள். நாம் இயேசுவை விசுவாசித்தால், நாம் அவருடன் சதாகாலமும் ஜீவிப்போம். நமக்கு அதைக் குறித்து பல கேள்விகள்

இருக்கலாம். அது எப்படியானதாய் இருக்கும்? அதைக் குறித்துக் கவலைப்பட வேண்டாம். தேவன் நமக்கு வேத புத்தகத்தில் கூறியிருப்பதை விசுவாசிக்கவும்.

பழைய ஏற்பாடு என்ன போதிக்கிறது என்பதை இயேசு சதுசேயருக்குக் காட்டுகிறார். அது நாம் மரணத்திலிருந்து உயிர்தெழுவோமென்று கூறுகிறது. சதுசேயர் வேதாகமத்தில் மோசே எழுதிய பகுதிகளை விசுவாசித்தார்கள். எனவே இயேசு அவர்களுக்கு மோசேயினால் எழுதப்பட்ட ஒரு புத்தகத்திலிருந்தே படிப்பிக்கிறார் - யாத்திராகமம். தேவன் உயிரோடிருப்பவர்களுக்கு தேவனாயிருக்கிறார், மரித்தோருக்கு அல்ல என்பதை அவர் விளக்குகிறார். நாம் இந்த உலகில் மரித்த பின்பும் கூட தேவன் நமது தேவனாயிருக்கிறார். ஏனென்றால் நமது வாழ்க்கை உலகத்துடன் முடிவதில்லை. நமது உடல்கள் மீண்டும் உயிர் பெற்று எழும்பும் (மாற்கு 12:26~27ஐ விளக்கவும் ~ **குறிப்புகளைப்** பார்க்கவும்)

நம்மைக் குறித்து ஓர் கேள்வி

மாற்கு 12:24,27

சதுசேயரைப் போல நாமும் ஓர் தீய தவறை செய்திருக்கிறோமா?

சதுசேயருக்கிருந்த பிரச்சினையை தெரிவு செய்யவும்:

- அவர்களுக்கு வேதாகமத்தைப் புரிந்து கொள்வது கடினமாய் இருந்ததா?
- அல்லது, அவர்களுக்கு வேதாகமத்தை விசுவாசிக்க **விருப்பமில்லாமல்** இருந்ததா?

வேதாகமத்தைப் புரிந்து கொள்வது கடினமாயிருக்கும் போது தேவன் நமக்கு உதவி செய்ய விருப்ப் உள்ளவராயிருக்கிறார். புரிய வைக்கும்படி தேவனிடம் கேளுங்கள். உங்கள் ஆசிரியரிடமும் கேளுங்கள்.

ஆயினும் சதுசேயர் பிழையாக நினைத்தார்கள். ஏனென்றால் அவர்கள் வேதாகமத்தின் போதனைகளை விசுவாசிக்கவோ, ஏற்றுக் கொள்ளவோ இல்லை. வேதாகமம் கூறுவதை அவர்கள் **விரும்பவில்லை.** அதனால்தான் அவர்களுக்கு வேத வசனத்தைக் குறித்தும் தேவனின் வல்லமையைக் குறித்தும் அறிவில்லாமல் இருந்தது. இயேசு சொல்கிறார். “இது ஓர் தீய தவறு. நீங்கள் நினைப்பது முற்றிலும் பிழை”!

தேவன் வேதாகமத்தில் கூறும் **எல்லாவற்றையும்** நீங்கள் விசுவாசிக்க விரும்புகிறீர்களா? உங்களுக்கு அதில் ஏதாவது பிடிக்காவிட்டால், நீங்கள் என்ன செய்வீர்கள்? அதை ஏற்றுக் கொள்ள உதவி செய்யும்படி தேவனிடம் ஜெபிப்பீர்களா? (இதைக் குறித்து இன்னும் அதிகமாகக் உரையாடவும்). நீங்கள் இந்த தீய தவறைச் செய்கிறீர்களா?

51 உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடு அன்பு கூருவாயாக!

பின்னணி

இயேசு எருசலேமிலிருக்கிறார். அது அவர் மரிப்பதற்கு முன்னான கடைசி வாரம். அநேக யூதர்கள் அவரைக் கொல்ல வேண்டுமென்று நினைக்கிறார்கள். ஆயினும், அதை எப்படிச் செய்வதென்று அவர்களுக்குத் தெரியவில்லை. அவர்கள் சாமர்த்தியமான கேள்விகளைக் கேட்டு அவரைப் பிரச்சினைக்குள் சிக்க வைக்க நினைக்கிறார்கள்.

இப்போது வேறொருவன் இயேசுவிடம் ஒரு கேள்வியுடன் வருகிறான். அதுவே கடைசிக் கேள்வியாக இருக்கும். இயேசு எல்லாக் கேள்விகளுக்கும் நல்ல பதில்களைக் கொடுப்பதால், ஒருவனும் வேறு கேள்விகளை அவரிடம் கேட்க விரும்பவில்லை.

இந்த மனிதன் வித்தியாசமானவன். அவன் இயேசுவை வெறுக்கவில்லை. அவன் அவரிடமிருந்து கற்றுக் கொள்ள விரும்புகிறான். உண்மையிலேயே அவனுடைய கேள்விக்கு அவன் பதிலை எதிர்பார்க்கிறான்.

மாற்கு 12:28–34.

முக்கிய விடயம்

இந்த மனிதனைப்போல் தேவனின் உண்மையை ஏற்றுக் கொள்ளுங்கள். தேவனுடைய கற்பனைகளை கைக் கொள்ளுவதற்கான வழி **அன்பே** ஆகும்.

நீங்கள் செய்ய வேண்டியது

சட்டங்களைப் பின்பற்றுவது எளிது. ஆனால் தேவனுக்கு **நமது முழு அன்பு** தேவைப்படுகிறது! இது நமக்குக் கஷ்டமாகத் தோன்றுகிறது. இதை உங்கள் பேச்சைக் கேட்பவர்களுக்கு எப்படி விளக்குவது என்று சிந்தியுங்கள்.

குறிப்புகள்

- மாற்கு 12:28. **கற்பனைகளைப் கற்பிக்கும் ஆசிரியர்களில்** பெரும்பாலானோர் இயேசுவுக்கு விரோதமாயிருந்தார்கள். அவர்களுடைய வேலை தேவனுடைய கற்பனைகளைப் படித்து, அதை மற்றவர்களுக்குப் போதிப்பதாகும். அவர்கள் வேதாகமத்தில் இல்லாத நூற்றுக்கணக்கான சிறு கற்பனைகளை மக்களுக்குக் கற்றுக் கொடுத்தார்கள். அவர்கள் தேவனுடைய கற்பனைகளோடு இந்தச் சிறு கற்பனைகளையும் கைக்கொள்ள வேண்டுமென்று மக்களுக்குச் சொன்னார்கள்.
- மாற்கு 12:28-30. கற்பனைகளைப் கற்பிப்பவர்கள் **நூற்றுக்கணக்கான** சிறு கற்பனைகளைப் படித்துக் கொடுத்தார்களென்று முன்பு பார்த்தோம். எனவே முக்கியமான கற்பனை எது? இயேசு அதற்கு ஒரு **புது** பதிலைக் கொடுக்கவில்லை. அவர் உபாகமம் 6:4-6

? கற்றுக்கொள்ளுங்கள்: மாற்கு 12:28 – 34

வசனங்களைக் கூறுகிறார். வேதபாரகர்கள் இந்த வார்த்தைகளை நன்கு அறிந்திருந்தார்கள். அவை பழைய ஏற்பாட்டில் மிக முக்கியமான வார்த்தைகளாய் இருக்கின்றன.

- **மாற்கு 12:31.** இயேசு அத்துடன் இன்னொரு கற்பனையை இணைக்கிறார். இது லேவியராகமம் 19:18ல் உள்ளது. நாம் தேவன் மேல் அன்பு செலுத்தினால், மற்றவர்கள் மேலும் அன்பு செலுத்துவோம் என்று இயேசு அறிந்திருந்தார்.அவை இரண்டும் ஒன்றோடொன்று இணைந்திருக்கின்றன. அவை பத்துக் கற்பனைகளின் சுருக்கமாகும்.

- **மாற்கு 12:34.** அந்த மனிதன் தேவனுடைய ராஜ்யத்திற்கு தூரமானவனல்ல. ஏனென்றால் அவன் ஒரு முக்கிய உண்மையைக் காண்கிறான். நாம் தேவனின் கற்பனைகளை நமது **இருதயத்தில்** வைத்து இருக்க வேண்டும். ஆனால் அவனால் அதைச் செய்ய முடியாது. இப்போது அவன் இயேசுவை விசுவாசிக்க வேண்டும்.

பிரசங்கியுங்கள்: மாற்கு 12:28 – 34

தெரிந்து கொள்ள வேண்டுமென்று விரும்பும் ஒரு மனிதன்

மாற்கு 12:28

இரண்டு விதமான மனிதர்கள் இருக்கிறார்கள். சிலர் தேவனுடைய சத்தியத்தை அறிந்து கொள்ள விரும்புவார்கள். சிலர் அதை விட்டு விலகிப் போக விரும்புவார்கள். சிலர் அதை ஏற்றுக் கொள்வார்கள். சிலர் அதைத் தள்ளி விடுவார்கள். நீங்கள் எந்த வகை?

இந்த வேதபாரகன் (மாற்கு 12:28) தேவனுடைய சத்தியத்தை அறிய விரும்புகிறான். மற்ற மனிதர்கள் இயேசுவிடம் கடினமான கேள்விகளைக் கேட்க வந்தார்கள். ஆனால் இவன் வித்தியாசமானவன். உண்மையை அறிந்து கொள்ள இயேசுவால் தனக்கு உதவி செய்ய முடியும் என்று அவனுக்குத் தெரியும்.

இயேசு அவனுக்குக் கடினமான ஒரு பதிலைக் கொடுக்கும் போது என்ன நடக்கிறது? மாற்கு 12:32,33 “அது கடினம்” என்று அவன் சொல்லவில்லை. அவன் சாக்குப்போக்கு சொல்லவுமில்லை. அவன் இயேசுவின் பதிலை **ஏற்றுக் கொள்கிறான்.** இயேசு சொல்வது சரியென்று அவன் அறிவான்

இந்தக் கற்பனையை அவன் கைக் கொள்ள வேண்டுமென்று அவன் அறிவான்.

தேவனுடைய வார்த்தை கடினமாய்த் தோன்றும்போது நீங்கள் என்ன செய்வீர்கள்? 'எனக்கு அதைச் செய்ய முடியாது' 'அநேக மக்களை விட நான் நல்லவன்' தேவன் கட்டாயமாக அதைச் செய்ய வேண்டுமென்று கூறவில்லை (இன்னும் பல சாக்குகளைக் குறித்து உரையாடவும்)

நாம் கடைபிடிக்க வேண்டியதொரு கற்பனை

மாற்கு 12:32,33

+ ஒரு மனிதனுக்கு இரண்டு மகன்கள் இருக்கின்றனர். அவன் அதில் ஒரு மகனுக்கு நூறு கட்டளைகளைக் கொடுக்கிறான். ஆனால் மற்ற மகனிடம் தன் மேல் அன்பு செலுத்தும்படி மட்டும் கூறுகிறான். இரண்டு பேரும் தகப்பன் சொன்னபடி செய்கிறார்கள். எந்த மகன் தகப்பனை அதிக மகிழ்ச்சியடையச் செய்கிறான்?

இந்த வேதபாரகர்கள் நூற்றுக் கணக்கான சிறு சட்டங்களைப் கற்பித்தார்கள். இப்போது அவன், உண்மையில் தேவன் ஒன்றை மட்டுமே எதிர்பார்க்கிறார் என்பதை கண்டு கொள்கிறான். தேவனுக்கு நமது அன்பு வேண்டும் - அநேக பலிகள் அல்ல.

நாம் நமது எல்லாப் பணத்தையும் தேவனுக்குக் கொடுக்கலாம். நாம் ஒவ்வொரு நாளும் ஆலயம் செல்லலாம். நாம் தொடர்ந்து வாரம் முழுவதும் ஜெபிக்கலாம். ஆனால், அன்பு இல்லாமல் இவை யாவும் ஒன்றுமில்லை.

தேவனுக்கு எவ்வளவு அன்பு தேவை?

இந்தக் கற்பனையை எவ்வளவு தூரம் நீங்கள் பின்பற்றுகிறீர்கள்? அது எவ்வளவு எளிதானது?

இந்த மனிதன் உண்மையைக் கண்டான் - நீங்கள் காண்கிறீர்களா? நாம் நமது முழு இருதயத்தோடு தேவன் மேலும், மற்றவர்கள் மேலும் அன்பு செலுத்த வேண்டுமென்று தேவன் கூறுகிறார். ஆனால் அது எங்களால் கூடாது. அதைச் செய்யத் தொடங்கவும் முடியாது. ஏனென்றால் நாம் நம்மேல் அதிக அன்பு செலுத்துகிறோம். எனவே தேவனுடன் நமக்குப் பிரச்சினை ஏற்படுகிறது.

இதனால்தான் நமக்கு **இயேசு** தேவை. தேவன் மேல் அன்பு செலுத்தத் **தவறிய** மக்களை மன்னிக்க இயேசு வந்தார். இயேசு நமது பாவங்களுக்காக மரிக்க சிலுவையை நோக்கிப் போனார். இயேசுவை உங்கள் இரட்சகராக இருக்கும்படி அவரிடம் கேளுங்கள்.

52 எடுப்பதா அல்லது கொடுப்பதா?

பின்னணி

வித்தியாசமான மனிதர்கள் இயேசுவிடம் வித்தியாசமான கேள்விகளைக் கேட்பதற்கு வருகிறார்கள். அவர்கள் அவரைப் பிரச்சினைக்குட்படுத்தி, அவரைக் கொலை செய்ய முயற்சி செய்கிறார்கள். இப்போது இயேசு அவர்களிடம் ஒரு கடினமான கேள்வியைக் கேட்கிறார்.

இந்தக் போதகர்கள் நினைப்பது பிழை என்பதை இயேசு மக்களுக்குக் காட்ட விரும்புகிறார். அவர்கள் இயேசுவைக் குறித்து நினைத்திருப்பது பிழை. அவர்கள் வாழும் முறையும் பிழை. அவர்கள் தங்களுக்கு வேண்டியவைகளை **எடுத்துக்** கொள்கிறார்கள். அவர்களுக்கு மக்களைக் குறித்தோ, அல்லது கடவுளைக் குறித்தோ கவலையில்லை.

அந்த ஏழை விதவையைப் போல் இருப்பது மிகவும் சிறப்பானது. அவளுக்குள்ள எல்லாவற்றையும் அவள் **கொடுக்க** விரும்பினாள்.

மாற்கு 12:35~44

முக்கிய விடயம்

தங்களுக்கென்று எடுத்துக் கொள்ள நினைக்கும் கெட்ட போதகர்களைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள். தேவன் மேல் உண்மையான அன்பு செலுத்தி எல்லாவற்றையும் கொடுத்த அந்த விதவையைப் போலிருங்கள்.

நீங்கள் செய்ய வேண்டியது

மாற்கு 12:41-44ல் வரும் விதவை ஒரு சக்தி மிக்க உதாரணமாய் இருக்கிறாள். ஆனால், கவனமாய் இருங்கள். இதில் முக்கிய விடயம் மக்களை அதிக பணம் கொடுக்க ஊக்குவிப்பதல்ல. ஒரு சிறு காணிக்கையை கொடுத்தவரை இயேசு கவனிக்கிறார். இயேசு இங்கே ஒரு கொடுக்கும் **இருதயத்தைக்** குறித்து போதிக்கிறார்.

குறிப்புகள்

- **மாற்கு 12:35-37.** இறுதி ஞாயிறன்று இயேசு எருசலேம் தேவாலயத்திற்கு வந்தபோது மக்கள் "தாவீதின் குமாரனுக்கு ஓசன்னா" என்று பாடினார்கள். வேதபாரகர் அதைக் கண்டு கோபம் அடைந்தார்கள். இயேசுவை ஒருவரும் "தாவீதின் குமாரன்" என்று அழைப்பதை அவர்கள் விரும்பவில்லை. ஏனென்றால் அதற்கு அர்த்தம் "கிறிஸ்து" அல்லது "மேசியா" என்பதாகும்.
- இப்போது வேதம் "கிறிஸதுவைக்" குறித்து என்ன சொல்லுகிறது என்பதை இயேசு அவர்களுக்குப் போதிக்கிறார். அவர்கள் நினைத்ததை விட அவர் இன்னும் அதிக முக்கியமானவராயிருக்கிறார். "கிறிஸ்து" வெறும் ஒரு மனிதனல்ல. ஏனென்றால்

? கற்றுக்கொள்ளுங்கள்: மாற்கு 12:35 – 44

தாவீது அவரை "ஆண்டவர்" என்று அழைக்கிறார். எனவே இந்த வேதபாரகர் இயேசுவை "தாவீதின் குமாரன்" என்று அழைப்பதை விட இன்னும் அதிக மரியாதையுடன் அவரை அழைக்க வேண்டும். அவரை அவர்கள் கர்த்தரென்றும் தேவனென்றும் மரியாதை செய்ய வேண்டும்.

- **மாற்கு 12:40.** வேதபாரகர் பரிசுத்தவான்களைப் போலக் காணப்படுவார்கள். உண்மை என்னவென்றால் அவர்கள் பேராசையும், கொடுமையும் நிறைந்தவர்களாய் இருந்தார்கள். அவர்கள் உதவியை நாடி வரும் விதவைகளிடமிருந்து பணம் பெற்றுக் கொள்வார்கள். அவர்கள் உண்மையில் என்ன செய்தார்களென்று நமக்குத் தெரியாது. ஆனால் இயேசு அது திருட்டு என்று நினைக்கிறார்.

→ பிரசங்கியுங்கள்: மாற்கு 12:35 – 44

அபாயம்! கெட்ட போதகர்கள்!

மாற்கு 12:35~40

- ஒரு போதகர் நல்ல கதைகள் பல கூறக்கூடும். அவர் நம்மை சிரிக்க வைக்கக்கூடும். அவர் ஒரு பெரிய சபையிலிருந்து வந்திருக்கக் கூடும். ஆனால் அவர் ஒரு கெட்ட போதகர் என்று எப்படி நாம் அறிய முடியும்?

1. அவர் எல்லா உண்மைகளையும் போதிக்க மாட்டார். மாற்கு 12:35~37

(இந்த வசனங்களை விளக்கவும் ~ **குறிப்பைப்** பார்க்கவும்). வேதபாரகர் வேதாகமம் சொல்வதை ஏற்றுக் கொள்ள விரும்பவில்லை. அவர்களுக்கு விருப்பமானவை களை சொல்லும்படி வேதாகமத்தை மாற்றினார்கள்.

» தேவனுடைய வசனத்தைப் பின்பற்ற விரும்பாத ஊழியக்காரர்களை ஏற்றுக் கொள்ள வேண்டாம். அவர்கள் (நாமும் கூட) வேதாகமம் தம்மை மாற்ற அனுமதிக்க விருப்பமுள்ளவர்களாயிருக்க வேண்டும்.

2. ஒரு கெட்ட போதகர் அவரைக் குறித்து மட்டுமே அக்கறையுள்ளவராயிருப்பார்.
மாற்கு 12:38~40

வேதபாரகர் மிகவும் நல்லவர்களாகக் காணப்பட்டார்கள். அவர்கள் அதிகமாக ஜெபித்தார்கள். அவர்கள் எல்லா முக்கியமான கூட்டங்களிலும் கலந்து கொண்டார்கள். அவர்கள் எவ்வளவு நல்லவர்களென்று எல்லோரும் அறிந்து கொள்ள வேண்டுமென்று அவர்கள் விரும்பினார்கள். **ஆயினும் அவை யாவற்றையும் அவர்களுக்காகவே செய்தார்கள்.** அவர்கள் பேராசை உள்ளவர்களாக இருந்தார்கள். அவர்களுக்கு அதிகாரமும், பணமும் தேவைப்பட்டது. அவர்களுக்கு விதவைகளைப் போன்ற வாழ்க்கையில் தேவையுள்ள மக்களைக் குறித்து அக்கறையில்லை.

» சில கிறிஸ்தவ தலைவர்களும் இவர்களைப் போலிருக்கிறார்கள். அவர்களைக் குறித்து ஜாக்கிரதையாய் இருங்கள். நாம் யாவரும் ஒரு பிரபலமான போதகரின் பிரசங்கங்களைக் கேட்க விரும்புகிறோம். ஆனால், அவர் தேவனை கனப்படுத்துபவரா? அல்லது அவருக்குப் பணம்தான் தேவையா? அவர் எவ்வளவு நல்லவரென்று மற்றவர்கள் அவரைக் குறித்து நினைக்க வேண்டுமென்று விரும்புபவரா?

» இதை போன்றவர்களுக்கு என்ன நடக்கும்? **மாற்கு12:40.**

நல்ல உதாரணம்! எல்லாவற்றையும் கொடுக்கும் ஒருவர்!

மாற்கு 12:41~44

- வேதபாரகரைவிட இந்த விதவை எப்படி வித்தியாசமானவள்?

⊞ தேவன் இந்த இடத்தில் அநேக மக்களை இரட்சித்திருக்கிறார். எல்லா மக்களும் போதகரின் பிரசங்கங்களை கேட்க விரும்பினார்கள். ஒரு நாள் ஒருவர் அந்த போதகரிடம் உங்கள் ஊழியத்தில் எப்படி இவ்வளவு வெற்றி கிடைத்தது‘ என்று கேட்டார். அப்போது ‘அங்கே பாருங்கள் அப்போது நீங்கள் தெரிந்து கொள்வீர்கள்‘ என்று போதகர் கூறினார். அப்போது ஒரு வயோதிபப் பெண் அவர்களைக் கடந்து சபைக்குள் செல்வதை அவர் கண்டார். ‘அவர் ஒவ்வொரு நாளும் ஜெபிக்க வருகிறார்‘ என்று போதகர் கூறினார்.

அந்தப் பெண் மாற்கு 12ல் வரும் விதவையைப் போன்றவள். அவள் எல்லாவற்றையும் கொடுத்தாள். அந்த விதவை அவளுடைய பணத்தையெல்லாம் தேவனுக்குக் கொடுத்தாள். மற்றவர்கள் அவளைக் கவனிப்பதை அவள் விரும்பவில்லை. அவள் தேவன் மேல் அன்பு செலுத்தினாள். எனவே அவள் கொடுக்க விரும்பினாள்.

» யார் அவர் மேல் உண்மையான அன்பு செலுத்துகிறார்கள் என்று இயேசு அறிவார். மற்ற மக்கள் பிரபல போதகரைக் கவனிக்கிறார்கள். ஆனால் இயேசு அவர் மேல் அன்பு செலுத்துபவர்களைப் பார்க்கிறார்.

53 பிரச்சினைகளை எதிர்பாருங்கள்

▣ பின்னணி

வாரத்தின் இறுதியில், இயேசு சிலுவையில் மரிப்பார். அதன்பின் அவர் பரலோகத்திற்குத் திரும்பிப் போவார். அவருக்கு உலகில் பல வேதனையான காரியங்கள் நடக்குமென்பதை இயேசு அறிவார். இவை யாவும் தவறுதலாக நடக்கவில்லை என்பதை அவருடைய நண்பர்கள் அறிந்து கொள்ள வேண்டுமென்று இயேசு விரும்பினார். இந்த கடினமான காரியங்கள் நடக்குமென்று இயேசு அவர்களிடம் கூறுகிறார். அவர்கள் இயேசுவை நம்ப வேண்டும். இயேசு மீண்டும் உலகத்தை நியாயம் தீர்க்க வருவதற்கு அவர்கள் காத்திருக்க வேண்டும்.
📖 மாற்கு 13.

◉ முக்கிய விடயம்

பிரச்சினைக்கு தயாராக இருங்கள். தேவனுடைய சத்தியத்தை விட்டு விடாதிருங்கள். எல்லாம் இயேசுவின் கட்டுப்பாட்டுக்குள் இருக்கின்றன என்பதை நம்புங்கள்.

★ நீங்கள் செய்ய வேண்டியது

1. மாற்கு 13ம் அதிகாரம் விளங்கிக் கொள்வதற்கு கடினமானது. அதை விளங்கிக் கொள்ள மத்தேயு 24ம் அதிகாரம் உங்களுக்கு உதவக் கூடும். வேதாகம ஆராய்ச்சியாளர்கள் சில பகுதிகளை வித்தியாசமான விதங்களில் விளக்குகிறார்கள். நாம் அவைகளைக் கவனமாகப் படிக்க வேண்டும். அதன்பின் **முக்கியமானவைகளை தெளிவாகப்** போதிக்க நமக்கு உதவும்படி தேவனிடம் கேட்க வேண்டும். நாம் நமது மக்களை குழப்பக் கூடாது. இயேசுவிடம் இருந்து நமக்கு சில முக்கியமான செய்திகள் இருக்கிறன. நாம் இந்த தெளிவான செய்திகளைக் கேட்கும்படி ஜெபியுங்கள்.

2. இயேசு இரண்டு வித்தியாசமான நிகழ்வுகளைக் குறித்து இந்த அதிகாரத்தில் பேசுகிறார். 1) **எருசலேமின் மேல் வரும் தேவனுடைய நியாயத்தீர்ப்பு.** ரோமர்கள் எருசலேமையும், தேவாலயத்தையும் கி.பி. 70ம் வருஷத்தில் (இயேசு பிறந்து 70வருடங்களின் பின்) அழித்துப் போடுவார்கள். 2) **உலகத்தின் முடிவு.** இயேசு உலகத்தை நியாயம் தீர்க்க வரும் நேரம்.

மாற்கு13ம் அதிகாரத்தில் இயேசு எந்த நிகழ்வைக் குறித்து பேசுகிறார் என்பது சில இடங்களில் தெளிவாக இல்லை. இந்த இரண்டு நிகழ்வுகளும் ஒரே வகையானவை களாயிருக்கின்றன. எருசலேமின் மேல் வரும் தேவனுடைய நியாயத்தீர்ப்பு, முழு உலகத்தின் மேலும் வரும் அவருடைய நியாயத்தீர்ப்புக்கு ஒரு உதாரணம் ஆகும். அவை இரண்டுக்கும் அவருடைய மக்கள் தயாராயிருக்க வேண்டுமென்று இயேசு விரும்புகிறார்.

கற்றுக்கொள்ளுங்கள்: மாற்கு 13:1 -8

குறிப்புகள்

- **மாற்கு 13:4.** **மத்தேயு 24:3** தேவாலயம் உலக முடிவில் இயேசு மீண்டும் வரும் போது அழிக்கப்படும் என்று சீஷர்கள் நினைக்கிறார்கள். எனவே இயேசுவின் பதில் 1,2 என இரண்டு நிகழ்வுகளையும் குறித்ததாய் இருக்கின்றது.
- **மாற்கு 13:7-8.** உலகில் பெரும் பிரச்சினைகள் ஏற்படும் போது, சில மக்கள் அது உலகத்தின் முடிவு என்று நினைக்கிறார்கள். இயேசு இது பிழையென்று கூறுகிறார். அது ஒரு பிள்ளை பிறப்பதைப் போன்றதாகும். முதல் வலி நீங்கள் தயாராக இருக்க வேண்டுமென்று கூறுகிறது! ஆனால் பிள்ளை வெளியே வருவதற்கு இன்னும் அதிக நேரம் காத்திருக்க வேண்டும். யுத்தங்களும், பேரழிவுகளும் உலகத்தின் முடிவுக்கு நாம் தயாராக இருக்க வேண்டுமெனறு நமக்குக் கூறுகின்றன. ஆனால், முடிவு வந்து விட்டது என்பது அதன் அர்த்தமல்ல.

பிரசங்கியுங்கள்: மாற்கு 13:1 -8

உபத்திரவம் வரும்

மாற்கு 13:2,7

அநேக வருடங்கள் நிலைத்திருக்கக் கூடிய நல்ல உறுதியானதொரு சபைக் கட்டிடம் உங்களுக்கிருக்கின்றதா? ஒருவேளை நீங்களும் அந்தக் கட்டிடத்தைக் கட்ட உதவி செய்திருக்கக் கூடும். நீங்கள் அதைக் குறித்துப் பெருமைப் படலாம். அப்போது ஒருவர் வந்து 'விரைவில் இது இடிந்து கற்குவியலாகப் போய்விடும்' என்று கூறுகிறார். நீங்கள் என்ன நினைப்பீர்கள்?

அவர்களுடைய தேவாலயமே மிக முக்கியமான கட்டிடம் என்று யூதர்கள் நினைத்திருந்தார்கள். அவர்களுடைய எல்லா ஆராதனையினதும் மையம் அதுவே. அது மிகப் பெரிதாகவும், என்றும் நிலைத்திருக்க கூடியவை களாகவும் அழகாகவும் இருந்தது. அதன் கற்கள் மிகவும் உறுதி வாய்ந்தவைகளாகவும் இருந்தன. இப்போது இயேசு அவைகள் யாவும் ஒன்றுமில்லாமல் போய் விடும் என்று கூறுகிறார். இது மிகவும் மோசமானதாகவும் பயங்கரமானதாகவும் தோன்றியது.

பயங்கரமான காரியங்களுக்கு நாம் தயாராயிருக்க வேண்டுமென்று இயேசு கூறுகிறார்.

➡ பிரசங்கியுங்கள்: மாற்கு 13:1 -8

⊳ உங்கள் ஊரிலோ அல்லது கிராமத்திலோ நடந்திருக்கக்கூடிய பயங்கரமான காரியங்கள் எவை?

⊳ நடக்கக் கூடுமென்று நீங்கள் பயப்படும் காரியங்கள் என்ன?

உபத்திரவம் வரும் என்று இயேசு சொல்வதை நினைவு கூருங்கள். தேவாலயம் அங்கிருக்காது. ஆனால் இயேசுவின் திட்டம் தொடர்ந்து இருக்கும். உங்கள் சபை கட்டிடத்தை எவராவது எரித்து விடலாம். ஆனால் இயேசுவின் கட்டுப்பாட்டின் கீழ்தான் எல்லாம் தொடர்ந்தும் இருக்கும். யுத்தங்கள், பூமி அதிர்ச்சிகள், வெள்ளம், பஞ்சங்கள் யாவும் வரும். இயேசு அப்படித்தான் கூறியிருக்கிறார். ஆனால் அவைகளில் ஒன்றும் இயேசுவைக் குறித்த உண்மையை மாற்றாது. இயேசுவின் திட்டம் பிழைத்துப்போய் விட்டதென்று நினைக்க வேண்டாம். அவரை நம்புங்கள்.

தேவனை விட்டு விட வேண்டாம்

📖 மாற்கு 13:7

உபத்திரவம் நிச்சயமாக நம்மை துக்கப்படுத்தும். ஆனால் உபத்திரவம் வரும்போது நாம் **பிழையான வழிகளுக்குப் போகக்** கூடாது என்று இயேசு கூறுகிறார்.

⊞ ஒருவர் உங்களை ஒரு பொருளை கையில் பிடித்துக் கொள்ளச் சொல்வதாக கற்பனை செய்யுங்கள். அது சூடாகிக் கையைச் சுடும், ஆனால், அதை **விட்டு விடாமல் கையில் பிடித்துக் கொண்டு இருக்க வேண்டும்** என்றும் கூறுகிறார். பிடியைத் தளர்த்தினால் அது கீழே விழுந்து உடைந்து விடும். நமக்குக் கஷ்டங்கள் வரும். ஆனால் உண்மையை விட்டு விடவோ, பிழையானவைகளைச் செய்து விடவோ கூடாதென்று இயேசு கூறுகிறார்.

பெரும் பிரச்சினைகள் வரும்போது, இயேசு இரண்டு காரியங்களை நாம் செய்யக் கூடாது என்று கூறுகிறார்:

1. உலக முடிவு வந்துவிட்டது என்று நினைக்கக் கூடாது (மாற்கு 13:7).

⊳ (✹ **குறிப்புகள்** இதை விளக்குவதற்கு உங்களுக்கு உதவியாயிருக்கும்) நமது கிறிஸ்தவ வாழ்க்கையை **தொடர்ந்து** நாம் வாழ வேண்டுமென்று இயேசு விரும்புகிறார். மோசமான காரியங்கள் நடக்கும். ஆனால் அது உலகத்தின் **முடிவு அல்ல.** அமைதியாய் இருந்து ஜெபியுங்கள். எப்படி உதவி செய்யலாம் என்று பாருங்கள்.

2. பிழையான போதனைகளை நம்பக் கூடாது (மாற்கு 13:5).

⊳ எப்போதும் இந்தக் கேள்வியைக் கேளுங்கள். 'வேதாகமம் இதைக் கூறுகின்றதா?' அவர்கள் அநேகரை வஞ்சிப்பார்கள். என்று இயேசு நம்மை எச்சரிக்கிறார். (அநேக மக்கள் அவர்களுடைய பொய்யை நம்புவார்கள்) வேதாகமம் சொல்லுவதை மட்டுமே நம்புங்கள்!

54 நற்செய்தியை கூறிக் கொண்டேயிருங்கள்

பின்னணி

இயேசு தன் சீஷர்களை எதிர்காலத்திற்காக தயார்படுத்த விரும்புகிறார். இயேசு அவர்களை விட்டுப் போன பின்பு அவர்கள் அதிகப் பிரச்சினைகளை எதிர் கொள்ள நேரிடும். அவர்கள் உடனே உலகத்தின் முடிவு வந்து விட்டதாக நினைத்து விடக்கூடாது. மக்கள் அவர்களை வெறுப்பார்கள். “இயேசுவைப் பற்றிப் போதிக்க வேண்டாம்” என்று அவர்களுக்குச் சொல்லுவார்கள். ஆயினும் சீஷர்கள் தொடர்ந்து இயேசுவைக் குறித்து மக்களுக்குக் கூற வேண்டும்.

- **பிரச்சினை வரும்போது நாம் என்ன செய்ய வேண்டுமென்று இயேசு விரும்புகிறார்?** மாற்கு 13:9–13

முக்கிய விடயம்

நாம் நற்செய்தியை எல்லோருக்கும் கூற வேண்டும். எவரும் உங்களை தடை செய்ய அனுமதிக்க வேண்டாம்.

நீங்கள் செய்ய வேண்டியது

இங்கே கூறுவது போல உங்கள் பேச்சைக் கேட்பவர்கள் பெரும் ஆபத்துக்களை எதிர்கொள்ள நேரிடலாம். அவர்கள் தங்கள் விசுவாசத்தை மறைத்து வைக்காமலிருக்க அவர்களுக்கு உதவி செய்யுங்கள். இந்தப் பகுதி அவர்களுக்கு தைரியத்தைக் கொடுக்க வேண்டுமென்று ஜெபியுங்கள்.

அல்லது, உங்கள் பேச்சைக் கேட்பவர்களுக்கு அவர்கள் இயேசுவை விசுவாசிப்பதாகக் கூறுவது எளிதாயிருக்கும். இயேசுவுக்காக உபத்திரவப்படும் மற்றப் பகுதியிலுள்ள கிறிஸ்தவர்களுக்கு உதவும்படி அவர்களை ஊக்கப்படுத்துங்கள். அதை எப்படி அறிந்து கொள்வது? அவர்களுக்கு எப்படி உதவி செய்வது?

குறிப்புகள்

- **மாற்கு 13:10.** இயேசு சீக்கிரம் மீண்டும் வருவாரென்று சீஷர்கள் எதிர்பார்த்தார்கள். ஆயினும் இயேசு திரும்ப வருமுன் தேவனுடைய மக்களுக்கு வேலையிருக்கிறது. உலகெங்குமுள்ள வித்தியாசமான மனிதர்கள் யாவரும் இயேசுவின் நற்செய்தியை அறிய வேண்டும்.
- **மாற்கு 13:11.** நாம் பேசுவதற்கு முன் கவனமாக சிந்திக்க வேண்டுமென்று அநேகமாக தேவன் விரும்புகிறார். நம் மனதில் வரும் முதல் எண்ணம் தேவனிடமிருந்து வருவதாக நாம் நினைக்கக் கூடாது. ஆயினும் நாம் பெரும் பிரச்சினையில் இருக்கும் போது **விசேஷ** உதவி தேவனிடமிருந்து வருமென்று இயேசு இங்கே வாக்களிக்கிறார். (நீங்கள் கைது செய்யப்படும்போது) நாம் அவருக்காகத் திடமாய் நிற்கும்போது, அவர் நிச்சயமாக

கற்றுக்கொள்ளுங்கள்: மாற்கு 13:9–13

நமக்கு உதவி செய்வார். எனவே நாம் கவலைப்படத் தேவையில்லை.

- **மாற்கு 13:13.** சிலுவையில் இயேசு அவர்களை **ஏற்கனவே** இரட்சித்து விட்டதாக கிறிஸ்தவர்கள் கூறலாம். நாம் இயேசுவை விசுவாசிப்பதால் நாம் பாதுகாப்பாயிருக்கிறோம் என்பதே அதன் அர்த்தமாகும். ஆயினும், நாம் அதைக் கடைசி வரை காத்துக் கொள்ள வேண்டுமென்றும் இயேசு சொல்கிறார். இரட்சிப்பு என்பது சிலுவையில் தொடங்கி பரலோகத்தில் முடியும் ஒரு பிரயாணமாகும். இயேசுவை விசுவாசிக்கும் மக்கள் அவர்கள் வாழ்க்கையில் இறுதி வரை அவரை விசுவாசிக்க வேண்டும். அப்போது அவர்கள் இயேசுவிடம் போய்ச் சேருவார்கள்.

பிரசங்கியுங்கள்: மாற்கு 13:9–13

மக்கள் உங்களை வெறுப்பார்கள்

மாற்கு 13:9,12,13

எல்லோரும் நம் மேல் அன்பு செலுத்த வேண்டுமென்று நாம் விரும்புகிறோம். நாம் நல்லவர்கள் என்று மக்கள் நினைக்க வேண்டும் என்று நாம் விரும்புகிறோம். மற்றவர்கள் நம்மை வெறுப்பதை நாம் விரும்புவதில்லை. எனவே, மற்றவர்கள் விரும்பாதவைகளைச் சொல்லாமலிருக்க நாம் முயற்சி செய்வோம்.

- *ஆனால் இயேசு என்ன கூறுகின்றார்?*

அநேக கிறிஸ்தவர்கள் கஷ்டத்தைத் தவிர்ப்பதற்கு ஒரு வழியைக் கண்டு பிடித்து இருக்கின்றார்கள். அவர்கள் இயேசுவைப் பற்றித் தங்கள் கிறிஸ்தவ நண்பர்களிடம் பேசுவார்கள். ஆனால், அவர்கள் கிறிஸ்தவர்களென்று மற்றவர்களிடம் கூற மாட்டார்கள். அவர்கள் இயேசுவைக் குறித்து மௌனமாய் இருப்பார்கள். அப்போது மக்கள் அவர்களை வெறுக்க மாட்டார்கள்.

- *ஆனால் இயேசு என்ன கூறுகிறார்?*

➡ பிரசங்கியுங்கள்: மாற்கு 13:9-13

நீங்கள் இயேசுவை எவ்வளவு நேசிக்கின்றீர்கள்? யாராவது உங்களை துன்பப்படுத்த நினைத்தால் நீங்கள் இயேசுவை நேசிப்பதாகக் கூறுவீர்களா? உங்கள் குடும்பம் உங்களை வெறுத்தாலும் கூட நீங்கள் இன்னும் இயேசுவை நேசிப்பீர்களா?

இது மிகக் கடினம்! இயேசுவிடம் உங்களுக்கு உதவும்படி கேளுங்கள்.

இயேசு நம்மை என்ன செய்யச் சொல்லுகிறார்

1. எல்லோரும் இயேசுவைக் குறித்து கேள்விப்பட வேண்டும்

மாற்கு 13:10

எவரும் நம்மைத் தடை செய்ய அனுமதிக்கக் கூடாது. நமக்குப் பயம் ஏற்படலாம். ஆனால் எல்லோரும் இயேசுவைக் குறித்து அறிய வேண்டும். இதுவே இயேசுவின் திட்டமாகும். ஆட்சியாளர்களோ, அல்லது காவல்துறையினரோ நம்மைத் தடை செய்ய முயற்சி செய்யும் போது, அவர்களும் இயேசுவைக் குறித்து அறிய வேண்டும் (மாற்கு 13:9).

நீங்களோ அல்லது உங்கள் சபையோயாருக்கு இயேசுவைப் பற்றிக் கூற முடியும்? இயேசுவைப் பற்றிக் கேள்விப்படாத மக்களைக் குறித்து சிந்திக்கவும்.

2. கவலைப்பட வேண்டாம்

மாற்கு 13:11

நாம் இயேசுவுக்காகப் பாடு அனுபவிக்கும் போது அவர் நம்மைப் பார்த்துக் கொள்வார். அந்த நேரத்தில் சரியான வார்த்தைகளைப் பேச அவர் நமக்கு உதவி செய்வதாக வாக்களித்திருக்கிறார். நாம் கவலைப்படுவதை இயேசு விரும்புவதில்லை. நாம் பேச வேண்டுமென்று அவர் விரும்புகிறார். அவரை நம்புங்கள்.

3. கடைசி வரை உறுதியாய் இருங்கள்

மாற்கு 13:13

அது கடினம். ஆனால் விட்டுக் கொடுக்க வேண்டாம். இயேசு கடைசி வரை உங்களுக்கு உதவி செய்வார். (கஷ்டப்பட்டு பிரயாணம் செய்யும் ஒரு காட்சியை உதாரணமாக நீங்கள் உபயோகிக்கலாம்)

உங்களுக்கு விட்டுக் கொடுக்க வேண்டும் என்ற எண்ணத்தை ஏற்படுத்துபவைகள் எவை?

தொடர்ந்து செல்வதற்கு எப்படி இயேசுவின் வார்த்தைகள் உங்களுக்கு தைரியத்தையும்,பெலத்தையும் கொடுக்கின்றன?

55 எல்லாவற்றையும் நம்ப வேண்டாம்!

பின்னணி

இயேசு மீண்டும் வருமுன் ஓர் பெரும் உபத்திரவ காலம் வரும். இயேசு அந்த நாட்களுக்காக நம்மைத் தயார்படுத்த விரும்புகிறார்.

அத்துடன் கி.பி.70ம் வருடத்திலும் பெரும் உபத்திரவம் நேரிட இருந்தது. இயேசு தன் சீஷர்களை அதற்குத் தயார்படுத்தினார். அவர்கள் வாழ்ந்த நாட்களிலே இது நடந்தது.

இந்தப் பகுதி இந்த இரண்டு காலங்களையும் விளக்குகிறது. இயேசுவின் பிறப்பிற்கு 70 வருடங்களின் பின் எருசலேமின் மேல் ஏற்பட்ட தேவனின் நியாயத் தீர்ப்பு ஒரு உதாரணமாகும். அது இயேசு திரும்ப வரும்போது உலகத்தின் மேல் ஏற்படும் தேவனின் நியாயத்தீர்ப்பைப் போன்றதாகும்.

மாற்கு 13:14~27. இயேசு எவைகளைக் குறித்து எச்சரிக்கிறார்?

முக்கிய விடயம்

இயேசு மீண்டும் வருவதற்கு முன்பு ஒரு பெரும் உபத்திரவ காலம் வரும்.

உலக முடிவைக் குறித்து நீங்கள் கேட்கும் எல்லாவற்றையும் நம்ப வேண்டாம்.

நீங்கள் செய்ய வேண்டியது

நாம் உலக முடிவைக் குறித்து கதைக்கும்போது சிலர் அதைக் குறித்து அதிக கிளர்ச்சி அடைகிறார்கள். அப்போது என்ன நடக்கும் என்பதைக் குறித்து அவர்களுக்கு அநேக எண்ணங்கள் இருக்கின்றன. அதனால் நாம் அறிந்து கொள்ள வேண்டுமென்று **இயேசு** விரும்புவதை அவர்கள் தவற விட்டுவிடக் கூடும். உங்கள் பேச்சில் வேதாகமம் கூறுவதை மாத்திரம் கூற கவனமாயிருங்கள். இயேசு கூறும் முக்கிய விடயத்தைக் கூறுங்கள். பெரும் உபத்திரவம் வரும்போது நாம் **தயாராக** இருக்க வேண்டும்.

குறிப்புகள்

- **மாற்கு 13:14.** தேவாலயத்தில் நடக்கும் இந்தப் பயங்கரமான நிகழ்வைக் குறித்து தானியேல் கூறியுள்ளார். (தானியேல் 11:31). ஒரு வெளிநாட்டு ராஜா தேவனுடைய ஆலயத்தில் விக்கிரகங்களை வைத்து வணங்க வருவான். இது நடக்கும் போது எருசலேமில் உள்ள கிறிஸ்தவர்கள் அவர்கள் உயிரைக் காப்பாற்றிக் கொள்ள அங்கிருந்து ஓட வேண்டும்!
- **மாற்கு 13:15-18.** இந்தப் பகுதி கி.பி. 70ம் ஆண்டு எருசலேமில் நடக்கும் சம்பவத்தைக் குறித்துக் கூறுகின்றது. இது அந்தக் காலத்திலிருந்து 40 வருடங்களில் நடக்கும். ரோம இராணுவம் தேவாலயத்தை

கற்றுக்கொள்ளுங்கள்: மாற்கு 13:14–23

அழிக்க வரும். இது **தேவனின்** நியாயத் தீர்ப்பு (யூதர்கள் அவர்களுடைய மேசியாவை நம்பவில்லை. மாறாக அவர்கள் தங்கள் பழைய மதத்தைப் பின்பற்றினார்கள்). ஆயினும், எருசலேமிலிருந்த **கிறிஸ்தவர்களை** தேவன் நியாயம் தீர்க்க மாட்டார். எனவே இயேசு அவர்களை வேகமாக ஓடும்படி கூறினார்!

- **மாற்கு 13:19-20. உலக முடிவுக்கு முன்** என்ன நடக்கும் என்பதைக் குறித்து இயேசு இங்கே கதைப்பதாகத் தோன்றுகின்றது. இதைக் குறித்துதான் அவர் அதைத் தொடர்ந்து கதைக்கிறார். (மாற்கு 13:24; மத்தேயு 24:29 - "முடித்தவுடனே...")

பிரசங்கியுங்கள்: மாற்கு 13:14–23

ஒரு பயங்கரமான பிரச்சினைகளின் நேரம்

மாற்கு 13:19,20

- ஏன் இயேசு பெரும் உபத்திரவம் வருமென்று எச்சரிக்கிறார்?

பயங்கரமான காரியங்கள் நடக்கும் போது நாம் நம்மை திடமாக வைத்திருக்க வேண்டுமென்று இயேசு விரும்புகிறார். கிறிஸ்தவர்கள் இயேசுவின் வருகையை எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். ஆயினும், முதலில் நாம் மிகவும் கடினமான காலங்களினூடே கடந்து செல்ல வேண்டியிருக்கும். அவர்கள் ஆயுள் காலத்தில் பயங்கரமான நாட்களைச் சந்தித்த கிறிஸ்தவர்களுக்கு மாற்கு எழுதினான். ரோம இராணுவம் எருசலேமை அழித்து விடும். இயேசுவுக்காக அநேக கிறிஸ்தவர்கள் மரித்தார்கள். கிறிஸ்தவர்களில் ஒருவரும் மிகுதியாயில்லை என்று ஒருவேளை அவர்கள் நினைத்து இருக்கலாம். ஆனால் தேவன் தனது மக்களை காப்பாற்றுகிறார் (அவரால் தெரிந்துக் கொள்ளப் பட்டவர்கள்). அவர் அவர்களை தெரிந்து கொண்டிருக்கிறார். எனவே அவர் அவர்களைக் காத்துக் கொள்வார்.

நாமும் அதை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். பயங்கரமான காலங்கள் வரும். ஆனால், எல்லாம் தேவனுடைய கட்டுப்பாட்டில்தான் இருக்கும். இயேசு வருவதற்கு முன் பெரும் பிரச்சினைகள் வரும் என்று அவர் நமக்குக் கூறியிருக்கிறார். நாம் கடைசி வரை நிலைத்து நிற்க வேண்டும்.

எல்லாவற்றையும் நம்ப வேண்டாம்!

மாற்கு 13:21-23

- ஒரு போதகர் உண்மை ஆனவரா, அல்லது பொய்யானவரா என்பதை எப்படித் தெரிந்து கொள்வது?
- ஒருவர் தானே மேசியா என்று சொன்னால், அவரை நாம் விசுவாசிக்கலாமா?
- ஒருவர் தானொரு தீர்க்கதரிசி என்று கூறினால் அவரை நாம் நம்பலாமா?
- ஒருவர் அற்புதம் செய்தால் அவரை நாம் நம்பலாமா?

நாம் எல்லாவற்றையும் வேதாகமத்தின் அடிப்படையில் சோதித்துப் பார்க்க வேண்டும். பல கள்ளப் போதகர்கள் வருவார்களென்று இயேசு எச்சரிக்கிறார். "இயேசு மீண்டும் வந்து விட்டார்" என்று சில போதகர்கள் கூறுவார்களென்று இயேசு கூறுகிறார். அவர்கள் நல்லவர்களென்று நீங்கள் நினைக்கலாம். அவர்கள் அற்புதங்கள் செய்யலாம். அவர்கள் நல்ல கதைகளைக் கூறலாம். அவர்கள் உங்களிடம் கிறிஸ்தவ வாழ்க்கை இலகுவானது என்று கூறலாம். ஆனால் அவர்கள் மக்களை வஞ்சிக்கிறார்கள். அதாவது அவர்கள் மக்களை பொய்யை நம்பப் பண்ணுகிறார்கள்.

(இது மிகவும் முக்கியம். அநேக கிறிஸ்தவர்கள் வெகு சீக்கிரம் எல்லாவற்றையும் நம்பி விடுவார்கள். ஒருவர் பிழையாகப் போதிக்கும் போது அதை எப்படி அறிந்து கொள்வது என்பதை நீங்கள் பேசும் மக்களுக்கு விளக்குங்கள். உங்கள் மக்கள் கேட்கக் கூடிய பிழையான போதனைகளைக் குறித்து நீங்கள் அவர்களுடன் கதைக்கலாம். இவைகளை உண்மையாக வேதாகமம் கூறுகின்றதா என்று அவர்களிடம் கேளுங்கள்).

மாற்கு **13:5,23.** இயேசு நம்மை எச்சரிக்கையாய் இருக்கும்படி கூறுகிறார். உண்மையான ஆபத்து வருகிறது. பயங்கரமான காரியங்கள் சம்பவிக்கும் போதும், நாம் கடைசிவரை நிலைத்து நிற்க வேண்டுமென்று இயேசு விரும்புகிறார். பொய்யை நாம் நம்பக் கூடாது என்று அவர் எச்சரிக்கிறார். அது கடினமாயிருந்தாலும் கூட, நாம் அவரை **நம்ப** வேண்டுமென்று இயேசு விரும்புகிறார்.

56 இயேசு மீண்டும் வருவார்

பின்னணி

கி.பி.70ம் வருடத்தின் பயங்கரமான சம்பவங்களை எதிர்கொள்ள அவருடைய **சீஷர்கள்** தயாராய் இருக்க வேண்டுமென்று இயேசு விரும்பினார்.

உலகத்தின் முடிவுக்கு எல்லா கிறிஸ்தவர்களும் தயாராக இருக்க வேண்டுமென்று இயேசு விரும்புகிறார்.

பயங்கரமான காரியங்கள் நடக்கும் போது நாம் அதிகமாக பயந்து விடக்கூடாது. ஏனென்றால் அவை உலகத்தின் முடிவு வந்து விட்டதற்கு அடையாளமல்ல. நாம் அப்படியானவைகளைச் சொல்லும் மக்களை நம்பக் கூடாது. நாம் நமது கிறிஸ்தவ வாழ்க்கையைத் தொடர வேண்டும். நாம் இயேசுவை நம்ப வேண்டும்.

அப்படியானால் இயேசு எப்போது மீண்டும் வருவார் என்பதை எப்படி தெரிந்து கொள்வது? இப்போது இயேசு என்ன நடக்குமென்று நமக்குக் கூறுகிறார். 📖 **மாற்கு 13:24~37**

முக்கிய விடயம்

இயேசு மீண்டும் வருவதாக வாக்களித்திருக்கிறார்.

நீங்கள் செய்ய வேண்டியது

இயேசு சீக்கிரம் வரப்போகிறார் என்பதை விசுவாசிப்பது கடினம். அவர் ஒருபோதும் வரமாட்டாரென்பது போல் தோன்றுகிறது. நாம் முதலில் மரித்து விடுவோமென்று நாம் நினைக்கிறோம். நாம் அப்படி மரித்தாலும் கூட நாம் அவரை சந்திக்கத் தயாராயிருப்பது அவசியம்.

இயேசு மீண்டும் வருவாரென்பதை நாம் மறக்க வேண்டுமென்று சாத்தான் விரும்புகிறான். நீங்கள் பேசுவதைக் கேட்பவர்கள் இதை மனதில் வைத்துக் கொள்ள எப்படி நீங்கள் அவர்களுக்கு உதவ முடியும்?

குறிப்புகள்

- **மாற்கு 13:24-25.** இயேசு **நியாயந்** தீர்க்க வருவார் என்பதை இது காட்டுகிறது. இந்த வார்த்தைகள் பழைய ஏற்பாட்டிலுள்ள வார்த்தைகளைப் போலிருக்கின்றன. தேவன் இந்த விதமாக வருவாரென்று தீர்க்கதரிசிகள் கூறியுள்ளனர். தேவன் உலகத்தை **நியாயம்** தீர்க்க வருவாரென்று அவர்கள் கூறியுள்ளனர். உதாரணம்: ஏசாயா 13:9-11, யோவேல் 2:10,31
- **மாற்கு 13:26.** இது தானியேல் 7:13-14ஐப் போன்றது. இயேசு ராஜாவாகவும், நியாயாதிபதி ஆகவும் வருவார். எல்லோரும் அவரை வணங்குவார்கள்.
- **மாற்கு 13:30.** இயேசு இவை யாவும் விரைவில் நடக்குமென்று

? கற்றுக்கொள்ளுங்கள்: மாற்கு 13:24 – 31

உறுதியளிக்கிறார். சீஷர்கள் இன்னும் உயிரோடிருப்பார்கள். இது கி.பி. 70ல் நடந்த **முதல்** நியாயத்தீர்ப்பின் சம்பவங்களைக் குறித்ததாயிருக்க வேண்டும். விரைவில் பெரும் உபத்திரவம் வரும். அவருடைய மக்கள் அதற்குத் தயாராயிருக்க வேண்டுமென்று இயேசு விரும்புகிறார்.

→ பிரசங்கியுங்கள்: மாற்கு 13:24 – 31

இயேசு மீண்டும் வருவார்

மாற்கு 13:9,12,13

> இயேசு **மீண்டும்** திரும்ப வருவார். அதைக் குறித்து நீங்கள் என்ன நினைக்கிறீர்கள். நீங்கள் அச்சம் அடைகின்றீர்களா? அவர் விரைவில் வர வேண்டுமென்று விரும்புகின்றீர்களா?

1. உலகத்தை நியாயந் தீர்க்க அவர் மீண்டும் வருவார்

மாற்கு 13:24~26. இவை யாவும் நம்மை திகிலுறச் செய்கின்றன. இயேசு உலகத்தை நியாயந் தீர்க்க மீண்டும் வருவார். அவர் அவருடைய எல்லா வல்லமையோடும், மகிமையோடும் வருவார். அப்போது இயேசு, ராஜா என்பதை எல்லோரும் அறிந்து கொள்வார்கள். எல்லோரும் அவருக்கு முன்பாக முழங்காற் படியிட்டு வணங்குவார்கள். ஆனால் அப்போது நம்மை மன்னிக்கும்படி அவரிடம் கேட்க முடியாது.

வெளிப்படுத்தல் 6:12~17.

> அந்த நாளுக்கு நீங்கள் ஆயத்தமா? உங்களை மன்னிக்கும்படி **இப்பொழுதே** இயேசுவிடம் கேளுங்கள். உங்களுடைய ராஜாவாக அவரை **இன்றே** சேவியுங்கள்.

2. அவர் அவருடைய மக்களுக்காக மீண்டும் வருவார்

📖 மாற்கு 13:26-27. இயேசுவை நீங்கள் அறிந்திருந்தால் நீங்கள் பயப்படத் தேவையில்லை. அவர் உங்களை தண்டிக்க வரவில்லை. அவர் தன்னுடைய தெரிந்து கொள்ளப்பட்ட மக்களுக்காக வருவார். அவர் அவர்களை அவருடன் பரலோகம் கொண்டு செல்வார்.

⊞ நீங்கள் எதை எதிர்பார்த்திருக்கிறீர்கள்? (உதாரணம்: பிறந்தநாள், ஒரு நண்பனின் வருகை). அதைக் குறித்து நினைக்கும் போது உங்களுக்கு எப்படியிருக்கிறது?

⊳ இது அதைவிட மிகச் சிறந்தது. உங்கள் நெருங்கிய நண்பர் வருகிறார். அதைக் குறித்து சிந்திக்கவும். அந்த நாளை ஆவலுடன் எதிர்பாருங்கள். இயேசு வரவேண்டுமென்று ஜெபியுங்கள்.

அத்திமரத்தின் மூலம் கற்றுக் கெள்ளுங்கள்

📖 மாற்கு 13:28-31

- அத்திமரம் துளிர் விடும் போது மக்கள் என்ன சொல்வார்கள்?

அத்திமரம் பொய் சொல்லாது. அதில் இலைகள் துளிர்க்கத் தொடங்கும் போது வசந்த காலம் வரப்போகிறது என்று நமக்குத் தெரியும்.

இயேசு எப்பொழுது திரும்ப வருவாரென்று நமக்குத் தெரியாது (மாற்கு 13:32). ஆயினும், உலகத்தில் பல மாறுதல்கள் ஏற்படத் தொடங்கும் போது அது சமீபமாயிருப்பதை நாம் உணரலாம். இயேசு அதைக் குறித்து நாம் கவனமாயிருக்கும்படி விரும்புகிறார். அவர் நாம் தயாராய் இருக்க வேண்டுமென்று விரும்புகிறார்.

முதல் கிறிஸ்தவர்களுக்கு கி.பி.70ல் எருசலேம் அழிக்கப்படுமுன் நடந்தது போல் அது இருக்கும். கிறிஸ்தவர்கள் அதிக துன்பம் அனுபவிப்பார்கள். கள்ளப் போதகர்கள் அநேக வித்தியாசம் ஆனவைகளைக் கூறுவார்கள். அவர்கள் அற்புதங்கள் செய்வார்கள். **அப்போது** இயேசு விரைவில் வருவார் என்பதை நாம் அறிவோம்.

இயேசு பொய் சொல்ல மாட்டார் என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்! 📖 மாற்கு 13:31. இயேசு ஒருபோதும் வரப்போவது இல்லையென்று நாம் நினைக்கக் கூடும். ஆனால், அவர் நிச்சயம் வருவார்.

(நீங்கள் வெள்ளத்தைக் குறித்துக் கதைக்கலாம். நோவாவை ஒருவரும் நம்பவில்லை. ஆனால். நியாயத்தீர்ப்பு வந்தது. ஆயினும், மக்கள் தயாராய் இருக்கவில்லை. இயேசுவின் வருகை ஏன் தாமதமாகிறது என்பதை அறிய நமக்கு 2பேதுரு 3:3-9 உதவுகிறது.)

57 இயேசுவுக்கு ஆயத்தமாயிருங்கள்

▣ பின்னணி

மாற்கு 13:24-31ன் ▣ **பின்னணி**யைப் பார்க்கவும்.

மாற்கு 13ல் இயேசு நாம் ஒரு பெரும் பாடத்தைக் கற்றுக் கொள்ள வேண்டுமென்று விரும்புகிறார். **அவருக்கு நாம் ஆயத்தமாயிருக்க வேண்டுமென்று அவர் விரும்புகிறார்.** இந்தக் கடைசிப் பகுதியே மாற்கு 13ம் அதிகாரத்தின் முக்கிய விடயமாகும்.

📖 **மாற்கு 13:32–37. மத்தேயு** சுவிசேஷத்தில் இயேசு இதைக் குறித்து இன்னும் அதிகமாகக் கூறுகிறார். நாம் இயேசுவுக்காக தயாராயிருக்க வேண்டும். அதற்கு அர்த்தமென்ன?

📖 **மத்தேயு 24:36–44.** (மத்தேயு 25ம் அதிகாரமும் இதைப் பற்றியதேயாகும்)

▣ முக்கிய விடயம்

இயேசு மீண்டும் வரப்போகிறார். அவருக்கு ஆயத்தமாயிருங்கள்.

★ நீங்கள் செய்ய வேண்டியது

அவருடைய வருகையை எதிர்பார்த்து காத்திருக்கும்படி இயேசு நம்மிடம் கூறுகிறார். நாம் நமது வேலையை நிறுத்தி விட வேண்டும் என்பது அதன் அர்த்தம் அல்ல. நாம் அவருக்குக் காத்திருக்க வேண்டும். ஆனால், அதேவேளை ஒன்றும் செய்யாமலும் இருக்கக் கூடாது. அவர் வருமுன் நாம் அவருக்காக செய்ய வேண்டிய வேலையை அவர் நமக்கு நியமித்திருக்கிறார். நாம் உலகத்தின் எல்லா மக்களுக்கும் நற்செய்தியை எடுத்துச் செல்ல வேண்டுமென்று அவர் விரும்புகிறார் (மாற்கு 13:10).

❋ குறிப்புகள்

- **மாற்கு 13:32.** இயேசு தேவனாய் இருக்கிறார். ஆயினும் அவர் உலகத்தில் இருக்கும் போது தேவனைப் போல அவர் எல்லாவற்றையும் அறிந்திருக்க வில்லை. அவர் உண்மையான ஒரு மனிதனாய் இருப்பதற்காக எல்லாவற்றையும் அறியாமல் இருப்பதை அவர் தெரிந்து கொண்டார். அவர் உலகத்தில் இருக்கும்போது அவர் எப்போது திரும்ப வருவார் என்பதை அறிந்திருக்கவில்லை.
- **மாற்கு 13:36.** “தூங்குகிறவர்கள்”. நிச்சயமாக, நாம் இரவில் தூங்க வேண்டும். இயேசு இங்கே தூக்கத்தை நமது கிறிஸ்தவ வாழ்க்கைக்கு ஓர் **உதாரணமாகப்** பாவிக்கிறார். நாம் இயேசுவை மறந்து விட்டால் நாம் “தூங்குகிறோம்” நாம் இந்த உலகத்தின் காரியங்களுக்கு முக்கிய இடங்கொடுத்தால், நாம் “தூங்குகிறோம்” நாம் தேவனைக் குறித்து சோம்பல் உள்ளவர்களாயிருந்தால் நாம் “தூங்குகிறோம்”.

ஒருவனும் அறியான்

மாற்கு 13:32~35

⊞ உங்கள் முதலாளி உங்களிடம் ஒரு பெரிய வேலையைக் கொடுக்கிறார் என்று கற்பனை செய்து கொள்ளுங்கள். அதன் பின் நீங்கள் எப்படி அதைச் செய்து இருக்கிறீர்கள் என்று பார்ப்பதற்கு ஒரு நாள் திரும்பி வருவதாகக் கூறி விட்டு அவர் எங்கோ போய் விடுகிறார். ஆயினும் ஒரு வாரம் சென்ற பின்பும் அவர் வரவில்லை. எனவே நீங்கள் கொஞ்சம் மெதுவாக அந்த வேலையை செய்கிறீர்கள். ஒரு மாதம் கடந்து விட்டது. இன்னும் அவர் வரவில்லை. யாரோ ஒருவர் அவர் நாளை வரப் போவதாகக் கூறுகிறார்கள், ஆனால் அவர் வரவில்லை. எனவே, இப்போது நீங்கள் வானிலை நன்றாக இருக்கும் போது மட்டுமே வேலை செய்கிறீர்கள் ஒரு வருடம் கழிந்து போகிறது. ஆனால், இன்னும் அவர் வரவில்லை. எனவே இனி அவர் வரமாட்டாரென்று நீங்கள் நினைத்து, ஓய்வெடுத்துக் கொண்டும், நன்றாக விளையாட்டுக்கள் விளையாடிக் கொண்டும் இருக்கிறீர்கள். வேலை செய்வதை முற்றிலும் விட்டு விட்டீர்கள். அப்போது திடீரென்று உங்கள் முதலாளி வருகிறார். அவர் உங்களிடம் என்ன சொல்லுவார்?

இது இயேசுவின் கதையைப் போன்றதாகும். எப்போது இயேசு வருவாரென்று நாம் அறிந்து இருந்தால் ஒருவேளை நாம் தயாராக இருப்போம். ஆனால், அவர் எப்போது வருவாரென்று தெரியாது. எனவே நாம் களைப்பு அடைந்து விடுகிறோம். அவர் இனி ஒரு போதும் வரமாட்டார் என்று நாம் நினைக்கிறோம்.

ஆனால், **அவர் வருவார்**, நாம் அதற்குத் தயாராயிருக்க வேண்டும் என்று அவர் விரும்புகிறார்.

⊡ இயேசு எப்போது வருவாரென்று ஒருவருக்கும் தெரியாது. அப்படியானால், **அது** தெரியும் என்று சொல்லும் மக்களைக் குறித்து நாம் என்ன நினைக்கலாம்? அவர்கள் பிழை என்று இயேசு சொல்கிறார்.

இயேசு எப்போது வருவாரென்று **ஒருவருக்கும்** தெரியாது. எனவே நாம் **எப்போதும்** தயாராயிருக்க வேண்டும் **இன்று** நீங்கள் ஆயத்தமா?

எனவே ஆயத்தமாயிருங்கள்!

1. காத்திருங்கள்

மாற்கு 13:35~37

ஒரு காவலாளியைப் போல நாம் தயாராகவும், விழித்தும் இருக்க வேண்டுமென்று இயேசு கூறுகிறார். ஏதாவது நடந்தால் காவலாளி அதைக் காண்பான். எனவே இது எங்களுக்கு என்ன கூறுகிறது?

- இயேசுவின் வருகையைக் குறித்து எப்போதும் நினைத்து, ஜெபிக்க வேண்டும்.
- நடக்கும் என்று இயேசு சொன்னவைகளை நினைவில் வைத்திருக்க வேண்டும்.
- பெரும் உபத்திரவங்களுக்கு தயாராய் இருக்க வேண்டும்.

➡ பிரசங்கியுங்கள்: மாற்கு 13:32-37

2. வேலை

📖 மாற்கு 13:34

- இயேசு கிறிஸ்தவர்களுக்குக் கொடுத்திருக்கும் வேலை என்ன?
- நீங்கள் இயேசுவுக்காக செய்யும் வேலை என்ன? நீங்கள் அவருக்கு நன்றாக வேலை செய்கிறீர்களா?

(நீங்கள் மத்தேயு 25:14~30ல் வரும் இயேசுவின் கதையைக் கூறலாம்)

» நீங்கள் 'தூங்குகிறீர்களா'? இயேசு மீண்டும் வருவார் என்பதை மறந்து விட்டீர்களா? நீங்கள் உங்கள் சொந்தக் காரியங்களில் மும்முரமாக ஈடுபட்டு இருக்கிறீர்களா? அப்படியானால் விழித்தெழுங்கள். காத்திருந்து வேலை செய்யுங்கள். இயேசுவுக்கு ஆயத்தமாய் இருங்கள்.

58 இயேசுவின் மரணத்திற்கு ஆயத்தப்படுத்துதல்

பின்னணி

இயேசு மரிக்க வேண்டிய நேரம் நெருங்கி விட்டது. அது புதன் கிழமையாயிருந்தது. இயேசு வெள்ளிக்கிழமை மரிப்பார். இயேசு மரிக்கப் போவதை இன்னும் சீஷர்கள் விசுவாசிக்காமல் இருக்கிறார்கள். மாற்கு 14ம் அதிகாரத்தில் இயேசு அவருடைய மரணத்திற்கு அவர்களை ஆயத்தப்படுத்த அவர்களுக்கு உதவி செய்கிறார்.

மாற்கு 14:1~42.

மாற்கு 14:1~11. பலவிதமான மக்கள் எப்படி இயேசுவின் மரணத்திற்கு ஆயத்தம் செய்கிறார்கள்? (யூதத்தலைவர்கள், ஸ்திரி, யூதாஸ்)?

(வித்தியாசமானவைகளை ஒன்றாக்கி நம்மை சிந்திக்கப் பண்ணுவதை மாற்கு விரும்புகிறார். மாற்கு 14:1-2 எப்படி மாற்கு 14:10-11ஐப் போலிருக்கிறது என்பதைக் கவனிக்கவும். நடுவில் மாற்கு14:3-9 வருகிறது. எவ்வளவு **வித்தியாசம்** என்று பார்க்கவும்.)

முக்கிய விடயம்

இயேசுவின் மரணம் நல்ல செய்தி ஆகும். நீங்கள் எந்த அளவு இயேசுவை நேசிக்கிறீர்கள்?

நீங்கள் செய்ய வேண்டியது

இயேசு மரிப்பதை **நாம்** விரும்பி இருக்க மாட்டோம். **நாம்** யூதாஸைப் போலானவர்களல்ல. ஆனால் ஒருவேளை அப்படியும் இருக்கலாம். யூதாஸைப் போல் அநேகர் இருக்கிறார்கள். அவர்கள் கிறிஸ்தவர்களைப் போலக் காணப் பட்டாலும் உட்புறத்தில் கிறிஸ்தவர்களல்ல. அவர்கள் இயேசுவை நேசிப்பதை விட, பணம் அல்லது மற்றவைகளை நேசிக்கிறார்கள். இதைக் குறித்துப் பேச உங்களுக்கு உதவும்படி இயேசுவிடம் கேளுங்கள்.

குறிப்புகள்

- **மாற்கு 14:1.** “புளிப்பில்லாத அப்பம் சாப்பிடுகிற பஸ்கா பண்டிகை”. தேவன் எப்படி அவர்களை எகிப்திலிருந்து விடுதலை செய்தார் என்பதை இந்தப் பண்டிகை யூதர்களுக்கு நினைவூட்டியது. அன்று, எகிப்தில் அவர்கள் ஒரு ஆட்டுக் குட்டியைக் கொன்று அதன் இரத்தத்தை வாசல் கதவுகளில் பூச வேண்டியிருந்தது. தேவனுடைய தூதன் எகிப்தின் எல்லாத் தலைப்பிள்ளை களையும் அழித்தான். ஆனால் இரத்தமிருந்த வீடுகளைக் கடந்து சென்றான். இயேசு அந்த பஸ்கா ஆட்டுக்குட்டியைப் போன்றவர். அவர் தேவனுடைய கோபத்திலிருந்து நம்மை இரட்சிக்க (பஸ்கா பண்டிகையின் நேரத்தில்) மரித்தார். (யாத்ராகமம் 12:1-30).
- **மாற்கு 14:3.** “ஒரு ஸ்திரி”. யோவான், இந்தப் பெண்ணை பெத்தானியாவில் வசித்த லாசரு

கற்றுக்கொள்ளுங்கள்: மாற்கு 14:1 -11

மற்றும் மார்த்தாளின் சகோதரியாகிய **மரியாள்** என்று குறிப்பிடுகிறான் (யோவான் 11:1-2,12:1-7).

- **மாற்கு 14:4-5. யூதாஸ்** இதைச் சொன்னதாக யோவான் நமக்குக் கூறுகிறான். ஒரு வேளை அவனே முதலில் கதைத்திருக்க வேண்டும். யூதாஸ் பணப் பையை வைத்து இருந்தான். அவன் ஒரு கள்ளனாயிருந்தான்! (யோவான் 12:4-6)
- **மாற்கு 14:3,8.** அந்தப் பெண் விசேஷமானதொரு காரியத்தைச் செய்தாள். மக்கள் நறுமண தைலத்தை நல்ல வாசனை வீசும்படி தங்கள் மேல் தடவிக் கொள்வார்கள். இந்தப் பரிமள தைலம் ஒரு வருட சம்பளத்தின் விலையாயிருந்தது. இயேசு மரிக்கப் போவதாக ஒருவேளை அவள் அறிந்திருக்கக் கூடும். அவளால் முடியும்போதே அவளுடைய பெரும் அன்பை இயேசுவுக்குக் காட்ட அவள் விரும்பினாள். இயேசு மரித்த பின் ஒருவருக்கும் அவர் உடலில் வாசனைத் தைலம் பூச முடியாது. ஆனால் மரியாள் அதை ஏற்கனவே செய்து விட்டதாக இயேசு கூறினார்.

பிரசங்கியுங்கள்: மாற்கு 14:1 -11

இயேசுவைக் கொல்லத் தயார்

மாற்கு 14:1~2,10~11

- இயேசுவை விட பணத்தை அதிகமாக நேசிக்கும் எவரை யாவது உங்களுக்குத் தெரியுமா?
- அதிக பணத்தைப் பெற்றுக் கொள்வதற்காக தன்னை ஒரு **கிறிஸ்தவன்** என்றோ அல்லது **போதகர்** என்றோ சொல்லிக் கொள்ளும் எவரையாவது நீங்கள் அறிவீர்களா?

யூதாஸ் ஒருபோதும் ஒரு உண்மை விசுவாசியாயிருக்கவில்லை. (யோவான் 13:10-11). இயேசுவின் மேல் அன்பு செலுத்துவதாக யூதாஸ் நடித்தான். அவனும் மற்ற சீஷர்களைப் போலக் காணப் பட்டான். ஆனால் அவன் இயேசுவையல்ல பணத்தையே நேசித்தான். எனவே அந்தப் பெண் எல்லாப் பரிமள தைலத்தையும் இயேசுவின் மேல் ஊற்றினபோது அவன் மிகவும் கோபப்பட்டான். எவ்வளவு வீண் செலவு!

அதன்பின் யூதாஸ் பணம் சம்பாதிக்க இன்னொரு பயங்கரமான வழியைக் குறித்து சிந்தித்தான். மாற்கு 14:10~11.

» யூதாஸ் இயேசுவை பணத்திற்காக கொல்ல சம்மதித்தான். **நீங்கள்** என்ன செய்ய சம்மதித்தீர்கள்? நீங்கள் அதிக பணம் சம்பாதிக்க மற்றவர்களை ஏமாற்றுவீர்களா? நீங்கள் அரசாங்கத்திற்கு வரி செலுத்தாமலிருக்க முயற்சிப்பீர்களா? நீங்கள் இயேசுவுக்கு சொற்பப் பணம் மாத்திரமே கொடுப்பீர்களா? நீங்கள் பணத்தை விட அதிகமாக இயேசுவை நேசிப்பது உறுதியா? யூதாஸைப் போல ஒரு கிறிஸ்தவனாக நடிக்க வேண்டாம்!

இயேசுவை நேசிக்கத் தயார்

📖 மாற்கு 14:3~9

இயேசு மரிக்கத் தயாராக இருக்கிறார். அவர் தன் மரணத்தைக் குறித்து எப்படி கதைக்கிறாரென்று பாருங்கள். 📖 மாற்கு 14:8~9. நாம் மரணத்தைக் குறித்து கதைக்க விரும்புவதில்லை. ஆனால் இயேசு அதைப் பற்றிக் கவலைப்பட வில்லை. அவர் அதை நற்செய்தி ஆகிய “சுவிசேஷம்” என்று

» நாம் இப்போது இயேசுவின் மரணத்தைக் குறித்துப் பாடுகிறோம் ~ அது நற்செய்தி என்று நமக்குத் தெரியும். இயேசு எங்களுக்காக மரித்து, மீண்டும் உயிர்த்தெழுந்ததால் நாம் அவர் மேல் அன்பு செலுத்துகிறோம். இயேசு எங்களுக்காக செய்த மிகச் சிறந்த காரியம் இதுவே. (உங்கள் பேச்சின் இறுதியில், இயேசுவைத் துதித்து சில பாடல்களைப் பாடவும்)

இயேசுவின் அநேக நண்பர்கள் இயேசுவின் மரணத்திற்கு தயாராய் இல்லை. ஏன் அவர் மரிக்க வேண்டுமென்று அவர்களுக்கு விளங்கவில்லை. ஆனால் மரியாள் கொஞ்சம் அறிந்திருக்கிறாள். அவளால் முடிந்தபோது அவள் தன் அன்பை இயேசுவின் மேல் காட்ட வேண்டுமென்று அவள் அறிந்திருக்கிறாள்.

- மரியாள் எந்த அளவு இயேசுவின் மேல் அன்பு செலுத்தினாள்?

நான் என்றால், **கொஞ்சம்** பரிமள தைலத்தை இயேசுவின் மேல் ஊற்றி விட்டு மிகுதியை எனக்காகப் பாதுகாத்து வைத்து இருப்பேன் என்றே நான் நினைக்கிறேன். ஆனால் மரியாள் அந்த பரிமள தைலத்தின் விலையைக் குறித்துக் கவலைப் படவில்லை. அவளுக்கு எல்லாம் **இயேசுவாக** இருந்தது.

» மரியாளுக்கு அன்று தெரிந்திருந்ததை விட அதிகமாக நமக்கு இயேசுவைப் பற்றித் தெரியும். நமது பாவத்தை அகற்றுவதற்காக அவர் சிலுவையில் மரித்தார் என்று நமக்குத் தெரியும். நாம் மரியாளை விட அதிகமாக அவர் மேல் அன்பு செலுத்த வேண்டும்.

» நீங்கள் இயேசுவின் மேல் அன்பு செலுத்த ஆயத்தமா? எவ்வளவு? அது எப்படி வெளியே தெரியும்?

59 கர்த்தருடைய இராப்போஜனம்

பின்னணி

அது வியாழக்கிழமை. மறுநாளில் தான் மரிக்கப் போவது இயேசுவுக்குத் தெரியும். அவர் மரிப்பது **அவர்களுக்காகவே** என்று சீஷர்கள் அறிந்து கொள்ள வேண்டும். அது தேவனுடைய திட்டம் என்பதை அவர்கள் அறிந்து கொள்ள வேண்டும். பஸ்கா உணவு கர்த்தருடைய இராப் போஜனமாக மாறுகிறது.

மாற்கு 14:22–26.

முக்கிய விடயம்

இயேசு மரிக்கத் தயாராயிருக்கிறார். நாம் ஒவ்வொருவரும் தனிப்பட்ட முறையில் அவருடைய மரணத்தை நம்ப வேண்டும்.

நீங்கள் செய்ய வேண்டியது

கிறிஸ்தவர்கள் அடிக்கடி கர்த்தருடைய இராப்போஜனத்தில் கலந்து கொள்வார்கள். அப்பமும் திராட்சை ரசமும் நமக்கு மிகவும் பழக்கமானவை. ஆனால், இயேசு இதைச் செய்ததின் உண்மையான அர்த்தம் நமக்குப் புரிகின்றதா? அவருடைய சீஷர்கள் என்ன புரிந்து கொள்ள வேண்டுமென்று இயேசு விரும்புகிறார்?

குறிப்புகள்

- மாற்கு 14:12. பஸ்காவும், புளிப்பில்லாத அப்பப் பண்டிகையும் தேவன் அவர்களை எகிப்திலிருந்து எப்படி மீட்டார் என்பதை யூதர்கள் நினைவு கூறுவதற்கு அவர்களுக்கு உதவியாய் இருந்தது. அப்போது அவர்கள் ஒரு ஆட்டுக்குட்டியைக் கொன்று அதன் இரத்தத்தை வாசற் கதவுகளில் பூசினார்கள். கர்தருடைய தூதன் எல்லா எகிப்திய ஆண் பிள்ளைகளை யும் அழித்தான். ஆனால் இரத்தம் பூசப்பட்ட வீடுகளைக் கடந்து சென்றான். இயேசு இந்த பஸ்கா ஆட்டுக்குட்டியைப் போன்றவர். அவர் தேவனுடைய கோபத்திலிருந்து நம்மை மீட்டுக் கொள்ள (பஸ்காபண்டிகைக் காலத்தில்) மரித்தார். **யாத்திராகமம் 12:1-30.**
- மாற்கு 14:12-16. இயேசுவின் உயிருக்கு ஆபத்து இருந்ததாலேயே அவர் இப்படி கட்டளையிடுகிறார் என்று நினைக்கத் தோன்றுகிறது. இயேசு தன் சீஷர்களை மிகவும் இரகசியமாக சந்திக்க விரும்புகிறார்.
- மாற்கு 14:21. யூதாஸ் இறுதியில் இரட்சிக்கப் படவில்லை. அவனுக்கு நடப்பது எவ்வளவு பயங்கரமாயிருக்கும் என்று இயேசு கூறுகிறார். (யோவான் 17:12)
- மாற்கு 14:22-24. இயேசு எப்போதுமே **உதாரணங்கள்** மூலம் பேசினார். அவர் அந்த அப்பம் தன்னுடைய உண்மையான சரீரம் என்ற அர்த்தத்தில் அதைக்

? கற்றுக்கொள்ளுங்கள்: மாற்கு 14:12 – 26

கூறவில்லை. அதேபோல் திராட்சை ரசம் அவருடைய உண்மையான இரத்தம் என்று அவர் கூறவில்லை. ஆனால் அவருடைய மரணமாகிய பரிசை நமக்காக விசுவாசத்துடன் நாம் **பெற்றுக்** கொள்ள வேண்டுமென்று அவர் விரும்புகிறார்.

- **மாற்கு 14:24.** "உடன்படிக்கை" இது ஒரு முக்கியமான வாக்குத் தத்தமாகும். "இரத்தம்" அது எவ்வளவு முக்கியமானது என்பதை காட்டுகிறது. பழைய ஏற்பாடு வாக்களித்த புதிய உடன்படிக்கையை இயேசுவின் மரணம் கொண்டு வருகிறது. இயேசுவின் மரணத்தை விசுவாசிக்கும் எவரையும் தேவன் இரட்சிப்பார் என்பதற்கு இயேசுவின் இரத்தம் ஓர் உறுதியான வாக்குத்தத்தமாகும்.
- **மாற்கு 14:25.** அவருடைய மரணம் முடிவல்ல என்பதை சீஷர்கள் அறிந்து கொள்ள வேண்டுமென்று இயேசு விரும்புகிறார். அவர்கள் பரலோகத்தில் அவருடன் புசிக்கவும், குடிக்கவும் செய்வார்கள்.

➡ பிரசங்கியுங்கள்: மாற்கு 14:12 – 26

இயேசு மரிக்க ஆயத்தமாய் இருக்கிறார்

⊞ உங்களுக்கு ஒரு சோதனை அல்லது பரீட்சை இருக்கிறது. அல்லது ஒரு வேலைக்கான நேர்முகத் தேர்வு இருக்கிறது. எனவே அதற்கு முன் நீங்கள் என்ன செய்வீர்கள்? நீங்கள் அதற்கு உங்களைத் தயார்படுத்துவீர்கள். நீங்கள் தயாராயிருக்க வேண்டுமென்று உங்களுக்குத் தெரியும்.

அவை யாவையும் விட இயேசுவின் சோதனை மிகக் கடினமானது. இயேசு மிகவும் கஷ்டமான, வேதனை நிறைந்த சோதனையினூடே கடந்து செல்ல வேண்டும். அவர் அதற்குத் **தயாராயிருக்கிறார்.**

- அவர் பஸ்கா உணவை அவருடைய சீஷர்களுடன் உண்ண ஆயத்தமாயிருக்கிறார் (மாற்கு 14:12-16).
- யூதாஸ் அவரைக் காட்டிக் கொடுப்பதை ஏற்றுக் கொள்ள அவர் ஆயத்தமாயிருக்கிறார் (மாற்கு 14:17-21).
- அவருடைய சொந்த மரணத்தைக் குறிக்கும் ஓர் உணவைப் பகிர்ந்து கொள்ள அவர் ஆயத்தமாயிருக்கிறார்! (மாற்கு 14:22-25).

(இந்த மூன்றையும் குறித்து மேலும் உரையாடவும். இயேசு கட்டுப்பாட்டுடன் இருக்கின்றார். 'அவரைக் குறித்து எழுதியிருக்கிறபடியே' அவர் போக ஆயத்தமாயிருக்கிறார் (மாற்கு 14:21).

அநேக வேளைகளில் **நாமும்** இந்த சீஷர்களைப் போலவே இருக்கிறோம். நாம் பெலவீனமும், பயமுமுள்ளவர்களாய் இருக்கிறோம். தேவனுடைய வார்த்தையை நம்புவது நமக்குக் கடினமாயிருக்கிறது. ஆனால் **நமது இரட்சகரோ** நமக்காக மரிப்பதற்கு முற்றிலும் தயாராக இருந்தார். எல்லா வேதனையையும் அவர் மேல் ஏற்றுக் கொள்ள அவர் விருப்பத்துடன் இருந்தார். அவர் மேல் அன்பு செலுத்துங்கள்!

அதை எடுத்துக் கொள்ளுங்கள்

மாற்கு 14:22

இயேசு மரிக்க ஆயத்தமாகி இருக்கிறார். அவர் தனியாக மரிக்க வேண்டும். இயேசுவால் மட்டுமே நமது பாவங்களை ஏற்றுக் கொள்ள முடியும். ஆயினும் சீஷர்கள் அவருடன் **இணைந்து இருக்க** வேண்டுமென்று இயேசு விரும்புகிறார். அவர் மரிப்பது **அவர்களுக்காக**. எனவே அவர்கள் அவருடைய "மரண" உணவைப் பகிர்ந்து கொள்ள வேண்டும். "நான் மரிக்கப் போகிறேன். அது **உங்களுக்காகவே.** என்னுடைய சரீரத்தையும், இரத்தத்தையும் எடுத்துக் கொள்ளுங்கள். என்னுடைய மரணத்தில் என்னுடன் இணையுங்கள்" என்று இயேசு சொல்கிறார்.

(பஸ்காவைக் குறித்து உரையாடவும். எப்படி இஸ்ரவேலர் அதில் இணைந்து கொள்ள வேண்டியிருந்தது. அவர்கள் ஆட்டுக் குட்டியை கொல்ல வேண்டி இருந்தது. அந்த ஆட்டுக் குட்டியின் இரத்தம் அவர்கள் கதவுகளின் மேலிருந்தது. அவர்கள் இணைந்து கொண்டதால் பாதுகாப்பாயிருந்தார்கள்.)

நாம் அதில் இணைந்து கொள்ள வேண்டும். இயேசு மரித்தார். ஆனால் அது போதாது. இயேசுவின் மரணம் ஒருவரையும் இரட்சிப்பதில்லை. நாம் அவருடைய மரணத்தை நமக்காக ஏற்றுக் கொள்ள வேண்டும். இயேசு **நம்மை** இரட்சிப்பதற்காக அவரை நாம் விசுவாசிக்க வேண்டும். இயேசு **நமது** 'பஸ்கா ஆட்டுக்குட்டியாக' இருக்கும் போது மாத்திரமே நாம் பாதுகாப்பாக இருப்போம். (நாம் தனிப்பட்ட முறையில் இயேசுவை நமது சொந்த இரட்சகராக ஏற்றுக் கொள்ளும் வரை கர்த்தருடைய இராப்போஜனத்தில் பங்கு பற்றக் கூடாது என்பதை விளக்கவும்).

நாம் கர்த்தருடைய இராப்போஜனத்தில் பங்குபற்றும்போது கவனமாக இருக்க வேண்டும். அதை ஒரு பழக்கத்திற்காக செய்யக் கூடாது. அதன் அர்த்தத்தை நாம் சிந்திக்க வேண்டும். நாம் அதைப் புசித்து, பானம் பண்ணும் போது, இயேசுவின் மரணம் நமது பாவங்களை நீக்குமென்று விசுவாசிக்கிறோம். இயேசுவின் இரத்தம், தேவனின் உடன்படிக்கையை காண்பிப்பதை நாம் நினைவு கூருகிறோம் ~ அவர் நம்மை இரட்சித்து, ஆசீர்வதிப்பதாக **வாக்களித்து இருக்கிறார்.**

60 பெரும் சோதனை

பின்னணி

இயேசு மரிப்பதற்கான நேரம் வந்து விட்டது. இயேசு அவருடைய சீஷர்களை தயார்படுத்தி இருக்கிறார். ஆனால், அவர்கள் அதற்கு ஆயத்தமா? **சீஷர்களுக்கும், இயேசுவுக்கும்** இடையிலான வித்தியாசத்தை மாற்கு காண்பிக்கிறார்.

மாற்கு 14:27~31. சீஷர்கள் தாங்கள் எதற்கும் தயார் என்று கூறுகிறார்கள் - மரணத்திற்கும் கூட.

மாற்கு 14:32~42. இயேசு தன்னை சிலுவைக்கு தயாராக்க **ஜெபிக்கிறார்**. இந்தப் பேச்சு மாற்கு 14:32-42ஐப் பற்றியது. நாம் மாற்கு 14:27-31க்கு பிறகு வருவோம். அப்போது பேதுருவுக்கு என்ன நடந்தது என்பதைப் பார்ப்போம். **மாற்கு 14:66~72.**

முக்கிய விடயம்

இயேசு தன் பிதாவின் சித்தத்தை தெரிந்தெடுத்து, அவருடைய சிலுவையை எடுக்கிறார். நாம் எதைத் தெரிந்தெடுப்போம்?

நீங்கள் செய்ய வேண்டியது

இந்தப் பகுதி **இயேசுவைப்** பற்றியது. நாம் இயேசுவை துதித்து, அவர் மேல் அன்பு செலுத்த வேண்டும். அவருடைய மக்களுக்காக அவர் எல்லா வேதனையையும் ஏற்றுக் கொள்ள சம்மதித்தார்.

ஆயினும், மாற்கு நமக்கு **சீஷர்களையும்** காட்ட விரும்புகிறார். அது **நாம்** வேதனையை ஏற்றுக் கொள்ள தயாராயிருக்கிறோமா என்ற கேள்வியை நம்மை கேட்கப் பண்ணுகிறது. இயேசுவை பின்பற்றும்போது எப்போதுமே நமக்கு வேதனையிருக்கும். **மாற்கு 8:34~35.** ஒவ்வொரு நாளும் நாம் தெரிந்து கொள்கிறோம். நாம் இயேசுவைப் போல் கடினமான வழியை ஏற்றுக் கொள்வோமா, அல்லது சீஷர்களைப் போல "நித்திரை" செய்வோமா? (உங்கள் மக்களுக்குக் கூறக்கூடிய தகுந்த உதாரணங்களைக் குறித்து சிந்திக்கவும்).

குறிப்புகள்

- **மாற்கு 14:35-36.** இயேசு மரிப்பதற்கு எப்படி தயாராய் இருந்தார் என்பதை மாற்கு நமக்கு காட்டியிருக்கிறார். அநேக முறை இயேசு, தான் மரிக்க வந்ததாகக் கூறி இருக்கிறார். இயேசு அவருடைய மனதை இங்கே மாற்றிக் **கொள்ளவில்லை**. ஆனால் அது மிகவும் வேதனையாயிருந்தது. எனவே அவர் அழுது ஜெபிக்கிறார். ஆயினும், இயேசுவுக்கு அவர் பிதாவின் சித்தத்தை நிறைவேற்றுவதே **முக்கியமாயிருக்கிறது**.

கற்றுக்கொள்ளுங்கள்: மாற்கு 14:27-42

- **மாற்கு 14:36.** “பாத்திரம்” அல்லது “துன்பத்தின் பாத்திரம்”. **சங்கீதம் 75:8.** நாம் எல்லோரும் தேவனுடைய கோபத்தின் பாத்திரத்தில் குடிக்க வேண்டியவர்கள். இப்போது **நம்முடைய** பாவங்களுக்கான தேவனுடைய கோபாக்கினையின் பாத்திரத்தில் இயேசு குடிக்க வேண்டும். இயேசுவுக்கு சிலுவையைக் குறித்து மிக வேதனையான விஷயம் **அவருடைய பிதாவின் கோபமாகும்.**
- **மாற்கு 14:38.** “ஆவி உற்சாகம் உள்ளது” - சீஷர்கள் இயேசுவுடன் இருக்க **விரும்புகிறார்கள்** (மாற்கு 14:31). ஆனால் அவர்கள் மாம்சம்/உடல் (மனிதத் தன்மை) பலவீனமாயிருக்கிறது. அவர்கள் ஜெபிக்க வேண்டும். ஏனென்றால் அவர்களுக்கு தேவனுடைய உதவி தேவை. (மாற்கு 14:42ல் நேரம் வந்து விட்டது. ஆனால் சீஷர்கள் தயாராயில்லை!)

பிரசங்கியுங்கள்: மாற்கு 14:27-42

இயேசு சிலுவைக்கு ஆம் என்று சொல்லுகிறார்

1. இயேசு வேதனையை உணருகிறார்
மாற்கு 14:33-36

+ மிக சக்தி வாய்ந்ததொரு கசப்பான நஞ்சை குடிக்க வேண்டியிருக்கும் நிலையை சற்று கற்பனை செய்து பாருங்கள். அது மிக மோசமான சுவையையும், நெருப்பைப் போல் சூட்டையும் உடையதாயிருக்கிறது. நீங்கள் அதைக் குடிக்க வேண்டும் - அது ஒரு பெரிய பாத்திரம்.

இயேசு அதை விட மிக மோசமான ஒன்றைக் குடிக்க வேண்டும். அவர் சிலுவைக்குப் போகிறார். சிலுவை இயேசுவுக்கு தேவனுடைய கோபத்தினால் நிறைந்ததொரு பாத்திரம் போலிருந்தது. தேவனுடைய சாபத்தினால் நிறைந்திருக்கும் ஒரு பாத்திரம். நரக ஆக்கினைத் தீர்ப்பினால் நிறைந்ததொரு பாத்திரம். ஏனென்றால் இயேசு நம் பாவங்களை தன்மேல் ஏற்றுக் கொள்வார். நமக்குக் கிடைக்க வேண்டிய தண்டனையை அவர் அனுபவிப்பார் (1பேதுரு 2:24).

- இயேசு எப்படி உணர்வதாகக் கூறுகிறார்?

இயேசு வேதனையை உணருகிறார். எனவே அதை அவர்

அவருடைய பிதாவிடம் கூறுகிறார். அவருடைய வேதனையிலும், பயத்திலும் அவர் பிதாவை நோக்கி அழுது ஜெபிக்கிறார். இயேசு இன்னுமொரு வழிக்காக ஏங்கும் அளவிற்கு சிலுவை மிகவும் கொடூரமானது.

2. இயேசு ஆம் என்று சொல்லுகிறார்
மாற்கு 14:36

⊞ நீங்கள் சில வேளைகளில் சரியாக சிந்திக்காமல் எதற்காவது 'ஆம்' என்று சொல்லுவதுண்டா? பிற்பாடு 'இல்லை' என்று சொல்லியிருக்கலாம் என்று நினைப்பதுண்டா?

சிலுவை எவ்வளவு மோசமானது என்று இயேசு கண்டார். அவர் அனுபவிக்க வேண்டிய வேதனையை அவர் அறிந்து இருந்தார். ஆயினும் **அவர் அதற்கு "ஆம்" என்று கூறினார்!** இயேசுவுக்கு அது எவ்வளவு வேதனையாயிருக்குமென்று தெரிந்திருந்தாலும், அவருடைய பிதாவின் சித்தத்தை நிறைவேற்றுவது அவருக்கு அதைவிட முக்கியமாயிருந்தது. நம்மை இரட்சிக்கும் வேலையை இயேசு முடிக்க வேண்டும்.

» நமக்காக அவ்வளவு வேதனையை அனுபவிக்கத் தயாராயிருந்ததற்காக இயேசுவுக்கு நன்றி செலுத்துங்கள். இயேசுவின் மேல் அன்பு செலுத்துங்கள். இயேசுவைத் துதியுங்கள். (அவர் எங்களுக்காக எவ்வளவு செய்திருக்கிறார் என்பதை மக்கள் அறிந்து கொள்ள அவர்களுக்கு உதவி செய்யுங்கள். இதைக் குறித்து இன்னும் அதிகமாகக் உரையாடுங்கள். நீங்கள் பாடுவதற்கு அல்லது ஜெபிப்பதற்கும் சிறிது நேரத்தை ஒதுக்கலாம்).

சீஷர்கள் தூங்குகிறார்கள்

மாற்கு 14:37-42

சீஷர்கள் தோல்வியை விரும்பவில்லை. இயேசுவைப் போலவே அவர்களும் தேவனுடைய சித்தத்தைச் செய்ய விரும்புகிறார்கள். ஆயினும் மிக பலவீனமாயிருக்கிறார்கள்.

- சீஷர்கள் எவ்வளவு பலவீனமாயிருந்தார்கள் என்பதை எப்படி மாற்கு நமக்குக் காண்பிக்கிறார்?

» உங்களுக்கு இயேசுவைப் பின்பற்ற விருப்பமா? உங்களுக்கு தேவனுடைய சித்தத்தை நிறைவேற்ற விருப்பமா? அது போதாது. **ஏனென்றால் நீங்கள் பலவீனமானவர்களாய் இருக்கிறீர்கள்.**

இயேசு சொல்லுவதை செய்வதற்கு எப்போதும் உங்களுக்கு கஷ்டமாய்த் தோறுகிறது? சோதனை வரும் போது நாம்:

- **ஜெபிக்க வேண்டும்.** ஒவ்வொரு நாள் காலையிலும் இயேசுவுக்காக கஷ்டமானவைகளைச் செய்ய தாயாராயிருக்க உதவும்படி ஜெபியுங்கள்.

- **உங்கள் விசுவாசத்தை இயேசுவின் மேல் வையுங்கள்,** அவர் இதுவரை யாருமே செய்யாததொரு மிகக் கடினமான காரியத்திற்கு 'ஆம்' என்று கூறினார்.

கற்றுக்கொள்ளுங்கள்: மாற்கு 14:43–52

61 இயேசு அவருடைய மரணத்திற்குச் செல்கிறார்

பின்னணி

அது வியாழக்கிழமை இரவு. இயேசு சிலுவைக்குப் போகத் தயாராயிருக்கிறார். அவர் ஜெபித்திருக்கிறார். அவர் துன்பத்தின் பாத்திரத்தை சுவைத்து "ஆம்" என்று கூறியிருக்கிறார். சீஷர்கள் இயேசுவுடன் செல்லத் தயாரென்று கூறுகிறார்கள். ஆனால் அவர்கள் பலவீனர்களாய் இருக்கிறார்கள். அவர்கள் ஜெபித்திருக்க வில்லை (மாற்கு 14:27-42).

இப்போது இயேசு தன் மரணத்தை நோக்கிப் போக எழும்புகிறார்.

மாற்கு 14:41~52.

முக்கிய விடயம்

இயேசு மரிப்பதற்கு தன்னை **ஒப்புக் கொடுக்கிறார்**. சீஷர்கள் தங்கள் உயிரைக் **காத்துக்** கொள்ள அந்த இடத்தை விட்டு ஓடுகிறார்கள்.

நீங்கள் செய்ய வேண்டியது

சீஷர்கள் இன்னும் பிழையான கருத்தையுடையவர்களாய் இருந்தார்கள் என்று முன்பு நாம் பார்த்தது உங்களுக்கு நினைவு இருக்கும். இயேசு ஒரு பெரிய இராஜாகவாக மாறுவாரென்று அவர்கள் எதிர் பார்த்தார்கள். அவர்கள் இயேசுவோடிருந்து சண்டை செய்யத் தயாராய் இருந்தார்கள். ஆயினும், தோல்வி அடைந்த ஒருவரின் பின்னே செல்ல அவர்கள் விரும்பவில்லை. இயேசுவுடன் சிலுவைக்குப் போவதற்கு அவர்கள் தயாராய் இருக்கவில்லை. நாமும் கூட அவர்களைப் போல எப்படி இருக்க முடியும் என்பதை சிந்திக்கவும்.

குறிப்புகள்

- **மாற்கு 14:44.** யூதாஸ் இயேசுவை காட்டிக் கொடுப்பதற்கு அவரை முத்தம் செய்தான். அங்கே பிழை நடந்து விடக் கூடாது. அது இருட்டாயிருக்கிறது. ஒருவேளை கூட்டத்திலுள்ள அநேகருக்கு இயேசுவைத் தெரிந்திருக்காது.
- **மாற்கு 14:47.** இந்த மனிதன் பேதுரு என்று யோவான் 18:10 சொல்லுகிறது. சீஷர்கள் கோழைகளாயிருக்கவில்லை. அவர்கள் சண்டைக்குத் தயாராயிருந்தார்கள். ஆயினும், இயேசு சண்டை போடாத படியால் அவர்கள் ஓடிப் போனார்கள். அவர்கள் தங்கள் உயிரை வீணாகக் கொடுக்க விரும்பவில்லை.
- **மாற்கு 14:48.** அவரை நாட்டுக்கு விரோதமாக புரட்சி செய்யும் ஒரு சட்டவிரோதியைப் போல அவர்கள் நடத்துகிறார்கள்.
- **மாற்கு 14:49.** அவர்கள் இயேசுவை தேவாலயத்தில் வைத்தோ, அல்லது பகல் நேரத்திலோ கைது செய்யவில்லை. அவர்கள்

? கற்றுக்கொள்ளுங்கள்: மாற்கு 14:43-52

ஜனங்களுக்கு பயந்தார்கள் என்று **மாற்கு** 12:12 கூறுகிறது.

- **மாற்கு 14:49-50.** பழைய ஏற்பாட்டு வேதவாக்கியங்கள் இவை யாவும் நடக்குமென்று கூறியிருந்தன. இயேசுவுக்கு அது தெரியும். **மாற்கு 14:27** (சகரியா 13:7); **யோவான் 18:1-11.** அவருடைய சொந்தக் கைதும் கூட இயேசுவின் கட்டுப்பாட்டின் கீழேயே நடந்து என்பதை இது காட்டுகிறது!

➡ பிரசங்கியுங்கள்: மாற்கு 14:43-52

யூதாஸ் இயேசுவின் வாழ்க்கையை காட்டிக் கொடுக்கிறான்

மாற்கு 14:43-45

(வார்த்தைகள் மூலம் ஒரு காட்சியை உருவாக்கவும். நீங்கள் பேசும் மக்கள் இந்தக் காட்சியை கற்பனை செய்ய அவர்களுக்கு உதவுங்கள்) இது மிகவும் தவறானது. யூதத் தலைவர்கள் யூதாசுக்கு பணம் கொடுத்து இருக்கிறாகள். அவர்கள் தீய மனிதர்களுக்கும் பணம் கொடுத்து இருக்கிறார்கள். அப்பாவியான இயேசுவை கைது செய்வதற்கு அவர்கள் இரவில் வருகிறார்கள். அவர்கள் இயேசுவை அதிகம் வெறுத்ததால், அவர்கள் எதையும் செய்யத் தயாராயிருக்கிறார்கள். அவர் மரிக்க வேண்டும்.

இயேசு அவர்களுக்கு தயாராய் இருக்கிறார். யூதாஸ் அவரை முத்தம் செய்வதற்கும் கூட அவர் தயாராக இருக்கிறார். எவ்வளவு பயங்கரமாக காரியத்தை யூதாஸ் செய்கிறான்.

» மதப்பற்றுள்ள மக்கள் கெட்ட காரியங்களை செய்யும் போது அதைக் குறித்து நாம் ஆச்சரியப்படக் கூடாது. சில கிறிஸ்தவத் தலைவர்கள் கெட்ட காரியங்களை செய்யும் போது கூட நாம் ஆச்சரியப்படக் கூடாது. இது ஏன் நடக்கிறது?

➡ பிரசங்கியுங்கள்: மாற்கு 14:43-52

இயேசு தன் சொந்த வாழ்க்கையைக் கொடுக்கிறார்

மாற்கு 14:46~49

இயேசு போவதற்குத் தயாராய் இருக்கிறார் என்று நமக்குத் தெரியும். அவர் அந்த கெட்ட மனிதர்களின் கூட்டத்தை சந்திக்க தானாகவே செல்கிறார். இந்த மக்களை நிறுத்துவதற்கு, அல்லது அவர்களைக் கொல்லுவதற்கு தேவ தூதர்களை அழைக்க அவருக்கு அதிகாரம் இருந்தது என்பது நமக்குத் தெரியும். அவர்களுடைய வாள்களும், கம்புகளும் இயேசுவின் வல்லமைக்கு விரோதமாக ஒன்றும் செய்ய முடியாது. அங்கே முரட்டு மக்களின் பெரிய கூட்டத்திற்கு அவசியமில்லை. இயேசுவே தன்னை **அவர்களிடம்** ஒப்படைக்கிறார். அவர்கள் அவரைப் பிடித்துக் கட்டுவதற்கு அவர் **விட்டுக்** கொடுக்கிறார்.

மாற்கு 14:27. அவரைக் குறித்து பழைய ஏற்பாடு என்ன சொல்லுகிறது என்பது இயேசுவுக்குத் தெரியும். **தேவன்** மேய்ப்பனை வெட்டுவார் என்று சகரியா 13:7 கூறுகிறது. இது தேவனுடைய சித்தமென்று இயேசு அறிந்திருக்கிறார். (இயேசுவே நல்ல மேய்ப்பன்) அவர் ஆடுகளுக்காகத் தன் ஜீவனைக் கொடுப்பதில் மகிழ்ச்சியடைகிறார். யோவான் 10:11,14~18

இந்த அருமையான இயேசுவைக் குறித்து உங்களுக்கு என்ன தோன்றுகிறது?

இன்னும் நீங்கள் இயேசுவைப் பின்பற்றாதவராயிருந்தால், இது எப்படி நீங்கள் அவரை விசுவாசிப்பதற்கு உங்களுக்கு உதவியாயிருக்கிறது?

சீஷர்கள் அவர்கள் வாழ்க்கையைக் காத்துக் கொள்ளுகிறார்கள்

மாற்கு 14:50~52

நம்மில் ஒருவரும் யூதாஸைப் போல் இருக்க விரும்புவதில்லை. அவன் தன் உற்ற நண்பரைக் காட்டிக் கொடுத்தான். ஆனால், நாம் மற்ற சீஷர்களைப் போலிருப்பதில் மகிழ்ச்சியடைகின்றோமா?

- அவர்கள் சண்டைக்கு ஆயத்தமாயிருந்தார்கள். ஆனால் இயேசு அதை அவர்களுக்கு அனுமதிக்கவில்லை.
- அவர்கள் இயேசுவோடு இருப்பதாக வாக்களித்தார்கள். ஆனால் அவர்கள் ஓடிப் போனார்கள். மாற்கு 14:29,31.

நீங்கள் சீஷர்களைப் போல் சிலுவைக்குப் பயப்படுகிறீர்களா? மற்றவர் உங்களைப் பார்த்து சிரிக்கும் போதும் நீங்கள் இயேசுவுடன் தொடர்ந்து இருப்பீர்களா? அல்லது, பிரச்சினையிலிருந்து பாதுகாத்துக் கொள்ள அவரிடத்திலிருந்து ஓடிப்போய் விடுவீர்களா?

மாற்கு 14:27

நினைவிருக்கின்றதா? இயேசு நமது பாவத்தைத் தனியாக சுமக்க வேண்டும். எனவே ஆடுகள் அவரை விட்டு ஓடிப்போகும். ஆனால் இயேசு பயந்து ஓடிப்போன அந்த ஆடுகளுக்காகவும் கூட மரிப்பார்.

62 குற்றவாளி இல்லை!

பின்னணி

யூதத் தலைவர்கள் இயேசுவை கைது செய்திருக்கிறார்கள். அவர்கள் அவரை கொல்ல விரும்புகிறார்கள். ஆயினும் யூதர்களுக்கு அவரைக் கொல்ல உரிமை இல்லை. ஏனென்றால் அப்போது ரோமர்கள் நாட்டை ஆண்டார்கள். எனவே இயேசுவிடம் ஏதாவது ஒரு குற்றத்தைக் கண்டு பிடிக்க வேண்டும். அப்போது ரோம ஆட்சியாளனான பிலாத்துவிடம் அதைக் காட்டி அவருக்கு மரண தண்டனை கொடுக்கும்படி கேட்க முடியும். மாற்கு 14:55~65, 15:1~5.

நாம் பேதுருவையும் கவனிக்க வேண்டுமென்று மாற்கு விரும்புகிறார். இயேசுவின் மேல் அவர்கள் குற்றஞ் சாட்டுவார்கள். அது போல் பேதுருவின் மேலும் குற்றஞ் சாட்டப்படும். இயேசுவுக்கும், பேதுருவுக்கும் உள்ள வித்தியாசத்தைப் பாருங்கள் - மாற்கு 14:53~54,66~72.

முக்கிய விடயம்

ஒருவருக்கும் இயேசுவிடம் எந்தக் குற்றத்தையும் கண்டு பிடிக்க முடியாது. அவரே கிறிஸ்து (மேசியா) என்று சொல்வதாலேயே இயேசு தன் மரணத்திற்குப் போகிறார்.

நீங்கள் செய்ய வேண்டியது

இந்தப் பகுதியிலிருந்து மூன்று விதமான பாடங்களை கற்பித்துக் கொடுக்க முயற்சி செய்யவும்.

- அவர் செய்த காரியத்திற்காக நாம் அவர் மேல் அன்பு செலுத்த விரும்ப வேண்டும்.
- நாம் இயேசுவுக்காக துன்பம் அனுபவிக்கும்போது நாம் அவரைப் போலிருக்க விரும்ப வேண்டும். (ஆயினும் நாம் எப்போதும் வாயை மூடிக் கொண்டிருக்க வேண்டுமென்பது அதன் அர்த்தமல்ல).
- நாம் இயேசுவாகிய நியாயாதிபதியை சந்திக்க ஆயத்தமாயிருக்க விரும்ப வேண்டும்.

குறிப்புகள்

- **மாற்கு 14:55.** "ஆலோசனை சங்கம்". இது மிக முக்கியமான யூத நீதிமன்றமாயிருந்தது.
- **மாற்கு 14:58.** யோவான் 2:19. இயேசு **தாம்** தேவாலயத்தை அழிக்கப் போவதாகக் கூறவில்லை. அவர் தன்னைக் குறித்தே அப்படி கூறினார். அவர்கள் **அவரை** கொலை செய்வார்கள். அவர் மூன்று நாட்களிலே உயிர்த்தெழும்புவார்.
- **மாற்கு 14:62.** தானியேல் 7:13~14. இயேசு தன்னை அடிக்கடி "மனுஷகுமாரன்" என்று அழைத்தார். இப்போது அதன் அர்த்தம் என்ன என்பதை அவர் தெளிவாகக் காட்டுகிறார். அவரே கிறிஸ்துவாகிய, மேசியா. அவர் தேவனுடைய

கற்றுக்கொள்ளுங்கள்: மாற்கு 14:53–65

வலது பாரிசத்தில் அமர்ந்து இருந்து, பின் உலகத்தை நியாயம் தீர்க்க வருவார்.

- **மாற்கு 14:63.** இயேசு கூறியதை பிரதான ஆசாரியன் விரும்பவில்லை. எனவே அவன் தன் வஸ்திரங்களை கிழித்துக் கொண்டான். இயேசு "தேவதூஷணம்" சொன்னார் என்று அவன் நினைத்தான். தேவனால் மட்டுமே சொல்லக் கூடியவைகளை இயேசு கூறினார். (உள்ளார பிரதான ஆசாரியன் மிகவும் **மகிழ்ச்சி அடைந்தான்.** இப்போது இயேசுவுக்கு மரண தண்டனை வாங்கிக் கொடுப்பதற்கு அவர்களுக்கு ஒரு காரணம் கிடைத்து விட்டது!)

பிரசங்கியுங்கள்: மாற்கு 14:53–65

குற்றவாளி இல்லை!

மாற்கு 14:55~61

இந்த யூதர்கள் இயேசுவை வெறுத்தது போலவே, அநேக நாடுகளில் மக்கள் கிறிஸ்தவர்களை வெறுக்கிறார்கள். கிறிஸ்தவர்களை சிறையில் போடுவதற்கு, அல்லது அவர்களை கொல்லுவதற்கு மக்கள் பொய்யான குற்றச் சாட்டுகளை அவர்கள் மேல் சுமத்துவார்கள் (முடிந்தால் உண்மையாய் நடந்த ஒரு சம்பவத்தை அவர்களுக்கு கூறி விளக்கவும்). அது எப்படியிருக்குமென்று இயேசு அறிந்திருப்பதற்காக கர்த்தரை துதிப்பதுடன் உதவிக்காக தேவனிடம் ஜெபியுங்கள். அவருடைய மக்கள் கடைசிவரை அவருக்கு உண்மையாயிருக்க வேண்டுமென்று ஜெபியுங்கள்.

அவர்களுக்கு ஒரு குற்றமும் கண்டு பிடிக்க முடியவில்லை! (இயேசுவின் வாழ்க்கையைக் குறித்துக் உரையாடவும். அது மிகவும் அழகும், பூரணமுமானது. ஒவ்வொரு நினைவும், ஒவ்வொரு வார்த்தையும், ஒவ்வொரு செயலும் மிக நேர்த்தியாயிருந்தது).

இந்த யூதர்கள் அவரிடத்தில் குற்றம் கண்டு பிடிக்க அதிக முயற்சி எடுத்தார்கள். சிலர் இயேசுவைக் குறித்து பொய்யானவைகளைக் கூற முன் வந்தார்கள். சில மக்கள் அவர் கூறிய வார்த்தைகளை மாற்றினார்கள் (மாற்கு 14:58). ஆனால், அவர்கள் சொன்ன

➡ பிரசங்கியுங்கள்: மாற்கு 14:53-65

கதைகளில் ஒன்றும் உண்மையல்ல என்பது தெளிவாகத் தெரிந்தது. இயேசு ஒரு பிழையும் செய்யவில்லை என்று எல்லோருக்கும் தெரியும்.

- இவை யாவற்றிற்கும் இயேசு என்ன சொன்னார்? மாற்கு 14:60~61.

இயேசு ஒன்றுமே சொல்ல வேண்டிய **அவசியம்** இல்லை. அவர் குற்றமற்றவர் என்பது எல்லோருக்கும் தெரியும். இது இயேசு ஏன் சிலுவைக்குப் போனார் என்பதையும் நமக்குக் நினைவு ஊட்டுகிறது. அது பாவிகளுக்காகவே. **நாம்** குற்றவாளிகள். இயேசு நமது ஸ்தானத்தில் நமக்காக தண்டனையை அனுபவிக்கத் தயாராயிருந்தார். ஏசாயா 53:6~7.

> இங்கே இயேசுவைக் காணும் போது உங்களுக்கு என்ன தோன்றுகிறது? நீங்கள் செய்யாத ஒரு காரியத்துக்காக மக்கள் உங்களை குறை கூறும்போது, இது எப்படி உங்களுக்கு உதவக் கூடும்?

குற்றவாளி!

மாற்கு 14:61~65

இயேசு மிக மகிழ்ச்சியுடன் சொல்ல விரும்பும் ஒரு காரியம் அவர் கிறிஸ்து என்பதாகும்.

- ஏன் மாற்கு 14:62 பிரதான ஆசாரியனை மிகவும் பயம் அடையச் செய்ய வேண்டும்? (**குறிப்புகள்** பார்க்கவும்)

ஆனால் பிரதான ஆசாரியன் பயப் படவில்லை. அவனுக்கு இயேசுவுக்கு விரோதமாய் உபயோகிப்பதற்கு ஒரு குற்றம் கிடைத்திருக்கிறது.

கடவுளால் மட்டுமே கூறக் கூடியவைகளை இயேசு கூறி இருக்கிறார். அவர் குற்றவாளி. அவர் மரிக்க வேண்டும். எனவே அவர்கள் தேவ குமாரனை கொண்டு போய், அவர் மேல் துப்பி, அவரை அடித்து, அவரைப் பரிகாசம் பண்ணுகிறார்கள்.

மாற்கு14 யார் உண்மையான குற்றவாளி என்பதை தெளிவாகக் காட்டுகிறது. இவர்கள் இயேசுவை நியாயம் தீர்க்கிறார்கள். ஆனால் **அவர்கள்** குற்றவாளிகளாய் இருக்கிறார்கள். ஒரு நாள் **அவர்கள்** தங்கள் நியாயாதிபதியாகிய இயேசுவை எதிர் கொள்ள வேண்டும்.

> இயேசு மாற்கு 14:62ல் சொல்வது உண்மையே. அவரே கிறிஸ்து அவரே நியாயாதிபதி. அவர் மீண்டும் வரும் போது நாம் யாவரும் அவரைப் பார்ப்போம். அவர் நம் ஒவ்வொருவரையும் நியாயம் விசாரிப்பார்.
>
> எனவே, **நீங்கள்** இயேசுவைக் குறித்து என்ன செய்யப் போகிறீர்கள்? அவர் உங்களைக் குறித்து என்ன செய்வார்?

இவ்வளவு நேரமும் பேதுரு நடப்பவைகளை அவதானித்துக் கொண்டிருக்கிறான் (மாற்கு 14:53-54). அவர்கள் இயேசுவைக் குறித்து **அவனிடம்** கேட்கும்போது அவன் என்ன செய்வான்? நமது இரட்சகரை மக்கள் வெறுக்கும்போது நாம் என்ன செய்வோம்? நீங்கள் இயேசுவைப் பின்பற்றுவதை மகிழ்ச்சியுடன் கூறுவீர்களா? நீங்கள் ஒரு தவறும் செய்யாமலிருக்கும்போது, நீங்கள் இயேசுவுக்காக துன்பம் அனுபவிக்க விரும்புகிறீர்களா? பிற்பாடு பேதுரு இந்த வார்த்தைகளை எழுதினார். I பேதுரு 2:20~23.

கற்றுக்கொள்ளுங்கள்: மாற்கு 14:66-72, 27-31

63 'நான் அவரை அறியேன்'

பின்னணி

சீஷர்கள் அவரை விட்டு ஓடிப் போவார்களென்று இயேசு அவர்களை அன்று மாலை எச்சரித்திருந்தார். அப்போது பேதுரு அதை விசுவாசிக்கவில்லை. மரிக்க வேண்டிய நிலை வந்தாலும் அவன் இயேசுவுடன் இருப்பதாக அவருக்கு அவன் வாக்குப் பண்ணினான்! மாற்கு 14:27-31.

இப்போது யூதர்கள் இயேசுவை கைது செய்திருக்கிறார்கள். சீஷர்கள் அவரை விட்டு ஓடிப்போய் விட்டார்கள். பேதுரு இயேசுவுக்கு என்ன நடக்கிறது என்று பார்க்க திரும்பி வந்திருக்கிறான். பிரதான ஆசாரியன் இயேசுவிடம் கேள்வி கேட்பதை அவன் கவனித்துக் கொண்டிருக்கிறான். மாற்கு 14:53-65.

இப்போது சில கடினமான கேள்விகளுக்குப் பதிலளிக்க வேண்டிய நிலை பேதுருவுக்கு ஏற்படுகிறது. மாற்கு 14:66-72.

முக்கிய விடயம்

இயேசுவைப் பின்பற்றுவதற்கு பேதுருவுக்குக் கூட சக்தியில்லை. நம்மை இரட்சிப்பதற்கு நம் **எல்லோருக்கும்** இயேசுவின் சிலுவை மரணம் அவசியம்.

நீங்கள் செய்ய வேண்டியது

மற்றவர்கள் மேல் நமக்கு ஏற்படக் கூடிய பயம் அதிக சக்தி வாய்ந்தது. மற்றவர்கள் நமக்குச் செய்யக் கூடிய, அல்லது சொல்லக் கூடியவைகளைக் குறித்து நாம் பயப்படுகிறோம். நாம் ஒருவருக்கொருவர் இந்த விடயத்தில் உதவி செய்ய வேண்டும். இந்த வேதாகமப் பகுதிகள் உங்களுக்கு உதவியாக இருக்கும். நீதிமொழிகள் 29:25; மத்தேயு 10:28; 1பேதுரு 3:13-17.

குறிப்புகள்

- **மாற்கு 14:27.** இயேசு பழைய ஏற்பாட்டில், சகரியா 13:7ல் இருந்து சில வார்த்தைகளை உபயோகிக்கின்றார். **தேவன்** திட்டமிட்டபடியே யாவும் நடக்கும் என்று அவை காட்டுகின்றன. தேவன் மேய்ப்பனை (இயேசுவை) வெட்டுவார். அப்போது ஆடுகள் (சீஷர்கள்) சிதறடிக்கப்படும்.
- **மாற்கு 14:28.** அவர்கள் அவரை விட்டு ஓடிப்போவர்களென்று இயேசு எச்சரித்திருந்தார். ஆனால், அவர் உயிர்த்தெழுந்த பின் அவர்கள் அவரிடத்திற்குத் திரும்ப வருவார்கள் அவருடைய மரணம் முடிவல்லவென்பதை அவர்கள் அறிந்து கொள்ள வேண்டுமென்று அவர் விரும்புகிறார்.
- **மாற்கு 14:68.** "மறுதலித்தான்". அதாவது, அது உண்மையல்ல என்று பேதுரு கூறினான். மாற்கு 14:30-31ஐ மீண்டும் பார்க்கவும்.

கற்றுக்கொள்ளுங்கள்: மாற்கு 14:66-72, 27-31

பேதுரு இயேசுவை ஒருபோதும் மறுதலிக்கப் போவதில்லை என்று அவன் அவரிடம் கூறினான். (இயேசுவை தெரியாது என்று கூறுவது).

- மாற்கு 14:72. "சேவல் கூவுகிறது" இது ஒரு ஆண் கோழி போடும் உரத்த சத்தம் - வழக்கமாக அதிகாலையில்.

பிரசங்கியுங்கள்: மாற்கு 14:66-72, 27-31

பேதுரு இயேசுவை அரைவாசி பின்பற்றினான்

மாற்கு 14:54

இயேசு ஒருபோதும் தன் மக்களை அவரைக் **கொஞ்சம்** பின்பற்றும்படி கூறுவதில்லை. பேதுரு, அந்த இடைவெளியில், இன்னும் இயேசுவின் அருகில் இருப்பதாக நினைத்தான். அதேவேளை, தான் பாதுகாப்பாய் இருப்பதற்கும் இந்த இடைவெளி போதுமென்று அவன் நினைத்தான். அவன் நினைத்தது சரியா?

நீங்களும் பேதுருவைப் போன்றவரா? நீங்கள் ஒருவேளை உங்களை கிறிஸ்தவனென்று கூறிக் கொள்ள விரும்பினாலும், மக்கள் உங்களைக் குறித்து என்ன நினைப்பார்களென்று பயந்து கொண்டிருக்கலாம். நீங்கள் மற்றவர்களைப் போல இருக்க முயற்சிக்கலாம். இயேசு உங்களைக் கவனித்துக் கொண்டிருக்கிறார். அவரைக் குறித்து நீங்கள் வெட்கப்பட்டால் அதை அவர் அறிவார்.

இயேசுவை அவனுக்குத் தெரியாது என்று பேதுரு கூறினான்

மாற்கு 14:66~71

➡ பிரசங்கியுங்கள்: மாற்கு 14:66-72, 27-31

- அவனுக்கு இயேசுவைத் தெரியாது என்று ஏன் பேதுரு கூறினான்?
- பேதுரு எதற்குப் பயந்தான்?

(அவர்கள் எதைக் குறித்து பயப்படக் கூடும் என்பதை சிந்திக்க உங்கள் பேச்சை கேட்பவர்களுக்கு உதவி செய்யவும். நாம் இயேசுவைக் குறித்து என்ன நினைக்கிறோம் என்பதை எப்போது நாம் மறைக்க முயற்சிக்கிறோம்? ஏன்?)

» இறுதியில் பேதுரு இயேசுவை அவன் அறிந்திருக்கவில்லை என்பதைக் காண்பிப்பதற்கு, சபிக்கவும், சத்தியம் பண்ணவும் தொடங்கினான். இயேசுவின் மேலுள்ள உங்கள் அன்பை மறைப்பதற்கு நீங்கள் என்ன செய்திருக்கிறீர்கள்?

பேதுரு அழுதான்

📖 மாற்கு 14:72

- பேதுரு ஏன் அழுதான்? ஏனென்றால் அவன் **பெருமை** உள்ளவனாயிருந்தான் (மாற்கு 14:29-31). ஆகவே அவன் இயேசுவின் எச்சரிக்கையைப் **பொருட்படுத்தவில்லை.** ஆகவே அவன் தான் அன்பு செலுத்திய இயேசுவைக் குறித்து **வெட்கப் பட்டான்.**

» இயேசுவை துக்கப்படுத்தியதற்காக நீங்கள் பேதுருவைப் போல் அழுதது உண்டா? அல்லது, மற்றவர்கள் உங்களைப் பற்றி என்ன நினைப்பார்கள் என்பதைக் குறித்து இன்னும் கவலைப்பட்டுக் கொண்டிருக்கின்றீர்களா?

பேதுருவைப் போல **எல்லா** கிறிஸ்தவர்களும் இயேசுவை கைவிட்டிருக்கிறார்கள். சில வேளைகளில் நாம் மிகவும் பெலவீனரும், பயமுள்ளவர்களாயும் காணப்படுகிறோம். ஆனால், இயேசு ஏன் சிலுவைக்குப் போனார் என்பதை சற்று நினைத்துப் பாருங்கள். தங்களை இரட்சித்துக் கொள்ள முடியாத பெலவீனமான மக்களுக்காகவும், பாவிகளுக்காகவும் அவர் சிலுவையில் மரிக்கச் சென்றார். பேதுருவின் தோல்வியை இயேசு கவனித்துக் கொண்டிருந்தார். பேதுருவின் பாவத்திற்கான விலையை அவர் மரணம் செலுத்தும் என்று இயேசு அறிந்திருந்தார். பேதுரு சில மோசமானவைகளைக் கூறினான். ஆனால் இயேசு அவனை மன்னித்தார். பேதுருவுக்கு இயேசு பெரிய வேலையை வைத்திருந்தார். இறுதியில் பேதுரு இயேசுவுக்காக மரிக்கவும் செய்தான்.

» நீங்கள் இயேசுவிடம் உங்கள் பாவங்களை மன்னிக்கும்படி கேட்கும் போது, உங்களுக்குப் பாடங்கள் கற்றுக் கொடுக்கும்படி கேளுங்கள். அவர் பேதுருவை பெலப்படுத்தினது போல் உங்களையும் பெலப்படுத்துமாறு கேளுங்கள்.

64 அவரை சிலுவையில் அறைந்து கொல்லுங்கள்!

பின்னணி

வியாழக்கிழமை இரவு முழுவதும் யூதத்தலைவர்கள் இயேசுவுக்கு விரோதமாகப் பல காரியங்களைக் கூறினார்கள். இயேசுவுக்கு தண்டனை கொடுக்கத் தக்கதான எதையாவது கண்டு பிடிக்க அவர்கள் முயற்சித்தார்கள். இறுதியில் தானே தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று இயேசு கூறினார். யூதர்கள் உடனே இது தேவதூஷணம் என்று சொல்லி, அதற்காக அவர் மரிக்க வேண்டும் என்றார்கள்.

ஆயினும், இப்போது அவர்கள் ரோம ஆட்சியாளரான **பிலாத்துவிடம்** செல்ல வேண்டும். பிலாத்துவினால் மட்டுமே இயேசுவுக்கு மரண தண்டனை விதிக்க முடியும். இயேசுவின் மேல் அவர்கள் சாட்டப் போகும் குற்றம் என்ன?

இயேசு தன்னை கிறிஸ்து என்று கூறியிருக்கிறார். அதன் அர்த்தம் ராஜா என்பதாகும். ஆனால் **பிலாத்துவே** யூதர்களை ஆட்சி செலுத்துபவன். எனவே, யூதர்கள் இயேசு பிலாத்துவுக்கு ஒரு பிரச்சினையாயிருப்பதாக அவனுக்குக் காட்ட முயற்சிக்கிறார்கள். ஏனென்றால் இயேசு ராஜாவானால், அவர் யூதர்களை பிலாத்துவுக்கு விரோதமாக வழி நடத்துவார்!

மாற்கு 15:1–5

முக்கிய விடயம்

இயேசு ஒரு குற்றமும் செய்யவில்லை - ஆனால் அவர்கள் அவரை சிலுவையில் அறைந்து கொல்லுகிறார்கள். பரபாஸ் ஒரு குற்றவாளி - ஆனால் அவர்கள் அவனை விடுதலை செய்கிறார்கள்.

நீங்கள் செய்ய வேண்டியது

இயேசுவை ஏன் மக்கள் அவ்வளவு வெறுத்தார்கள் என்பதைப் புரிந்து கொள்வது கடினம். “அவரைக் கொல்லுங்கள்” என்று நாம் சத்தம் இட்டிருக்கக் கூடும் என்று நினைப்பது கடினம். ஆனால் நாம் அவர்களை விட சிறந்தவர்களா? இன்று இயேசுவைக் குறித்து என்ன செய்கிறோம்? ஏன் இன்னும் அநேகர் இயேசுவை விரும்புவதில்லை?

குறிப்புகள்

- **மாற்கு 15:1-5.** மீண்டும் இயேசு அமைதியாயிருக்கிறார். அவர் குற்றவாளியல்லவென்று அவர் சொல்ல மாட்டார் (தவறேதும் செய்யவில்லை). அவர் தான் யூதர்களின் ராஜாவாகிய கிறிஸ்து என்று கூறுவார் (மாற்கு 14:60-62 பார்க்கவும்).
- **மாற்கு 15:6-10.** பிலாத்து யூதத் தலைவர்களுக்கு பயப்படுகிறான். எனவே இயேசுவை விடுதலை செய்ய அவன் அஞ்சுகிறான். மக்கள் கூட்டம் இதை தனக்காகச் செய்யும் ஒன்றென அவன் நம்புகிறான். உண்மையில் அவர்கள் அவரை விட்டு விட

கற்றுக்கொள்ளுங்கள்: மாற்கு 15:1 -15

விரும்புவார்கள் என்று அவன் நினைக்கிறான். ஒவ்வொரு பஸ்கா பண்டிகைக் காலத்திலும் பிலாத்து ஒரு குற்றவாளியை விடுதலை செய்வது வழக்கம். பரபாஸ் என்பவன் ஒரு கெட்ட மனிதனும், பயங்கரமானவனுமாய் இருக்கிறான். அவன் வீதியில் பிரச்சினையில் ஈடுபட்டு ஒருவனை கொலை செய்திருக்கிறான். எனவே மக்கள் பரபாசையல்ல, இயேசுவையே விடுதலை செய்ய விரும்புவார்களென்று பிலாத்து நினைக்கிறான்.

- **மாற்கு 15:13.** "அவனை சிலுவையில் அறையும்". அதற்கு அர்த்தம் சிலுவையில் அறைந்து கொல்ல வேண்டும் என்பதாகும்.
- **மாற்கு 15:15.** இயேசு அனுபவித்த பயங்கரமான வேதனையைக் குறித்து மாற்கு கொஞ்சமே கூறுகிறார். ஒரு ரோம மரணம் மெதுவாகவும், மிகக் கஷ்டமாகவும் இருக்கும். ஆனால், மாற்கு நாம் முக்கியமாக சிந்திக்க வேண்டுமென்று நினைப்பது இதைக் குறித்தல்ல. இயேசு **ஏன்** சிலுவையில் தொங்குகிறார் என்பதே நாம் சிந்திக்க வேண்டிய முக்கிய விடயமாகும்.

பிரசங்கியுங்கள்: மாற்கு 15:1 -15

குற்றமற்றவர் ஆனால் கொல்லப்பட்டார்

மாற்கு 15:13-14

ஒரு குற்றமற்ற மனிதனைப் பற்றியதொரு கதையைக் கூறவும். நீதிமன்றம் அவனைக் குற்றவாளியாகத் தீர்க்கின்றது. ஆனால் எல்லோருக்கும் தெரியும் அவன் குற்றமற்றவனென்று. ஆயினும் அவனுக்கு சிறைக்குப் போக வேண்டி வருகிறது. இது ஏன் நடந்தது?

இயேசு ஒரு குற்றமும் செய்யவில்லையென்று எல்லோருக்கும் தெரியும்.

இயேசுவை ஏன் அவர்கள் அவனிடம் கொண்டு வந்திருக்கிறார்களென்று பிலாத்துவுக்குத் தெரியும். மாற்கு 15:10. இயேசுவுக்கு விரோதமாக பொய் குற்றச்சாட்டுகளை உருவாக்கியிருக்கிறார்கள் என்று பிலாத்துவுக்கு தெரியும் (மாற்கு 15:3-5). அவர் யூதர்களின் ராஜா என்று இயேசு கூறுகிறார். ஆனால் பிலாத்து அதைக் குறித்து கவலைப்படவில்லை. இயேசு ரோமர்களுக்கு விரோதமாக ஒரு குற்றமும் செய்யவில்லையென்று அவன் அறிந்திருக்கிறான். எனவே பிலாத்து இயேசுவை விடுதலை செய்ய முயற்சி செய்கிறான் (மாற்கு 15:9,12,14). இயேசு குற்றமற்றவர் - ஆனால் பிலாத்து அவரை

➡ பிரசங்கியுங்கள்: மாற்கு 15:1 –15

சிலுவையில் அறைந்து கொல்லும்படி ஒப்புக் கொடுக்கிறான் மாற்கு 15:15. பிலாத்து இன்னும் மக்களுக்கும், யூதத் தலைவர்களுக்கும் அஞ்சுகிறான்.

மக்கள் கூட்டத்திற்கும் இயேசு குற்றமற்றவரென்று தெரியும். 📖மாற்கு 15:14. அவர் செய்த குற்றம் என்னவென்று ஒருவருக்கும் சொல்ல முடியாது அவர்கள் இயேசு மரிக்க வேண்டுமென்று வெறுமனே உரத்த சத்தமிடுகிறார்கள்.

இயேசு மரணத்திற்கு பாத்திரரல்ல என்பது **இன்று மக்களுக்குத்** தெரியும். மக்கள் அவர் ஒரு நல்ல மனிதர் என்று சொல்லுகிறார்கள்.

» **இயேசு** குற்றமற்றவர். ஆனால் நாம் குற்றமற்றவர்களல்ல. நமது பாவங்களுக்காகவே இயேசு மரித்தார்.

இயேசுவல்ல பரபாஸ்!

📖மாற்கு 15:6–12

பரபாஸ் இயேசுவை விட எவ்வளவு வித்தியாசமானவன் என்பதை நினைத்துப் பாருங்கள் (இயேசு மக்களை சுகப்படுத்தியிருக்கிறார், ஆனால் பரபாஸ் ஒரு கொலைகாரன். இயேசு நிரபராதி. ஆனால் பரபாஸ் குற்றவாளி...)

(எப்படி பிலாத்து மக்கள் இயேசுவை விடுதலை பண்ண வேண்டுமென்று விரும்பினான் என்பதை விளக்கவும்). மக்களுக்கு தெரிவு செய்யும் உரிமை இருக்கிறது. அவர்கள் அதிகமான நன்மைகள் செய்த இயேசுவைத் தெரிவு செய்வார்களா, அல்லது மிகவும் கெட்டவனான பரபாசை தெரிந்து கொள்வார்களா? அவர்கள் சொல்வதை நம்புவது கஷ்டமாயிருக்கிறது. அதிர்ச்சியுமாய் இருக்கிறது. இயேசு ஒரு குற்றமும் செய்யவில்லை என்று அவர்களுக்குத் தெரியும். ஆனால் அவர்கள் அவரை அதிகம் **வெறுக்கிறார்கள்**. எனவே அவரை கொலை செய்வார்கள். ஏன்?

» அது முழு உலகமும் இயேசுவை சிலுவையில் அறைந்தது போலாகும். யூதத் தலைவர்கள், ரோம ஆட்சியாளன், சாதாரண மக்கள் ஆகிய அனைவரும் அதற்கு இணங்குகிறார்கள். ஆனால், உண்மையில் நீங்கள் அதற்கு எந்த விதத்திலும் வித்தியாசமானவரா?

அவர்கள் பரபாசை தெரிந்து கொண்டார்கள். இயேசுவையல்ல. ஏனென்றால் அவர்கள் நன்மைக்குப் பதிலாக, தீமையையே விரும்பினார்கள். நீங்கள் பாவத்தை தெரிந்தெடுக்கும் போது நீங்களும் அப்படியானவராயிருக்கிறீர்களல்லவா? நீங்கள் இயேசுவை சிலுவையில் அறையாமலிருக்கலாம். ஆனால், அவரை நீங்கள் உங்களை விட்டு தள்ளி விடுகிறவராயிருக்கிறீர்களா? ஒருவேளை நீங்கள் மாற விருப்பமில்லாதவராய் இருப்பதால் இயேசுவை நீங்கள் ஏற்றுக் கொள்ள விரும்பாமலிருக்கலாம். எனவே, நீங்கள் இந்த மனிதர்களை விட வித்தியாசமானவரா?

இயேசு ஒரு குற்றமும் செய்யவில்லை. ஆனால், அவர் பரபாஸ் மற்றும் நம்மைப் போன்ற கெட்ட மனிதர்களின் ஸ்தானத்தில் மரித்தார். உங்கள் பாவங்களை மன்னித்து, உங்களுக்கு இரட்சகராய் இருக்கும்படி இயேசுவை நீங்கள் கேட்பீர்களா?

65 ஒருவருக்கும் தேவைப்படாத இரட்சகர்

▣ பின்னணி

மாற்கு அவருடைய (இயேசுவின்) கதையை எப்படி கூறுகிறார் என்பதை நினைவுபடுத்திக் கொள்ளுங்கள்.

- மாற்கு 1-8 **இயேசு யார்** என்பதைப் பற்றிய பகுதி.
- மாற்கு 9-16 **இயேசு ஏன் வந்தார்** என்பதைப் பற்றிய பகுதி

இயேசு தான் **பாவிகளுக்காக மரிக்க வந்திருப்பதாக** பல முறை கூறியிருக்கிறார். ஆனால் இப்போது இயேசுவுக்கு நடப்பவைகளைப் பார்க்கும் போது நமக்கு துக்கமாக இருக்கிறது. ஏனென்றால் எல்லோரும் இரக்கமில்லாமல் நடந்து கொள்கிறார்கள். இயேசு அதிக துன்பமனுபவிக்கிறார். ஆனால் இயேசு **எதற்காக வந்தாரோ, அந்த காரியத்தை அவர் நிறைவேற்றிக் கொண்டு இருப்பதை** குறித்து நாம் **சந்தோஷப்படவும்** செய்கிறோம். தேவனின் திட்டத்தை இயேசு சிலுவையில் நிறைவேற்றுகிறார். அவரைத் துதியுங்கள்! 📖 **மாற்கு 15:16~32.**

⊙ முக்கிய விடயம்

இயேசுவே இரட்சகர். ஆனால் ஒருவருக்கும் அவர் தேவையில்லை.

★ நீங்கள் செய்ய வேண்டியது

இந்தப் பகுதி மிக முக்கியமானது இரட்சகர் தேவையில்லை என்று நினைப்பவர்களுக்காக ஜெபியுங்கள்.

கிறிஸ்தவர்களை ஊக்குவிக்க முயற்சி செய்யுங்கள். நாம் இயேசுவை துதித்து அவருக்கு நன்றி செலுத்த வேண்டும். நமக்கு அவர் தேவையற்றிருந்த போது, அவர் நம்மை இரட்சித்தார். நாம் அவரை வெறுத்தபோது அவர் நம் மேல் அன்பு செலுத்தினார்.

✹ குறிப்புகள்

- **மாற்கு 15:17.** அவரைப் பரிகசிப்பதற்காக, சேவகர்கள் இயேசுவை ஒரு ராஜாவைப் போல உடுத்துவிக்கிறார்கள். அவருடைய தலையை காயப்படுத்துவதற்காக அவருடைய தலையில் கூர்மையான முட்களால் செய்யப்பட்டதொரு "கிரீடத்தை" சூட்டுகிறார்கள்.
- **மாற்கு 15:21.** தனது சிலுவையை சுமப்பதற்கு இயேசு இப்போது அதிக பலவீனமாய்க் காணப்படுவதாக இது நமக்குக் கூறுகிறது. ஏற்கனவே அவர் அதிக வேதனையை அநுபவித்து உள்ளார்.
- **மாற்கு 15:23.** "வெள்ளைப் போளம்" இது அவருடைய வலியைக் குறைப்பதற்காக கொடுக்கப்பட்டிருக்கலாம்.

? கற்றுக்கொள்ளுங்கள்: மாற்கு 15:16 – 32

ஆயினும், இயேசு எல்லா வலியையும் சகித்துக் கொள்ள விருப்பமுள்ளவராயிருந்தார்.

- **மாற்கு 15:26.** அவர் செய்த “குற்ற” மென்ன என்று எல்லோரும் அறிந்து கொள்வதற்காக அவர்கள் அதை எழுதி வைத்தார்கள். அவர் “யூதர்களின் இராஜா” என்றபடியால் அவரை சிலுவையில் அறைந்தார்கள்.
- **மாற்கு 15:29,32.** அவர்கள் “அவரை தூஷித்தார்கள்”. அதாவது அவரைக் குறித்து மரியாதையில்லாமல் கதைத்தார்கள்.

பிரசங்கியுங்கள்: மாற்கு 15:16 – 32

ஒருவருக்கும் அவர்களுடைய இரட்சகர் தேவையில்லை

(வித்தியாசமான மனிதர்கள் எப்படி இயேசுவைப் பரிகசித்தார்கள் என்பதை விவரிக்கவும். அவர்கள் இயேசுவைக் குறித்து என்ன நினைக்கிறார்களென்பதை எப்படி அவர்கள் காட்டுகிறார்கள்? இயேசு என்ன துன்பம் அனுபவிக்க வேண்டி இருந்தது?)

- ரோம சேவகர்கள். மாற்கு 15:16~20
- அந்த வழியாய் நடந்து போன மக்கள். மாற்கு 15:29~30
- யூதத் தலைவர்கள். மாற்கு 15:31~32
- இரண்டு கள்ளர்கள். மாற்கு 15:27~32

இயேசு நல்ல காரியங்களை மட்டுமே செய்தார். ஆனால் இங்குள்ள ஒருவரும் அவரைக் குறித்து ஒரு நல்ல வார்த்தையைக் கூட கூறவில்லை. அவர்கள் யாவரும் அவரை அகற்றவே நினைக்கிறார்கள். அவர்களில் ஒருவருக்கும் அவர்களுடைய இரட்சகர் தேவையில்லை.

➡ பிரசங்கியுங்கள்: மாற்கு 15:16 – 32

இன்றும் அது உண்மையா? எந்த விதமான மக்கள் கிறிஸ்தவர்களைப் பார்த்து நகைக்கிறார்கள்? எந்த விதமான மக்கள் இயேசுவை வேண்டாமென்று சொல்லுகிறார்கள்? சிலுவையில் மரிக்கும் ஒரு இரட்சகரைக் குறித்து மக்கள் என்ன நினைக்கிறார்கள்? நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

இயேசுவே உண்மையான இரட்சகர்

இயேசு சிலுவையில் தொங்கிக் கொண்டிருக்கும் வேளையில் நாம் யாவரும் அவரைப் பற்றி என்ன நினைக்கிறோம் என்பதை அறிந்திருந்தார். ஆனால் அவர் இன்னும் நம் மேல் அன்பு செலுத்தினார். அவரை அடித்து, துன்புறுத்தி, கேலி செய்தவர்களையும் கூட அவர் நேசித்தார். இப்படித்தான் அவர் அவர்களுடைய இரட்சகராயிருக்க முடியும்.

அவர்கள் இயேசுவுக்கு விரோதமாக எப்படி சத்தமிட்டார்கள் என்பதை மீண்டும் சிந்தித்துப் பாருங்கள். ஒருவேளை அவர்கள் சொன்னவைகள் உண்மையாய் இருக்கக் கூடும்!

- **யூதருடைய ராஜா!** மாற்கு 15:18,26. போர் சேவகர்கள் இயேசுவைப் பார்த்து நகைத்தார்கள். அது அவர்களுக்கு நல்ல வேடிக்கை ஆகவிருந்தது. ஆனால் உண்மையிலேயே தேவனால் வாக்களிக்கப்பட்ட ராஜா இயேசுவேயாகும். அவரே யூதர்களின் ராஜா. மற்ற யாவருக்கும் கூட ராஜா அவரே.

நம்மில் பலர் இயேசுவுக்கு முன்பாகப் பணிந்து அவரை எங்கள் ராஜாவாகத் தொழுது கொள்ளுகிறோம். அது உண்மை என்று நமக்குத் தெரியும். நாம் அவர் மேல் அன்பு செலுத்துகின்றோம். நீங்கள் எப்படி? நீங்கள் இயேசுவுக்குப் பல பாடல்கள் பாடியிருக்கலாம். ஆனால் உண்மையிலேயே நீங்கள் ராஜாவை தொழுது கொள்ளுகின்றீர்களா?

- **'மற்றவர்களை இரட்சித்தான் தன்னைத்தான் இரட்சித்துக் கொள்ள திராணியில்லை!'** மாற்கு 15:31. அதுவும் உண்மையே இரட்சகரான இயேசுவால் சிலுவையை விட்டிறங்கி வர முடியவில்லை. ஆனால் அது அவருடைய மக்களை இரட்சிப்பதற்கேயாகும். நம்மை இரட்சிப்பதற்கான ஒரே வழி சிலுவையே (இதைக் குறித்து மேலும் உரையாடவும். இயேசு எப்படி பாவத்திற்கான விலையை செலுத்தினார் என்பதை காண்பிக்கவும் (மாற்கு 10:45). அவருடைய மகத்தான அன்பைக் குறித்துக் உரையாடவும்).

இயேசு **என்னை** இரட்சிப்பதற்காக மரித்ததாலேயே அவர் சிலுவையை விட்டு இறங்கி வரவில்லை என்று நீங்கள் சொல்லுவீர்களா? இயேசுவே இரட்சகராய் இருப்பதற்காக நீங்கள் அவரைத் துதிப்பீர்களா? அதாவது **உங்கள்** இரட்சகராக இருப்பதற்காக?

66 தேவனிடம் செல்லும் வழி

பின்னணி

இயேசுவே தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று மாற்கு அவருடைய புத்தகத்தின் தொடக்கத்தில் நமக்குக் கூறுகின்றார். **மாற்கு 1:1.** பேதுருவும், மற்ற சீஷர்களும் இதை நம்புவதற்கு அவர்களுக்கு அதிக காலம் எடுத்தது. **மாற்கு 8:29.**

இப்போது, இயேசு மரிக்கும் போது, ஒரு ரோம சேவகனுக்குக் கூட அந்த உண்மை விளங்குகிறது. **மாற்கு 15:39.** இங்கே, அந்த சிலுவையில்தான் நாமும் கூட இயேசுவைப் பற்றிய உண்மையைக் காண்கின்றோம்.

முக்கிய விடயம்

நம்மை தேவனிடம் கொண்டு வந்து சேர்ப்பதற்காக இயேசு தேவனின் கோபத்தின் விளைவாக மரித்தார்.

நீங்கள் செய்ய வேண்டியது

கிறிஸ்தவர்களல்லாத மக்கள் இயேசு ஏன் மரித்தார் என்பதை அறிந்து கொள்வது அவசியம். இந்தப் பேச்சு அவர்களுக்கு உதவியாயிருக்கும். இந்தப் பேச்சைக் கேட்பதற்கு நீங்கள் மக்களை ஒரு விசேட கூட்டத்திற்கு அழைக்கலாம். எப்படி அவர் இயேசுவின் மரணத்தின் மேல் விசுவாசம் வைத்தார் என்பதைக் கூறும்படி ஒரு கிறிஸ்தவரை நீங்கள் கேட்டுக் கொள்ளலாம்.

குறிப்புகள்

- **மாற்கு 15:33.** "ஆறாம் மணி நேரம்" என்றால் நடுப்பகல் வேளையாகும். அந்நடுப்பகல் வேளையில் மூன்று மணித்தியாலங்கள் இருள் சூழ்ந்திருந்தது. இது ஒரு சூரிய கிரகணமாயிருக்க முடியாது. சூரிய கிரகணத்தின் போது, சந்திரன், சூரியனை சில நிமிடங்கள் மறைக்கும். தேவன் பூமி முழுவதையும் அந்தகாரம் சூழ்ந்து கொள்ளும்படி செய்தார். மக்கள் அதைக் குறித்து சிந்திக்க வேண்டுமென்பதற்காக அப்படிச் செய்தார். வேதாகமத்தில் இருள் அநேகமாக தேவனுடைய கோபத்தைக் குறிக்கும் (ஏசாயா 13:9-10).
- **மாற்கு 15:34.** இந்த மகா சத்தம் தேவனுடைய கோபம் **இயேசுவின்** மேலிருப்பதாகக் காட்டுகிறது. தேவன் அவரைக் கைவிட்டு விட்டாரென்று இயேசுவுக்குத் தெரியும். இது அவருக்கு நரகம் போன்றதாகும். தேவன் அவருடைய மக்களின் பாவத்திற்காக இயேசுவைத் தண்டிக்கிறார்.
- **மாற்கு 15:35-36.** இயேசு என்ன சொல்கிறாரென்று அவர்களுக்குப் புரியவில்லை. ஒருவேளை அவர்கள் இன்னும் அவரைப் பரிகாசம் செய்து கொண்டு இருக்கலாம். இயேசு தீர்க்கதரிசியான எலியாவைக் அழைப்பதாக அவர்கள் நினைக்கிறார்கள். இது அநேக மக்கள் இன்னும் எவ்வளவு

? கற்றுக்கொள்ளுங்கள்: மாற்கு 15:33 – 39

குருடர்களாய் இருக்கிறார்கள் என்பதைக் காட்டுகின்றது.

- **மாற்கு 15:38.** தேவாலயம் எருசலேமின் இன்னொரு பகுதியில் இருந்தது. இயேசு மரித்தபோது தேவலாயத்தில் என்ன நடந்தது என்பதை மாற்கு நமக்குக் காட்ட விரும்புகிறார். தேவாலயத் திரைச்சீலை மிக உயரமும், தடிப்பமுமாயிருந்தது. தேவனால் மட்டுமே அதை மேலிருந்து கீழாக கிழிக்க முடியும்.

இது எதைக் காட்டுகிறது? மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் மக்கள் செல்வதை இந்தத் திரைச்சீலை தடை செய்தது. ஏனென்றால் அங்கேதான் தேவப்பிரசன்னம் இருக்கும். தேவன் மிகவும் பரிசுத்தமானவர். எல்லா மனிதர்களும் பாவிகளானபடியால், ஒருவரும் அதற்குள் பிரவேசிக்க முடியாது. (பிரதான ஆசாரியன் மட்டுமே பாவ நிவிர்த்தி செய்யும் நாளில் மாத்திரம் அதற்குள் போக முடியும்.) ஆனால் இயேசு மரித்தவுடன் தேவன் அந்தத் திரையைக் கிழித்தார். எனவே இப்போது தேவனிடத்தில் போகும் வழி திறந்திருக்கிறது. பாவிகளாகிய மக்கள் தேவனிடத்தில் வருவதற்கு ஒரே வழி இயேசுவே (1பேதுரு 3:18).

→ பிரசங்கியுங்கள்: மாற்கு 15:33 – 39

இயேசு தேவனின் கோபத்தை ஏற்றுக் கொண்டார்

மாற்கு 15:33–34

⊞ நீங்கள் பயப்படக்கூடிய ஒருவரைப் பற்றி நினைத்துக் கொள்ளுங்கள். அவர் உங்கள் மேல் மிகவும் கோபமாய் இருப்பதாகக் கற்பனை செய்து கொள்ளுங்கள். அந்த மனிதர் தான் விரும்பியபடி உங்களுக்குச் செய்வதாக நினைத்துப் பாருங்கள்.

நாம் பாவம் செய்திருக்கிறோம். எனவே தேவன் நம்மை தண்டிக்க வேண்டும். (இதைக் குறித்து இன்னும் அதிகமாக உரையாடவும்). நாம் இப்போதே தேவனுடன் சமாதானமாக வேண்டும். இல்லா விட்டால் ஒருநாள் தேவனின் முழுக்கோபமும் நம்மேல் வரும்.

இயேசு சிலுவையில் இருப்பதைக் குறித்து நினைத்துப் பாருங்கள். இயேசு எப்போதுமே அவருடைய பிதாவை சந்தோஷப்படுத்தி இருக்கிறார். அவருடைய பிதா எப்போதும் அவர் மேல் பூரண அன்பு செலுத்தியிருக்கிறார். இப்போது வானம் இருள் அடைந்திருக்கிறது. ஜனக்கூட்டத்திற்கு அது எவ்வளவு பயங்கரமாய் இருந்திருக்கும் என்று கற்பனை செய்து பாருங்கள். ஆனால் இருள் ஏன் வந்தது என்று இயேசுவுக்குத் தெரியும். தேவனுடைய கோபம் **இயேசுவுக்கு** நேராகத் திருப்பப்பட்டிருக்கிறது. அது நரகத்திற்கு போவது போலாகும்.

அவர் மிகுந்த வேதனையில் "ஏன் என்னைக் கைவிட்டீர்" என்று சத்தமிட்டுக் கூப்பிடுகிறார்.

இயேசுவுக்கு அதற்கு பதில் தெரியும். நம்முடைய பாவத்தின் நிமித்தமாகவே தேவனுடைய கோபம் இயேசுவின் மேல் வந்தது. தேவன் நமது பாவத்தின் மேல் கோபமாயிருந்தார். நாம் அடைய வேண்டிய தண்டனையை இயேசு அனுபவித்தார். (இதை விளக்க ஒரு உதாரணத்தைக் கூறவும். இயேசுவின் அற்புதமான அன்பைக் குறித்துக் உரையாடவும்)

இன்று அது உங்களை எங்கே வைத்து இருக்கிறது? அதற்கு இரண்டு பதில்கள் உள்ளன.

» **உங்கள் பாவங்களை ஏற்றுக் கொள்ள இயேசுவை நீங்கள் விசுவாசித்து இருக்கிறீர்கள்.** அவர் உங்கள் தண்டனையை ஏற்றுக் கொண்டிருக்கிறார். நீங்கள் இப்போது விடுதலையாகி விட்டீர்கள். ஒருபோதும் தேவனின் கோபம் உங்கள் மேல் வராது. நீங்கள் இயேசுவை அதிகமாய் நேசிக்கிறீர்கள்.

» **நீங்கள் இன்னும் இயேசுவிடம் உங்கள் பாவங்களை ஏற்றுக் கொள்ளும்படி கூறவில்லை.** தேவன் இன்னும் உங்கள் மேல் கோபமாயிருக்கிறார். நீங்கள் இப்போது பெரும் நரக அபாயத்தில் இருக்கிறீர்கள். இயேசுவை உங்கள் இரட்சகராய் இருக்கும் படி நீங்கள் அவரைக் கேட்க வேண்டிய தருணம் இதுவே.

இயேசு வழியைத் திறந்தார்

📖 மாற்கு 15:37–39

⊞ காகிதம் நெருப்பை நெருங்கினால் என்ன நடக்கும்?

நாம் ஒரு போதும் தேவனை நெருங்க முடியாது. அவர் மிகவும் பரிசுத்தம் ஆனவர். ஆனால் நாமோ பாவம் நிறைந்தவர்களாய் இருக்கிறோம். அவர் நம்மை எரித்து விடக் கூடிய நெருப்பைப் போலிருக்கிறார்.

(தேவலாயத்தையும், அதன் திரைசீலையையும் குறித்து உரையாடவும். அதை நீங்கள் வரையலாம் அல்லது, ஒரு மாதிரிவடிவத்தை உண்டாக்கலாம். மக்களால் எப்படி **ஒரு போதும்** தேவனை நெருங்க முடியாதென்பதை நீங்கள் அவர்களுக்குக் காட்ட வேண்டும்).

இயேசு அவை யாவையும் மாற்ற வந்தார். அவர் மரித்த போது பாவிகளான மக்கள் தேவனிடம் வருவதற்கு இயேசு பாதையைத் திறந்தார். தேவன் தேவாலயத்துச் திரைச்சீலையை இரண்டாகக் கிழித்தார். இது ஒரு அடையாளம் ஆகும். அது தேவன் இப்படிக் கூறுவது போலிருக்கிறது: "என்னிடத்தில் வரும் வழி இப்போது திறந்திருக்கிறது. இயேசுவின் மூலம் என்னிடம் வாருங்கள்".

நாம் தேவனிடத்தில் வர முடியாத காரணம் நம் **பாவமே.** ஆனால் இயேசு அந்தப் பாவத்தை நம்மை விட்டு எடுத்துப் போட வந்தார்! அவருடைய சிலுவை மரணம் தேவனிடம் செல்வதற்கான வழியைத் திறந்தது.

» நம்மைப் போன்ற மக்களுக்கு இயேசுவின் மரணமே மிகச் சிறந்த செய்தியாகும். அது தேவனிடம் போகும் வழியைத் திறந்தது. இப்போது தேவன் இயேசுவின் மூலம் அவர் அண்டையில் வரும்படி நம்மை அழைக்கிறார். அதை நீங்கள் செய்வீர்களா? அல்லது தேவனை விட்டு விலகி இருப்பீர்களா?

67 அவர்கள் பார்த்தார்கள், அவர்கள் அக்கறை காட்டினார்கள்

▣ பின்னணி

இயேசு மரித்து விட்டார். அவர் மரித்த விதம் ரோம அதிபதியை "இந்த மனிதன் தேவனுடைய குமாரன்" என்று நம்ப வைத்தது. 📖மாற்கு 15:39.

மாற்கு 16ல் இயேசு எப்படி மரித்தோரிலிருந்து உயிர்த்து எழுந்தார் என்று நாம் வாசிக்கின்றோம். ஆனால் முதலில் அங்கே பிழையேதும் நடக்கவில்லை என்பதை மாற்கு நமக்குக் காட்டுகிறார். உண்மையாகவே இயேசு மரித்ததை அநேக மக்கள் கண்டார்கள். 📖 மாற்கு 15:40~47.

⊙ முக்கிய விடயம்

இயேசு மரித்தபோது எல்லோரும் அவரை விட்டுப் போய் விடவில்லை. இந்த மக்கள் மிக முக்கியமான சாட்சிகளாய் இருக்கிறார்கள். இயேசு உண்மையிலேயே மரித்தாரென்று அவர்கள் அறிந்திருந்தார்கள்.

☆ நீங்கள் செய்ய வேண்டியது

அந்தப் பெண்ணிடமிருந்தும், யோசேப்பிடமிருந்தும் நாம் முக்கிய பாடங்களைக் கற்றுக் கொள்ளலாம். பயப்படும், அல்லது வெட்கப்படும் கிறிஸ்தவர்களை ஊக்குவிக்க வேண்டுமென்று ஜெபியுங்கள். ஒருவேளை நீங்கள் உரையாடுபவர்களில் சிலர் இயேசுவை விசுவாசித்தும், அதை இன்னும் அறிக்கை செய்யாமல் இருக்கலாம். அல்லது அவர்கள் இயேசுவைப் பின்பற்றுவதைக் காட்டுவதற்கு இன்னும் ஞானஸ்நானம் பெறாமலிருக்கலாம். அவர்கள் இதைக் குறித்து இன்னும் அதிகமாக சிந்திப்பதற்கு நீங்கள் அவர்களுக்கு வேதபாடம் நடத்தலாம்.

✹ குறிப்புகள்

- **மாற்கு 15:42.** மறுநாள் ஓய்வு நாளாயிருந்தது (சனிக்கிழமை) ஓய்வு நாள் வெள்ளிக்கிழமை மாலை தொடங்கும். எனவே ஓய்வு நாள் தொடங்கு முன் அவர்கள் இயேசுவை அடக்கம் பண்ண வேண்டும் (ஓய்வு நாளில் ஒன்றும் செய்யக் கூடாது)
- **மாற்கு 15:43.** 📖 மத்தேயு 27:57~60; லூக்கா 23:50~54; யோவான் 19:38. யோசேப்பு ஓர் முக்கிய யூதத் தலைவனாய் இருந்தான். மற்றெல்லாத் தலைவர்களும் இயேசுவைக் கொல்ல வேண்டுமென்று நினைத்தவர்களாய் இருந்தார்கள். அவர்களை எதிர்த்து நிற்பது யோசேப்புக்கு கடினம். ஆயினும், இயேசுவின் சரீரத்தைக் குறித்து அவன் அக்கறை காண்பித்தது அவனுடைய தைரியத்தைக் காட்டுகிறது.

? கற்றுக்கொள்ளுங்கள்: மாற்கு 15:40-47

- **மாற்கு 15:44.** நூற்றுக்கு அதிபதி (இராணுவ அதிகாரி) சேவகர்களுக்குத் தலைவனாய் இருந்தான். அவன் அநேக மக்கள் மரிப்பதைப் பார்த்திருக்கக் கூடும். அவன் இயேசு மரித்த விதத்தைப் பார்த்தான். இயேசு உண்மையிலேயே மரித்து விட்டரரென்று அவனுக்குத் தெரியும்.

→ பிரசங்கியுங்கள்: மாற்கு 15:40-47

இயேசு உண்மையிலேயே மரித்து விட்டார்

- இயேசு உண்மையிலேயே மரித்து விட்டாரென்பதைக் காண யார் அங்கே இருந்தார்கள்?

அவர்கள் எல்லோருக்குமே இயேசு மரித்து விட்டாரென்ற உண்மை தெரியும். அவர் விரைவில் மரித்து விட்டார். ஆனால் அவர் மரித்ததில் இங்கே பிழையேதுமிருக்க முடியாது. எனவே யோசேப்பு அன்புடன் அவருடைய உடலை அடக்கம் பண்ணினான்.

இயேசு ஒருபோதும் மரிக்கவில்லை என்று விசுவாசிக்க சிலர் விரும்பலாம். அப்படியானால் அவர் மரித்தோரிலிருந்து ஒருபோதும் உயிர்த்தெழுந்திருக்க முடியாது! ஆனால் அநேக மக்கள் இயேசுவின் மரித்த சரீரத்தைப் பார்த்தார்களென்று காட்டுவதில் மாற்கு மிகக் கவனமாக இருக்கிறார்.

» கிறிஸ்தவர்கள் உண்மையைக் குறித்து ஒருபோதும் பயப்பட வேண்டிய அவசியமில்லை. மக்கள் நம்மிடம் கடினமான கேள்விகளைக் கேட்கலாம். ஆனால் **அவர்கள்** உண்மையை எதிர் கொள்ளத்தான் வேண்டும். இயேசு **உண்மையிலேயே** மரித்து பின் உயிர்த்தெழுந்தார். இந்த உண்மைகள்

➡ பிரசங்கியுங்கள்: மாற்கு 15:40-47

எல்லோரும் இயேசுவை விசுவாசிக்க வேண்டுமென்பதைக் காட்டுகிறது.

அக்கறை காட்டின மக்கள்

மூன்று பெண்கள்

மாற்கு 15:40~41,47

ஏனைய சீஷர்கள் ஓடிப் போய் விட்டார்கள். யோவான் மட்டுமே சிலுவை அருகில் வந்தான். ஆனால், இந்தப் பெண்கள் இயேசுவைப் பின்தொடர்ந்து வந்து, அவர் மேல் அக்கறையுள்ளவர்களாய் காணப் பட்டார்கள். இப்போது இயேசு மரித்து விட்டார். ஆனால் அவர்கள் அவரை விட்டுப் போகவில்லை. அவர்கள் கடைசி வரை அங்கிருந்தார்கள். யோசேப்பு இயேசுவின் சரீரத்தைக் கொண்டு போய் அடக்கம் செய்தபோது அவர்கள் அங்கே இருந்தார்கள். அவர்கள் மீண்டும் வருவதற்காக இயேசுவை எங்கே அடக்கம் பண்ணுகிறார்கள் என்பதை அறிந்திருக்க விரும்பினார்கள்.

இந்தப் பெண்கள் நம்மை ஊக்குவிக்கிறார்கள். அவர்கள் வேறு எதையும் **சொன்னதாக** நாம் வாசிப்பதில்லை. அவர்கள் இயேசுவின் மேல் தங்கள் அன்பைக் **காண்பித்தார்கள்.** மற்றெல்லோரும் இயேசுவை விட்டுப் போய்விட்ட பின்பும் அவர்கள் அவருடன் இருக்கிறார்கள். நீங்கள் அப்படியாக இயேசுவின் மேல் அன்பு செலுத்துகிறீர்களா? அதை எப்படி நீங்கள் அதிகமாக வெளியே காண்பிப்பீர்கள்?

யோசேப்பு

மாற்கு15:43~46

(மத்தேயு, லூக்கா, யோவான் சுவிசேஷங்களிலிருந்து இன்னும் அதிகமாக யோசேப்பைக் குறித்து அறிந்துக் கொள்ள **குறிப்புகளைப்** பார்க்கவும்.)

- இயேசுவை விசுவாசிக்கிறீர்கள் என்பதைச் சொல்லுவது எப்போது உங்களுக்கு கடினமாய்த் தோன்றுகிறது?

யோசேப்புக்கு அது மிகவும் கடினமான காரியமாயிருந்தது. அவன் இயேசுவை இரகசியமாகவே விசுவாசித்தான். மற்ற யூதத் தலைவர்கள் இயேசுவை வெறுத்தார்கள். எனவே யோசேப்பு பேசுவதற்கு அதிகமாகப் பயந்தான்.

இப்போது அது மாறி விட்டது. இயேசுவின் மரணம் சீஷர்களுக்குப் பயத்தை உண்டாக்கினது. ஆனால் அது யோசேப்பை தைரியமடையச் செய்தது. இயேசுவுக்கு அவன் அன்பைக் காட்ட வேண்டுமென்ற **அவசியம்** அவனுக்குத் தெரியும். மற்றத் தலைவர்கள் அவனை வெறுப்பார்கள். அவனை அவர்கள் கொலை செய்ய முயற்சிக்கலாம். ஆனால் அவன் விசுவாசிப்பதைக் காட்டுவதற்கு யோசேப்புக்கு நேரம் வந்திருக்கிறது. (யோசேப்பு செய்வதைக் குறித்து இன்னும் அதிகம் உரையாடவும்).

நம்மைப் போன்ற மனிதர்களுக்காக இயேசு மரித்ததை நீங்கள் நினைக்கும் போது, அது உங்களை அவர் மேல் அன்பு செலுத்த வைக்கின்றதா? அது உங்களைத் தைரியப்படுத்துகிறதா? நீங்கள் இயேசுவை விசுவாசிப்பதை மற்றவர்களுக்குக் காண்பிக்க வேண்டிய நேரம் இதுவா?

68 இயேசு உயிர்தெழுந்து விட்டார்!

பின்னணி

மாற்கு நமக்கு இவைகளைக் காட்டியிருக்கிறார்:

- இயேசுவே வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து.
- அவர் வாக்களித்திருந்தபடியே சிலுவையில் மரித்தார்.
- அவருடைய சீஷர்கள் அவரே கிறிஸ்துவென்று அறிந்து இருந்தார்கள். ஆனால், அவர் மரிக்க வேண்டுமென்பது அவர்களுக்குப் புரியவில்லை. இயேசு மரித்தோரிலிருந்து உயிர்த்தெழும்புவாரென்று அவர்கள் எதிர்பார்க்கவில்லை.

மாற்கு 16:1~8. (மாற்கு 16:8ல் மாற்கு தன்னுடைய சுவிசேஷத்தை முடித்து விட்டாரென்றும், மாற்கு 16:9-20 வேறொருவரால் அநேக வருடங்களுக்குப் பின் இணைக்கப்பட்டிருக்கலாம் என்றும் சிலர் நம்புகின்றனர்.)

முக்கிய விடயம்

அவர் சொல்லியிருந்தபடியே இயேசு மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்தார்.

நீங்கள் செய்ய வேண்டியது

உங்கள் பேச்சைக் கேட்பவர்களில் அநேகர் உண்மையை விசுவாசிக்கிறார்கள். இயேசு உயிர்த்தெழுந்தாரென்று அவர்களுக்குத் தெரியும். ஆனால் சிலர் இன்னும் அவரை ஏற்றுக் கொள்ளாமலிருக்கிறார்கள். இது விவேகமற்றதொரு செயல் என்பதை எப்படி நீங்கள் அவர்களுக்குக் காட்ட முடியும்?

(இதை நீங்கள் உதாரணமாகக் கூறலாம். உங்கள் வீடு தீப்பற்றிக் கொள்ளுகிறது. நீங்கள் தப்புவதற்கு ஒரே வழி அந்தக் கதவின் வழியாய் வெளியேறுவதாகும். நீங்கள் அதை நம்புகிறீர்கள். ஆனால் நீங்கள் உங்கள் வீட்டை அதிகம் நேசிப்பதால் அந்தக் கதவின் வழியாக வெளியே போகாமல் அங்கேயே இருக்கிறீர்கள். அப்போது என்ன நடக்கும்?)

குறிப்புகள்

- **மாற்கு 16:1.** அந்தப் பெண்கள் இப்படித்தான் இயேசுவின் மேல் தங்கள் அன்பை வெளிப்படுத்துகிறார்கள். வெள்ளிக்கிழமை அதிக நேரம் கிடைக்கவில்லை. அவர்கள் விரும்பினபடி இயேசுவின் உடலுக்கு அவர்களால் எதையும் செய்ய முடியவில்லை.
- **மாற்கு 16:5.** இது ஒரு தேவதூதன். **மத்தேயு 28:2~5**
- **மாற்கு 16-7.** "அவர் உங்களுக்கு சொன்னபடியே"! **மாற்கு 14:28 பார்க்கவும்.**

கற்றுக்கொள்ளுங்கள்: மாற்கு 16:1 –8

- **மாற்கு 16:7.** பேதுரு இயேசுவை தனக்குத் தெரியாதென்று கூறி இருந்தான். ஆனால் இயேசு அவனை மன்னிக்கத் தயாராய் இருக்கிறார். அந்தப் பெண்கள் பேதுருவிடம் கூற வேண்டும். பேதுரு கலிலேயாவில் இருக்க வேண்டுமென்று இயேசு விரும்பினார். (கலிலேயாக் கடல் ஓரத்தில்தான் இயேசு முதலில் பேதுருவை தன் பின்னே வரும்படி அழைத்தார்.)

பிரசங்கியுங்கள்: மாற்கு 16:1 –8

இயேசு சொன்னபடியே!

மாற்கு 16:6~7

⊞ சில விஷயங்களை விசுவாசிப்பது கடினம். (இதைக் குறித்து ஒரு கதையை கூறவும். ஏதாவது ஒரு காரியம் நடக்க சாத்தியமில்லை என்று நீங்கள் நினைக்கிறீர்கள். எனவே அதை நீங்கள் நம்பவில்லை. அப்போது பல விஷயங்கள் அந்தக் காரியம் உண்மையில் நடந்தது என்று உங்களுக்குக் காட்டுகின்றன. எனவே கடைசியில் நீங்கள் அந்த உண்மையை நம்ப வேண்டிய **நிலை** ஏற்படுகிறது?)

மரித்த மனிதர்கள் மீண்டும் உயிரடைய மாட்டார்களென்று எல்லோருக்கும் நன்றாகத் தெரியும். இந்தப் பெண்களும் இயேசு உயிரோடு எழும்புவாரென்று விசுவாசித்திருக்கவில்லை. அவர்கள் அவருடைய உடலுக்கு சுகந்த வர்க்கமிடுவதற்காகவே அங்கே வந்தார்கள்.

உண்மைகள் தெளிவாகத் இருக்கின்றன.

- யாரோ அந்தப் பெரிய கல்லைப் புரட்டித் தள்ளி இருக்கிறார்கள்.
- கல்லறை காலியாக இருக்கிறது.

➡ பிரசங்கியுங்கள்: மாற்கு 16:1 – 8

- இயேசு உயிர்த்தெழுந்தாரென தேவதூதன் அவர்களுக்குக் கூறினான்.
- இயேசு இது நடக்குமென்று ஏற்கனவே கூறியிருந்தார்.

» இயேசு மரித்தோரிலிருந்து உயிர்த்து எழுந்து **விட்டார்.** அந்த உண்மையைக் குறித்து நாம் நிச்சயமுள்ளவர்களாய் இருக்க வேண்டுமென்று தேவன் விரும்புகிறார். இயேசு தான் உண்மையுள்ளவரென **நிச்சயப்படுத்தி உள்ளார்.** அவர் உயிர்த்தெழுந்து விட்டார்! அதாவது இதன் அர்த்தம் ~

- தேவனிடத்தில் போகும் வழி இயேசு மாத்திரமே.
- எல்லோரும் இயேசுவை விசுவாசிக்க வேண்டும்.

சிந்திக்கவும் ~ உண்மையை நம்பாத மக்களுக்கு என்ன நடக்கும்?

அந்தப் பெண்கள் இன்னும் பயப்படுகிறார்கள்

மாற்கு 16:8

இந்தப் பெண்கள் காலியான கல்லறையைப் பார்த்து இருக்கிறார்கள். ஒரு தேவதூதன் அவர்களிடம் இயேசு உயிர்தெழுந்து விட்டாரென்று கூறியிருக்கிறான். ஆனால், அவர்கள் இன்னும் பயப்படுகிறார்கள். அதை நம்புவதா என்று இன்னும் அவர்களுக்குத் தெரியவில்லை.

» நீங்களும் இந்தப் பெண்களைப் போலிருக்கிறீர்களா? நீங்கள் நம்ப வேண்டுமென்று விரும்புகிறீர்கள். ஆனால் பயப்படுகிறீர்கள். இயேசு மிகவும் இரக்கம் உள்ளவர். அவர் அதை விசுவாசிக்க உங்களுக்கு உதவி செய்வார்.

சீஷர்கள் இன்னும் அதை நம்பவில்லை. இந்தப் பெண்களும் இன்னும் பூரணமாக நம்பவில்லை. ஆயினும், அவர்களுக்கு இயேசுவிடமிருந்து ஒரு செய்தி இருக்கிறது. மாற்கு 16:7. அவர் உயிர்தெழுந்து விட்டாரென்று அவர்களுக்கு அவர் காட்ட விரும்புகிறார். அது சம்பூரண உண்மை. அவர் **பேதுருவைக்** காண விரும்புகிறார். பேதுரு வெட்கப்படுகிறான். அவன் இயேசு யாரென்று அவனுக்குத் தெரியாது என்று கூறியிருந்தான். ஒருவேளை பேதுரு இனி ஒருபோதும் இயேசு தன்னை மன்னிக்க மாட்டாரென்று எண்ணிக் கொண்டிருக்கக் கூடும். ஆனால் இயேசு அவனை மன்னிப்பார்.

» ஒருவேளை நீங்கள் நம்புவதற்கு தாமதமாயிருக்கலாம். ஒருவேளை நீங்கள் பேதுருவைப் போல இயேசுவைப் பற்றி தகாதவைகளைக் கூறியிருக்கலாம். ஆனால் **இன்னும் உங்களுக்கு சந்தர்ப்பமிருக்கிறது.** உயிர்த்தெழுந்த இரட்சகர் உங்களை மன்னிப்பார். இப்போதே அவரிடம் வாருங்கள்.

69 விசுவாசிக்கவும், பின் கூறவும்!

▣ பின்னணி

மாற்கு 16:9-20ஐ ஒருவேளை மாற்கு எழுதியிருக்காமல் இருக்கலாம். அப்படி நினைப்பதற்கு பல நல்ல காரணங்கள் இருக்கின்றன. ஆயினும், மாற்கு 16:8 இந்த சுவிசேஷம் முற்றுப் பெறுவதற்கு ஒரு விசித்திரமான இடமாகத் தோன்றுகிறது. ஒருவேளை மாற்குவுக்கு இதை முடிக்க முடியாமல் போய் இருக்கலாம். அதனால், வேறொருவர் மாற்கு 16:9-20ஐ பல வருடங்களின் பின் எழுதி இணைத்திருக்கலாம். (தேவனுடைய வார்த்தையை நேசிக்கும் அநேகர் இப்படிக் கூறுகிறார்கள்).

ஆயினும், இந்தப் பகுதி நமது வேதாகமத்தின் ஒரு பகுதியாகும். நாம் அதிலிருந்து பலவற்றைப் படிக்கலாம். மாற்கு 16: 9-20ல் வரும் அநேகமானவைகள் மற்ற சுவிசேஷங்களிலும் காணப்படுகின்றன. இங்கு **மட்டுமே** காணப்படக் கூடிய சில பகுதிகளைக் குறித்து நாம் கவனமாக இருக்க வேண்டும் (மாற்கு 16:17-18 ✹ **குறிப்பைப்** பார்க்கவும்).

இந்த முடிவு சீஷர்கள் விசுவாசிப்பதற்கு தாமதமாய் இருந்தார்கள் என்பதைக் காட்டுகிறது. ஆனால் இயேசு இன்னும் அவர்களுக்கொரு வேலையை வைத்திருக்கிறார். அவர்கள் நற்செய்தியை உலகெங்கும் போய் கூற வேண்டும்.

⊙ முக்கிய விடயம்

இறுதியில் சீஷர்கள் விசுவாசிக்கிறார்கள். இனி அதை அவர்கள் முழு உலகிற்கும் கூற வேண்டும்.

★ நீங்கள் செய்ய வேண்டியது

மக்கள் **விசுவாசிப்பதற்காக** மாற்கு தன் நற்செய்தியை கூறுகிறார். 📖 **மாற்கு 1:1-15.** நீங்கள் மாற்கு சுவிசேஷத்தை முடிக்கும்போது, இது (மாற்கு 16:16) எவ்வளவு முக்கியம் என்பதை எல்லோரும் காண வேண்டுமென்று ஜெபியுங்கள்.

✹ குறிப்புகள்

- **மாற்கு 16:14.** இயேசுவைக் கண்டவர்கள் கூறியதை சீஷர்கள் விசுவாசித்திருக்க வேண்டும். எனவே இயேசு அவர்களைக் கடிந்து கொள்கிறார்.
- **மாற்கு 16:16.** ஞானஸ்நானம் ஒருவரையும் இரட்சிக்காது. ஞானஸ்நானம் இரட்சிக்கப்படுவதற்கு உதவியாகக் கூட இருக்காது. ஆயினும், இயேசுவை விசுவாசிக்கும் ஒருவர் அதைக் **காண்பிப்பதற்காக** ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ள வேண்டுமென வேதாகமம் கூறுகிறது.
- **மாற்கு 16-17-18.** இயேசு அநேக வரங்களை விசுவாசிகளுக்கு வாக்களிக்கிறார். ஆயினும் இயேசுவின் மக்கள்

கற்றுக்கொள்ளுங்கள்: மாற்கு 16:9–20

சர்ப்பங்களை எடுப்பார்கள், அல்லது நஞ்சைக் குடிப்பார்களென்று வேதாகமத்தில் வேறெங்கும் சொல்லப்படவில்லை. நாம் ஆபத்தானவைகளைச் செய்து தேவனைப் பரீட்சை பார்க்கக் கூடாது என்றே வேதாகமம் கூறுகிறது (மத்தேயு 4:5-7).

- **மாற்கு 16:17,20.** "அடையாளங்கள்" (அற்புதங்கள்) இவை வெறும் அற்புதங்களல்ல. நற்செய்தி **தேவனிடத்திலிருந்து வருகிறது** என்பதைக் காட்டுவதற்காகவே தேவன் அற்புதங்கள் செய்கிறார். "அடையாளம்" என்பதற்கு இதுவே அர்த்தமாகும். ஒரு அடையாளம் நமக்கு ஏதோ ஒன்றைக் கூறுகிறது. (இந்த அடையாளங்களுக்கு ஏன் ஒரு விசேஷ தேவையிருந்தது? ஏன் இன்று அது வித்தியாசமாய் இருக்கக் கூடும்? அவருடைய வார்த்தை உண்மை என்பதைக் காட்ட எப்போது தேவன் விசேஷ அற்புதங்களைச் செய்யக் கூடும்?)

பிரசங்கியுங்கள்: மாற்கு 16:9–20

நற்செய்தியை விசுவாசிக்கவும்

மாற்கு 16:9~14

(இப்படியானதொரு கதையைக் கூறவும்) உங்களிடம் ஒரு நல்ல செய்தியுள்ளது. நீங்கள் அதை மக்களுக்கு கூறுகிறீர்கள். ஆனால் அவர்கள் உங்களை நம்பவில்லை. உங்களுக்கு அப்போது எப்படியிருக்கும்?

- இந்தப் பகுதியில் எத்தனை முறை நாம் மக்கள் விசுவாசிக்கவில்லை என்று வாசிக்கிறோம்?

இயேசு மரித்து விட்டாரென்று சீஷர்கள் மிகவும் கவலை அடைந்திருந்தார்கள். அவர் இப்போது உயிரோடு இருக்கிறார் என்பதை அவர்களால் விசுவாசிக்க முடியவில்லை.

- இதைக் குறித்து இயேசு என்ன நினைக்கிறார் (மாற்கு 16:14)?

நாம் விசுவாசிக்காமல் இருப்பது மிகவும் துக்கமான காரியம். அவருடைய சீஷர்களுக்காக இயேசு வேதனைக்கூடாக கடந்து சென்றிருக்கிறார். அவர்களுடைய பாவங்களுக்காக அவர் சிலுவையில் மரித்திருக்கிறார். இப்போது மீண்டும் உயிர்த்தெழுந்து இருக்கிறார். இவை யாவையும் அவர் அவர்களுக்காக

செய்திருக்கிறார். ஆனால் அவர்கள் அது உண்மையென்று நம்பாமல் இருக்கிறார்கள்.

நீங்களும் இந்த சீஷர்களைப் போன்றவரா? எத்தனை முறை நீங்கள் இயேசுவைக் குறித்துக் கேள்விப்பட்டு இருப்பீர்கள்? உங்களுக்கு சகல உண்மையும் தெரியும். வேதாகமம் உங்களுக்கு உண்மையையே கூறுகிறது என்பது உங்களுக்குத் தெரியும். ஆனால் நீங்கள் இன்னும் இயேசுவை விசுவாசிக்காமலிருக்கிறீர்கள். இயேசு உங்களைப் பற்றி என்ன நினைப்பார்? மாற்கு 16:16.

நற்செய்தியைக் கூறவும்

மாற்கு 16:15

உங்களிடத்தில் ஒரு நல்ல செய்தி இருக்கும்போது அதை நீங்கள் மறைத்து வைப்பீர்களா? இல்லை, அதை எல்லோருக்கும் கூறுவீர்கள். இப்போது உங்கள் செய்தி அநேகருக்குப் பிரயோஜனமாயிருக்கும் என்று கற்பனை செய்யுங்கள். ஒருவேளை நீங்கள் *AIDS* நோய்க்கு ஒரு நல்ல மருந்தைக் கண்டு பிடித்து விட்டீர்கள். அதை நீங்கள் இரகசியமாய் வைத்திருப்பீர்களா? அது தவறான காரியம்.!

உலகத்திற்கு அவரைக் குறித்து கூறும்படி இயேசு சீஷர்களுக்குக் கூறுகிறார். இயேசுவின், சபையின் ஆரம்பம் அவருடைய சீஷர்களே. எனவே இந்தக் கட்டளை இப்போது நமக்கு வருகிறது. உலகம் இன்னும் நற்செய்தியை கேட்க வேண்டிய அவசியமிருக்கிறது. உங்கள் நாட்டில் யார் இயேசுவைப் பற்றி உண்மையை அறியாமலிருக்கிறார்கள்? வேறு எந்த நாடுகள் இயேசுவைப் பற்றி இன்னும் அறிய வேண்டியிருக்கிறது? உலகத்திற்கு நற்செய்தியை அறிவிக்க உங்கள் சபை என்ன செய்கின்றது?

நமக்கு அநேக சாக்குகள் இருக்கலாம். ஒருவேளை, நாம் பயப்படலாம். அல்லது சோம்பலாயிருக்கலாம், அல்லது நமக்கு நேரமில்லாமலிருக்கலாம். மக்கள் இயேசுவைக் குறித்து அறிந்து கொள்ள விரும்பாத காரணத்தால், நமக்கு அது கடினமாயிருக்கிறது. சீஷர்களுக்கு அது இலேசான காரியமாயிருக்கவில்லை. பலர் அவர்களை வெறுத்தார்கள். அவர்களில் சிலரை கொலையும் செய்தார்கள்.

நீங்கள் நற்செய்தியை நேசித்தால் அதை மற்றவர்களுக்கு கூற விரும்புவீர்கள். நீங்கள் இயேசுவை நேசித்தால் அவருக்குக் கீழ்ப்படிய விரும்புவீர்கள். இதைக் குறித்து சிந்தித்து, அதை எப்படி செய்ய முடியும் என்பதைக் குறித்து ஜெபியுங்கள்.

மாற்கு 16:20. இயேசு பரலோகத்திலிருந்து “அவர்களுடனே கூட கிரியை நடப்பித்தார்.” இயேசு தன் பெரிய வேலையை செய்து முடித்தார். அவர் மரித்து, உயிர்த்தெழ வந்தார். இப்போது அவருடைய மக்கள் அவர் அவர்களுக்குக் கொடுத்த வேலையை செய்ய வேண்டும். **இயேசு நம்முடனே கூட கிரியை நடப்பிக்கிறார்.** நாம் தனியாக இல்லை. நாம் மக்களுக்கு நற்செய்தியை கூறும்போது, இயேசு அவர்களுக்கு நித்திய ஜீவனைக் கொடுக்கிறார். அவரைத் துதியுங்கள்!

உ. ‘மாற்கு நற்செய்தியைப் பிரசங்கித்தல்’ புத்தகத்தை உபயோகிப்பது எப்படி

செய்து காட்டப்பட்ட உதாரணங்கள்

நீங்கள் போதிப்பதற்கு முன்பதாக நன்றாகப் கற்று, ஜெபிக்க வேண்டும். இந்த வேதாகமப் பகுதியை புரிந்து கொள்ள உதவும்படி தேவனிடம் கேளுங்கள்.

நீங்கள் முதலில் செய்ய வேண்டியது **மாற்கு 2:13-17ஐ வாசிப்பதாகும்.** இதுவரை நடந்த கதையை நினைவுபடுத்திக் கொள்ளுங்கள். எப்படி மாற்கு 2:13-17 அந்தக் கதையுடன் பொருந்துகின்றது என்பதை சிந்தியுங்கள். **பின்னணி** குறிப்புகள் அதைப் பற்றிச் சிந்திக்க உங்களுக்கு உதவியாய் இருக்கும்.

குறிப்புகள்

இவை அந்தப் பகுதியிலுள்ள கடினமானவைகளைப் புரிந்து கொள்ள உங்களுக்கு உதவி செய்யும். மக்களுக்கு நீங்கள் இவைகளில் சிலவற்றை விளக்க வேண்டியிருக்கலாம்.

முக்கிய விடயம்

குறிப்பிட்ட பகுதியில் நீங்கள் எல்லாவற்றையும் நன்றாகப் புரிந்து கொள்ளும்வரை அதை மீண்டும் மீண்டும் வாசியுங்கள். அது கற்றுக் கொடுக்கும் முக்கிய விடயத்தைப் புரிந்து கொள்ள முயலுங்கள். உங்கள் உரையாடலின் முக்கிய விடயம் அதுவே. அது ஏன் உங்கள் மக்களுக்கு மிக முக்கியம் என்பதை புரிந்து கொள்ள முயற்சி செய்யுங்கள். அவர்கள் அதைத் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டுமென்று ஜெபியுங்கள்.



கற்றுக்கொள்ளுங்கள்: மாற்கு 2:13-17

7 இயேசு அழைக்கும் மக்களின் வகை

பின்னணி

மாற்கு 2:1-12ல் அவருக்கு பாவங்களை மன்னிக்கும் அதிகாரம் உண்டென்பதை இயேசு காண்பிக்கிறார். எனவே இப்போது இயேசு, அவர் நல்ல மனிதர்களுக்காக வரவில்லை என்பதை காண்பிக்கிறார். அவர் பாவிகளுக்காக வந்தார். தங்கள் பாவங்கள் மன்னிக்கப்பட வேண்டும் என்று விரும்புபவர்களுக்காக இயேசு வந்தார்.

மாற்கு 2: 17ல் இரண்டாவது முறையாக இயேசு அவர் எதற்காக வந்தார் என்பதை நமக்குக் கூறுகிறார் (மாற்கு 1:38ஐ பார்க்கவும்).

முக்கிய விடயம்

இயேசு நல்ல மனிதர்களுக்காக வரவில்லை. அவர் பாவிகளுக்காக வந்தார்.

நீங்கள் செய்ய வேண்டியது

இயேசு நல்ல மனிதர்களைத் தெரிந்தெடுப்பதாக மக்கள் இன்னும் நினைக்கிறார்கள்! அநேக மக்கள் அவர்கள் நல்லவர்களானதால் இயேசு அவர்களைக் குறித்து மகிழ்ச்சியடைகிறார் என்று நினைக்கிறார்கள். இப்பகுதி அவர்கள் நினைப்பது பிழை என்று நமக்குப் படிப்பிக்கிறது. இதை எப்படி அவர்களுக்குக் கூறுவது என்பதைக் குறித்து சிந்தித்து அதற்காக ஜெபிக்கவும்.

இயேசு அவர்களுக்காக வந்தார் என்பதை கெட்ட மனிதர்கள் அறிந்து கொள்ள வேண்டுமென்று நீங்கள் விரும்ப வேண்டும். தங்களுடைய பாவங்களிலிருந்து தங்களை மீட்கும்படி அவர்கள் இயேசுவிடம் கேட்க வேண்டும் என்று நீங்கள் விரும்ப வேண்டும்.

சில மக்கள் தாங்கள் ஏற்கனவே நல்லவர்களாக இருப்பதாக நினைக்கிறார்கள். அவர்கள் நல்லவர்களல்ல என்பதை அவர்களை நீங்கள் அறிய வைக்க வேண்டும். அவர்கள் இயேசுவிடம் தங்களை நல்லவர்களாக மாற்றும் படி கேட்கப் பண்ண வேண்டும்.

குறிப்புகள்

- மாற்கு 2:14. “லேவி” என்பது மத்தேயுவின் இன்னொரு பெயராகும்.
- மாற்கு 2:14. “ஆயக்காரர்கள்”. இவர்கள் ரோமர்களுக்காக யூதர்களிடம் வரி சேகரிப்பவர்களாகும். அநேகர் ஆயக்காரர்களை வெறுத்தார்கள். ஏனென்றால் அவர்கள் ரோமர்களுக்கு வேலை செய்தார்கள். ஒரு உண்மையான யூதன் ஒரு போதும் ரோமருக்கு உதவி செய்யமாட்டானென்று அவர்கள் நினைத்தார்கள். பெரும்பாலான ஆயக்காரர்கள் ஏமாற்றுகிறவர்களாயிருந்தார்கள். அவர்கள் தங்களுக்கென்று அதிக பணத்தை வசூலித்ததால் பணக்காரர்களாய் மாறினார்கள்.
- மாற்கு 2:15. “பாவிகள்”. எல்லா மனிதர்களும் பாவிகள் என்பதை நாமறிவோம். ஆனால் யூதர்கள் சிலரை மாத்திரம் “பாவிகள்” என்று அழைத்தார்கள். இவர்கள் பிழையான காரியங்களை செய்பவர்களாகும். உதாரணமாக யூதர்கள் விபச்சாரிகளை “பாவிகள்” என்று அழைத்தார்கள். ஆயக்காரரும், “பாவிகளும்” எப்போதும் கூட்டாளிகள். எனவே யூதர்கள் அவர்கள் யாவரையும் வெறுத்தார்கள்.
- மாற்கு 2:16. “பரிசேயர்”. இவர்கள் தேவனுடைய கட்டளைகளைப் பின்பற்ற அதிக முயற்சி செய்யும் மக்களாய் இருந்தார்கள். அவர்கள் மிக கண்டிப்பானவர்கள். அவர்கள் தங்களை நல்லவர்களாக நினைத்துக் கொண்டார்கள்.

34

- இயேசு லேவியை அழைத்தது எவ்வளவு அதிர்ச்சி தரக்கூடியது என்பதை உங்களால் புரிந்து கொள்ள முடிகின்றதா?
- இது எப்படி மாற்கு 2:17 உடன் பொருந்துகின்றது?

எனவே இந்தப் பகுதியின் முக்கிய விடயம் இதுவே: **இயேசு நல்லவர்களுக்காக வரவில்லை. அவர் பாவிகளுக்காக வந்தார்.**

நீங்கள் செய்ய வேண்டியது

இயேசு நல்ல மக்களையே

தெரிந்தெடுப்பதாக இன்னும் மக்கள் நினைக்கிறார்கள். அநேகர் தங்களை நல்லவர்கள் என்று நினைக்கிறார்கள். அவர்கள் நல்லவர்களானபடியால் இயேசு அவர்களைக் குறித்து மகிழ்ச்சியடைகிறாரென்று நினைக்கிறார்கள். அது **பிழையான** எண்ணம் என்பதை இந்தப் பகுதி காட்டுகின்றது. இதை எப்படி மக்களுக்குக் கூறுவது என்பதைக் குறித்து சிந்தித்து அதற்காக நீங்கள் ஜெபிக்க வேண்டும். தீய மக்கள், இயேசு அவர்களுக்காகவே வந்தார் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டுமென்று நீங்கள் விரும்ப வேண்டும். அவர்கள் இயேசுவிடம் தங்கள் பாவங்களில் இருந்து இரட்சிக்கும்படி கேட்க வேண்டுமென்று நீங்கள் விரும்ப வேண்டும்.

உங்கள் உரையாடல்

நீங்கள் உங்கள் உரையாடலை உங்கள் சொந்த மொழியில் தயார் செய்ய இப்போது ஆயத்தமாயிருக்கிறீர்கள். நாங்கள் கொடுக்கும் யோசனைகள் உங்களுக்கு உதவியாயிருக்கும். அதை நீங்கள் உங்கள் இருதயத்திலிருந்து வரும் சொந்த உரையாடலாக ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். தேவனிடம் உங்களுக்கு உதவும்படி கேளுங்கள். உங்கள் சொந்த மொழியில் சில குறிப்புக்கள் எழுதுங்கள்.

உங்கள் உரையாடலை ஆரம்பிப்பது

மக்கள் எதைக் குறித்து நீங்கள் உரையாடுகிறீர்கள் என்பதை புரிந்து கொள்வதற்காக, உங்கள் உரையாடலை எப்படித் ஆரம்பிப்பது என்று சிந்தியுங்கள். அது ஏன் அவர்களுக்கு முக்கியம் ஆனதென்பதை அவர்கள் கண்டு கொள்ள அவர்களுக்கு உதவுங்கள். இதோ ஒரு யோசனை:

உங்களுக்கு ஆச்சரியத்தில் விருப்பமுண்டா? (சில உதாரணங்களைக் கூறவும்) இயேசு அடிக்கடி நம்மை ஆச்சரியப்பட வைக்கிறார். இன்றைய வேதப்பகுதியில் இயேசு மற்றவர்கள் எதிர்ப்பார்ப்பதற்கு நேர் எதிரானதைச் செய்தார். அதை சிலர் விரும்பினார்கள். மற்றவர்கள் அதை விரும்பவில்லை. இயேசு இன்று உங்களுக்கும் ஆச்சரியமானதொன்றைச் செய்யக் கூடும் என்று நான் எதிர்பார்க்கிறேன்.

அல்லது அது ஒரு பெரிய அதிர்ச்சியாயும் இருக்கலாம்.

அன்று நீங்களும் அந்த கூட்டத்தில் இருந்ததாக கற்பனைச் செய்து கொள்ளுங்கள். அந்தக் கூட்டத்தில் இயேசு சொல்வதைக் கேட்க விரும்பும் அநேகர் இந்தக் கடற்கரைக்கு வந்து இருந்தார்கள். ஆனால் இயேசு உங்களில் ஒருவரையும் அவர் பின்னே வந்து அவருக்கு விசேஷ சீஷர்களாயிருக்கும்படி அழைக்கவில்லை. அப்போது இயேசு மிகவும் மும்முரமாக வேலையில் ஈடுபட்டு இருக்கும் ஒருவரைக் காண்கிறார். அவருக்கு இயேசு சொல்வதைக் கேட்க நேரமில்லை. அவர் என்ன செய்கிறார்? அவர் வேலை செய்து அதிக பணம் சம்பாதிக்கிறார். ஆனால் இயேசு அவரை அழைத்து 'என்னைப் பின்பற்றி வா' என்று கூறுகிறார். எவ்வளவு ஆச்சரியமான

தொரு செயல்! அநேகருக்கு அது அதிர்ச்சியாயிருக்கிறது. லேவியைப் போன்றதொரு மனிதன் ஏன் இயேசுவுக்குத் தேவை?

நீங்கள் லேவியைக் குறித்தும், ஏன் மக்கள் அவனை வெறுத்தார்களென்பதைக் குறித்தும் அதிகம் கதைக்கலாம். இயேசு இந்த கெட்ட மனிதனை தெரிந்து கொண்டதைக் குறித்து மக்கள் எவ்வளவு அதிருப்தி அடைந்திருப்பார்களென்று நினைத்துப் பாருங்கள்.

இந்தப் பகுதியில் போதிப்பதற்கு மூன்று முக்கியமான உண்மைகள் காணப்படுகின்றன.

1. இயேசு பாவிகளைஅழைக்கிறார்

மாற்கு 2:17

- நீங்கள், இயேசு அழைக்கும் வகையிலான ஒருவரா?
- நீங்கள் ஒரு பாவியா?

லேவி எந்த வகையானதொரு மனிதனாயிருந்தானென்பதைக் குறித்து உரையாடவும். இயேசு எந்த விதமான மக்களுடன் போஜனம் பண்ணினாரோ அவர்களைக் குறித்துப் பேசவும். அது உங்கள் ஊரிலோ, நகரத்திலோ நடப்பதாக கற்பனை செய்ய முயற்சி செய்யுங்கள். மாற்கு 2:17 சொல்வதைக் கவனிக்கவும். அது இயேசு இந்த மக்களை கீழானவர்களாக நினைத்ததாகக் கூறவில்லை. அது இயேசு விசேடமாக அவர்களுக்காகவே **வந்தாரென்று** கூறுகிறது.

இது தீயவர்களுக்கு நல்ல செய்தி லேவியைக் குறித்து ஒருவரும் கவலைப் படவில்லை. இந்தப் ‘பாவிகளையும்’, ஆயக்காரரையும் எல்லோரும் வெறுத்தார்கள். ஆனால் இயேசு அப்படியானவர்களுக்காகவே வந்தார். அவர் அவர்கள் மேல் அன்பு செலுத்தினார். இதைக் குறித்து இன்னும் அதிகமாகக் உரையாடவும்.

இது நல்லவர்களுக்கு தீமையான செய்தி இயேசு யாரை அழைக்க **வரவில்லை** என்பதைக் கவனிக்கவும். (மாற்கு 2:17) ‘நீதிமான்கள்’ நல்லவர்கள். பரிசேயர் அவர்கள் ஏற்கனவே நல்லவர்களாய் இருப்பதாக நினைக்கிறார்கள். இயேசு தீய மனிதர்களுடன் போஜனம் பண்ணுவதை அவர்கள் விரும்பவில்லை. **மாற்கு 2:16.**

இதைக் குறித்து இன்னும் அதிகமாகக் உரையாடவும் இன்று தாங்கள் நல்லவர்களென்று நினைக்கும் மக்கள் தீயவர்களை தாழ்வாக நினைக்கிறார்கள். இயேசு, தான் பாவிகளுக்காக வந்ததாகச் சொல்வதை அவர்கள் விரும்பவில்லை.

இது இரட்சிக்கப்பட்டவர்களுக்கு மிக முக்கியம். இயேசு நம்மை மன்னித்து இருப்பாரானால், நாம் மற்றவர்களுக்கு இயேசுவைக் குறித்து கூற விரும்புவோம். அப்படியானால், எந்தவிதமான மக்களுக்கு நாம் கூறுவோம்? நாம் நல்லவர்களுக்கு மட்டும் கூறுவோமா? அல்லது ஆலயத்திற்கு போகும் மக்களுக்கு கூறுவோமா? அல்லது நாம் ‘தீயவர்கள்‘ என்று நினைக்கும் மக்களுக்கு கூறுவோமா?

2. இயேசு ஏன் பாவிகளை அழைக்கிறார்

மாற்கு 2:17

பரிசேயருக்கு இதைப் புரிந்து கொள்வது மிகவும் கடினமாயிருந்தது. இயேசுவைப் போன்றதொரு போதகர் எப்படி பாவிகள் இடத்தில் செல்ல முடியும். ஒருவேளை இது நமக்கும் புரிந்து கொள்ள கடினமாய் இருக்கலாம். உண்மையில் இயேசு நல்லவர்களையும், ஆலயத்துக்குச் செல்பவர்களையும், தங்கள் அயலாரின் மேல் அன்பு செலுத்துபவர்களையும் விரும்புகிறார்.

அவர் ஏன் பாவிகளுக்காக வந்தார் என்பதை இயேசு விளக்குகிறார். ஏன் என்றால் அவர்களுக்கு **அவர் தேவை.** உங்கள் மக்கள் இதைப் புரிந்து கொள்ளத்தக்கதாக, இயேசுவை ஒரு வைத்தியராக உதாரணம் காட்டி விளக்கவும். இயேசுவால் எப்படி அவர்கள் பாவத்திற்கு பரிகாரம் செய்ய முடியும் என்பதை அவர்களுக்குக் கூறவும். இதை செய்வதற்கு எப்படி அவர் சிலுவையில் மரித்தார் என்பதை விளக்கவும். அவர்கள் பாவங்களையெல்லாம் மன்னித்து அவர்களை நல்ல மக்களாக மாற்ற வேண்டுமென்று இயேசுவிடம் ஜெபிக்கும்படி அவர்களிடம் கூற வேண்டும்.

ஏன் நல்ல மனிதர்களுக்கு வைத்தியரான இயேசு தேவைப் படாது என்பதையும் உங்கள் மக்களுக்கு காட்டுங்கள். அவர்கள் தங்களை நல்லவர்களாக நினைப்பதால் அவர்களுக்குப் பாவங்களை மன்னிக்க அவர் தேவையில்லை. நல்ல ஆரோக்கியமானதொரு பெண் ஒரு வைத்தியரிடம் போன கதையை அவர்களுக்குக் கூறவும். அவள் எப்படி அவள் நல்ல ஆரோக்கியமாய் இருக்கிறாளென்பதை அவரிடம் கூறுகிறாள். அவள் அந்த வைத்தியர் தன்னை பரிசோதிக்க விடவில்லை. அது அவளுக்குத் தேவையில்லை. அவளைக் குறித்து அவர் சந்தோஷப்பட வேண்டுமென்பது மட்டுமே அவள் விருப்பம். நிச்சயமாக அந்த வைத்தியர் நல்ல ஆரோக்கியமான மக்களுடன் தன் நேரத்தை செலவு செய்ய மாட்டார். இயேசு நல்ல மக்களுக்காக வரவில்லை. ஏனென்றால் அவர்களுக்கொரு

பிரசங்கியுங்கள்: மாற்கு 2:13-17

இயேசு பாவிகளை அழைக்கிறார்

மாற்கு 2:17

நீங்கள் இயேசு அழைக்கும் வகையானதொரு மனிதரா? நீங்கள் ஒரு பாவியா? (இயேசு சொன்ன ஆச்சரியமான காரியத்தைக் குறித்துப் பேசவும். இயேசு பாவிகளுக்காக வந்தார்!!)

- இது கெட்ட மனிதர்களுக்கு நல்ல செய்தியாகும்! இந்த "பாவிகளையும்"ஆயக்காரரையும் எல்லோரும் வெறுத்தார்கள்.ஆனால் இயேசு அவர்களுக்காக வந்தார். அவர் அவர்கள் மேல் அன்பு செலுத்தினார்!
- இது நல்ல மனிதர்களுக்கு கெட்ட செய்தியாகும்! யாரை இயேசு அழைக்க வரவில்லை என்பதை கவனிக்கவும் (மாற்கு 2:17). "நீதிமான்கள்" நல்ல மனிதர்கள் ஆகும். தாங்கள் ஏற்கனவே நல்லவர்களாயிருப்பதாக பரிசேயர் நினைக்கிறார்கள். இயேசு கெட்ட மனிதர்களுடன் சாப்பிடுவதைக் குறித்து அவர்கள் விருப்பமற்றிருந்தார்கள். (மாற்கு 2:16).
- இரட்சிக்கப்பட்ட மக்களுக்கு இது முக்கியம்! இயேசு நமது பாவங்களை மன்னித்து இருப்பாரானால், நாம் இயேசுவைக் குறித்து மற்றவர்களுக்குக் கூற விரும்புவோம். அப்படியானால், நாம் எப்படிப்பட்ட மனிதர்களுக்கு அதைக் கூறுவோம்? நல்லவர்களுக்கு மட்டுமா, அல்லது ஆலயத்திற்குப் போகின்றவர்களுக்கா? அல்லது கெட்டவர்களுக்கு அதைக் கூறுவோமா?

இயேசு ஏன் பாவிகளை அழைக்கிறார்

மாற்கு 2:17

அவர் ஏன் பாவிகளுக்காக வந்தார் என்பதை இயேசு விளக்குகிறார். ஏனென்றால் அவர்களுக்குத்தான் அவர் தேவைப்பட்டார். (இயேசு சொன்ன வைத்தியரின் உதாரணத்தை மக்களுக்கு விளக்கவும்) நோயுற்றிருப்பவர்கள்தான் வைத்தியரிடம் போவார்கள். இயேசுவால் நமது எல்லாப் பாவங்களையும் அகற்ற முடியும். அவர் அதைச் செய்வதற்காகவே சிலுவையில் மரித்தார். உங்கள் எல்லாப் பாவங்களையும் மன்னித்து உங்களை குணப்படுத்தும்படி இயேசுவிடம் கேளுங்கள்.

(ஏன் நல்லவர்கள் தங்களுக்கு இயேசு என்னும் வைத்தியர் தேவையில்லை என்று நினைக்கிறார்கள்? என்பதைக் காண்பிக்கவும். அவர்கள் ஏற்கனவே நல்லவர்களாய் இருப்பதாக நினைப்பதால், அவர்களுக்கு அவருடைய மன்னிப்பு தேவையற்றதாய் தோன்றுகிறது)

- வைத்தியரிடம் போகும் ஒரு ஆரோக்கியமான பெண்ணின் கதையைக் கூறி விளக்கவும். அவள் வைத்தியரிடம் தான் நல்ல சுகமாக இருப்பதாகக் கூறுகிறாள். அவள் தன்னைப் பரிசோதிக்க வைத்தியருக்கு இடமளிக்காமல், அவளுடைய ஆரோக்கியத்தைக் குறித்து வைத்தியர் மெச்ச வேண்டுமென்று மாத்திரம் விரும்புகிறாள். நிச்சயமாக அந்த வைத்தியர் ஆரோக்கியமான வர்களுடன் தன் நேரத்தை வீணாக்க விரும்ப மாட்டார். இயேசு நல்ல மனிதர்களுக்காக வரவில்லை. ஏனென்றால் அவர்களுக்கு ஒரு வைத்தியர் தேவையில்லை.

இயேசு பாவிகளிடம் என்ன செய்யச் சொல்லுகிறார்

மாற்கு 2:14

லேவி பண ஆசையுள்ளவனாய் இருக்கிறான். இயேசு அவனை அவனுடைய பணத்தை விட்டு வர அழைக்கிறார். அவன் இயேசுவின் பின்னே செல்கிறான். (லேவிக்கு எப்படி இது ஒரு முழு மாறுதலான வாழ்க்கையாய் இருந்தது என்பதை மக்களுக்கு காண்பிக்கவும்)

நமது பிழையான வாழ்க்கை முறையை விட்டு விடுமாறு இயேசு நம்மை அழைக்கிறார். அவர் நமது பாவங்களை விட்டு விடுமாறு நம்மை அழைக்கிறார். நாம் திரும்பி அவர் பின்னே வரும்படி இயேசு அழைக்கிறார்.

- வைத்தியரினால் கொடுக்கப்பட்ட மருந்தை குடிக்காமலிருக்கும் ஒருவரின் கதையைக் கூறவும். அவர் சுகமடைவாரா?
- இயேசு கொடுக்கும் மருந்தை நீங்கள் குடிப்பீர்களா? நீங்கள் அவரிடம் உங்களை மன்னிக்கும்படி கேட்டு, உங்கள் பிழையான வழிகளை விட்டு விடுவீர்களா?

35

வைத்தியன் அவசியம் என்று அவர்கள் நினைக்கவில்லை.

நீங்கள் உங்கள் கதையில் இன்னும் எதையாவது சேர்த்துக் கொள்ளலாம். இரண்டு மாதங்களின் பின் அந்தப் பெண் மரித்துப் போனாள். அவளுக்குள் ஒரு வியாதியிருந்தது. உண்மையில் அவள் நினைத்தபடி அவள் ஆரோக்கியமாய் இருக்கவில்லை. உண்மையில் அவளுக்குத் தேவை இருந்தது. இப்போது காலம் கடந்து விட்டது. அதுபோல் நல்லவர்களுக்கும் உண்மையில் இயேசு தேவை. அவர்களும் பாவிகள்தான். உங்கள் மக்களை வைத்தியரான இயேசுவிடம் பரிசோதனைக்காகப் போகும்படி கூறுங்கள். அவர்களுடைய பாவத்தைக் காட்டும்படி அவர்கள் இயேசுவிடம் கேட்க வேண்டும்.

3. பாவிகளை என்ன செய்யும்படி இயேசு அழைக்கிறார்

📖 மாற்கு 2:14

நீங்கள் லேவியாயிருப்பதாக நினைத்துக் கொள்ளுங்கள். உங்களுக்குத் தேவையானது **பணம்** மட்டுமே. நீங்கள் பணத்திற்காக உங்கள் நண்பர்கள் அனைவரையும் இழந்து விட்டீர்கள். பணத்திற்காக மக்களை கஷ்டப் படுத்துவதிலேயே இதுவரை உங்கள் வாழ்க்கையை கழித்திருக்கிறீர்கள். இப்போது திடீரென்று 'என்னைப் பின்பற்றி வா' என்று இயேசு உங்களிடம் கூறுகின்றார். அது மிகவும் கடினமான தொரு காரியம். ஆனால் லேவி என்ன செய்கிறான்? அவன் தன் வாழ்க்கையை பின்னே தள்ளி விட்டு இயேசுவின் பின்னே செல்கிறான். அது ஒரு திசை மாற்றம். லேவி ஒரு வழியில் போய்க் கொண்டு இருந்தான். ஆனால் திரும்பி வேறு வழியில் செல்கின்றான்.

இயேசு நமது பழைய வாழ்கையை விட்டு விடும்படி கூறுகிறார். நமது பாவங்களை விட்டுவிட்டு அவரின் பின் செல்லும்படி இயேசு நம்மை அழைக்கிறார்.

உங்கள் மக்கள் இதைப் புரிந்து கொள்வது மிகவும் முக்கியம். இயேசு பாவிகளுடன் இருக்க வரவில்லை. அவர் அவர்களை இரட்சிக்க வந்தார். அவர் நம்மை நம் பாவத்திலிருந்து இரட்சிக்க வந்தார். அவர் நமது வாழ்க்கையை மாற்ற வந்தார். இதைப் போன்றதொரு உதாரணத்தை உபயோகிக்கவும்.

நீங்கள் உங்கள் வைத்தியரிடம் போவதாக கற்பனை செய்து கொள்ளுங்கள். அவர் உங்களிடம் உங்கள் பிரச்சினையைக் கூறுகின்றார். அவர் உங்களுக்கு மருந்தும் கொடுக்கிறார். ஆனால் நீங்கள் அந்த மருந்தை எடுக்காமல் அதை அப்படியே வைத்திருக்கிறீர்கள். அப்போது உங்களுக்கு சுகம் கிடைக்குமா? நிச்சயமாக இலலை.

இயேசு நமக்கு மருந்து கொடுக்கிறார். அது இலவசம். 'நான் உன் பாவத்தை மன்னிக்கிறேன்' என்று அவர் கூறுகின்றார். 'உன் பாவங்களை விட்டுவிட்டு என் பின்னே வா' என்று இயேசு கூறுகின்றார். இயேசு தரும் மருந்தை நீங்கள் ஏற்றுக் கொள்கிறீர்களா?

உங்கள் உரையாடலை முடிக்கவும்

- மக்கள் எதை மனதில் வைத்திருக்க வேண்டுமென்று நீங்கள் நினைக்கிறீர்கள்?
- அவர்கள் என்ன செய்ய வேண்டுமென்று விரும்புகிறீர்கள்?
- மீண்டும் அவர்களுக்கு முக்கிய விடயத்தைக் கூறவும்.
- ஒருவேளை அவர்களுக்கு அமைதியாக ஜெபிக்க சற்று நேரம் தேவைப்படலாம்.

மாற்கு நற்செய்தியை பிரசங்கித்தல்

மாற்கு நற்செய்தி நூலுக்கான பேசும் வரைகோடுகள்

...உலகமெங்குமுள்ள வேதாகம ஆசிரியர்களுக்காக எழுதப்பட்டுள்ளது

ஜெபி - தயாராகு - பிரசங்கி என்பது உலகெங்குமுள்ள வேதாகம ஆசிரியர்கள் தேவனின் வார்த்தையைத் தெளிவாகவும், துல்லியமாகவும் விளக்குவதற்கு அவர்களுக்கு உதவியாயிருப்பதற்காக தயாரிக்கப்பட்டதொரு புதிய வழிகாட்டித் தொடராகும். 2 தீமோத்தேயு 2:15 இப்படிக் கூறுகிறது: 'நீ வெட்கப்படாத ஊழியக்காரனாயும் சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்து போதிக்கிறவனாகவும் உன்னை தேவனுக்கு முன்பாக உத்தமனாய் நிறுத்தும்படி ஜாக்கிரதையாயிரு.' நாம் உங்களுக்கு இவைகளில் உதவி செய்ய விரும்புகிறோம்:

- வேதாகமப் பகுதியின் முக்கிய விடயத்தைப் **புரிந்து கொள்ளுதல்**.
- உங்கள் மக்களுக்கு இது எவ்வளவு முக்கியம் என்று **சிந்தித்தல்**.
- வேதப் பகுதியைத் தெளிவாகப் **போதித்தல்**.

இந்த **ஜெபி - தயாராகு - பிரசங்கி** தொடர் வேதாகமத்தின் முக்கிய புத்தகங்களுக்கான அடிப்படை பிரசங்கக் குறிப்புகளை வழங்குகிறது. அவை எளிய நடையில் இலகுவாக விளங்கிக் கொள்ளும் விதத்தில் எழுதப்பட்டிருக்கின்றன. அதில் அடங்குபவை:

- வேதப் பகுதியை அதன் சரியான சூழலில் புரிந்து கொள்ள உதவும் ஒரு ஆய்வுப்பகுதி.
- தலைப்புகள், எடுத்துக்காட்டுகள், உபயோகித்தல் முதலியவற்றிற்கான ஆலோசனைகளுடனான அடிப்படை பிரசங்கக் குறிப்புகள்.

அண்மைக் காலமாக, வியாக்கியான பிரசங்கத்தின் அவசியம் குறித்து அதிகம் பேசப்பட்டு வருகின்றது, எனினும் ஆசியாவிலே இப்பிரசங்கமானது மிகக் குறைந்த அளவிலேயே செய்யப்பட்டுள்ளது. இந்த பாடநூல் தொடரானது ஊழியர்களினதும் மற்றும் அநேக பிரசங்கிகளின் வாழ்விலும் அவர்கள் விரைந்து இப்படிமுறையை ஆரம்பிக்க உதவி செய்யும். இன்றைய நாள் ஊழியர்களுக்கு வியாக்கியான பிரசங்கமானது செய்ய முடியாத மற்றும் நடைமுறைக்கொவ்வாத ஒன்றல்ல என்பதை இது காட்டுகிறது. வேதாகமப் பகுதிகளைத் திறந்து நடைமுறைக் காரியங்களில் பிரசங்கம் செய்வதற்கு, இத்தொடரானது புதிய சந்ததியின் ஊழியர்களை வேதவார்த்தையில் வளர்ப்பதற்கு உதவி செய்யும்.

அஜித் பெர்னான்டோ, கற்பித்தல் இயக்குனர், கிறிஸ்துவுக்காக வாலிபர், இலங்கை.

வேதாகமத்தின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டு, அதன் வல்லமையையும் அதன் பொருந்தும் தன்மையையும் வெளிப்படுத்தும் பிரசங்கங்கள் உலகம் முழுவதிலும் இன்று மகத்தான தேவைகளிலொன்றாக இருக்கிறது. **'மாற்கு நற்செய்தியைப் பிரசங்கித்தல்'** வேத வசனத்தைப் போதிக்க அவர்களுக்குத் தேவையான வளங்கள் போதுமான அளவு இல்லாத போதகர்களுக்கும், ஏனைய ஊழியர்களுக்கும் மிகப் பெரியதொரு உதவியாயிருக்கும்.

யோனத்தான் லாம், இயக்குநர், இலங்கம் பிரசங்கித்தல், சர்வதேச இலங்கம் பங்குதாரர்.

Rs. 250/-

ISBN 978-955-3640-01-7

9 789553 640017

Langham PARTNERSHIP

CTS Publishing
Colombo Theological Seminary
Resources to the Church of the Transformation of Nations